REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK

2021 மார்ச் 15 திங்கட்கிழமை

# தினகரன்
THINAKARAN

தினகரன் 89 1932 - 2021

வரு. 89 இல. 63 | March 15, Monday, 2021 | 24 பக்கங்கள் | 30/-


89 ஆண்டுகள் கடந்த சாதனை பயணத்தில் உங்கள் தினகரன் 13


அ.ம.மு.க, தே.மு.தி.க கூட்டணி உறுதி 04


மோட்டார் சைக்கிள் விபத்தில் இருவர் பலி 21


அதிக விலைக்கு வாங்கப்பட்ட யாழ். வீரர்கள் 24

# மாகாண சபைத் தேர்தலுக்கு பாராளுமன்ற அனுமதி தேவை

## நல்லாட்சி அரசின் சட்டவிரோத செயலால் சட்டச் சிக்கல்

**வெளிநாட்டமைச்சர் தினேஷ் குணவர்தன**



**லோரன்ஸ் செல்வநாயகம்**

கடந்த நல்லாட்சி அரசாங்கம் மாகாணசபை தேர்தல் நடத்தும் சட்டத்தை மாற்றியமைத்துள்ளதால் உடனடியாக மாகாண சபைத் தேர்தலை நடத்த முடியாத நிலை காணப்படுவதாக வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்தன தெரிவித்துள்ளார்.

மாகாணசபை தேர்தலை நடத்துவதற்கு முன்பதாக அதற்கான பாராளுமன்ற அனுமதியை பெற்றுக் கொள்வது அவசியம் எனவும் வெளிவிவகார அமைச்சர் தெரிவித்துள்ளார்.

மாகாணசபைத் தேர்தலை நடத்துவது தொடர்பில் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் சம்பந்தமாக இக்காலங்களில் பேச்சுவார்த்தைகள் இடம்பெற்று வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

மாகாணசபைத் தேர்தலை நடத்துவது தொடர்பில் ஆளும் 06



அபிவிருத்தி லொத்தர் சபை 'கோட்டிபதி' சீட்டிழுப்பில் ஒரு கோடி 40 இலட்சம் ரூபா வெற்றியீட்டிய ஒருவருக்கு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, பரிசு காசோலையை வழங்குவதை காணலாம்.



## அரச பாடசாலைகள் இன்று மீண்டும் ஆரம்பம்

06

# பொலிஸில் ஆஜராக தயாராக உள்ளேன்

## எந்நேரமும் ரெடி என்கிறார் அஸாத்



தேசிய ஐக்கிய முன்னணி தலைவர் அஸாத் சாலி வாழைத்தோட்ட பொலிஸ் நிலையத்திற்கு சென்று வாக்குமூலம் வழங்கியுள்ளார்.

தனியார் சட்டங்களை மாற்றும் முயற்சி தொடர்பில் இவர் தெரிவித்திருந்த கருத்திற்கு எதிராக பல்வேறு 06

# தனிநபரின் விருப்பு வெறுப்புக்கு ஏற்ப சட்டங்களை மாற்ற முடியாது

## சட்டத்தை மீறுவோரை கைது செய்ய தயங்கோம் !



**ஸாதிக் ஷிஹான்**

எந்தவொரு தனி நபர்களின் விருப்பு வெறுப்புக்கேற்ப நாட்டின் சட்டங்களை மாற்ற முடியாது என பாதுகாப்புச் செயலாளர் ஓய்வு பெற்ற ஜெனரல் கமல் குணரத்ன தெரிவித்தார். "தேசிய பாதுகாப்பைப் பாதுகாக்கும் நாட்டின் அங்கீகாரம் பெற்ற அமைப்பு என்ற வகையில் நாம், வெறுப்பு அரசியலை விதைத்து சமாதானத்தை சீர்குலைப்பதன் மூலம் நாட்டின் சட்டத்தை மீற முயற்சிக்கும் எந்த ஒரு நபரையும் கைது செய்யத் தயங்க மாட்டோம்" என்று அவர் மேலும் தெரிவித்தார். 06

ஷரியா சட்டத்தை பின்பற்றுவதாயின்

# அஸாத் சாலி சவூதியில் குடியேற வேண்டும்



முஸ்லிம் சட்டத்தை ஒரு போதும் மாற்ற முடியாது என சர்ச்சைக்குரிய கருத்தை வெளியிட்ட அஸாத் சாலியைக் கைதுசெய்து, விசாரிக்க, குற்றப் புலனாய்வு திணைக்களத்திற்கு தாம் அறிவுறுத்தியுள்ளதாக பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்துள்ளார்.

அஸாத் சாலி தெரிவித்துள்ள கருத்து, மத அடிப்படைவாதத்துடன் தொடர்புடையதாகும். மத அடிப்படைவாதமே இறுதியில் தீவிர 06

# தினகரன்

## அபிமான வாசகர்களின் ஆதரவுடன் 89 ஆண்டு கால சாதனைப் பயணம்

இலங்கையின் தமிழ்ப் பத்திரிகை உலகில் தன்னிகரற்று விளங்குகின்ற தினகரன், இன்று தனது 89 ஆவது பிறந்த தினத்தைக் கொண்டாடுவதில் பெரிதும் உவகை கொள்கின்றது. சுமார் ஒன்பது தசாப்தம் என்பது நீண்டதொரு காலப் பகுதியாகும். பத்திரிகையொன்று ஒன்பது தசாப்த காலம் வெற்றியுடன் பயணம் செய்வதென்பது சாதாரணமானதன்று...அது ஒரு வரலாற்று சாதனை ஆகும். அச்சாதனையை வெற்றியுடன் நிறைவு செய்து அடுத்த வருடத்தில் 90 ஆவது ஆண்டு நிறைவில் காலடி பதிக்கப் போகின்றது உங்கள் அபிமான தினகரன்.

எமது இலங்கைத் திருநாடு பிரித்தானிய காலனித்துவத்துக்கு உட்பட்டிருந்த காலத்தின் இறுதிப் பகுதியை 'சுதந்திரத்தை நோக்கிய பயணம்' என்று வரலாற்று ஆசிரியர்கள் குறிப்பிடுகின்றனர். அன்றைய காலப் பகுதியில் எமது நாட்டு மக்களுக்கு சுதந்திர தாகத்தையும், பாரம்பரிய கலாசார மறுமலர்ச்சியையும் ஊட்ட வேண்டிய தேவை காணப்பட்டது. இலங்கைத் திருநாட்டின் தேசிய வீரர்கள் மக்கள் மத்தியில் சுதேச கலாசார மறுமலர்ச்சியை வளர்த்தெடுப்பதில் அர்ப்பணிப்புடன் உழைத்த போதிலும், 04

மேற்கு முனைய அபிவிருத்தி;

## ஒப்பந்தம் தொடர்பாக சட்ட மாஅதிபர் ஆராய்வு

**லோரன்ஸ் செல்வநாயகம்**



கொழும்பு துறைமுகத்தின் மேற்கு முனையத்திற்கான அபிவிருத்தித் திட்டத்தை இந்தியா மற்றும் ஜப்பான் பெயரிடும் 06

தென்னாபிரிக்க புதிய வகை வைரஸ்;

## நாட்டில் பரவாதிருக்க துரித நடவடிக்கை அவசியம்



தென் ஆபிரிக்காவில் பரவும் புதிய வகை கொரோனா வைரஸ் இலங்கையில் அடையாளம் காணப்பட்டதை அடுத்து ஏற்படக்கூடிய 06

# நாட்டில் இதுவரை 45 ஜனாஸாக்கள் அடக்கம்

## – இராணுவத் தளபதி தகவல்



நாட்டில் பல்வேறு பிரதேசங்களில் வைக்கப்பட்டிருந்த 45 கொரோனா சடலங்கள் இதுவரையில் அடக்கம் செய்யப்பட்டுள்ளதாக இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்தார். 06



(ஹற்றன் விசேட நிருபர்)

இராஜாங்க அமைச்சர்களான ஜீவன் தொண்டமான், சீதா அரம்பேபொல ஆகியோர் மலையக பல்கலைக்கழகம் அமைய இருக்கும் இடத்தை பார்வையிட்ட போது...

புர்காவை தடைசெய்யும் விவகாரம்;

# பிரச்சினைகள் மேலும் தீவிரமடைய வாய்ப்பு



இலங்கை என்பது சுதந்திரமான நாடாகும். இங்கு ஒவ்வொருவருக்கும் அவரவர் விருப்பத்தின்படி ஆடையணிவதற்கான சுதந்திரம் உள்ளது. அவ்வாறிருக்கையில் புர்காவை தடை செய்வதால் தற்போது காணப்படும் பிரச்சினைகள் மேலும் தீவிரமடையுமே தவிர, அவை தணியப் போவதில்லை என்று 06

**விக்கல் வீராச்சாமி**



கிணறு வெட்ட பூதம் கிளம்பின மாதிரி சமூகத்துக்கு அடுத்தடுத்து பிரச்சினை வந்துகொண்டு இருக்குது....

புரியுது, புரியுது ஜனாஸா அடக்கம் தீர்ந்த சந்தோசத்தில இருக்க புர்கா, மத்ரஸா பிரச்சினைகள் உருவெடுத்திருக்கு, அதுதானே...!!!




# எதிர்க்கட்சியின் அபத்தமான குற்றச்சாட்டுகளால் மக்களை ஏமாற்றுவதற்கு இடமளிக்க முடியாது



## ஜனாதிபதி "கிராமத்துடன் உரையாடலில்" தெரிவிப்பு

எதிர்க்கட்சி என்ற வகையில் பல்வேறு குற்றச்சாட்டுகளை முன்வைக்க முடியும். அவை உண்மைத் தகவல்களின் அடிப்படையில் இருக்க வேண்டும். இருப்பினும், அபத்தமான குற்றச்சாட்டுகளை கூறி மக்களை ஏமாற்றுவதை அனுமதிக்க முடியாது என்று ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பாக எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் அண்மையில் தெரிவித்த ஒரு கருத்து ஊடகங்களில் வெளியிடப்பட்டது. இது தேசிய பாதுகாப்பை நேரடியாக பாதிக்கும் கருத்து. எனவே, இது குறித்து குற்றப் புலனாய்வுத் திணைக்களம் விசாரணை நடத்தியது. அக் கருத்தை வெளியிட்ட பாராளுமன்ற உறுப்பினர், "நான் மறந்துவிட்டேன், மயக்கம் அடைந்தேன், எனக்குத் தெரியாது என்று பதிலளித்துள்ளார். இதுபோன்ற ஆதாரமற்ற குற்றச்சாட்டுகளை கூறி மக்களை ஒருபோதும் ஏமாற்றக்கூடாது." என்று ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

மனித உரிமைகள் பேரவை எங்களுக்கு எதிராக கொண்டு வந்த முன்மொழிவுக்குகடந்தஅரசாங்கம்இணை அனுசரணை வழங்கியது. அந்த நிலைப்பாட்டை நிராகரித்து, தற்போதைய அரசாங்கம் இணை அனுசரணையிலிருந்து விலகியது. எம்.சி.சி ஒப்பந்தம் உட்பட நாட்டிற்கு தீங்கு விளைவிக்கும் ஒப்பந்தங்களில் இருந்து முறையாக விலகி மக்களுக்கு அளிக்கப்பட்ட வாக்குறுதிகள் நிறைவேற்றப்பட்டன. ஆர்ப்பாட்டக்காரர்களுக்கு தடியடி மற்றும் கண்ணீர்ப்புகைக்கு பதிலாக, எதிர்ப்பு தெரிவிக்க தனி இடம் வழங்கப்பட்டது. தேசியத்திற்கு முன்னுரிமை அளிக்கும் ஒரு விவசாய பொருளாதாரத்தை உருவாக்குவதன் மூலம் எமது விவசாயிகளைப் பாதுகாக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது. இதுவரை வெளிநாட்டு விவசாயிகளை வளப்படுத்திய பொருளாதாரக் கொள்கை மாற்றப்பட்டு, நாட்டில் பயிரிடக்கூடியவற்றை பயிரிடுவதன் மூலம் எமது விவசாயிகளை வளப்படுத்துவதற்கான சூழல் உருவாக்கப்பட்டுள்ளது. இந்த சூழலில், மனித உரிமைகள் பேரவை அரசாங்கத்திற்கு எதிரான அதிக எண்ணிக்கையிலான குற்றச்சாட்டுகளுடன் ஒரு அறிக்கையை சமர்ப்பிப்பதை தான் கண்டது இதுவே முதல் முறை என்று குறிப்பிட்டார்.

நேற்று முன்தினம் (13) முற்பகல் காலி மாவட்டத்தின் மாதம்பாகம பிரதேச செயலக பிரிவில் உள்ள கலகொட கிழக்கு கிராம அதிகாரி பிரிவில் உள்ள ஜனபத கனிஷ்ட வித்தியாலயத்தில் இடம்பெற்ற 14 வது "கிராமத்துடன் உரையாடல்" நிகழ்ச்சியில் கலந்து கொண்ட போதே ஜனாதிபதி இந்த கருத்துக்களை தெரிவித்தார்.



### அன்றும் இன்றும் தேசிய பாதுகாப்புக்கு முதலிடம்...
### தேசியவாதத்திற்கு வெளிநாட்டு சக்திகள் எதிர்ப்பு ...







1072 குடும்பங்களைக் கொண்டுள்ள கலகொட கிழக்கு கிராமத்தில் மக்கள் தொகை 3711 ஆகும். மீன்பிடித் தொழில், நெல் பயிர்ச்செய்கை, கறுவா மற்றும் தும்புக் கைத்தொழில் ஆகியவை இம்மக்களின் முக்கிய வாழ்வாதாரமாகும்.



'கிராமத்துடன் உரையாடல்' நிகழ்ச்சியில் பங்கேற்க கலகொட மகநெகும மைதானத்திற்கு வருகை தந்த ஜனாதிபதி, அங்கிருந்து ஜனபத கனிஷ்ட வித்தியாலயம் வரை வீதியின் இருபுறமும் கூடியிருந்த மக்களுடன் உரையாடி பிரதேச மக்களின் விபரங்கள் மற்றும் பிரச்சினைகள் குறித்து கேட்டறிந்தார்.மொபிடல் நிறுவனம் ஜனபத கனிஷ்ட கல்லூரியில் தாபித்துள்ள அதிவேக இணைய வசதிகளுடன் கூடிய ஸ்மார்ட் வகுப்பறையை ஜனாதிபதி திறந்து வைத்தார், டயலொக் நிறுவனம் வழங்கிய மடிக்கணனிகள் மற்றும் தொலைக்காட்சி குலீகொட சுமன வித்தியாலயம், குமார காசியப்ப வித்தியாலய அதிபர்களிடம் வழங்கி வைக்கப்பட்டன.

கலபொட மற்றும் சுற்றியுள்ள கிராமங்களின் மக்களின் முக்கிய வாழ்வாதாரமான மீன்பிடித் துறையை பாதிக்கும் பிரச்சினைகள் குறித்து ஜனாதிபதி விசேட கவனம் செலுத்தி, கிராமவாசிகள் மற்றும் அதிகாரிகளுடன் விரிவாக கலந்துரையாடினார்.

பெரலிய, தொடந்துவ, அம்பலங்கொட, ஹிக்கடுவ மற்றும் பலபிட்டிய மீன்பிடித் துறைமுகங்களின் அபிவிருத்தியை விரைவுபடுத்துமாறு அதிகாரிகளுக்கு ஜனாதிபதி அறிவுறுத்தினார். இழுவை வலை மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டுள்ள மீனவர்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு காண விசேட கவனம் செலுத்தப்பட்டது.

சுனாமி மீன்பிடி வீடுகளை புனரமைக்கவும், நீண்டகால காணிப் பிரச்சினைகளைத் தீர்ப்பதை விரைவுபடுத்துமாறும் ஜனாதிபதி அவர்கள் அறிவுறுத்தினார்.

தும்புக் கயிறு, பாய்கள் உள்ளிட்ட பிரதேசத்திற்கே தனித்துவமான கைத்தொழில் துறையினர் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் குறித்து கேட்டறிந்த ஜனாதிபதி, அவர்களுக்கு தேவையான வசதிகள் மற்றும் சந்தை வாய்ப்புகளை வழங்குமாறு அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார். பலபிட்டிய, மாதுவ பாலம், ரத்தகம தேவிதிகொட பாலம் கட்டுமானம் உட்பட இப்பகுதியில் 21 வீதிகள் மற்றும் 49 குறுந்தூர வீதிகளை காபட் செய்து அபிவிருத்தி செய்ய முடிவு செய்யப்பட்டது.

அம்பலங்கொட பகுதியில் அடையாளம் காணப்பட்ட 700 ஏக்கர் தரிசு நெல் நிலங்களை தென்னை பயிர்ச்செய்கைக்காக 700 இளைஞர்களுக்கு ஒரு ஏக்கர் விகிதம் வழங்குமாறு ஜனாதிபதி அறிவுறுத்தினார். சுற்றுலா, சுகாதாரம், குடிநீர், மின்சாரம், பண்ணை வளர்ப்பு உள்ளிட்ட பல துறைகளில் உள்ள பிரச்சினைகள் குறித்து ஜனாதிபதி விசேட கவனம் செலுத்தினார்.

உரிமையின்றி அரச நிலங்களை அனுபவித்து வரும் குடும்பங்களுக்கு உரிமைப் பத்திரங்களை வழங்குவது அண்மையில் ஆரம்பிக்கப்பட்டது. ஜனாதிபதி ஹிக்கடுவ பிரதேச செயலகத்தில் ஐந்து குடும்பங்களுக்கு உறுதிப் பத்திரங்களை அடையாளமாக வழங்கினார்.

89
தமிழ் பேசும் மக்களின் தேசிய குரலாக
வரலாற்று பாரம்பரியத்துடன்...
89 வது ஆண்டில்
தினகரன்
THINAKARAN
தினகரன்
மாற்றமுறும் உலகுக்கு ஏற்ப மாசற்ற ஊடக கலாசாரம்
THINAKARAN 89 Anniversary

தினகரன் விளம்பரம்
0112429367
விற்பனை பிரிவு
0112429444,
0112429378
ஆசிரியபீடம்
editor.tkn@lakehouse.lk

2021 மார்ச் 15 திங்கட்கிழமை

# தினகரன்

THINAKARAN
තිනකරන්




**தொழுகை நேரம்**

14 முதல் 18 வரை

| | | |
|---|---|---|
| சுபஹ் | - | 05.03 |
| லுஹர் | - | 12.21 |
| அஸர் | - | 03.35 |
| மஃரிப் | - | 06.22 |
| இஷா | - | 07.31 |

**இன்றைய சுபதினம்**

சார்வரி வருடம் பங்குனி 2

ராகுகாலம் : பகல் : 07.30 - 9.00வரை
சுபநேரம் : காலை : 06.00 - 7.30வரை

யோகம்: சித்தயோகம்

திதி: சூன்ய

**இராசி பலன்கள்**

| | | |
|---|---|---|
| மேஷம் | - | செலவு |
| ரிஷபம் | - | பாராட்டு |
| மிதுனம் | - | தனம் |
| கடகம் | - | போட்டி |
| சிம்மம் | - | கோபம் |
| கன்னி | - | முயற்சி |
| துலாம் | - | நன்மை |
| விருச்சிகம் | - | நிறைவு |
| தனுசு | - | வெற்றி |
| மகரம் | - | பொறுமை |
| கும்பம் | - | மறதி |
| மீனம் | - | சுகம் |

கலாநிதி இராமச்சந்திரகுருக்கள்
(பாபு சர்மா)





COVID19 தொற்றினால் மரணித்த ஜனாஸாக்களை நல்லடக்கம் செய்யும் ஓட்டமாவடி சூடுபத்தின சேனையில், ஜனாஸாக்களை அடக்கம் செய்யும் இடத்தை பார்வையிடுவதற்காக பாராளுமன்ற உறுப்பினர் நஸீர் அஹமட், இராணுவ தளபதி சவேந்திர சில்வா மற்றும் Dr. அன்வர் ஹம்தானி ஆகியோர் (13) ஓட்டமாவடி சூடுபத்தின சேனைக்கு வந்து பார்வையிட்டபோது எடுத்த படம்.

தடுப்பூசியை பெற்றுக்கொண்டு

# வெளிநாடுகளில் இருந்து வருவோருக்கு இனி தனிமைப்படுத்தல் கிடையாது

## இராணுவத் தளபதி சவேந்திர சில்வா

**லோரன்ஸ் செல்வநாயகம்**



கொரோனா வைரஸ் தடுப்பூசியை பெற்றுக் கொண்டு வெளிநாடுகளிலிருந்து இலங்கைக்கு வருகை தரும் நபர்களை தனிமைப் படுத்தலுக்கு உட்படுத்துவதில்லை என்ற தீர்மானம் மேற்கொள்ளப்படவுள்ளதாக கொரோனா வைரஸ் ஒழிப்புக்கான தேசிய செயற்பாட்டு மத்திய நிலையத்தின் தலைவர் இராணுவத் தளபதி சவேந்திரசில்வா தெரிவித்துள்ளார்.

நாட்டில் தற்போது பெரும்பாலும் கொரோனா வைரஸ் பரவல் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது என தெரிவித்துள்ள அவர், வெளிநாடுகளிலிருந்து தடுப்பூசிகளை பெற்றுக்கொண்டு நாட்டுக்கு வருவோருக்கு தனிமைப்படுத்தல் அவசியம் இல்லை என தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். நேற்றைய தினம் ஊடகமொன்றுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அதேப்போன்று 96 மணித்தியாலங்களுக்கு குறைந்த காலத்தில் நாட்டிலிருந்து வெளியில் சென்று வாயு குமிழின் கீழ் மீண்டும் வருகை தருவரானால் அத்தகைய நபர் ஏழு நாட்கள் வீட்டிலேயே தனிமைப்படுத்தப்பட்டு அதனையடுத்து 5 தினங்களுக்கு பின்னர் பிசிஆர் பரிசோதனை ஒன்று மேற்கொள்ளப்பட்டு அதன் பின்னர் தனிமைப் படுத்தலிலிருந்து விடுவிக்கப்படுவார்.

அவ்வாறின்றி நான்கு நாட்களுக்கு மேல் அவ்வாறு வெளிநாடுகள் சென்று மீண்டும் நாட்டுக்கு திரும்புவதற்கு உடனடியாக பிசிஆர் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு அத்துடன் ஐந்து அல்லது ஏழு நாட்களுக்குள் இரண்டாவது பிசிஆர் பரிசோதனை மேற்கொள்ளப்படும். அதன் பின்னர் அவரை விடுவிப்பது தொடர்பில் தீர்மானிக்கப்படும் அதற்கான செயல்திட்டம் ஒன்று நடைமுறைப்படுத்தப்பட உள்ளது.

கொரோனா வைரஸ் எந்த சந்தர்ப்பத்திலும் அதன் நிலையை மாற்றிக் கொள்ளும் தன்மை கொண்டுள்ளது. அந்த வகையில் தற்போது இந்த முறைமையின் கீழ் பரவலைத் தடுப்பதற்கு எம்மால் நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது.

எந்த விதத்திலும் நாம் கொரோனா வைரஸ் தொற்று நோயாளர்கள் இனங் காணப்படும் பிரதேசங்களில் மட்டும் இலக்காகக் கொண்டு பிசிஆர் பரிசோதனை நடத்தவில்லை என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ஸ)

# யாழ். காணி ஆவணங்கள்; வடக்கிலேயே இருக்க வேண்டும்



காணி ஆவணங்களை கையாளும் அலுவலகம் வடக்கில் இருப்பதே எனது விருப்பம். அதனை உரிய அமைச்சரிடம் வலியுறுத்தியிருக்கிறேன் என பாராளுமன்ற உறுப்பினர் காதர் மஸ்தான் தெரிவித்துள்ளார்.

வவுனியா நெடுங்கேணியில் இடம்பெற்ற நிகழ்வின் பின்னர், ஊடகங்களிற்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

குறித்த ஊடகவியலாளர் சந்திப்பில் காதர் மஸ்தான் மேலும் கூறியுள்ளதாவது, “எல்.ஆர்.சி. காணிக்குரிய ஆவணங்களே அநுராதபுரத்திற்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது.

அது கடந்த காலங்களிலும் அநுராதபுரம் பிராந்திய காரியாலயத்தால்தான் பார்க்கப்பட்டிருந்தது. இரண்டு வருடங்களிற்கு முன்பாக எனது கோரிக்கைக்கு அமையவே வட மாகாணத்திற்கு வந்தது. மீண்டும் குறித்த விடயம் அவசரமாக அங்கு கொண்டு செல்லப்பட்டமை தொடர்பாக உரிய அமைச்சருடன் பேசியிருக்கிறேன்.

சில செயற்பாடுகளை இலகுவாகவும் அவசரமாகவும் செய்வது தொடர்பாக சில காரணங்கள் அவரால் சொல்லப்பட்டது. அது பொருத்தமில்லாத காரணம் என கூறியிருந்தேன்.

வட மாகாணத்திலேயே இந்த காரியாலம் இருக்கவேண்டும் என்று எனது கோரிக்கையை வலியுறுத்தியிருக்கிறேன்.

இங்கு இருக்கவேண்டும் என்பதுதான் என்னுடைய விருப்பமும். எனவே மீண்டும் ஒருமுறை அமைச்சருடன் பேசவுள்ளேன்” எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# கிழக்கு, ஊவா மற்றும் வடமேல் மாகாணங்களில் இடியுடன் கூடிய மழை

கிழக்கு, ஊவா மற்றும் வடமேல் மாகாணங்களிலும் நுவரெலியா மற்றும் மாத்தளை மாவட்டங்களிலும் மழை பெய்யும் என வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.


சப்ரகமுவ மற்றும் மேல் மாகாணங்களிலும் காலி, மாத்தறை மற்றும் கண்டி மாவட்டங்களிலும் பல இடங்களில் மாலையில் அல்லது இரவில் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்வதற்கான சாத்தியம் காணப்படுவதாக அத்திணைக்களம் தெரிவித்துள்ளது.

இந்தப் பிரதேசங்களில் சில இடங்களில் 50 மி.மீ க்கும்

06


PEOPLE'S BANK
60
YEARS OF EMPOWERING THE NATION

டிஜிட்டல் வங்கித்துறையின் முன்னோடிகள் தற்போது பொலன்னறுவையில் புதிய இடத்தில்



2021 ஆம் ஆண்டில் எமது வாடிக்கையாளர்களை டிஜிட்டல் வங்கித்துறையில் பலப்படுத்தி, உயர் சேவையை வழங்கும் நோக்கில் மக்கள் வங்கியின் பொலன்னறுவைக் கிளை,

இன்று தொடக்கம் **இல. 425, பொலன்னறுவை சிட்டி சென்டர், மட்டக்களப்பு வீதி, பொலன்னறுவை**

எனும் முகவரியில் நவீன வசதிகள் பலவற்றினை கொண்ட புதிய அமைவிடத்திற்கு இடம்மாறுகின்றது.

www.peoplesbank.lk
1961 PEOPLE'S BANK CALL CENTRE
PEOPLE'S BANK
The Bank of the People
AA+ (lka) Fitch Rating, AAA- Brand Finance Rating
People's Bank is a licensed commercial bank supervised by the Central Bank of Sri Lanka.




# தவக்கால சிந்தனை

## புதிய வானமும் வையமும்

தவக்காலத்தில் புதிய ஒரு வாரத்தை ஆரம்பித்துள்ளோம். இறைவாக்கினர் எசாயா வழியாக ஆண்டவர் புதிய வானத்தையும் வையத்தையும் உருவாக்கப் போவதாக பரிசுத்த வேதாகமத்தில் கூறுகிறார்.

எமது வாழ்வானது எப்போதும் ஓர் மாற்றத்தை நோக்கி செல்லும் உருளையாகவே இருக்கின்றது.

நாம் எப்போதும் ஓரிடத்தில் இருப்பதில்லை. எமது உடல் உளவியல் மாற்றங்கள் அதற்கு சான்றாக நம்மிலே வெளிப்படுவதை நாம் மட்டுமல்லாது அயலவரும் நம்மில் அதைக் காண்பர்..

புதிய வானமும் வையமும் ஆண்டவர் எம் வாழ்விலே செய்யப்போகும் மாற்றத்தையே குறிக்கின்றது. அது சாதாரண ஓர் மாற்றம் அல்ல. ஆண்டவராகிய இயேசு வழியாக எமது வாழ்வை கடவுளுக்கு உகந்த வாழ்வாக அமைக்கப்போகும் மாற்றமே அது. ஆண்டவர் இயேசு தமது பாடுகள், மரணம்,உயிர்ப்பு வழியாக எம்மை கடவுளுக்கு உகந்த ஓர் புதிய சமூகமாக்கப் போகின்றார். அதற்கு நாமும் நம் ஆண்டவர் இயேசுவின் வழியில் எமது வாழ்வை நோக்க வேண்டும்.

எவ்வாறு இயேசு தமது வாழ்வில் வந்த துன்பங்களை எல்லாம் எதிர்கொண்டு தாங்கி அதை கடவுளின் பெயரால் அவருடைய மகிமைக்காக வெற்றியாக்கினாரோ அதே போல நாமும் எமது வாழ்வில் வரும் சவால்கள், துன்பங்கள், துயரங்கள், வேதனைகள் தோல்விகள், பழிச்சொற்கள் காட்டிக் கொடுப்பு துரோகம் ஆகியவற்றை தாங்கி பொறுமையோடு அனைத்தையும் கடவுளுக்கு ஒப்புக்கொடுத்து இயேசுவோடு மரிக்கும் போதுதான் உயிர்ப்பு என்னும் புதிய வானத்தையும் வையத்தையும் எமது வாழ்வில் காண முடியும்.

அத்தகைய மனநிலையை எமக்குள் உருவாக்கிக் கொள்வதற்காக இந்தத் தவக்காலத்தில் விசேட விதமாக மன்றாடுவோம்.

அருட்சகோ றீகன் லோகு...

*Virusfree. www.avast.com*

## Ebony ஹோல்டிங்ஸ் உடன் சர்வதேச பெண்கள் தினத்தன்று வெற்றியை ஒன்றிணைந்து எய்துவது



புகழ்பெற்ற ஆடவர் ஆடைகள் வர்த்தக நாமங்களான Vantage, Ebony மற்றும் Luxure ஆகியவற்றின் உற்பத்தியாளரான Ebony ஹோல்டிங்ஸ் பிரைவட் லிமிடெட், தனது வாரியபொல மற்றும் பொல்லத˙துபிட்டிய தொழிற்சாலைகளைச் சேர்ந்த பெண் ஊழியர்களை “Choose to Challenge” எனும் தொனிப் பொருளின் கீழ் கௌரவித்திருந்தது. சர்வதேச பெண்கள் தினத்தை முன்னிட்டு, இலங்கைச் சந்தையில் உயர் தரம் வாய்ந்த, வடிவமைப்புகளிலமைந்த பிரத்தியேகமான ஆடவர் ஆடைகளை தயாரித்து வழங்குவதில் தம்மை அர்ப்பணித்துள்ள இந்த பெண் ஊழியர்களின் சேவைகளை கௌரவிக்கும் வகையில் இந்த நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இந்நிகழ்வின் பிரதம அதிதியாக திருமதி. சங்கீதா வீரரட்ன கலந்து கொண்டார். இந்நிகழ்வில் ஒன்றுகூடியிருந்தவர்கள் மத் தியில் திருமதி. அமா திசாநாயக்க ஊக்கமளிக்கும் உரையை ஆற்றியிருந்தார். Ebony ஹோல்டிங்ஸ் தவிசாளர் திரு. ரஸ்மி ரஹீம் மற்றும் முகாமைத் துவப் பணிப்பாளர் ரஸீன் ரஹீம் ஆகியோருடன் பல்வேறு விருந்தினர்களும் இந்நிகழ்வில் கலந்து சிறப்பித்தனர்.

முழுத் தேசத்துக்கும் சவால்கள் நிறைந்த ஆண்டாக அமைந்திருந்த நிலையில், இந்த நிகழ்வு பெரும் வரவேற்பைப் பெற்றிருந்ததுடன், முழு ஊழியர்களையும் ஊக்குவிப்பதாக அமைந்திருந்தது. நிகழ்வின் தொனிப்பொருளினூடாக “சவால்களுக்குட்படுத்தப்பட்ட உலகம் அவதானத்துடன் இருக்கும் என்பதுடன˙, சவாலில் இருந்து மாற்றம் ஏற்படுகின்றது.” என்பது உணர்த்தப்பட்டிருந்தது.

முன்னணி ஆடைகள் உற்பத்தியாளரும் விநியோகத்தருமான Ebony ஹோல்டிங்ஸ், இரு தசாப்த காலதத்துக்கும் மேலாக செயலில் உள்ளதுடன், சமூகத்துக்கு மீள வழங்குவது எனும் தமது உன்னதமான செயற்பாட்டை தொடர்ந்தும் முன்னெடுத்து வருகின்றது. தமது சொந்த ஊழியர்களின் நலனில் அதிகளவு அக்கறை காண்பித்து வருவதனூடாக கடந்த காலங்களில் சிறப்பாக இயங்கக்கூடியதாக இருந்தது.

தினகரன்
THINAKARAN

35, டி.ஆர்.விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம் : 834
தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

சார்வரி வருடம் பங்குனி மாதம் 02ம் நாள் திங்கட்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1442 றஜப் பிறை 30

### குறள் தரும் சிந்தனை



கைம்மாறு வேண்டா கடப்பாடு மாரிமாட்டு
என்ஆற்றுங் கொல்லோ உலகு

இந்த உலகத்தார் மழைக்கு என்ன கைமாறு செய்கின்றனர்;, மழை போன்றவர் செய்யும் உதவிகளும் கைமாறு வேண்டாதவை.

## அபிமான வாசகர்களின் ஆதரவுடன் 89 ஆண்டு கால சாதனைப் பயணம்

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அது தொடர்பான விழிப்புணர்வை மக்களின் காலடிக்கு கொண்டு செல்வதற்கான ஊடகங்கள் எதுவுமே அக்காலத்தில் இருக்கவில்லை.

மக்களின் சிந்தனையைத் தூண்டி, சுதேச கலாசார மறுமலர்ச்சியை உருவாக்குவதாயின் பத்திரிகையின் அவசியம் இன்றியமையாததென்பதை நன்கு உணர்ந்து கொண்ட அமரர் டி.ஆர்.விஜேவர்த்தன அவர்கள், லேக்ஹவுஸ் என்ற மாபெரும் அச்சு ஊடக நிறுவனத்தைத் தோற்றுவித்தார். சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மும்மொழி பத்திரிகைகளை பிரசுரம் செய்து வெளியிடுகின்ற பெருவிருட்சமாக லேக்ஹவுஸ் நிறுவனத்தை வளர்த்தெடுத்தார். அதுவே இலங்கையின் பத்திரிகை உலகின் தாய் வீடாக இன்றும் போற்றப்படுகின்றது.

ஏரிக்கரை நிறுவனத்தின் தமிழ் வெளியீடாக தினகரன் பத்திரிகை 15.03.1932 அன்று மலர்ந்தது. இலங்கையில் மும்மொழிகளிலும் கடந்த அரை நூற்றாண்டுக்கு மேற்பட்ட காலப் பகுதியில் எத்தனையோ பத்திரிகைகள் முளை விட்டிருக்கின்றன. தமிழில் வெளிவந்த பல பத்திரிகைகள் வேகமாக வளர்ச்சியுற்று தமிழ் வாசகர்களை ஆக்கிரமித்துக் கொண்டதுமுண்டு. ஆனால் காலப் போக்கில் அவை மறைந்தே போய் விட்டதுதான் வரலாறு. பத்திரிகை தர்மத்தையும், ஊடக கலாசாரத்தையும் பேணாத பத்திரிகைகளை காலவோட்டத்தில் மக்கள் தாமாகவே இனங் கண்டு புறக்கணித்ததன் விளைவாகவே அப்பத்திரிகைகள் மக்களிடமிருந்து அந்நியப்பட்டு மறைந்து போய் விட்டன.

ஆனால் தினகரன் பத்திரிகையானது தனது வெற்றிப் பயணத்தில் இருந்து என்றுமே பின்வாங்கியதில்லை. சுதந்திரத்துக்குப் பின்னரான அரசியல் சூறாவளிகள், இனவன்செயல்கள், தென்னிலங்கை உள்நாட்டு கிளர்ச்சி, முப்பதாண்டு கால யுத்த சூழல் போன்ற எத்தனையோ ஒவ்வாத காலப் பகுதிகளையெல்லாம் துணிச்சலுடன் எதிர்கொண்டு தொடர்ந்தும் தளர்வின்றி மிடுக்குடன் வெளிவந்து கொண்டிருக்கின்ற சாதனை நாளிதழாக மிளிர்கின்றது உங்கள் தினகரன்.

89 ஆண்டு காலப் பயணத்தில் தினகரன் எத்தனையோ சோதனைகளையும், வேதனைகளையும், இன்பதுன்பங்களையும் சந்தித்திருக்குமென்பதை விபரிக்க வேண்டிய அவசியமில்லை. ஆனால் எக்காலத்திலும் தினகரன் துவண்டு போனதில்லை. அச்சமும், பதற்றமும், நெருக்கடியும் நிறைந்த காலப் பகுதியிலும் அவற்றையெல்லாம் துணிச்சலுடன் எதிர்கொண்டு தினகரன் நிமிர்ந்தபடி வெற்றிநடை போடுகின்றதென்பது உண்மையிலேயே வரலாற்று சாதனைதான்.

இந்த வெற்றியின் பின்னணியில் எமது அபிமான வாசகர்களும் கூடவே ஒன்றிணைந்துள்ளனரென்பதை இவ்விடத்தில் நன்றியுடன் வெளிப்படுத்துவதில் தினகரன் பெருமிதம் கொள்கின்றது. தினகரனுக்கென்று எக்காலத்திலும் அபிமான வாசகர் வட்டமொன்று தலைமுறை தலைமுறையாக பின்தொடர்ந்தே வருகின்றது. எவ்விதமான சூழ்நிலையிலும் அந்த வாசகர்கள் தினகரனுடன் பின்னிப் பிணைந்தபடியே உள்ளனர். அவர்கள் தொடர்ந்தும் வழங்கி வருகின்ற நல்லாதரவே தினகரனின் பெருவளர்ச்சிக்கான பிரதான தூண் ஆகும்.

ஆண்டுகள் 89 கடந்துள்ள இன்றைய காலப் பகுதியில், ஊடகத் துறையிலும் கூட எத்தனையோ நவீனங்கள் உருவாகியிருக்கின்றன. அறிவியல் தொழில்நுட்பத்தின் அத்தனை நவீனங்களையும் தினகரன் பத்திரிகை தனக்குள் உள்வாங்கிக் கொண்டுள்ளது. அச்சு ஊடகத் துறையில் நவீன தொழில்நுட்ப வசதிகளை புகுத்திக் கொள்வதில் லேக் ஹவுஸ் நிறுவனமே முன்னணியில் திகழ்கின்றது. அவ்வாறான நவீன வாய்ப்புகளுடனேயே தினகரனும் வெளிவந்து கொண்டிருக்கின்றது.

பத்திரிகையொன்றின் வளர்ச்சிக்கும், அதன் நிலைத்திருப்புக்கும் வாசகர்களின் பேராதரவே பிரதான காரணமாகும். அந்த வகையில் 89 ஆண்டுகள் கடந்தும் வாசகர்களிடமிருந்து கிடைக்கின்ற குன்றாத ஆதரவு எமக்கான பெரும் வரப்பிரசாதமாகும். எமது அபிமான வாசகர்களின் அன்புக்கும், ஆதரவுக்கும் நன்றியுடன் தலைவணங்குகின்றோம். எமது வெற்றிக்கான அடித்தளம் வாசகர்களே!

editor.tkn@lakehouse.lk

# ஏமாற்று வர்த்தகர்களிடமிருந்து மக்கள் பாதுகாக்கப்பட வேண்டும்

உலக நுகர்வோர் தினம் ஒவ்வொரு வருடமும் மார்ச் மாதம் 15 ஆம் திகதி அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றது. உலகிலுள்ள நுகர்வோர்களின் பாதுகாப்பு மற்றும் அடிப்படை உரிமைகளை உறுதிப்படுத்துவதே இத்தினத்தின் நோக்கமாகும் .

யாராவது ஒரு உற்பத்தியாளரால் உற்பத்தி செய்யப்படுகின்ற பொருட்களை அல்லது பண்டங்களை பணம் கொடுத்து வாங்கி அவற்றைப் பயன்படுத்தி நன்மை அடைபவரே நுகர்வோர் எனக் கருதப்படுகின்றனர்.

இன்றைய விஞ்ஞான உலகில் தொழில்நுட்ப மேம்பாட்டினால் மனிதனது அன்றாடத் தேவைகள் விரிவடைந்து வருகின்றன. பாவனையாளர்களுக்கு என்ன தேவை என்பதை சந்தைப் பொருளாதாரமொன்றில் உள்ள உற்பத்தியாளர்களே தீர்மானிக்கின்றனர். நுகர்வோர்களின்தேவைகளைநிறைவுசெய்ய உற்பத்தியாளர்கள் பொருட்களை உற்பத்தி செய்கின்றனர்.

மறுபுறத்தில் பாவனையாளர்கள் என்ற

## உலக நுகர்வோர் தினம் இன்று

நுகர்வோர் அப்பொருளை அல்லது பண்டங்களை வாங்கி பயனடைகின்றனர். இங்கு குறைந்த விலையில் நிறைவான, தரமான பொருட்களை வாங்கி திருப்தியடைய வேண்டுமென்பதே நுகர்வோரின் எதிர்பார்ப்பாகும்.

மறுபுறத்தில் தாம் உற்பத்தி செய்யும் பொருட்களின் மூலம் கூடிய இலாபத்தைப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்பதே உற்பத்தியாளர்களின் எதிர்பார்ப்பாக இருக்கின்றது. இவ்வாறான போட்டி மனப்பான்மை செயற்பாட்டினால் நுகர்வோரே பெரிதும் ஏமாற்றப்படுகின்றனர் என்பதை அவர்கள் அறியாதவர்களாகவே இருக்கின்றனர். பாவனையாளர் இவ்வாறான பாதிப்பிலிருந்தும், ஏமாற்றத்திலிருந்தும் பாதுகாக்கப்பட வேண்டுமென்றால் நுகர்வோர் பாதுகாப்பு சட்ட விதிகளை அறிந்திருப்பது அவசியமாகும். இது தொடர்பில் ஊடகங்கள் மக்களுக்கு தெளிவுபடுத்த வேண்டும்.

இன்று பெரும்பாலான வர்த்தக நிலையங்களில் பல வருடங்களுக்கு முன்னர் வைக்கப்பட்ட விலைப் பட்டியலே இன்றும் அப்படியே காணப்படுகின்றது. எத்தனையோ பொருட்களுக்கு விலை மாற்றங்கள் ஏற்பட்டிருந்த போதிலும், விலைப் பட்டியலில் எதுவித மாற்றங்களும் இடம்பெற்றதாகத் தெரியவில்லை. இவ்விலைப்பட்டியலில் விஷேடம் என்னவென்றால் பட்டியலில் காணப்படும் பொருட்கள் கடையில் இல்லை, கடையில் இருக்கும் பொருட்கள் பட்டியலில் இல்லை.

## நுகர்வோர் பாதுகாப்பு மற்றும் அடிப்படை உரிமைகளை பொதுமக்கள் ஒவ்வொருவரும் அறிந்திருத்தல் அவசியம்

தற்போது கொரோனாவை காரணம் காட்டி நினைத்த விலையில் பொருட்களை விற்பனை செய்கின்றனர். பாவனையாளர்களையும், பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபை திடீர் பரிசோதகர்களையும் ஏமாற்றவே இவ்வாறான விலைப்பட்டியல் தொங்க விடப்பட்டிருப்பதாகவே கருத முடிகின்றது.

பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபை சட்டத்தின்படி விற்பனை செய்யப்படும் பொருட்களுக்கு முழு விபரங்களும் அடங்கிய பற்றுச்சீட்டு வழங்கப்பட வேண்டும். அதில் விற்கப்பட்ட திகதி, பொருளின் தொகை மற்றும் செலுத்தப்பட்ட பணம் என்பன பற்றுச்சீட்டில் இடம்பெற்றிருத்தல் வேண்டும். ஆனால் பெரும்பாலான வியாபார நிலையங்களில் பற்றுச்சீட்டு வழங்கப்படுவதே இல்லை. இதனால் பொருட்களின் தரம், நிறை மற்றும் சரியான விலைகளையும் கூட நுகர்வோர்சந்தேகமின்றிஅறியமுடியாதவர்களாகவே காணப்படுகின்றனர். மேலும் நஷ்டஈடு பெற வேண்டி ஏற்பட்டாலும் அதற்கு ஆதாரம் (பற்றுச்சீட்டு) இல்லாதவர்களாகவே இருக்கின்றனர்.

வியாபார நிலையங்களில் பற்றுச்சீட்டு வழங்குவதை கட்டாயப்படுத்துவதன் மூலம் இவ்வாறான மோசடிகளிலிருந்தும், ஏமாற்றங்களிலிருந்தும் பாவனையாளர்களை பாதுகாத்துக் கொள்ள முடியும். இது தொடர்பில் பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபை கவனமெடுத்து ஆவன செய்ய முன்வர வேண்டும்.

## குற்றங்களுக்கான தண்டனை அதிகரிக்கப்பட்டாலேயே மோசடி வியாபாரத்துக்கு முற்றுப்புள்ளி வைக்க முடியும்




இன்று பெரும்பாலான வியாபாரிகள் வணிக விழுமியங்களை புறந்தள்ளிவிட்டு தரம் குறைந்த பொருட்களால் கலப்படம் செய்கின்றனர். அளவை நிறுவையில் மோசடி, காலாவதியான பொருட்களை விற்பனை செய்தல், விலைகளில் மாற்றம் செய்தல், பொருட்களில் காணப்படாத குணங்களை சேர்த்து விளம்பரம் செய்தல், காலாவதியான திகதி குறிப்பை மங்கச் செய்தல் அல்லது அழித்தல் போன்ற போலியான, மோசடியான நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர். இவற்றிலிருந்து பாவனையாளர்களை பாதுகாப்பது அரசின் கடமையாகும்.

கடந்த காலத்தில் பாவனையாளர்களின் நலன் கருதி அரசாங்கம் கிராம மட்டம் தொடக்கம் தேசிய மட்டம் வரை பாவனையாளர் பாதுகாப்பு சங்கங்களை அமைத்து சிறப்போடு செயற்பட்டு வந்தது. தற்போது இச்சங்கங்கள் செயலிழந்துள்ளதாக அறிய முடிகின்றது. மீண்டும் இச்சங்கங்கள் செயற்பட உரியவர்கள் ஆவன செய்ய வேண்டும்.

அன்று அமெரிக்க ஜனாதிபதியாக இருந்த ஜோன் எப் கென்னடி 1962ஆம் ஆண்டு மார்ச் மாதம் 15ஆம் திகதி அமெரிக்க பாராளுமன்றமான கொங்கிரஸில் நுகர்வோர் அடிப்படை உரிமைகள் பற்றி ஆற்றிய உருக்கமான உரையின் பின்னரே, 1983ஆம் ஆண்டு பாவனையாளர்களுக்கான அடிப்படை உரிமைகள் தோற்றம் பெற்றதாக அறிய முடிகின்றது. இதனடிப்படையில் சர்வதேச ரீதியில் ஏற்றுக் கொள்ளப்பட்ட பாவனையாளர்களுக்கான அடிப்படை உரிமைகள் அறிமுகம் செய்யப்பட்டன. அவை பின்வருமாறு:

உணவு ,உறைவிடம், கல்வி, சுகாதாரம் போன்ற அடிப்படைத் தேவைகளை பெற்றுக் கொள்வதற்கான உரிமை. தனக்குத் தேவையான பண்டங்களையும் சேவைகளையும் தாமே தெரிவு செய்து கொள்ளும் உரிமை. தனது உடல் நலத்துக்கும் உயிருக்கும் தேவையான பாதுகாப்பினை பெற்றுக் கொள்ளும் உரிமை. ஏமாற்று விளம்பரங்கள் மற்றும் போலியான தகவல்களிலிருந்தும் விடுபட்டு சரியான பூரணமான தகவல்களை பெற்றுக் கொள்ளும் உரிமை. பண்டங்கள் மற்றும் சேவைகள் தொடர்பாக கருத்துகள் தெரிவிக்கும் உரிமை. திருப்தியற்ற சேவைகள் மற்றும் தரம் குறைந்த பண்டங்கள் விற்பனையின் போது நுகர்வோர் பாதிக்கப்பட்டால் நீதியான முறையில் நிவாரணம் பெற்றுக் கொள்ளும் உரிமை. எதிர்கால சந்ததியினர் ஆரோக்கியமான சூழலில் வாழும் உரிமை.

இவை போன்ற அடிப்படை உரிமைகள் நுகர்வோருக்கு வழங்கப்பட்டுள்ளன. இவற்றை அறிந்து அனுபவிப்பது பாவனையாளர்களின் கடமையாகும்.

சர்வதேச ரீதியில் நுகர்வோர்களுக்கு பல பாதுகாப்புச் சட்டங்களும் அடிப்படை உரிமைகளும் வழங்கப்பட்டிருந்த போதிலும், இவற்றை பெரும்பாலான நுகர்வோர் அறியாதிருப்பதன் காரணமாகவே ஏமாற்றப்படுகின்றனர் .

பாவனையாளர்களின் அடிப்படை உரிமைகளை பாதுகாப்பதில் கவனம் செலுத்தி வரும் உயர்ந்த நிறுவனமாகிய பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையானது, நுகர்வோர்களின் நலன் கருதி சில நடவடிக்கைகளையும் செயற்ப்படுத்தி வருகின்றது.

பாவனையாளர்களின் உயிருக்கும், உடைமைகளுக்கும் அபாயம்தீங்கு ஏற்படுத்தக் கூடிய பண்டங்கள் மற்றும் சேவைகளிலிருந்தும் பாவனையாளர்களை பாதுகாத்தல். நீதியற்ற வர்த்தக நடைமுறைகள் மற்றும் பாவனையாளர்களின் தேவைகள் பூரணமாக நிறைவு பெறாத சந்தர்ப்பங்களில் நடவடிக்கை எடுத்து பாவனையாளர்களை பாதுகாத்தல். முடியுமான சந்தர்ப்பங்களில் பண்டங்கள் மற்றும் சேவைகள் போட்டி அடிப்படையிலான விலைகளில் பாவனையாளர்களுக்கு கிடைக்கச் செய்தல்.

வியாபாரிகளின் வர்த்தக நடவடிக்கைகள் மற்றும நுகர்வோரை சுரண்டும் விதத்திலான செயற்பாடுகளிலிருந்தும் நிவாரணம் பெற்றுக் கொடுத்தல்.

இவ்வாறான நலன் பேணும் பங்களிப்பினை அதிகார சபை செய்து வருகின்றது.

வியாபாரிகள் தெரிந்து, அறிந்து செயல்பட வேண்டிய வியாபாரம் சம்பந்தமான சட்ட ரீதியான விடயங்களில் அலட்சியப் போக்கோடு நடந்து கொள்கின்றனர். இச்செயலானது பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபை சட்டத்தில் குற்றச் செயலாக காணப்படுகின்றது. அவற்றில் சில வருமாறு:

வர்த்தக நிலையங்களில் சில்லறை மற்றும் மொத்த விலைப்பட்டியல் பாவனையாளர்களின் பார்வைக்கு தொங்க விடப்படாமை. பொருட்களில்,பண்டங்களில் குறிக்கப்பட்டுள்ள விலையை மாற்றுதல் அழித்தல் அல்லது மங்கச் செய்தல். பொருளில் பண்டத்தில் குறிக்கப்பட்டுள்ள விலையை விட கூடுதலான விலையில் விற்றல். பொருட்களை வைத்துக் கொண்டு விற்பனை செய்ய மறுத்தல். காலாவதியான பொருட்களை விற்பனை செய்தல். நுகர்வோரை ஏமாற்றும் நோக்கோடு குறைகளை மறைத்து பொருட்களை விற்பனை செய்தல். பாவனையாளர்களுக்கு பொருட்களின் விபரமடங்கிய பற்றுச் சீட்டுகள் வழங்காமை.

இவை நீதிமன்றத்தினால் தண்டனை வழங்கக் கூடிய குற்றச் செயல்களாக காணப்படுகின்றன. இவற்றை கவனத்தில் கொண்டு செயற்படுவது ஒவ்வொரு வியாபாரியினதும் கடமையாகும். இவ்வாறான குற்றச் செயல்களை கண்டறிவதற்கென தேசிய ரீதியில் மாவட்டங்கள் தோறும் பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபை உயர் அதிகாரிகள் திடீர் பரிசோதனைகளை நடத்தி வருவது குறிப்பிடத்தக்கது

உற்பத்தியாளர்கள் மற்றும் வியாபாரிகள் நுகர்வோரை மோசமாக ஏமாற்றி பொருட்களை அல்லது பண்டங்களை விற்பனை செய்கின்ற குற்றத்திற்கு கிடைக்கின்ற தண்டனை போதுமானதாகத் தெரியவில்லை. இதனாலேயே அவர்கள் மீண்டும் மீண்டும் அதே குற்றத்தை செய்கின்றனர். எனவே தண்டனையை அதிகரிக்க சட்டத்தில் திருத்தம் செய்ய வேண்டும் அல்லது அவ்வாறான வர்த்தகர்களின் வியாபார அனுமதி ரத்துச் செய்யப்பட வேண்டும் என்பதே மக்களின் வேண்டுகோளாகும்.



எம்.ரி.ஏ. கபூர்
(நிந்தவூர் தினகரன் நிருபர்)



# பல நாட்கள் இழுபறிக்கு பின்னர் அ.ம.மு.க - தே.மு.தி.க கூட்டணி



அ.ம.மு.க_ தே.மு.தி.க இடையே கூட்டணி ஒப்பந்தம் நேற்று கையெழுத்தானது. தே.மு.தி.க 65 முதல் 70 தொகுதிகள் வரை ஒதுக்க கேட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

அ.தி.மு.க கூட்டணியில் 41 தொகுதிகளை கேட்டது தேமுதிக. ஆனால் அ.தி.மு.கவோ அத்தனை தொகுதிகளை ஒதுக்க முடியாது என தெரிவித்து விட்டது. இதையடுத்து பா.ம.கவுக்கு ஒதுக்கியது போல் 23 அல்லது 25 தொகுதிகள் வேண்டும் என தே.மு.தி.க கேட்டது.

ஆனால் அ.தி.மு.க.வோ 14 முதல் 18 வரை மட்டுமே கொடுக்க முடியும். அதற்கு மேல் ஒரு ஆசனம் கூட கொடுக்க இயலாது என சொல்லிவிட்டது. இதையடுத்து தே.மு.தி.க கட்சி அலுவலகத்தில் மாவட்டச் செயலாளர்கள் கூட்டம் நடத்தப்பட்டு அ.தி.மு.க கூட்டணியிலிருந்து தே.மு.தி.க வெளியேறுவதாக தலைவர் விஜயகாந்த் அறிவித்தார்.

இதையடுத்து மக்கள் நீதி மய்யம் கட்சியின் தலைவர் கமல்ஹாசன் வெளிப்படையாக தங்கள் கூட்டணிக்கு வந்துவிடுமாறு விஜயகாந்திற்கு அழைப்பு விடுத்தார். இந்த நிலையில் அ.ம.மு.க_ தே.மு.தி.க இடையே பேச்சுவார்த்தை நடத்தப்பட்டு வந்ததாக சொல்லப்பட்டது. ஆனால் கடந்த இரு தினங்களுக்கு முன்னர் அ.ம.மு.க முதல் கட்ட வேட்பாளர்கள் பட்டியல் வெளியானது. இதனால் தே.மு.தி.க தனித்து களம் காணும் என எதிர்பார்க்கப்பட்டது. இந்த நிலையில் நேற்றைய தினம் இரு கட்சிகளும் பேச்சுவார்த்தை நடத்தின.

இதில் உடன்பாடு எட்டப்பட்டது. அ.ம.மு.க_ தே.மு.தி.க இடையே நேற்று பேச்சுவார்த்தை நடத்தப்பட்டது.

இதில் இரு தரப்பினரிடையே சுமுக உடன்பாடு எட்டப்பட்டு கூட்டணி ஒப்பந்தம் கையெழுத்தானது. தங்களுக்கு 65 முதல் 70 தொகுதிகள் வரை ஒதுக்கீடு செய்யுமாறு அ.ம.மு.கவிடம் தே.மு.தி.க கேட்டதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

நேற்று மாலை 6.30 மணிக்கு அ.ம.மு.க_ தே.மு.தி.க கூட்டணி அதிகாரபூர்வமாக அறிவிக்கப்பட்டது. தே.மு.தி.கவுக்கு 60 இடங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன. நேற்று மாலையே தே.மு.தி.க வேட்பாளர்கள் பட்டியலும் வெளியாகவிருந்தது.

# தோட்டப்புற வீடமைப்பு கிராம திட்டம் தெரணியகல பகுதியில் அங்குரார்ப்பணம்

## ஜனாதிபதி, பிரதமரின் அறிவுறுத்தலில் இந்திய அரசின் உதவியுடன் நிர்மாணம்

கடந்த 2015 ஆம் ஆண்டுக்குப் பிறகு தோட்டப்புற வீட்டுக் கிராமங்களை நிர்மாணிக்கும் திட்டம் இம்மாதம் 8 ஆம் திகதி தெரணியகலையில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ஆகியோரின் அறிவுறுத்தலின் பேரில் ஆரம்பிக்கப்பட்டது.

இந்தத் திட்டத்தின் ஒரு சிறப்பு அம்சம், நாட்டின் பொருளாதாரத்தை ஆதரிக்கும் முக்கிய ஏற்றுமதிப் பயிரான தேயிலை பயிரிடப்படும் தோட்டங்களிலுள்ள லயன்களில் வாழ்ந்து வரும் தொழிலாளர் குடும்பங்களுக்கு புதிய வீடுகளை வழங்குவதாகும். தெரணியகலையில் உள்ள மாலிம்பொட தேயிலைத் தோட்டத்தில் இருந்து இத்திட்டம் ஆரம்பிக்கப்படுகின்றது.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் நகர அபிவிருத்தி, வீடமைப்பு அமைச்சரும் பிரதமருமான மஹிந்த ராஜபக்ஷ ஆகியோரின் வழிகாட்டுதலின் கீழ், நகர அபிவிருத்தி அதிகாரசபை தோட்டத் தொழிலாளர்களுக்காக இந்த வீடுகளை இந்திய அரசின் உதவியுடன் நிர்மாணித்து வருகிறது.

நகர அபிவிருத்தி, கடலோர பாதுகாப்பு, திண்மக் கழிவுநீர் அகற்றல் மற்றும் பொது சுகாதாரத் துறை அமைச்சர் கலாநிதி நாலக்க கொடஹேவா, தோட்ட கம்பனி புனரமைப்பு, தேயிலைத் தோட்ட பயிர்ச் செய்கை, தேயிலைத் தொழிற்சாலை நவீனப்படுத்தல் மற்றும் தேயிலை ஏற்றுமதி அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் கனக்க ஹேரத், சப்ரகமுவ மாகாண ஆளுநர் கெகிரி கொப்பேகடுவ, பாராளுமன்ற உறுப்பினர் ராஜிக்க விக்கிரமசிங்க, பாராளுமன்ற உறுப்பினர் சுதத் மஞ்சுல ஆகியோரின் தலைமையில் ஆரம்பிக்கப்பட்ட இந்த தோட்டப்புற வீடமைப்புத் திட்டமானது, ஜனாதிபதியின் 'கிராமத்துடனான உரையாடல்' நிகழ்ச்சித் திட்டத்தின் பிரதிபலிப்பாக 'மகிழ்ச்சியுடன் வாழும் குடும்பம்' என்ற எண்ணக்கருவை கட்டியெழுப்பும் நோக்குடன் செயற்படும்.

நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் செயலாளர் சிரினிமல் பெரேரா, நகர அபிவிருத்தி அதிகாரசபை தலைவரான பட்டய கட்டடக் கலைஞர் ஹர்ஷன் டி சில்வா, பட்டய கட்டடக் கலைஞர் பிரசாத் ரணவீர, இலங்கை அரச பொறியியல் கூட்டுத்தாபனத்தின் தலைவர் ரத்னசிறி கலுபஹன மற்றும் ஏனைய அதிகாரிகள் நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ஆகியோரின் வழிகாட்டுதலில் இந்த 170 புதிய தோட்ட வீடுகள் தெரணியகலவில் உள்ள மாலிம்பொட தேயிலைத் தோட்டத்தில் நிர்மாணிக்கப்படவுள்ளன. பொகவந்தலாவ தோட்ட நிறுவனத்திற்கு சொந்தமான காணியில் புதிய வீடுகள் கட்டப்படும்.

இந்த தோட்டபுற வீட்டுத் திட்டங்கள் 'சுபீட்சத்தின் நோக்கு' கொள்கை பிரகடன அறிக்கையின் கீழ் செயல்படுத்தப்பட்ட வீட்டுத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

இதனால், நீண்ட காலமாக எந்த அடிப்படை வசதிகளும் இல்லாமல் வாழ்ந்து வரும் 170 தோட்டப்புற குடும்பங்கள், எந்தவித கட்டணமும் இன்றி புதிய வீடுகளின் உரிமையாளர்களாக மாறுவதற்கு வாய்ப்புக் கிடைக்கும்.

புதிய வீட்டில் 02 தளங்கள் இருக்கும். ஒரு வீடு இன்னொரு வீட்டை எதிர்கொள்ளும் வகையில் கட்டப்பட்ட இந்த வீட்டு வசதி பிரிவில் 08 வீடுகள் உள்ளன. ஒரு வீட்டின் பரப்பளவு 550 சதுர அடி.

ஒவ்வொரு வீட்டிலும் தண்ணீர், மின்சாரம் மற்றும் சுகாதார வசதிகள் இருக்கும்.

ஒவ்வொரு வீட்டிலும் இரண்டு படுக்கையறைகள், ஒரு சமையலறை மற்றும் ஒரு வரவேற்பறை இருக்கும். நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் ஒத்துழைப்புடன் இந்திய அரசின் உதவியுடன் இந்த வீட்டுத் திட்டம் அமைக்கப்பட்டு வருகிறது.

மேலும் பெருந்தோட்டங்களில் 10,000 வீடுகள் அமைக்க இந்திய அரசு ஏற்கனவே உறுதியளித்துள்ளதாக நகர அபிவிருத்தி, கடலோர பாதுகாப்பு, திண்மக் கழிவுகளை அகற்றுதல் மற்றும் பொது சுகாதாரத் துறை அமைச்சர் கலாநிதி நாலக்க கொடஹேவா தெரிவித்தார்.

இவ்வீட்டுத் திட்டம் ஒரு வருடத்திற்குள் நிறைவடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. முலிம்பொட தோட்ட புதிய வீட்டு வசதி திட்டத்திற்கு ரூ. 510 மில்லியன் செலவாகும். ஒப்பந்தக்காரர் ஒரு அனுபவமிக்க பொதுத்துறை கட்டுமான நிறுவனமான அரச பொறியியல் கூட்டுத்தாபனமாகும்.


ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் 'சுபீட்சத்தின் நோக்கு' கொள்கை பிரகடனத்தின் கீழ், பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் ஆலோசனையின் பேரில் ஆரம்பிக்கப்படும் தெரணியகலை மாலிம்பொட தோட்ட புதிய வீடமைப்பானது நடவடிக்கை நகர அபிவிருத்தி, கடலோர பாதுகாப்பு, திண்மக் கழிவுநீர் அகற்றல் மற்றும் பொது சுகாதாரத் துறை அமைச்சர் கலாநிதி நாலக்க கொடஹேவா, நகர அபிவிருத்தி மற்றும் வீட்டு வசதி அமைச்சின் செயலாளர் சிறிநிமல் பெரேரா, நகர அபிவிருத்தி அதிகாரசபை தலைவர் ஹர்ஷன் டி சில்வா, பட்டய கட்டடக் கலைஞர் பிரசாத் ரணவீர ஆகியோரின் தலைமையின் கீழ் நகர அபிவிருத்தி அதிகாரசபை, மஹாவலி அபிவிருத்தி அதிகாரசபை, இந்திய உயர் ஸ்தானிகர் அலுவலகம் ஆகிய நிறுவனங்கள் இணைந்து மேற்கொள்ளப்படுகின்றது.














டபிள்யூ. கே.பிரசாத் மஞ்சு...
(நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சரின் ஊடக செயலாளர்)

# விவசாயம் இன்று விஷப் பரீட்சை!

## அம்பாறை மாவட்டத்தில் நெல் அறுவடையும் விவசாயிகள் எதிர்கொள்ளும் நெருக்கடிகளும்

அம்பாறை மாவட்டத்தில் நெல் அறுவடை ஆரம்பித்து முடிவடையும் காலம் நெருங்கி விட்டது. இப்போது நெல்லுக்குச் சந்தையில் நல்ல விலை நிலவுகின்றது. ஒரு மூடை நெல் 3,700 ரூபா வரையில் விற்பனையாகிறது. ஆனால், முன்னர் ஒரு காலகட்டத்தில் 1,200 ரூபா விற்பனையாகியது. அப்போது நெல்லுக்கான விலை வீழ்ச்சியடைந்திருந்தது. அந்த வகையில் இப்போது விவசாயிகளுக்கு மகிழ்ச்சியான காலம் ஆகும்.

அம்பாறை மாவட்டத்தில் நெல் அறுவடை நடந்து கொண்டிருந்த ஓர் இடத்தில் நின்று கொண்டிருந்தோம். ஏக்கரொன்றுக்கு 35 தொடக்கம் 45 மூடை வரையில், அங்கு நெல் அறுவடையாகிக் கொண்டிருந்தது. அங்கிருந்த வயல் உரிமையாளருடன் பேசிய போது, அவர் முகத்தில் மகிழ்ச்சி தெரிந்தது. மழை பெய்ய வேண்டிய காலத்தில் மழை கிடைத்தால் விளைச்சல் நன்றாக இருக்கும். ஆனால் அறுவடை காலத்தில் மழை பெய்தால் அல்லது நெல்மணிகளின் பால் பருவத்தில் மழை பெய்தால் எதிர்பார்க்கும் விளைச்சல் கிடைப்பதில்லை.

விவசாயம் என்பது, இன்று சூதாட்டம் போல் மாறியிருக்கிறது. இலாபம் கிடைக்குமா, நஷ்டம் ஏற்படுமா என்பதை அறுவடையின் பிறகும், சில வேளைகளில் அனுமானிக்க முடியாது போய் விடும். நல்ல விளைச்சல் கிடைத்தாலும், சந்தையில் உரிய விலை நெல்லுக்குக் கிடைக்காமல் போனால் நஷ்டம்தான். நல்ல விலை என்பதைத் தீர்மானிக்கும் மறைகரங்கள், நெல் சந்தையில் ஏராளம் உள்ளன. அவர்கள் நெல் விற்பனையில் மாபியாக்கள் ஆக உள்ளனர்.

குறிப்பாக தனியார் நெல் கொள்வனவாளர்கள், அரிசி ஆலை உரிமையாளர்கள் முக்கியமானவர்களாவர். இவர்கள் நிர்ணயிக்கின்ற விலைதான், அவ்வப் பிரதேசங்களில் நெல்லுக்கான சந்தை விலையாக மாறுகிறது. அதேவேளை, செயற்கையான முறையிலும் நெல்லுக்கான விலையில் இவர்கள் வீழ்ச்சியினை ஏற்படுத்துவதுண்டு. அந்த வேளைகளில், விவசாயிகளின் பாடு திண்டாட்டம்தான். விவசாயிகளின் நெல்லைப் பெற்று மொத்த வியாபாரிகளுக்கு வழங்கும் தரகர்கள், விவசாயிகளை ஏமாற்றும் கைங்கரியங்களில் ஈடுபடுவதாகவும் கவலை தெரிவிக்கப்படுகின்றது. அதிகரித்த விலைக்கு வழங்குவதாகக் கூறி நெல்லைப் பெற்றுக் கொள்ளும் அவர்கள், பின்னர் உறுதியளித்த விலையை வழங்காது, குறைந்த விலையை வழங்கி கொள்ளை இலாபம் பெறுவதாகவும் விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

## தேசத்துக்கு உணவளிக்கும் நெற்செய்கையாளர்களின் வாழ்வாதார பிரச்சினையை எவரும் அலட்சியப்படுத்தலாகாது!

உதாரணமாக, இரண்டு வாரங்களுக்கு முன்னர், அம்பாறை மாவட்டத்தின் சில பகுதிகளில் 65 கிலோகிராம் எடையுடைய ஒரு மூடை நெல்லுக்கான விலையாக 3000 ரூபாவை தனியார் நெல் கொள்வனவாளர்கள் தீர்மானித்திருந்தனர். இந்த விலைக்குத்தான் கணிசமான விவசாயிகள், தங்களின் நெல்லை விற்பனை செய்திருந்தனர்.

ஆனால், அம்பாறை மாவட்டத்தின் வேறு சில பிரதேசங்களில் நெல்லுக்கான விலை அப்போது 3,900 ரூபா வரையிலும் இருந்தது. 15 கிலோ மீற்றருக்கு இடைப்பட்ட இரண்டு பிரதேசங்களில், இவ்வாறான விலை ஏற்றத்தாழ்வு காணப்பட்டன இப்படி, கணிசமான தனியார் நெல் கொள்வனவாளர்களும் இடைத் தரகர்களும் விவசாயிகளை ஏமாற்றிக் கொண்டிருக்கின்றனர்.

இப்போது முடிவடையும் தறுவாயில் இருப்பது பெரும்போக அறுவடையாகும். பெரும்பாலான வயல்களில் நெல் அறுவடை முடிவடைந்து விட்டது. மழையை நம்பி ஏராளமான இடங்களில் நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டிருந்து. வழமையாக பெரும்போக அறுவடை நடைபெறும் போது, மழை பெய்வது இல்லை. ஆனால், இம்முறை எல்லாமே தலைகீழாகப் போயிற்று.

இந்தப் பெரும் போக ஆரம்பத்தில் மழையே கிடைக்கவில்லை. குறிப்பாக, மழை ஆரம்பிக்க வேண்டிய காலப் பகுதியில் மழை பெய்யவில்லை. மாற்றமாக நெல்மணிகளின் பால் பருவத்தில் மழை பெய்ததால் மகரந்தச் சேர்க்கை தடைப்பட்டது. இதனால் உற்பத்தியில் வீழ்ச்சி ஏற்பட்டது.

அம்பாறை மாவட்டத்தின் கணிசமான பகுதிகளில், இம்முறை நெற்பயிர்கள் வெள்ளத்தில் பாதிக்கப்பட்டன. மழையில் நனைந்தவாறுதான், வயல்களிலிருந்து அறுவடை செய்யப்பட்ட நெல்லை விவசாயிகள் கொண்டு செல்கின்றனர். இதன் காரணமாக விவசாயிகள் பலர் தமது நெற்செய்கையினை கைவிட வேண்டிய அவலமும் ஏற்பட்டது. நெற்செய்கையை மேற்கொண்டு, அதன் விளைச்சலை அறுவடை செய்து எடுக்கும் வரையில், ஏக்கரொன்றுக்கு சுமார் 50 ஆயிரம் ரூபாவை செலவிட வேண்டியேற்படுகிறது என விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர். இம்முறை ஏக்கரொன்றுக்கு 40 மூடைகள் வீதம் விளைச்சல் கிடைக்கிறது. நெல்லுக்கான விலையும் மூடையொன்றுக்கு மூவாயிரம் ரூபாவுக்கு மேல் கிடைக்கிறது. இந்தக் கணக்கின்படி பார்த்தால், ஏக்கரொன்றுக்கு சுமார் 70 ஆயிரம் ரூபா இலாபம் கிடைக்கும். மூன்றரை மாதத்தில் இந்த இலாபம் கிடைக்கிறது.

ஆனால், இப்படியான இலாபம் எப்போதும் கிடைப்பதில்லை. கடந்த காலங்களில் ஏக்கரொன்றுக்கு 20 மூடைக்கும் குறைவான விளைச்சலும் கிடைத்திருக்கிறது. அப்போது நெல்லுக்கான விலை 1,200 ரூபா வரையிலும் இருந்துள்ளது. அதன்படி பார்த்தால், 24 ஆயிரம் ரூபாவுக்குள்தான் ஏக்கரொன்றிலிருந்து கிடைத்திருந்தது.

முதலீட்டில் அரைவாசியைக் கூடப் பெற முடியாத பரிதாபம் விவசாயிகளுக்கு ஏற்பட்டிருந்தமையும் இங்கு நினைவு கொள்ளத்தக்கது.









எவ்வாறாயினும், தற்போது நெல்லுக்குக் கிடைக்கும் விலை உச்சமானதாகும். நெற்சந்தையில் நிரம்பல் அதிகரிக்கும் போது நெல்லுக்கான விலையில் வீழ்ச்சி ஏற்படுவதுண்டு. ஆனால், இம்முறை வரட்சி காரணமாக, கணிசமானளவு நெல்வயல்கள் பாதிக்கப்பட்டும், அழிவடைந்தும் விட்டன. இதனால், பெரும்போகநெற்சந்தையில்இம்முறைநிரம்பல் அதிகரிப்பதற்கான சந்தர்ப்பங்கள் குறைவாகவே உள்ளன.

தற்போதைய அரசாங்கம், மானிய விலையில் ஏக்கர் ஒன்றுக்கு 82 கிலோ யூரியா, 21கிலோ எம்.ஓ.பி, 10 கிலோ பி.எஸ்.பி என்று உரத்தை நேரடியாக வழங்குகின்றது. இவை 5 ஏக்கர் பயிர்ச் செய்கைக்கே விவசாயி ஒருவருக்கு வழங்கப்படுகிறது.

ஏ.எல்.எம்.ஷினாஸ்...
(பெரியநீலாவணை விசேட நிருபர்)

2021 A/L மற்றும் புலமைப்பரிசில் பரீட்சை;

# திட்டமிட்டபடி ஓகஸ்டில் இடம்பெறாது என அறிவிப்பு



2021 க.பொ.த. உயர் தர பரீட்சை மற்றும் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைகள் திட்டமிட்டபடி எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் இடம்பெறாது என பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் சனத் பூஜித அறிவித்துள்ளார்.

கல்வி அமைச்சர் ஜீ.எல். பீரிஸ் தலைமையில் வலயக் கல்விப் பணிப்பாளர்களுடனான சந்திப்பில் குறித்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

கொவிட்19 தொற்றுநோய் பரவல் காரணமாக பாடத்திட்டங்களை நிறைவு செய்வதில் உள்ள சிக்கல்களை கருத்திற் கொண்டு இத்தீர்மானம் எட்டப்பட்டதாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் தெரிவித்தார்.

அதற்கமைய, குறித்த இரு பரீட்சைகளும் இடம்பெறும் திகதிகள் பின்னர் அறிவிக்கப்படும் என அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, க.பொ.த. சாதாரண தரப் பரீட்சைகளின் வினாத்தாள் திருத்தும் நடவடிக்கை எதிர்வரும் மார்ச் 27ஆம் திகதி ஆரம்பிக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

கடந்த மார்ச் 01 , 10 வரை இடம்பெற்று முடிந்த க.பொ.த. சாதாரண தரப் பரீட்சைகளுக்கு, 622,000 பேர் தோற்றியிருந்ததோடு, 4,513 பரீட்சை நிலையங்களில் இப்பரீட்சைகள் இடம்பெற்றிருந்தன. இதில் கலைப் பிரிவுக்கான பிரயோக பரீட்சைகள் மே மாதத்தில் இடம்பெறவுள்ளன.

இப்பரீட்சை ஆரம்பமாகும்போது கொரோனா தொற்றிய 38 மாணவர்கள் காணப்பட்ட நிலையில் பரீட்சைகள் நிறைவடைந்த வேளையில் 62 பேருக்கு கொரோனா தொற்று ஏற்பட்டிருந்தது. இதற்காக நாடு முழுவதும் 40 விசேட நிலையங்கள் அமைக்கப்பட்டிருந்ததோடு, தனிமைப்படுத்தலுக்குட்பட்ட 322 மாணவர்கள் இப்பரீட்சைக்கு தோற்றியிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

சர்ச்சைக்குரிய கருத்து தெரிவித்த

# அஸாத் சாலியை விசாரிக்க குழு

## ASP தலைமையில் ஐவர் நியமனம்



முன்னாள் மேல் மாகாண ஆளுநர் அசாத் சாலியின் சர்ச்சைக்குரிய கருத்து தொடர்பில் விசாரிக்க குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தினால் குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, உதவி பொலிஸ் அத்தியட்சகர் தலைமையிலான ஐந்து பேர் கொண்ட குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதி பொலிஸ் மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

கொழும்பில் அண்மையில் செய்தியாளர்களை சந்தித்துப் பேசிய அஸாத் சாலி, பணம் இருந்தால் நான்கு பெண்களை திருமணம் செய்துகொள்வதில் என்ன தவறு என கேள்வி எழுப்பியிருந்தார்.

அத்தோடு, கோட்டபாய ராஜபக்ஷ ஜனாதிபதியாக பதவி ஏற்றுக்கொண்டார் என்பதற்காக குர்ஆனில் உள்ள சட்டங்களை மாற்றிக் கொள்ள முடியாது என்றும் அவ்வாறு சட்டங்கள் மாற்றப்பட்டாலும் அதனை முஸ்லிம் மக்கள் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள் என்றும் அவர் தெரிவித்திருந்தார்.

முஸ்லிம் மக்களின் வாழ்க்கை முறைமையை சட்டங்களினால் மாற்றிவிட முடியாது. முஸ்லிம் ஆண் ஒருவர் தனது பண வசதிக்கு ஏற்ற வகையில் பெண்களை திருமணம் செய்து கொள்கின்றார். அதில் எவ்வித தவறும் கிடையாது என்றும் அவர் தெரிவித்திருந்தார்.

செல்வம் இருக்கும் ஓர் ஆண் வசதி குறைந்த சில பெண்களை திருமணம் செய்து அவர்களை பராமரிப்பதில் தவறில்லை. முஸ்லிம் சட்டங்களை மாற்றி தேவையற்ற பிரச்சினைகளை உருவாக்கிக் கொள்ள வேண்டாம். இனவாத அடிப்படையிலேயே இந்த சட்ட மாற்றங்கள் மேற்கொள்ளப்படுகின்றன என அஸாத் சாலி குற்றம் சுமத்தியிருந்தார்.

இதனையடுத்து, முஸ்லிம் சட்டம் தொடர்பில் அசாத் சாலி தெரிவித்த கருத்துக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்குமாறு கோரி பௌத்த தகவல் மையத்தின் பணிப்பாளர் அங்குலுகல்லே சிறி ஜினானந்த தேரர் மற்றும் தேசிய முன்னணியின் ஊடகப் பேச்சாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான மொஹமட் முஸம்மில் உள்ளிட்ட சிலர் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தில் முறைப்பாடுகளைப் பதிவு செய்தனர்.

இந்த நிலையிலேயே குறித்த விடயம் தொடர்பாக விசாரணைகளை மேற்கொள்வதற்காக குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தினால் குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது.

சுகாதார சேவை யாப்பு திருத்தம்

# முன்னறிவிப்பின்றி தொழிற்சங்க போராட்டத்தில் குதிக்க முஸ்தீபு

## மருத்துவர் சங்கம் எச்சரிக்கை

**லோரன்ஸ் செல்வநாயகம்**

சுகாதாரத்துறை யாப்பில் மேற்கொள்ளப்பட்ட திருத்தத்திற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில் எந்தவித முன்னறிவிப்பும் இன்றி தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபட உள்ளதாக அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் சுகாதார அமைச்சுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளது.

அது தொடர்பில் அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளதாவது,

சுகாதார அமைச்சானது சுகாதார சேவைகள் யாப்பை திருத்தத்திற்கு உட்படுத்தி உள்ள நிலையில் அது தொடர்பில் வெளியிடப்பட்டுள்ள வர்த்தமானி அறிவித்தலை உடனடியாக மீளப் பெற வேண்டும். அவ்வாறு இல்லாவிட்டால் எந்தவித முன்னறிவிப்பும் இன்றி நாடளாவிய ரீதியில் தொழிற்சங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

சுகாதார அமைச்சு அனைத்து சுகாதார சேவைகள் யாப்பை எந்த மருத்துவத்துறை சார்ந்த முக்கியஸ்தர்களின் இணக்கப்பாடும் இன்றி திருத்தியுள்ளது அந்த திருத்தங்கள் காரணமாக பல்வேறு சிக்கல்களை சுகாதாரத்துறை எதிர்கொள்ள நேரும்.

அதனைக் கருத்திற்கொண்டே மேற்படி யாப்பை திருத்தத்திற்கு உட்படுத்தி வெளியிடப்பட்டுள்ள வர்த்தமானி அறிவித்தலை மீளப் பெறுமாறு அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கம் சுகாதார அமைச்சை கேட்டுக்கொள்கின்றது. மேற்படி விவகாரம் தொடர்பில் பேச்சுவார்த்தை நடத்தி தீர்மானம் ஒன்றை மேற்கொள்வதற்காக எதிர்வரும் 18ஆம் திகதி அரசாங்க மருத்துவர்கள் சங்கத்தின் மத்திய குழு கூடி முக்கிய பேச்சுவார்த்தை ஒன்றை நடத்த போவதாகவும் சங்கத்தின் முக்கியஸ்தர் ஒருவர் நேற்று தெரிவித்தார்.

(ஸ)

# அரசாங்க பாடசாலைகள் இன்று மீண்டும் ஆரம்பம்



நாட்டிலுள்ள அரச பாடசாலைகள் க.பொ.த.சா/த பரீட்சை விடுமுறையின் பின்னர் மீண்டும் இன்று திங்கட்கிழமை(15) ஆரம்பமாகவிருக்கின்றன. நீண்டகாலத்திற்குப்பின்பு மேல் மாகாண பாடசாலைகளில் தரம் 05,11 மற்றும் 13 ஆம் தர வகுப்புகளும் இன்று ஆரம்பமாகிறது.

அதேவேளை மேல் மாகாண பாடசாலைகளில் தரம் 05,11,13 ஆம் தரங்களை தவிர்ந்த ஏனைய தர வகுப்பு கல்வி நடவடிக்கைகள் ஏப்ரல் மாதம் 19ஆம் திகதி முதல் ஆரம்பிக்கப்படவிருக்கின்றன.

இதற்கமைவாக தரம் 1 தொடக்கம் தரம் 4 வரையிலும் தரம் 06 தொடக்கம் 10 மற்றும் 12 ஆம் வகுப்பு மாணவர்களின் கல்வி நடவடிக்கைகள் அன்றைய தினம் ஆரம்பிக்கப்படும் என்று கல்வி அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல் பீரிஸ் தெரிவித்தார்.

இன்று திறக்கப்படும் பாடசாலைகள் யாவும் சித்திரைப்புத்தாண்டு விடுமுறைக்காக ஏப்ரல் மாதம் 9ஆம் திகதி மூடப்படவிருப்பதாக கல்வியமைச்சின் செயலாளர் பேராசிரியர் கபில சி பெரேரா அறிவித்துள்ளார்.

# புர்கா சட்டமூலத்தை உடனடியாக பாராளுமன்றில் முன்வைக்க திட்டம்

## பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர

புர்கா உட்பட முகத்தை முழுமையாக மூடுவதை தடை செய்வதற்காக கொண்டுவரப்படவுள்ள புதிய சட்டமூலத்தை உடனடியாக பாராளுமன்றத்தில் முன்வைக்கவுள்ளதாக பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்துள்ளார்.சுகாதார வழிமுறைகள் தவிர்ந்த முகத்தை முழுமையாக மூடுவதனை தடை செய்வதற்கான அமைச்சரவை பத்திரம் தயாரிக்கப்பட்டுள்ளது என அவர் தெரிவித்துள்ளார். முகத்தை முழுமையாக மூடுவது தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தலான விடயமாகும் என்றும் இதன் ஊடாக பயங்கரவாத நடவடிக்கையும் முன்னெடுக்கப்படலாம் என்பதுடன், ஈஸ்டர்தாக்குதலின் ஊடாக நாம் பாடம் கற்றுக்கொண்டுள்ளோம் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

## மாகாண சபைத்...

கட்சி மற்றும் எதிர்க்கட்சி சார்பில் பல்வேறு கருத்துக்கள் முன்வைக்கப்பட்டு வரும் நிலையில் ஊடகவியலாளர்கள் அது தொடர்பில் வினவிய கேள்விகளுக்கு பதிலளிக்கையிலேயே வெளிவிவகார அமைச்சர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

மாகாண சபை தேர்தலை நடத்துவதற்கான சட்டத்தை கடந்த நல்லாட்சி அரசாங்கம் மாற்றி அமைத்துள்ளது. அது சட்டவிரோதமானது என உச்ச நீதிமன்றம் தீர்மானித்துள்ளது. அந்த வகையில் சட்டத்தில் மாற்றங்களை ஏற்படுத்தாமல் எவருக்கும் மாகாண சபைத் தேர்தலை நடத்த முடியாது. அதற்கிணங்க சம்பந்தப்பட்ட சட்டத்தை முறையாக தயாரித்து அதனை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்து நிறைவேற்றுமாறு நீதிமன்றம் தெரிவித்துள்ளது என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

அதேவேளை மாகாண சபைத் தேர்தல் தொடர்பில் கருத்து தெரிவித்த பொதுநிர்வாக மாகாணசபைகள் மற்றும் உள்ளூராட்சி சபை அமைச்சர் ஜனக பண்டார தென்னக்கோன் மாகாண சபை தேர்தலை நடத்துவது தொடர்பில் தாம் ஜனாதிபதியுடன் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளதாகவும் அதற்கான முன்னேற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் தெரிவித்துள்ளார்.(ஸ)

## கிழக்கு, ஊவா மற்றும்... (03ஆம் பக்கத் தொடர்)

அதிகமான ஓரளவு பலத்த மழை வீழ்ச்சி எதிர்பார்க்கப்படுகின்றது.

மத்திய, சப்ரகமுவ, ஊவா மற்றும் மேல் மாகாணங்களில் சில இடங்களில் காலை வேளையில் பனிமூட்டமான நிலை காணப்படும் எனவும் அறிவிக்கப்படுகிறது.

இடியுடன் கூடிய மழை பெய்யும் வேளைகளில் அப் பிரதேசங்களில் தற்காலிகமாக பலத்த காற்றும் வீசக் கூடும்.

மின்னல் தாக்கங்களினால் ஏற்படக்கூடிய பாதிப்புகளை குறைத்துக்கொள்ள தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ளுமாறு பொதுமக்களுக்கு வளிமண்டலவியல் திணைக்களம் அறிவுறுத்தியுள்ளது.

## பொலிஸில்...

தரப்பினர் சி.ஐ.டியில் முறைப்பாடு செய்திருந்த நிலையிலே அவர் நேற்று முன்தினம் பொலிஸ் நிலையம் சென்றுள்ளார்.

ஆனால் அவருக்கு எதிராக வாழைத்தோட்ட பொலிஸில் எந்த முறைப்பாடும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை என அறிய வருகிறது.

இது தொடர்பில் கருத்துத் தெரிவித்த அஸாத் சாலி, தான் எந்த நிமிடமும் பொலிஸில் ஆஜராகி வாக்குமூலம் அளிக்க தயாராக இருப்பதாகவும் தனக்கு எதிராக முறைப்பாடு செய்பவர்கள் யார் என தனக்கு தெரியும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

நாட்டில் சட்டமொன்று உள்ளது. ஒரு நாட்டில் ஒரு சட்டம் இருந்தால் அதனை முறையாக நடைமுறைப்படுத்த வேண்டும் என்றும் அவர் கூறினார்.

கொழும்பில் அண்மையில் செய்தியாளர்களை சந்தித்துப் பேசிய அஸாத் சாலி, குர்ஆனில் உள்ள சட்டங்களை மாற்றிக் கொள்ள முடியாது என்றும் அவ்வாறு சட்டங்கள் மாற்றப்பட்டாலும் அதனை முஸ்லிம் மக்கள் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள் என்று தெரிவித்திருந்தார்.

முஸ்லிம் மக்களின் வாழ்க்கை முறைமையை சட்டங்களினால் மாற்றிவிட முடியாது. முஸ்லிம் ஆண் ஒருவர் தனது பண வசதிக்கு ஏற்ற வகையில் பெண்களை திருமணம் செய்து கொள்கின்றார். அதில் எவ்வித தவறும் கிடையாது என்றும் அவர் தெரிவித்திருந்தார்.

செல்வம் இருக்கும் ஓர் ஆண் வசதி குறைந்த சில பெண்களை திருமணம் செய்து அவர்களை பராமரிப்பதில் தவறில்லை. முஸ்லிம் சட்டங்களை மாற்றி தேவையற்ற பிரச்சினைகளை உருவாக்கிக் கொள்ள வேண்டாம். இனவாத அடிப்படையிலேயே இந்த சட்ட மாற்றங்கள் மேற்கொள்ளப்படுகின்றன என அசாத் சாலி குற்றம் சுமத்தியிருந்தார். இந்த நிலையிலே அவருக்கு எதிராக பிக்குமார் உட்பட சிலர் முறைப்பாடு செய்திருந்தனர்.

## ஒப்பந்தம் தொடர்பாக ...

இரண்டு நிறுவனங்களுக்கு வழங்குவது தொடர்பான நகல் உடன்படிக்கை சட்டமா அதிபரின் அனுமதிக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக துறைமுக அதிகார சபையின் தலைவர் ஜெனரல் தயா ரத்நாயக்க தெரிவித்துள்ளார். சட்டமா அதிபரின் அனுமதி கிடைத்தவுடன் அது தொடர்பில் மீண்டும் கலந்துரையாடி அந்த அறிக்கையை அரசாங்கத்திடம் கையளிக்க உள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

மேற்கு முனைய அபிவிருத்திக்கான அமைச்சரவை அனுமதி அண்மையில் வழங்கப்பட்டுள்ளதையடுத்து அது தொடர்பாக ஆராய்ந்துள்ள குழுவின் பரிந்துரைகளே சட்டமா அதிபருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் துறைமுக அதிகார சபையின் தலைவர் தெரிவித்துள்ளார்.

மேற்படி குழுவில் துறைமுக அதிகாரசபையின் அறிக்கையும் மேற்படி நாடுகளினால் பெயரிடப்பட்ட குழுக்களின் அறிக்கையும் விரிவாக ஆராயப்பட்டுள்ளன. அதன்போது துறைமுக அதிகார சபையின் யோசனைகளும் அந்த நிறுவனங்களிடம் முன்வைக்கப்பட்டுள்ளன. அதனை அடுத்து அது தொடர்பான கலந்துரையாடல்கள் இடம்பெற்றன அதன்போது மேற்கொள்ளப்பட்ட இணக்கம் தொடர்பில் விரிவாக ஆராயப்பட்டு குறித்த அறிக்கை சட்டமா அதிபரின் ஆலோசனைக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

சட்டமா அதிபரின் அனுமதி கிடைத்தவுடன் மீண்டும் அது தொடர்பில் கலந்துரையாடி அந்த அறிக்கையை அரசாங்கத்திடம் கையளிக்கவுள்ளதாக துறைமுக அதிகார சபையின் தலைவர் மேலும் தெரிவித்துள்ளார். (ஸ)

## பிரச்சினைகள் மேலும்...

ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரகுமான் தெரிவித்தார்.

மக்களின் ஜனநாயக உரிமையைத் தடைசெய்வதற்கு அரசாங்கம் முயற்சிக்கிறது. அதன் விளைவாகப் பிரச்சினைகள் தீரப் போவதில்லை. மாறாக பிரச்சினைகள் தீவிரமடையும். அரசாங்கத்தின் தீர்மானங்கள் நாட்டிலுள்ள பிரச்சினைகளைக் குறைப்பதற்கு வழிசெய்யும் என்று எமக்குத் தோன்றவில்லை என்று குறிப்பிட்டார்.

அதேவேளை புர்கா என்பது மதரீதியான தீவிரவாதப்போக்கின் அடையாளமாக இருப்பதாக அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்துள்ளமை தொடர்பில் வினவியபோது அதற்குப் பதிலளித்த முஜிபுர் ரகுமான்,

அதுகுறித்து சரத் வீரசேகர தீர்மானம் எடுக்க முடியாது. என்னுடைய பார்வையில் அவர்தான் தீவிரவாதப் போக்கில் செயற்படுவது போன்று தோன்றுகிறது. அவர் விரும்பும் ஆடையையே நாட்டுமக்கள் அணியவேண்டும் என்ற அடிப்படையில் ஒவ்வொருவரும் தமது மத ரீதியான நம்பிக்கையின்படி அணியும் ஆடைகளைத் தடைசெய்வதே தீவிரவாதப் போக்குடைய சிந்தனையாகும் என்று குறிப்பிட்டார்.

## நாட்டில் இதுவரை...

இந்த நிலையில், கொரோனா சடலங்களை அடக்கம் செய்வது தொடர்பாக காணப்பட்ட பிரச்சினைகள் முழுவதுமாக நிவர்த்தி செய்யப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

இன்னும் ஓரிரண்டு சடலங்கள் உள்ளதாகவும் அவை விரைவில் அடக்கம் செய்யப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

கிழக்கு மாகாணத்தின் மட்டக்களப்பு மாவட்டத்தில், ஓட்டமாவடி பிரதேசத்தில் அடக்கம் செய்யும் பணிகள் இடம்பெற்று வருவதாக இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா மேலும் தெரிவித்தார்.

## அபிமான வாசகர்களின்...

மறுமலர்ச்சியையும் ஊட்ட வேண்டிய தேவை காணப்பட்டது. இலங்கைத் திருநாட்டின் தேசிய வீரர்கள் மக்கள் மத்தியில் சுதேச கலாசார மறுமலர்ச்சியை வளர்த்தெடுப்பதில் அர்ப்பணிப்புடன் உழைத்த போதிலும், அது தொடர்பான விழிப்புணர்வை மக்களின் காலடிக்கு கொண்டு செல்வதற்கான ஊடகங்கள் எதுவுமே அக்காலத்தில் இருக்கவில்லை.

(4ஆம் பக்கம் பார்க்க)

## அஸாத் சாலி சவூதியில் ...

வாதத்தை நோக்கிச் செல்லும். ஷரியா சட்டத்திற்கு அமைய செயற்படுவாராயின், அவர் சவுதி அரேபியாவுக்கே செல்ல வேண்டும்.

அவருக்கு இலங்கையில் இருக்க முடியாது. இலங்கையில் இருக்க வேண்டுமாயின், இலங்கையின் சட்டத்திற்கு அமையவே அவர் செயற்பட வேண்டும்.

இஸ்லாமிய சட்டத்தை எவர் மாற்றியமைத்தாலும் தாங்கள் மாற்றப்போவதில்லை என தேசிய ஐக்கிய முன்னணியின் தலைவர் அஸாத் ஸாலி தெரிவித்திருந்தார்.

குறித்த விடயம் தொடர்பில் கருத்து தெரிவித்துள்ள பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர, அஸாத் ஸாலியை கட்டாயமாக கைதுசெய்ய வேண்டும் எனக் குறிப்பிட்டுள்ளார். இந்த நிலையில், அடுத்துவரும் சில நாட்களில் அவரை அழைத்து, விசாரணைக்கு உட்படுத்துமாறு குற்றப் புலனாய்வு திணைக்களத்திற்கு தான் தனிப்பட்ட முறையில் அறிவுறுத்தியதாக சரத் வீரசேகர குறிப்பிட்டுள்ளார்.

நாட்டின் சட்டத்திற்கு எதிராக அவர் செயற்பட்டிருப்பாராயின், அவருக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதாகவும் அமைச்சர் சரத் வீரசேகர கூறியுள்ளார்.

எவ்வாறிருப்பினும், கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கருத்து தெரிவித்த தேசிய ஐக்கிய முன்னணியின் தலைவர் அஸாத் ஸாலி, சில ஊடகங்கள் தாம் கூறிய விடயத்திற்கு மாற்றமாக செயற்படுவதாகவும் தெரிவித்துள்ளார்.

## தனி நபரின் விருப்பு...

மஹரகமயிலுள்ள மஹமேகராமய விஹாரைக்கு நேற்றுக் காலை (14) விஜயம் செய்த பாதுகாப்பு செயலாளர் ஜெனரல் கமல் குணரத்ன, அங்கு வருகை தந்திருந்த ஊடகவியலாளர் ஒருவரினால் கேட்கப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பாதுகாப்புச் செயலாளர் இங்கு மேலும் விளக்கமளிக்கையில் :

நாட்டின் குடிமகன் என்ற வகையில தராதரம் பாராமல் அனைவரும் நாட்டின் நிலவும் சட்டத்தை மதித்து, பின்பற்ற வேண்டும். தனிப்பட்ட நபர் ஒருவரின் விருப்பு வெறுப்புக்கு ஏற்ப சட்டங்களை மாற்ற முடியாது".

"தேசிய பாதுகாப்புக்கு தாக்கத்தை ஏற்படுத்தும் சட்டங்களை திருத்துவதற்கான எந்தவொரு தேவை ஏற்படுமாயின், அத்தகைய சட்டங்கள் சட்ட வல்லுனர்களின் கவனத்திற்கு உட்படுத்தப்பட்ட பின்னர் திருத்தப்பட வேண்டும்." எனவும் அவர் குறிப்பிட்டார்.

நியாயமற்ற விஷயங்களை யாரும் நியாயப்படுத்த முடியாது. சமூகங்களுக்கும் மதத்திற்கும் இடையேயான ஆரோக்கிய ஒத்துழைப்பு மற்றும் நல்லிணக்கத்திற்கு தீங்கு விளைவிக்கும் எந்த ஒரு நடவடிக்கைக்கு எதிராகவும் நாம் விரைவாக செயல்பட தயாராக உள்ளோம் என அவர் சுட்டிக்காட்டினார்..

மஹரகம மஹமேகராமயவின் தலைமை விஹாராதிபதி வண. அங்கும்புரே சுகுனபலபிதான தேரரின் 27வது ஞாபகார்த்த தின வைபத்தில் பிரதம அதிதியாக கலந்து கொண்ட பாதுகாப்புச் செயலாளர், குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொருட்களும் நிதி நன்கொடைகளும் வழங்கி வைக்கப்பட்டன.

இந்த நிகழ்வில் மஹரகம மஹமேகராமய விஹாரையின் விஹாராதிபதி வண. அங்கும்புரே அமரவன்ஸ தேரர், பாதுகாப்பு அமைச்சின் சேவா வனிதா பிரிவின் தலைவி திருமதி சித்ரனி குணரத்ன மற்றும் பக்தர்களும் கலந்துகொண்டனர்.

## நாட்டில் பரவாதிருக்க ...

நிலைமையை தவிர்க்க துரித நடவடிக்கை எடுக்க வேண்டும் என இலங்கை மருத்துவ சங்கம் தெரிவித்துள்ளது.

அவ்வாறு இடம்பெறாவிட்டால் எதிர்காலத்தில் தொடர் பிரச்சினைகளை எதிர்நோக்க நேரிடும் என சங்கம் மேலும் எச்சரித்துள்ளது.

தென் ஆபிரிக்காவில் பரவிய வைரஸ் தொற்று இங்குள்ள வைரஸ் தொற்று வகைக்கு இணையானது எனவும் அது மிக வேகமாக மற்றவர்களுக்கு பரவக்கூடும் எனவும் புதிய அலை உருவாகும் வாய்ப்பு உள்ளதாகவும் இலங்கை வைத்தியர் சங்கத்தின் தலைவர் விசேட வைத்திய நிபுணர் பத்மா குணரத்ன குறிப்பிட்டார். மேலும், அவசர சிகிச்சைகளுக்கான தேவை அதிகரிக்கும் எனவும் உயிரிழப்போரின் எண்ணிக்கை உயரும் எனவும் அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

ஏதேனுமொரு விதத்தில் இலங்கையில் பரவினால் கட்டுப்படுத்தும் இயலுமை இருக்காது. தற்போது தொற்றுக்குள்ளானவர்களுக்கு மீண்டும் தொற்று ஏற்படலாம். அதேபோன்று, தற்போதைக்கு பயன்படுத்தப்படும் Covishield தடுப்பூசிக்கும் சிறந்த பாதுகாப்பு உறுதி அளிக்கப்படாது. ஏற்கனவே தொற்றுக்குள்ளானவரின் இரத்தத்தை இந்த வைரஸ் தன்மை தொற்றியவர்களுக்கு பயன்படுத்த முடியாது போகும் என விசேட வைத்திய நிபுணர் பத்மா குணரத்ன மேலும் தெரிவித்தார். இதேவேளை, இலங்கையர்களும் வௌிநாட்டவர்களும் நாட்டுக்கு வருகை தரும் போது பின்பற்றப்பட வேண்டிய படிமுறைகள் அடங்கிய புதிய வழிமுறைகளை சுகாதார அமைச்சு வௌியிட்டுள்ளது.

அதற்கமைய, இரண்டு வாரங்களுக்கு முன்னர் சகல தகவல்களுடன் பூரண அனுமதியை சுகாதார சேவைகள் பணிப்பாளரிடம் பெற்றுக் கொள்ளவேண்டும்எனஅதில்குறிப்பிடப்பட்டுள்ளது. குறித்த வழிமுறைகளுக்கு அமைவாக அரசாங்கம் பரிந்துரைத்த தடுப்பூசியை இரண்டு தடவைகளும் ஏற்றியவர்கள் தனிமைப்படுத்தலில் இருக்க வேண்டியதில்லை.

மாத்தறை நகரத்தை;

# வர்த்தகம் மற்றும் உல்லாச நகரமாக அபிவிருத்தி செய்ய பிரதமர் நடவடிக்கை

(வெலிகம தினகரன் நிருபர்)

மாத்தறை நகரம் வர்த்தக மற்றும் உல்லாச நகரமாக அபிவிருத்தி செய்யுமாறு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ பணிப்புரை வழங்கியுள்ளார். மாத்தறை நகர நிர்வாக நகரமாக கொடவில பிரதேசத்தை கட்டியெழுப்புமாறும் அவர் இதன்போது கோரிக்கை விடுத்தார்.

மாத்தறை புதிய நகரம், அகுரஸ்ஸ, தெவிநுவர, திக்குவல்லை, கம்புறுப்பிடிய, கிரிந்தை புகுல்வல், திஹகொட மற்றும் வெலிகம ஆகிய நகரங்கள் நகர அபிவிருத்தி அதிகார சபையினால் நடைமுறைப்படுத்தப்படவுள்ள செயற்திட்டங்களின் பிரச்சினைகள் பற்றி பாராளுமன்ற குழு அறையில் அண்மையில் கலந்துரையாடல் இடம்பெற்றபோதே பிரதமர் மேற்படி வேண்டுகோளை விடுத்தார்.

மாத்தறைமாவட்டத்தில் 17 உள்ளூராட்சிமன்றங்கள் உள்ளன. இவற்றுள் 7 உள்ளூராட்சி மன்றங்கள் முதற்தர நகர அபிவிருத்தி திட்டத்தின் கீழ் 2021/2030 வரையிலான காலப்பகுதிக்குள் அபிவிருத்தி செயற்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படவுள்ளன. இதன் கீழ் மாத்தறை நகர சபை, மாத்தறை பிரதேச சபை, வெலிகம நகர சபை, வெலிகம பிரதேச சபை, தெவிநுவர, ஹக்மன மற்றும் மாலிம்பட பிரதேச சபைகளுக்குட்பட்ட பிரதேசங்கள் அபிவிருத்தி செய்ய நகர அபிவிருத்தி அதிகார சபை அதிகாரிகளினால் செயற்திட்டங்கள் முன்வைக்கப்பட்டன.

நில்வளாகங்கையின் இரு கரையோரங்களிலும் அமைக்கப்பட்டுள்ள சடட விரோத கட்டடங்களால் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்குத் தடை ஏற்பட்டுள்ளதாக அதிகாரிகளினால் இதன்போது சுட்டிக்காட்டப்பட்டன.

கடந்தஆட்சிக் காலத்தில் இடைநிறுத்தப்பட்டிருந்த மாத்தறை மாவட்ட அபிவிருத்தி செயற்திட்டற்களை மீண்டும் ஆரம்பிக்குமாறு அபிவிருத்தி அதிகார பணிப்பாளருக்கு பிரதமர் ஆலோசனை வழங்கினார்.

குறிப்பாக மாத்தறை வைத்தியசாலையில் உள்ள அவசர சிகிச்சைப் பிரிவை மாத்திரம் வேறுபடுத்தி, ஏனைய சகல பிரிவுகளையும் கொடவிலவில் நிறுவப்படவுள்ள புதியவைத்தியசாலைக்கு இடமாற்றம் செய்வது பற்றியும் இதன் போது கலந்துரையாடப்பட்டன.

கொடகம கம்புறுப்பிட்டிய வரை பிரதான வீதியில் நான்கு வழிப்பாதைகளும் கம்புறுப்பிட்டிய கொடவிலவரை இரண்டு வழிப்பாதைகளையும் அபிவிருத்தி செய்ய நெடுஞ்சாலைகள் அமைச்சர் ஜொன்ஸ்டன் பெர்னாந்து சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்.



இந்நிகழ்வில் மின்சக்தி அமைச்சர் டலஸ் அழகப் பெரும கருத்துத் தெரிவிக்கையில், கொடவிலவில் அமைக்கப்பட்டுள்ள புதிய நீதிமன்றக் கட்டடத்தை இன்னும் சிலதினங்களில் திறந்து வைக்கமுடியுமென தெரிவித்தார். அதில் சகலவசதிகளும் கொண்ட சட்டத்தரணிகள் அலுவலகமும் அமையப் பெறவேண்டுமென பிரதமர் ஆலோசனை வழங்கினார். மேலும் மாத்தறைமஹிந்த ராஜபக்ஷ கல்லூரி 700 மில்லியன் ரூபாசெலவில் அமைக்கப்படவிருந்த கட்டட பணிகள் கடந்தஅரசாங்கத்தில் இடைநிறுத்தப்படிருந்தன. அதனால் அதிலுள்ள உபகரணங்கள் சேதம் அடைந்துள்ளதென அமைச்சர் டலஸ் அழகப் பெரும இதன்போது சுட்டிக் காட்டினார்.

நாளாந்தம் மாத்தறை மற்றும் வெலிகம நகரங்களில் சேகரிக்கப்படும் 80 தொன் கழிவுகளை ஒன்றுசேர்த்து எதிர்காலத்தில் மின் உற்பத்தி செய்ய கவனம் செலுத்தியுள்ளதாக டலஸ் அழகப் பெரும தெரிவித்தார்.

இதில், சபாநாயகர் மஹிந்தயாப்பா அபேவர்தன, அமைச்சர்களான டலஸ் அழகப் பெரும, ஜொன்ஸ்டன் பெர்னாந்து, இராஜாங்க அமைச்சர் காஞ்சன விஜேசேகர, மாத்தறை மாவட்ட பாராளுமன்றஉறுப்பினர்களான நிபுணரணவக்க, கருணாதாஸ கொடித்துக்கு, பிரதமரின் செயலாளர் காமினிசெனரத் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

# உயிர்த்த ஞாயிறு தாக்குதல் பொறுப்பினை நாம் ஏற்கிறோம்

## ஹம்பாந்தோட்டை மக்கள் சந்திப்பில் சஜித்

ஹம்பாந்தோட்டை குறூப் நிருபர்



நல்லாட்சி அரசாங்கத்தின் ஆட்சியில் தானும் அமைச்சராக இருந்தமையினால் உயிர்த்த ஞாயிறுதாக்குதலின் பொறுப்புக்களை நாம் ஏற்பதாக எதிர்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

எதிர்கட்சித் தலைவரின் நடமாடும் சேவை ஹம்பாந்தோட்டை பூந்தலை கிராமத்தில் அண்மையில் நடைபெற்றது. அதில் கலந்துகொண்டு மக்களின் குறைகளை கேட்டறிந்துகொண்டார்.

இதில் தொடர்ந்து உரையாற்றிய எதிர்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பாக சிலர் அதிகமாக பேசி வருகிறார்கள்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் எமது நாட்டிற்கு ஏற்பட்ட பாரிய அழிவாகும். இக் காலத்தில் எமது அரசாங்கமே ஆட்சியில் இருந்தது. இதனால் இந்த சந்தர்ப்பத்தில் இதன் பொறுப்பினை நாம்ஏற்கிறோம். நாம் ஒருபோதும் பொறுப்புக்களிலிருந்து தப்பிப் பாய்ந்து ஓடமாட்டோம்.

எதிர்கட்சியினர் என்ற வகையில் இறுதியாக நடைபெற்ற உயிர்த்தஞாயிறு தாக்குதல் தொடர்பாக கதைத்து திரிந்து மக்கள் சமூகத்தினரை பிளவுபடுத்தி குளிர்காய முடியாது.

இதனை காரணம் காட்டி இனங்களுக்கிடையில் முறுகல் நிலைமையினை ஏற்படுத்தி இனவாதத்தினை ஏற்படுத்தி நாட்டினுள் பிரச்சினைகளை தோற்றுவிக்கவும் முடியாது. எந்தக் காரணத்திற்காகவும் மக்களை கோபமடையச் செய்து பிரச்சினைகளை ஏற்படுத்தவதற்கு நாம் ஒருபோதும் தயாரில்லை எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.


www.nlb.lk

2021.03.12 மற்றும் 13ம் திகதி-தேசிய லொத்தர் சபை உருவாக்கிய மொத்த வெற்றியாளர்களின் எண்ணிக்கை 1,422,657

பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்த பரிசுத்தொகை 60,222,190.00

ரூ. 2,000,000.00 பரிசு 03 ரூ. 1,000,000.00 பரிசு 02 ரூ. 100,000.00 பரிசுகள் 58

NLB NATIONAL LOTTERIES

கொவிசெத உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இலக்கம் 2719 சீட்டிழுப்பு திகதி 12 / 03 / 2021

ஆங்கில எழுத்து U வெற்றி இலக்கங்கள் 08 20 37 80

| | பரிசு கட்டமைப்பு | பரிசுத்தொகை | வெற்றியாளரர் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 பரிசு | 4 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 1,000,000.00 | - |
| 2 பரிசு | ஆங்கில எழுத்துடன் 3 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 100,000.00 | 07 |
| 3 பரிசு | 3 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 2,000.00 | 191 |
| 4 பரிசு | ஆங்கில எழுத்துடன் 2 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 1,000.00 | 391 |
| 5 பரிசு | 2 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 100.00 | 10,203 |
| 6 பரிசு | ஆங்கில எழுத்துடன் 1 இலக்கம் சரியாயின் | ரூ. 40.00 | 6,728 |
| 7 பரிசு | 1 இலக்கம் சரியாயின் | ரூ. 20.00 | 167,537 |
| 8 பரிசு | ஆங்கில எழுத்து மாத்திரம் சரியாயின் | ரூ. 20.00 | 30,449 |

இந்த சீட்டிழுப்பில் உருவாகிய வெற்றயாளர்களின் எண்ணிக்கை 215,506

இம்முறை வெற்றியீட்டிய பரிசுகளின் மொத்தத்தொகை ரூ. 6,722,140.00

அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 73,502,486.40

வெற்றி பெறும் சீட்டுகள் சீட்டிழுக்கப்பட்ட திகதியிலிருந்து 6 மாதங்களுக்கு மாத்திரமே செல்லுபடியாகும். ஐந்து இலட்சத்திக்கு கூடிய தொகைக்கான பரிசு அரசாங்க வரி சட்டத்திட்டங்களுக்கு உட்பட்டது. பரிசை பெறுவதற்கு தேசிய அடையாள அட்டை கட்டாயமாக்கப்பட்டுள்ளது.



ජාතික ලොතරැයි මණ්ඩලය தேசிய லொத்தர் சபை NATIONAL LOTTERIES BOARD

இல 32 தேசமான்ய N. W. J. முதலிகே மாவத்தை கொழும்பு 01

தொலைபேசி : 0114 607 000, 0112 324 324 Fax: 0114 663 416 Web: www.nlb.lk

Mega POWER மெகா பவர்

சீட்டிழுப்பு இலக்கம்: 789 உத்தியோகபூர்வ முடிவுகள் திகதி: 13.03.2021

ஆங்கில எழுத்து U சுப்பர் இலக்கம் 10 வெற்றி இலக்கங்கள் 11 31 51 57

| | பரிசுக் கட்டமைப்பு | பரிசுத் தொகை ரூ. | வெற்றி பெற்றோர் |
|---|---|---|---|
| 1 ஆம் பரிசு | 4 இலக்கங்கள் மாத்திரம் பொருந்துமாயின் | 1,000,000.00 | - |
| 2 ஆம் பரிசு | 3 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்துமாயின் | 100,000.00 | 04 |
| 3 ஆம் பரிசு | இலக்கங்கள் மாத்திரம் பொருந்துமாயின் | 1,000.00 | 94 |
| 4 ஆம் பரிசு | 2 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்துமாயின் | 500.00 | 204 |
| 5 ஆம் பரிசு | 2 இலக்கங்கள் மாத்திரம் பொருந்துமாயின் | 100.00 | 5,073 |
| 6 ஆம் பரிசு | 1 இலக்கத்துடன் ஆங்கில எழுத்து பொருந்துமாயின் | 40.00 | 3,277 |
| 7 ஆம் பரிசு | 1 இலக்கம் பொருந்துமாயின் | 20.00 | 83,577 |
| 8 ஆம் பரிசு | ஆங்கில எழுத்து பொருந்துமாயின் | 20.00 | 15,296 |

அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 122,537,288.40

அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 20,938,204.80 அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

இம்முறை வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத் தொகை ரூ. 3,211,840.00

தேசிய லொத்தர் சபை www.nlb.lk

தன நிதானய உத்தியோகபூர்வ முடிவுகள்

திகதி - 13/03/2021

சீட்டிழுப்பு இலக்கம் - 462

N 05 21 71 82

ஆங்கில எழுத்து வெற்றி இலக்கங்கள்

ஆயிரம் முறை 3281

| | கட்டமைப்பு | பரிசுகள் | வெற்றியாளர்கள் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 ஆம் பரிசு | 4 இலக்கங்கள் சரியாயின் | ரூபா. 1,000,000.00 | - |
| 2 ஆம் பரிசு | ஆங்கில எழுத்துடன் 3 இலக்கங்கள் சரியாயின் | ரூபா. 100,000.00 | 04 |
| 3 ஆம் பரிசு | 3 இலக்கங்கள் சரியாயின் | ரூபா. 3,000.00 | 91 |
| 4 ஆம் பரிசு | ஆங்கில எழுத்துடன் 2 இலக்கங்கள் சரியாயின் | ரூபா. 1,000.00 | 201 |
| 5 ஆம் பரிசு | 2 இலக்கங்கள் சரியாயின் | ரூபா. 100.00 | 5,043 |
| 6 ஆம் பரிசு | ஆங்கில எழுத்துடன் 1 இலக்கம் சரியாயின் | ரூபா. 60.00 | 3,428 |
| 7 ஆம் பரிசு | 1 இலக்கம் சரியாயின் | ரூபா. 20.00 | 85,217 |
| 8 ஆம் பரிசு | ஆங்கில எழுத்து மாத்திரம் சரியாயின் | ரூபா. 20.00 | 16,126 |

வெல்லப்பட்ட மொத்த பரிசுத்தொகை ரூபா. 3,738,840.00

பரிசுகளை வென்ற வெற்றியாளர்களின் எண்ணிக்கை. 110,238

அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசுத்தொகை ரூ. 87,829,593.20

- ரூபா. 5 இலட்சம் அல்லது அதற்கு மேற்பட்ட பரிசுத்தொகை அரசின் வரி சட்டதிட்டங்களுக்கு உட்பட்டது.
- பரிசுத்தொகையை பெற்றுக்கொள்ளும் போது தேசிய அடையாள அட்டை கட்டாயமானது.
- சீட்டிழுப்பு தினத்திலிருந்து 6 மாதகாலத்திற்கு மாத்திரமே வெற்றி லொத்தர் செல்லுபடியாகும்.

ජාතික ලොතරැයි මණ්ඩලය தேசிய லொத்தர் சபை NATIONAL LOTTERIES BOARD

தொலைபேசி : 011 460 7000 / 011 232 4324

சீட்டிழுப்பு இலக்கம் 4424 உத்தியோகபூர்வ முடிவுகள்

மஹஜன சம்பத

திகதி: 12-03-2021

வெற்றி எழுத்து T வெற்றி இலக்கங்கள் 6 3 9 3 6 5

பரிசு அமைப்பு - வலமிருந்து இடமாக

| | | | வெற்றிபெற்றோர் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1ஆம் பரிசு | 6 3 9 3 6 5 | ரூபா. 2,000,000/- | 02 |
| 2ஆம் பரிசு | 3 9 3 6 5 | ரூபா. 100,000/- | 13 |
| 3ஆம் பரிசு | 9 3 6 5 | ரூபா. 10,000/- | 131 |
| 4 ஆம் பரிசு | 3 6 5 | ரூபா. 1,000/- | 1,289 |
| 5ஆம் பரிசு | 6 5 | ரூபா. 100/- | 12,877 |
| 6ஆம் பரிசு | 5 | ரூபா. 20/- | 127,841 |

பரிசு அமைப்பு - இடமிருந்து வலமாக

| | | | வெற்றிபெற்றோர் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 7ஆம் பரிசு | 6 3 9 3 6 | ரூபா. 10,000/- | 13 |
| 8ஆம் பரிசு | 6 3 9 3 | ரூபா. 1,000/- | 126 |
| 9ஆம் பரிசு | 6 3 9 | ரூபா. 100/- | 1,326 |
| 10ஆம் பரிசு | 6 3 | ரூபா. 50/- | 12,733 |
| 11ஆம் பரிசு | T | ரூபா. 20/- | 51,051 |

இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்தப் பரிசுத் தொகை – ரூ. 13,789,790.00

ஐந்து இலட்சம் அல்லது அதற்கு மேற்பட்ட பரிசுத்தொகை அரசாங்க வரி சட்டதிட்டங்களுக்கு உட்படும். பரிசுத்தொகையைப் பெற்றுக்கொள்ள தேசிய அடையாள அட்டை சமர்ப்பிக்கப்பட வேண்டும். வெற்றி பெற்ற டிக்கட், சீட்டிழுப்பு இடம்பெற்ற தினத்தில் இருந்து ஆறு மாதங்களுக்கு மட்டுமே செல்லுபடியாகும்.

அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 11,243,122.00

NLB வாழ்வின் கனவிற்கு அதிர்ஷ்டத்தின் ஆசீர்வாதம்

தேசிய லொத்தர் சபை www.nlb.lk

32, தேஷமான்ய N. W. J. முதலிகே மாவத்தை, கொழும்பு - 01. தொலைபேசி: 011-4607000, 011-2324324. Fax: 011-4669416.

உத்தியோகபூர்வ முடிவுகள்



சீட்டிழுப்பு திகதி 12/03/2021 1582 சீட்டிழுப்பு இலக்கம்

சுப்பர் இலக்கம் 08 வெற்றி இலக்கங்கள் 33 34 44 54

| | | | |
|---|---|---|---|
| 1 பரிசு | 4 இலக்கங்களும் பொருந்துமாயின் | ரூ. 500,000.00 | 01 |
| 2 பரிசு | சுப்பர் இலக்கத்துடன் 3 இலக்கங்கள் பொருந்துமாயின் | ரூ. 20,000.00 | 07 |
| 3 பரிசு | 3 இலக்கங்கள் பொருந்துமாயின் | ரூ. 1,000.00 | 136 |
| 4 பரிசு | சுப்பர் இலக்கத்துடன் 2 இலக்கங்கள் பொருந்துமாயின் | ரூ. 200.00 | 393 |
| 5 பரிசு | 2 இலக்கங்கள் பொருந்துமாயின் | ரூ. 100.00 | 5,326 |
| 6 பரிசு | சுப்பர் இலக்கத்துடன் 1 இலக்கம் பொருந்துமாயின் | ரூ. 60.00 | 4,676 |
| 7 பரிசு | 1 இலக்கம் பொருந்துமாயின் | ரூ. 20.00 | 65,816 |
| 8 பரிசு | சுப்பர் இலக்கம் மாத்திரம் பொருந்துமாயின் | ரூ. 20.00 | 15,817 |

இம்முறை வெற்றியீட்டிய பரிசுகளின் மொத்த தொகை ரூ. 3,300,420.00

வெற்றி பெறும் சீட்டுகள் சீட்டிழுக்கப்பட்ட திகதியிலிருந்து 6 மாதங்களுக்கு மாத்திரமே செல்லுபடியாகும். ஐந்து இலட்சத்திக்கு கூடிய தொகைக்கான பரிசு அரசாங்க வரி சட்டத்திட்டங்களுக்கு உட்பட்டது. பரிசை பெறுவதற்கு தேசிய அடையாள அட்டை கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 3,046,932.40

இல. 32, தேசமான்ய N. W. J. முதலிகே மாவத்தை, கொழும்பு 01. Phone : 0114 607 000, 0112 324 324 Fax : 0114 663 416 Web : www.nlb.lk

கொவிசெத உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இலக்கம் 2720 சீட்டிழுப்பு திகதி 13 / 03 / 2021

ஆங்கில எழுத்து M வெற்றி இலக்கங்கள் 04 40 54 64

| | பரிசு கட்டமைப்பு | பரிசுத்தொகை | வெற்றியாளரர் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 பரிசு | 4 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 1,000,000.00 | 01 |
| 2 பரிசு | ஆங்கில எழுத்துடன் 3 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 100,000.00 | 05 |
| 3 பரிசு | 3 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 2,000.00 | 175 |
| 4 பரிசு | ஆங்கில எழுத்துடன் 2 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 1,000.00 | 404 |
| 5 பரிசு | 2 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 100.00 | 9,543 |
| 6 பரிசு | ஆங்கில எழுத்துடன் 1 இலக்கம் சரியாயின் | ரூ. 40.00 | 6,264 |
| 7 பரிசு | 1 இலக்கம் சரியாயின் | ரூ. 20.00 | 157,623 |
| 8 பரிசு | ஆங்கில எழுத்து மாத்திரம் சரியாயின் | ரூ. 20.00 | 28,863 |

இந்த சீட்டிழுப்பில் உருவாகிய வெற்றயாளர்களின் எண்ணிக்கை 202,878

இம்முறை வெற்றியீட்டிய பரிசுகளின் மொத்தத்தொகை ரூ. 7,188,580.00

அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 73,803,037.20

வெற்றி பெறும் சீட்டுகள் சீட்டிழுக்கப்பட்ட திகதியிலிருந்து 6 மாதங்களுக்கு மாத்திரமே செல்லுபடியாகும். ஐந்து இலட்சத்திக்கு கூடிய தொகைக்கான பரிசு அரசாங்க வரி சட்டத்திட்டங்களுக்கு உட்பட்டது. பரிசை பெறுவதற்கு தேசிய அடையாள அட்டை கட்டாயமாக்கப்பட்டுள்ளது.



இல 32 தேசமான்ய N. W. J. முதலிகே மாவத்தை கொழும்பு 01

தொலைபேசி : 0114 607 000, 0112 324 324 Fax: 0114 663 416 Web: www.nlb.lk

Mega POWER மெகா பவர்

சீட்டிழுப்பு இலக்கம்: 788 உத்தியோகபூர்வ முடிவுகள் திகதி: 12.03.2021

ஆங்கில எழுத்து M சுப்பர் இலக்கம் 22 வெற்றி இலக்கங்கள் 04 48 73 76

| | பரிசுக் கட்டமைப்பு | பரிசுத் தொகை ரூ. | வெற்றி பெற்றோர் |
|---|---|---|---|
| 1 ஆம் பரிசு | 4 இலக்கங்கள் மாத்திரம் பொருந்துமாயின் | 1,000,000.00 | 01 |
| 2 ஆம் பரிசு | 3 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்துமாயின் | 100,000.00 | 06 |
| 3 ஆம் பரிசு | இலக்கங்கள் மாத்திரம் பொருந்துமாயின் | 1,000.00 | 97 |
| 4 ஆம் பரிசு | 2 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்துமாயின் | 500.00 | 219 |
| 5 ஆம் பரிசு | 2 இலக்கங்கள் மாத்திரம் பொருந்துமாயின் | 100.00 | 5,240 |
| 6 ஆம் பரிசு | 1 இலக்கத்துடன் ஆங்கில எழுத்து பொருந்துமாயின் | 40.00 | 3,514 |
| 7 ஆம் பரிசு | 1 இலக்கம் பொருந்துமாயின் | 20.00 | 87,503 |
| 8 ஆம் பரிசு | ஆங்கில எழுத்து பொருந்துமாயின் | 20.00 | 15,909 |

அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 122,241,582.80

அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 20,938,204.80 அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

இம்முறை வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத் தொகை ரூ. 4,539,300.00

தன நிதானய உத்தியோகபூர்வ முடிவுகள்

திகதி - 12/03/2021

சீட்டிழுப்பு இலக்கம் - 461

V 42 55 76 77

ஆங்கில எழுத்து வெற்றி இலக்கங்கள்

| | கட்டமைப்பு | பரிசுகள் | வெற்றியாளர்கள் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 ஆம் பரிசு | 4 இலக்கங்கள் சரியாயின் | ரூபா. 1,000,000.00 | - |
| 2 ஆம் பரிசு | ஆங்கில எழுத்துடன் 3 இலக்கங்கள் சரியாயின் | ரூபா. 100,000.00 | 02 |
| 3 ஆம் பரிசு | 3 இலக்கங்கள் சரியாயின் | ரூபா. 3,000.00 | 97 |
| 4 ஆம் பரிசு | ஆங்கில எழுத்துடன் 2 இலக்கங்கள் சரியாயின் | ரூபா. 1,000.00 | 206 |
| 5 ஆம் பரிசு | 2 இலக்கங்கள் சரியாயின் | ரூபா. 100.00 | 5,351 |
| 6 ஆம் பரிசு | ஆங்கில எழுத்துடன் 1 இலக்கம் சரியாயின் | ரூபா. 60.00 | 3,596 |
| 7 ஆம் பரிசு | 1 இலக்கம் சரியாயின் | ரூபா. 20.00 | 90,911 |
| 8 ஆம் பரிசு | ஆங்கில எழுத்து மாத்திரம் சரியாயின் | ரூபா. 20.00 | 16,908 |

வெல்லப்பட்ட மொத்த பரிசுத்தொகை ரூபா. 3,604,240.00

பரிசுகளை வென்ற வெற்றியாளர்களின் எண்ணிக்கை. 117,071

அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசுத்தொகை ரூ. 87,592,115.20

- ரூபா. 5 இலட்சம் அதற்கு மேற்பட்ட பரிசுத்தொகை அரசின் வரி சட்டதிட்டங்களுக்கு உட்பட்டது.
- பரிசுத்தொகையை பெற்றுக்கொள்ளும் போது தேசிய அடையாள அட்டை கட்டாயமானது.
- சீட்டிழுப்பு தினத்திலிருந்து 6 மாதகாலத்திற்கு மாத்திரமே வெற்றி லொத்தர் செல்லுபடியாகும்.

சீட்டிழுப்பு இலக்கம் 4425 உத்தியோகபூர்வ முடிவுகள்

மஹஜன சம்பத

திகதி: 13-03-2021

வெற்றி எழுத்து N வெற்றி இலக்கங்கள் 0 5 1 7 8 8

பரிசு அமைப்பு - வலமிருந்து இடமாக

| | | | வெற்றிபெற்றோர் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1ஆம் பரிசு | 0 5 1 7 8 8 | ரூபா. 2,000,000/- | 01 |
| 2ஆம் பரிசு | 5 1 7 8 8 | ரூபா. 100,000/- | 13 |
| 3ஆம் பரிசு | 1 7 8 8 | ரூபா. 10,000/- | 123 |
| 4 ஆம் பரிசு | 7 8 8 | ரூபா. 1,000/- | 1,220 |
| 5ஆம் பரிசு | 8 8 | ரூபா. 100/- | 12,154 |
| 6ஆம் பரிசு | 8 | ரூபா. 20/- | 120,785 |

பரிசு அமைப்பு - இடமிருந்து வலமாக

| | | | வெற்றிபெற்றோர் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 7ஆம் பரிசு | 0 5 1 7 8 | ரூபா. 10,000/- | 12 |
| 8ஆம் பரிசு | 0 5 1 7 | ரூபா. 1,000/- | 119 |
| 9ஆம் பரிசு | 0 5 1 | ரூபா. 100/- | 1,222 |
| 10ஆம் பரிசு | 0 5 | ரூபா. 50/- | 12,080 |
| 11ஆம் பரிசு | N | ரூபா. 20/- | 48,282 |

இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்தப் பரிசுத் தொகை – ரூ. 11,311,940.00

அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 12,228,563.00

NLB வாழ்வின் கனவிற்கு அதிர்ஷ்டத்தின் ஆசீர்வாதம்

தேசிய லொத்தர் சபை www.nlb.lk

JATHIKA SAMPATHA ஜாதிக சம்பத

உத்தியோகபூர்வ முடிவுகள் சீட்டிழுப்பு இலக்கம் 1104 திகதி 13.03.2021

வெற்றி இலக்கினம் விருச்சிகம்

வெற்றி இலக்கங்கள் 6 6 8 0 2 6

வலமிருந்து இடமாக பரிசுக்கட்டமைப்பு

| | | | |
|---|---|---|---|
| 01 பரிசு | 6 6 8 0 2 6 | ரூ. 1,000,000.00 | பரிசு - |
| 02 பரிசு | 6 8 0 2 6 | ரூ. 100,000.00 | பரிசு 04 |
| 03 பரிசு | 8 0 2 6 | ரூ. 10,000.00 | பரிசுகள் 29 |
| 04 பரிசு | 0 2 6 | ரூ. 1,000.00 | பரிசுகள் 295 |
| 05 பரிசு | 2 6 | ரூ. 100.00 | பரிசுகள் 3,020 |
| 06 பரிசு | 6 | ரூ. 20.00 | பரிசுகள் 29,871 |

இடமிருந்து வலமாக பரிசுக்கட்டமைப்பு

| | | | |
|---|---|---|---|
| 07 பரிசு | 6 6 8 0 2 | ரூ. 10,000.00 | பரிசு 04 |
| 08 பரிசு | 6 6 8 0 | ரூ. 1,000.00 | பரிசுகள் 30 |
| 09 பரிசு | 6 6 8 | ரூ. 200.00 | பரிசுகள் 317 |
| 10 பரிசு | 6 6 | ரூ. 100.00 | பரிசுகள் 2,934 |
| 11 பரிசு | விருச்சிகம் | ரூ. 20.00 | பரிசுகள் 24,824 |
| 12 பரிசு | வெற்றி இலக்கங்கள் ஆறும் எந்த ஒழுங்கில் பொருந்தினாலும் | ரூ. 200.00 | பரிசுகள் 37 |

இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்ட மொத்த பரிசுத்தொகை ரூ. 2,815,100.00

வெற்றி பெறும் சீட்டுகள் சீட்டிழுக்கப்பட்ட திகதியிலிருந்து 6 மாதங்களுக்கு மாத்திரமே செல்லுபடியாகும். ஐந்து இலட்சம் அல்லது அதற்கு மேற்பட்ட பரிசுத் தொகை அரசாங்க வரிச் சட்டதிட்டங்களுக்கு உட்படும். பரிசினைப் பெறுவதற்கு அடையாள அட்டை கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

அடுத்த புதன்கிழமைக்கான சுப்பர் பரிசு ரூ. 15,054,578.50

ජාතික ලොතරැයි මණ්ඩලය தேசிய லொத்தர் சபை NATIONAL LOTTERIES BOARD

32, தேசமான்ய என்.டபிள்யூ.ஜே முதலிகே மாவத்தை, கொழும்பு 01. தொலைபேசி: 011 4607000, 011 2324324 பக்ஸ்: 011 4669416

# சிறு விளம்பரம்

## மோட்டார் வாகனங்கள்

### 106 கார்கள் விற்பனைக்கு

WP KS-5196 Tata Nano Car. அதியுயர் விலைக்குண்டு. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 077010 7270, 0774789216. திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 019782

### 108 நிஸான் கார் விற்பனைக்கு

WP KG-1459 Nissan Wingroad Wagon. அதியுயர் விலைக்குண்டு. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 077010 7270, 0774789216. திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 019779

### 117 வேன்கள் விற்பனைக்கு

SG JU-5193 Micro MPV Junior. அதியுயர் விலைக்குண்டு. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 077010 7270, 0774789216. திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 019762

SP PF-2758 Subaru Sambar r Van. அதியுயர் விலைக்குண்டு. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 077010 7270, 0774789216. திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 019773

WP JD-7405 Hyundai Grace H100 Van. அதியுயர் விலைக்குண்டு. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 077010 7270, 0774789216. திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 019776

### 119 பஸ்கள், லொறிகள் விற்பனைக்கு

SG PS-1864 Foton Double F/B Truck. அதியுயர் விலைக்குண்டு. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 077010 7270, 0774789216. திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 019768

626898 Toyota Coaster Bus. அதியுயர் விலைக்குண்டு. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 077010 7270, 0774789216. திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 019751

### 122 மோட்டார் சைக்கிள், திரீவீலர்கள் விற்பனைக்கு

EP BIO - 2701 Hero Passion Pro. அதியுயர் விலைக்குண்டு. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 077010 7270, 0774789216. திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 019755

## வேலைவாய்ப்பு

### 325 தொழில்துறை பொது

எமது நிறுவனத்திற்கு திறமையான வாகன ஜெனட்ர் தேவை. தங்குமிட வசதிகள் உண்டு. கொஹுவல, நுகேகொடை. 0777252876. 018812

வத்தளையில் அமைந்துள்ள எமது துணி உற்பத்தித் தொழிற்சாலைக்கு பயிற்சிபெற்ற/பயிற்சிபெறாத ஆண்/பெண் ஊழியர்கள் தேவை. ஒருநாள் சம்பளம் ரூ.1200/ முதல் ரூ.1500/ மாதாந்தம் ரூ.50,000 வரை வழங்க ப்படும். இலவச தங்குமிட வசதியுடன் சகாய விலையில் மூன்று நேரமும் உணவும் வழங்கப்படும். நேரில் வரவும். இல.18, வெலியமுன வீதி, ஹேகித்த, வத்தளை. தொடர்புகளுக்கு 0766200300. 019987

## பொது

### 431 நானாவிதப் பொருட்கள் விற்பனைக்கு

குளிரூட்டப்பட்ட அறை விற்பனைக்கு. பாவிக்கப்படாத குளிரூட்டப்பட்ட அறை புதிய உத்தரவாதத்தின் கீழான உள்ளக கொள்ளளவு L-7.2", H-7.2", W-3.2", அறை வெப்பநிலை 4°C குளிரூட்டி தொகுதி Tecumseh Condensing Unit (CAK4511Y) எவப்பரேட்டர் DE 0.47/2.5) பெனல் தடிப்பு 100 மிமீ விலை 6 50, 000 ரூபா அல்லது பேசித் தீர்க்கலாம். அமைவிடம் சிங்கர் பிளஸ் இற்கு எதிராகவுள்ளது. இல. 349, காலி வீதி, கொழும்பு 03. அலுவலக நேரங்களில் தொடர்பு கொள்வதற்கான இலக்கங்கள் தொலைபேசி 0112301732, 0777100165 019874

## காணி/தோட்டம்

### 641 வீடு சொத்து கொழும்பு மாவட்டம் விற்பனைக்கு

மணமாகாத ஆண்களுக்கான அறை வாடகைக்கு. இணைக்கப்பட்ட கழிவறை, 3 மாத முற்பணம் 121/1, ஸ்ரீ சரணங்கர பாதை, தெஹிவளை. 077749 9038/ 077733 7032/ 077798 3989 020252

## கம்பனி பெயர் மாற்றல் அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(2) பிரிவின் கீழ் பின்வரும் கம்பனி தனது பெயரை (8ம் பிரிவின் பிரகாரம்) 2021 மார்ச் 07ம் திகதி முதல் மாற்றியுள்ளது என்பதை அறியத்தருகிறோம்.

**கம்பனியின் முந்தைய பெயர்:**
ரஷ் பில்டர்ஸ் (பிரைவட்) லிமிடட்

**கம்பனியின் இல : பீவீ 8986**

**முகவரி:**
இல. 752, பிரின்ஸ் ஒப் வேல்ஸ் அவென்யூ, கொழும்பு 14.

**கம்பனியின் புதிய பெயர்:**
ஆர் எல் ஜீ மெனேஜ்மென்ட் சேர்விஸ் (பிரைவட்) லிமிட்டட்

எஸ்ஜே கோப்பரேட் சேர்விசஸ் (பிரைவட்) லிமிட்டெட
கம்பனி செயலாளர்கள்
இல 20/A, வல்பொல வீதி, அக்கோனா, அங்கொடை.

## பெயர் மாற்றம்

கோறளைப்பற்று வாழைச்சேனை பிரதேச செயலாளர் பிரிவில் கல்குடா வீதி வாழைச்சேனை எனும் விலாசத்தில் வசிக்கும் பா.நியோமிலா ஆகிய எனது பிறப்பு சான்றிதழில் 'தியோமிலா' என்று வைக்கப்பட்டுள்ளது. எனது பிள்ளைகளின் பதிவுகளில் நியோமிலா என்று உள்ளதாலும், என்னை எனது உறவினர்கள், நண்பர்கள் நியோமிலா என்று அழைப்பதால் எனது பிறப்பு அத்தாட்சிப் பத்திரத்தில் நியேமிலா என்று மாற்றவுள்ளேன் என இத்தால் இலங்கை அரசுக்கும் பொது மக்களுக்கும் தெரியப்படுத்துகிறேன்.

**பா.நியோமிலா**

## அறிவித்தல்

2007 இல 07 கம்பனிகள் சட்டத்தின் 34ஆம் பிரிவின் கீழ் மாத்தா பவுன்டேஷன் என்ற பெயரில் கீழ்க்காணும் நோக்கத்தின் கீழ் கம்பனியொன்றைப் பதிவு செய்வதற்காக வேண்டுகோள் ஒன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளதால் அது பற்றி எதிர்ப்புக்கள் ஏதும் இருப்பின், இவ் அறிவித்தல் பிரசுரமாகி மூன்று வாரத்திற்குள் கம்பனிப்பதிவாளர், இல. 100, மாவத்த சமாகம் மெதுர, டீ.ஆர். விஜேவர்தன மாவத்த, கொழும்பு-10, என்ற முகவரிக்கு வழங்குமாறு அழைக்கிறேன்.

**நோக்கம்:-**

1. இலங்கையின் இயற்கையான வனங்களின் பாதுகாப்பு, பலகை தேவைக்கான பயிர்ச்செய்கை போலவே ஏனைய சுற்றாடல் சமச்சீருக்காக வனங்களை மீண்டும் உருவாக்கல் பூகோள போலவே உள்ளூர் தேவையாகும். இதற்காக நவீன தொழில்நுட்பத்துடன் சுற்றாடல் விஞ்ஞான ரீதியான உபாயங்கள் மூலம் ஏற்படும் பயிர்ச் செய்கைக்காக கூட்டாக செயற்படுதல்
2. விஷமற்ற கமத்தொழில், மீள்சக்தி வலு உட்பட அபிவிருத்தியுடன் சம்பந்தப்பட்ட செயற்பாடுகளை கூட்டாக செயற்படுத்தல்
3. நவீன தொழில்நுட்பத்துடன் வன பாதுகாப்பு மற்றும் மாற்று பயிர்ச் செய்கைக்காக வழிகாட்டியை வழங்குதல்
4. அதற்காக தேவைப்படும் அறிவூட்டல், பயிற்சி செய்தல் மற்றும் நேரடியாக்கல் மேற்கொள்ளல்
5. நவீன தொழில்நுட்பத்துடன் வனப் பாதுகாப்பு மற்றும் மாற்றுப் பயிர் வேலைத் திட்டத்தை செயற்படுத்தல்.
6. நவீன தொழில்நுட்பத்துடனும் வனப் பாதுகாப்பு மற்றும் மாற்றுப் பயிர் செயற்படுத்துவதற்காக நிதி வழங்கல், அதற்காக நிதி உற்பத்தி விடயங்களை செயற்படுத்தல்
7. நவீன தொழில் நுட்பத்தையும் பயன்படுத்தி விஷமற்ற கமத் தொழிலை மேம்படுத்துதல்.
8. மக்களுக்கிடையில் மீள் சக்தி வலுவை பாவனையை மேம்படுத்தல்

**கம்பனி செயலாளர்.**

## இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு

## திறைசேரி உண்டியல்கள் வழங்கல்

**2021 மார்ச் 17ஆம் திகதி ஏல விற்பனையினூடாக 45,000 மில்லியன் ரூபாவுக்கான திறைசேரி உண்டியல்கள் வழங்கப்படும்.**

திறைசேரி உண்டியல் வழங்கல்களின் விபரங்கள் பின்வருமாறு:

| முதிர்வுக் காலம் | 91 நாட்கள் | 182 நாட்கள் | 364 நாட்கள் | மொத்தம் |
|---|---|---|---|---|
| ஐஎஸ்ஐஎன்* | LKA09121F184 | LKA18221I177 | LKA36422C180*** | |
| முன்வைக்கப்பட்ட தொகை (ரூ. மில்.) | 10,000 | 10,000 | 25,000 | 45,000 |
| ஏற்றுக்கொள்ளலுக்கான உயர்ந்தபட்ச விளைவு வீதம் ** | | | 5.12 | |

| | |
|---|---|
| ஏல விற்பனைத் திகதி | : 2021 மார்ச் 17 |
| தீர்ப்பனவுத் திகதி | : 2021 மார்ச் 19 |
| வழங்கப்படும் திகதி | : 2021 மார்ச் 19 |
| விலைக்குறிப்பீடு சமர்ப்பிக்கப்படுவதற்கான இறுதித் திகதியும் நேரமும் | : 2021 மார்ச் 17, புதன்கிழமை மு.ப. 11.00 |
| விலைக்குறிப்பீட்டின் ஆகக்குறைந்த தொகை | : ஐந்து மில்லியன் ரூபாய்கள் (ரூ. 5,000,000/-) அதிலிருந்து ஒரு மில்லியன் ரூபாய்களின் (ரூ. 1,000,000/-) பெருக்கங்களிலிருந்து |

அரசாங்க பிணையங்களிலுள்ள முதனிலை வணிகர்களிடமிருந்து விலைக்குறிப்பீடுகள் கோரப்படுகின்றன. இலங்கை மத்திய வங்கியால் வழங்கப்பட்ட இலத்திரனியல் விலைக்குறிப்பீட்டு வசதியூடாக மட்டுமே விலைக்குறிப்பீடுகள் அனுப்பப்பட வேண்டும்.

சந்தை நிலைமைகளுக்கமைய இலங்கை மத்திய வங்கி ஏலங்களில் முதிர்வுகளுக்கிடையிலான தொகைகளை மீள் ஒதுக்குச் செய்வதன் மூலம் ஒவ்வொரு முதிர்வுக்கும் முன்வைக்கப்பட்ட தொகைகளிலும் பார்க்க உயர்ந்த அல்லது குறைந்த தொகையினை, முன்வைக்கப்படுகின்ற மொத்த தொகையினை விஞ்சாது ஏற்றுக்கொள்ளக்கூடும்.

**கீழ்க்காணும் முதனிலை வணிகர்களிடமிருந்தும் எந்தவொரு உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளிடமிருந்தும் திறைசேரி உண்டியல்களை கொள்வனவு செய்யுமாறு பொதுமக்கள் அழைக்கப்படுகின்றனர்.**

| | |
|---|---|
| அக்குயிட்டி செக்குரிட்டீஸ் லிமிடட் | 2206297 |
| இலங்கை வங்கி | 2541938 |
| கெப்பிட்டல் எலையன்ஸ் லிமிடட் | 2317777 |
| இலங்கை கொமர்ஷல் வங்கி பிஎல்சி | 2332319 |
| ப்பெஸ்ட் கெப்பிட்டல் ரெஸரீஸ் பிஎல்சி | 2639883 |
| என்எஸ்பீ பண்ட் மனேஜ்மன்ற் கம்பனி லிமிடட் | 2425010 |
| மக்கள் வங்கி | 2206783 |
| சம்பத் வங்கி பிஎல்சி | 2305842 |
| செலான் வங்கி பிஎல்சி | 2456340 |
| வெல்த்றஸ்ற் செக்குரிட்டீஸ் லிமிடட் | 2675096 |

* பன்னாட்டுப் பிணையங்கள் அடையாள இலக்கம்
** 91 நாள் மற்றும் 182 நாள் முதிர்வுகளின் விளைவு வீதங்கள் ஏலத்தில் 364 நாள் முதிர்வினைக் கொண்ட மட்டத்திற்கு கீழ் தீர்மானிக்கப்படும்.
*** வங்கி விடுமுறை நாளொன்றில் முதிர்ச்சி வருகின்றவிடத்து திறைசேரி உண்டியல் முதிர்ச்சிகளுக்கு புதிய விடுமுறை விதிமுறை ஏற்புடையதாகும் அதாவது 2022 இலிருந்து செயற்பாட்டுக்கு வரும், கொடுப்பனவுகள், உடனடியாகத் தொடர்ந்து வருகின்ற அலுவல் நாளன்று மேற்கொள்ளப்படும்.

**எம்.இசட்.எம். ஆசிம்**
**பொதுப்படுகடனின் கண்காணிப்பாளர்/பதிவாளர்**

**வழங்கும் அலுவலகம்**
**பொதுப்படுகடன் திணைக்களம்**
**இலங்கை மத்திய வங்கி,**
**30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு-1.**
**தொலைபேசி: +94112477011, தொலைநகல்: +94112477687**
**வெப்தளம்: www.cbsl.gov.lk**

SO SRI LANKA

## இலங்கை சம்மேளன பணியகம்
## சுற்றுலாத்துறை அமைச்சு

## விலைமனுக்கோரல்

| | |
|---|---|
| திகதி : | **08.03.2021** |
| விபரம் : | **SLTPB/GCC/2021/002** இலங்கை சுற்றுலா துறையின் 2021-2025 ற்கான உலகளாவிய தொடர்பாடல் பிரசாரங்களுக்கான படைப்பாற்றல் மிக்க முகவர் நிறுவனத்தை தெரிவு செய்தல் |
| மனு இல : | **SLTPB/GCC/2021/002** |

**2021.02.16** ஆம் திகதி “தினமின” “டெய்லி மிரர்” மற்றும் தினகரன் ஆகிய பத்திரிகைகளில் மற்றும் **2021.02.17** ஆம் திகதி “டெய்லி நியூஸ்” பத்திரிகை விளம்பரத்தில் மேற்குறிப்பிடப்பட்டுள்ள செயற்திட்டத்திற்கான மனுக்கோரலுக்கான கால எல்லை **2021.03.31 ஆம் திகதி பி.ப.12.30** மணி வரை நீடிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

**தலைவர்**
**அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட கொள்முதல் குழு**
**இலங்கை சம்மேளன பணியகம்**
**இல.80, காலி வீதி, கொழும்பு 03**
**இலங்கை**



### ரஷீத் ஹஜ்ஜுல் அக்பர் கைது;

# ஜமாஅத்தே இஸ்லாமி கவலை தெரிவிப்பு

இலங்கை ஜமாஅத்தே இஸ்லாமியின் முன்னாள் தலைவர் உஸ்தாத் ரஷீத் ஹஜ்ஜுல் அக்பர் கைது செய்யப்பட்டமை தொடர்பில் இலங்கை ஜமாஅத்தே இஸ்லாமி தனது அதிருப்தியையும் கவலையையும் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் இலங்கை ஜமாஅத்தே இஸ்லாமியின் உதவிப் பொதுச் செயலாளர் எம். எச்.எம். ஹஸன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு,

1954ஆம் ஆண்டு ஸ்தாபிக்கப்பட்ட இலங்கை ஜமாஅத்தே இஸ்லாமி ஒரு யாப்பின் அடிப்படையில் இயங்கிவரும் ஒரு திறந்த இயக்கமாகும்.

ஜமாஅத்தே இஸ்லாமி என்ற பெயரிலோ வேறு பெயர்களிலோ உள்நாட்டிலோ வெளிநாடுகளிலோ இயங்கும் எந்த இயக்கத்துடனும் எவ்விதக் கட்டுப்பாட்டுடன் கூடிய தொடர்பையும் இலங்கை ஜமாஅத்தே இஸ்லாமி கொண்டிருக்காது. நாட்டின் யாப்புக்கு மாற்றமாக செயற்பட மாட்டாது. சட்டபூர்வமான சாத்விக வழிமுறைகளையே கையாளும். கட்சி அரசியலுக்கு அப்பாலிருந்தே செயற்படும்.

முதலான வழிகாட்டல் தத்துவங்களை 1965ஆம் ஆண்டு முதல் தனது யாப்பில் உள்ளடக்கி அவற்றை கண்டிப்பாக கடைபிடித்தொழுகும் ஒரு சுதந்திரமான அமைப்பே இலங்கை ஜமாஅத்தே இஸ்லாமி.

உஸ்தாத் ஹஜ்ஜுல் அக்பர் சுமார் 24 (1994 /2018) வருடங்களாக இலங்கை ஜமாஅத்தே இஸ்லாமியை வழிநடத்தியவர். இக்காலப் பகுதியிலோ அதற்கு முன்னரோ தீவிரவாதத்தைப் பிரசாரம் செய்ததாகவோ வெறுப்புப் பேச்சுக்களில் ஈடுபட்டதாகவோ வன்முறையைத் தூண்டியதாகவோ அவர் மீது எவ்வித குற்றமும் சுமத்தப்படவில்லை.

உஸ்தாத் ஹஜ்ஜுல் அக்பர் இந்த நாட்டில் இஸ்லாமிய ஆட்சியை உருவாக்க சதித் திட்டம் தீட்டியதற்கு சாட்சியங்கள் உள்ளதாக ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. இதே குற்றச்சாட்டின் அடிப்படையிலேயே அவர் 2019ஆம் ஆண்டு கைது செய்யப்பட்டு 32 நாட்கள் விசாரணை செய்யப்பட்டு பின்னர் நீதிமன்றத்தினால் விடுதலை செய்யப்பட்டார்.


இம்முறை அவர் வஹாபிஷத்தையும் தீவிரவாதத்தையும் பரப்பினார், இனங்களுக்கிடையில் முரண்பாடுகளை ஏற்படுத்தும் வகையில் பிரச்சாரங்களில் ஈடுபட்டு வந்தார் ஆகிய குற்றச்சாட்டுகளின் பெயரிலேயே கடந்த வெள்ளிக்கிழமை (12) கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

இலங்கை ஜமாஅத்தே இஸ்லாமியின் மீது காழ்ப்புணர்ச்சியும் துவேசமும் கொண்ட சிலர் வழங்கிய பிழையான சாட்சியங்களை அடிப்படையாகக் கொண்டு சுமத்தப்பட்டுள்ள இக்குற்றச்சாட்டுக்களை நாம் முற்றாக மறுக்கிறோம்.

பாதுகாப்புத் துறையினரால் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டு வந்த விசாரணைகளின்போது இலங்கை ஜமாஅத்தே இஸ்லாமியும் உஸ்தாத் ஹஜ்ஜுல் அக்பரும் தமது பூரண ஒத்துழைப்பை வழங்கியே வந்தனர். அவ்வாறு தொடர்ந்தும் எமது ஒத்துழைப்பை வழங்க நாம் தயாராகவே உள்ளோம்.

கடந்த முறை போன்றே விசாரணைகளின் பின் அவரது குற்றமற்ற தன்மை நிரூபிக்கப்படும் என நாம் உறுதியாக நம்புகிறோம். இவ்விடயத்தில் சட்டத்துறை நிபுணர்களின் ஆலோசனைகளையும் நாம் பெற்று வருகிறோம். நீதி விசாரணையின் போது எமக்கு நியாயம் கிடைக்கும் என நாம் உறுதியாக நம்புகிறோம் என தெரிவித்துள்ளார்.





லுனுகம்வெஹெரை நகரில் நிர்மாணிக்கப்பட்ட 'சமுர்த்தி சுவ' உள்நாட்டு சுதேச உணவகத்தினை வடிகாலமைப்பு அமைச்சரும் அரச பாதுகாப்பு, உள்நாட்டு அலுவல்கள் மற்றும் அனர்த்த முகாமைத்துவ பிரதி அமைச்சருமான சமல் ராஜபக்ஸ அண்மையில் திறந்து வைத்த போது எடுத்த படம். (படம்: ஹம்பாந்தோட்டை குறூப் நிருபர்)

# புத்தளம் தள வைத்தியசாலை ஓய்வு அறை திறந்து வைப்பு

**கற்பிட்டி தினகரன் விஷேட நிருபர்**



புத்தளம் தள வைத்தியசாலையில் நோயாளர்களை பார்வையிட வருகை தரும் பொதுமக்களுக்காக புதிதாக நிர்மாணிக்கப்பட்ட ஓய்வு அறை அண்மையில் வைபவரீதியாக திறந்து வைக்கப்பட்டது.

புத்தளம் தள வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகரின் தலைமையில் இடம்பெற்ற குறித்த நிகழ்வில் மதுரங்குளி, மன்தமான்தீவைச் சேர்ந்த பிரபல தொழிலதிபரும், சமூக சேவையாளருமான என்.எம். சித்தீக் பிரதம அதிதியாக கலந்துகொண்டு குறித்த ஓய்வு அறையை திறந்து வைத்தார்.

புத்தளம் தள வைத்தியசாலைக்கு நோயாளர்களை பார்வையிட வருகை தரும் பொதுமக்கள் வெயில் மற்றும் மழை காலங்களில் பல சிரமங்களை எதிர்நோக்குவதால் ஓய்வு அறை ஒன்றை அமைப்பதன் அவசியத்தை வைத்தியசாலை நிர்வாகம், பிரபல தொழிலதிபர் என்.எம்.சித்தீக்கிடம் வலியுறுத்தியதுடன், ஓய்வு அறை ஒன்றை அமைத்துக்கொடுக்குமாறும் கோரிக்கை விடுத்தனர். வைத்தியசாலை நிர்வாகத்தின் கோரிக்கையை ஏற்றுக்கொண்ட அவர், 15 இலட்சம் ரூபா தனது சொந்த நிதியிலிருந்து ஒதுக்கீடு செய்து நிர்மாணித்துக் கொடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# அநுராதபுர மாவட்டத்தில் இரண்டரை இலட்சம் கிலோ நெல் கொள்வனவு

**திறப்பனை தினகரன் நிருபர்**
**ஏ.ஆர்.எம்.றபியூதீன் )**

அநுராதபுர மாவட்டத்தில் இது வரையில் இரண்டரை இலட்சம் கிலோ நெல் விவசாயிகளிடமிருந்து கொள்வனவு செய்யப்பட்டுள்ளதாக அநுராதபுரம் நெல் சந்தைப்படுத்தும் சபையின் மாவட்ட முகாமையாளர் நிமல் தென்னக்கோன் தெரிவித்துள்ளார்.

ராஜாங்கனய, யக்கல்ல,தலாவ மற்றும் நுவரவெவ ஆகிய பிரதேசங்களிலேயே கூடுதலான கொள்வனவு இடம் பெற்றுள்ளதாக தெரிய வருகின்றது.விவசாய நிலங்களுக்கு நேரடியாகச் சென்று 55 ரூபா வீதமும், நெல் கொள்வனவு நிலையத்துக்கு நேரடியாக விவசாயிகளால் கொண்டு வந்து ஒப்படைக்கும் நெல்லுக்கு கிலோ 56.50 க்கும் கொள்வனவு செய்வதாக தெரிவிக்கப்படுகின்றது.

விவசாயிகளிடமிருந்து நெல்லை கொள்வனவு செய்வதற்காக அநுராதபுர மாவட்டத்திற்குள் 31 நெல் கொள்வனவு நிலையங்கள் இது வரையில் ஆரம்பிக்கப்பட்டு இயங்குவதோடு ஒவ்வொரு கிராம உத்தியோகத்தர் பிரிவுகளிலும் நெல் கொள்வனவு உத்தியோகத்தர் ஒருவர் இதற்காக நியமிக்கப்பட்டுள்ளார்.

நெல் கொள்வனவு நிலையங்களுக்கு விவசாயிகளால் இலகுவாக எவ்வித சிரமமுமின்றி நெல்லை கொண்டு வந்து கொடுக்கும் நடவடிக்கைகளை ஊக்கப்படுத்த அதற்கான சூழல் மற்றும் தேவையான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிப்பட்டுள்ளது.

# சமுர்த்தி வங்கி செயற்பாடுகள் கணனி மயம்

**கற்பிட்டி தினகரன் விஷேட நிருபர்**

புத்தளம் மாவட்டத்தின் முந்தல் பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட மங்கள எளிய சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கியின் செயற்பாடுகளை கணனி மயப்படுத்தல் நிகழ்வு அண்மையில் வைபவரீதியாக இடம்பெற்றது.

மங்கள எளிய சமுர்த்தி வங்கியின் முகாமையாளர் எஸ்.எம்.நபீல் தலைமையில் இடம்பெற்ற குறித்த நிகழ்வில் புத்தளம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் வன்னாத்தவில்லு, புத்தளம், கற்பிட்டி மற்றும் முந்தல் பிரதேச அபிவிருத்திக் குழு இணைத் தலைவருமான அலிசப்ரி ரஹீம், புத்தளம் மாவட்ட சமுர்த்தி பணிப்பாளர் சம்பத் வீரசேகர , உதவிப் பணிப்பாளர், முந்தல் பிரதேச செயலாளர் விஜானி வசந்திக்கா, கற்பிட்டி பிரதேச சபை முன்னாள் தலைவர் அலாவுதீன் அன்ஸார், சமூக சேவையாளரும், தொழிலதிபருமான என்.எம்.சித்தீக் உட்பட புத்தளம், கற்பிட்டி பிரதேச சபை உறுப்பினர்கள் அரச உத்தியோகத்தர்கள் என பலரும் கலந்துகொண்டனர்.

# மோட்டார் சைக்கிள்களை திருடி வந்த நபர் கைது

**அநுராதபுரம் தினகரன் நிருபர்**

நாட்டின் பல்வேறு பகுதிகளில் மோட்டார் சைக்கில்களை திருடி வந்த சந்தேக நபர் ஒருவரை அறலகங்வில பொலிசார் கைது செய்துள்ளனர்.

பொலிசாருக்கு கிடைத்த தகவலொன்றுக்கமைய முன்னெடுக்கப்பட்டு வந்த விசாரணைகளின் போது கிடைக்கப்பெற்ற தகவல்களின் அடிப்படையில் மின்னேரிய பகுதியில் வைத்து சந்தேக நபரை கைது செய்துள்ளதுடன் 26 மோட்டார் சைக்கில்களையும் அறலகங்வில பொலிசார் கைப்பற்றியுள்ளனர்.

# கிழக்கின் குரல்







# பிராந்திய கொன்சியூலர் அலுவலகம் திருமலையில்

## அமைச்சர் தினேஷ் குணவர்தனவினால் திறந்து வைப்பு

**திருமலை மாவட்ட விசேட, தம்பலகாமம் நிருபர்கள்**

வெளிநாட்டு உறவுகள் அமைச்சின் நான்காவது கொன்சியூலர் பிராந்திய அலுவலகம் நேற்று முன்தினம் (13) திருகோணமலையில் வெளிநாட்டு உறவுகள் அமைச்சர் தினேஷ் குணவர்தனவினால் திறந்து வைக்கப்பட்டது.

அரச நிறுவனங்களின் செயற்பாடுகளை கிராமங்களுக்கும் கொண்டுசெல்லல் என்ற அரசாங்கத்தின் திட்டத்திற்கமைய மக்களுக்கு இலகுவான முறையில் சேவைகளை பெற்றுக் கொடுக்கும் வகையில் இப்பிராந்திய அலுவலகம் திறந்து வைக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் தெரிவித்தார். கடந்த காலங்களில் வெளிநாட்டு உறவுகள் அமைச்சின் கொன்சியூலர் சேவைகளை பெற்றுக் கொள்வதற்காக இப்பிரதேசத்தைச் சேர்ந்த மக்கள் பல மணித்தியாலங்களை செலவிட்டு கொழும்புக்கு வருகை தந்து சேவைகளை பெற்றுக் கொண்டார்கள். இதன் காரணமாக பல்வேறு வகையான சிரமங்களை எதிர்நோக்க வேண்டி ஏற்பட்டது.

எனவே கிழக்கு மாகாண மக்களுக்கு குறித்த சேவையை பெற்றுக் கொடுக்கும் வகையில் இதன் பணிகள் திருகோணமலையில் ஆரம்பித்து வைக்கப்பட்டதாக அவர் மேலும் தெரிவித்தார்.

திருகோணமலை மாவட்டம் ரம்மியமான பிரதேசமாக காணப்படுவதுடன் அதிகளவான வளங்கள் நிறைந்த மாவட்டமாக காணப்படுகின்றது.

திருகோணமலை மாவட்டத்தை பொருளாதார கேந்திர நிலையமாக மாற்றியமைத்து நாட்டினுடைய அபிவிருத்திக்கு பங்களிப்பு செய்கின்ற மாவட்டமாக மாற்றி அமைப்பதற்கான செயற்பாடுகளை அரசாங்கம் மேற்கொண்டு வருகின்றது.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஆட்சி காலத்தில் தான் நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சராக இருந்த வேளையில் கந்தளாய் நீர்ப்பாசன திட்டத்தை ஆரம்பித்து திருகோணமலை மாவட்டத்தின் பல்வேறு பிரதேசங்களுக்கும் குடிநீர் வழங்கும் செயற்பாடுகளை மேற்கொண்டதாகவும், அதன் மூலமாக இப்பிரதேச மக்களின் குடிநீர்ப் பிரச்சினை பாரியளவில் நிவர்த்தி செய்யப் பட்டதாக இதன்போது அவர் நினைவுபடுத்தினார்.

இந்நிகழ்வில் பிராந்திய ஒத்துழைப்பு இராஜாங்க அமைச்சர் தாரக பாலசூரிய, திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களான கபில நுவன் அத்துகோரல, எம்.எஸ். தௌபீக், ராசமாணிக்கம் சாணக்கியன், யதாமணி குணவர்தன, வெளிநாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளர் அட்மிரல் கொலம்பகே உட்பட பலரும் கலந்து சிறப்பித்தனர்.

# கட்டுமுறிவுக்குள பாலம் புனரமைப்புக்கான அடிக்கல்

## இராஜாங்க அமைச்சரினால் நட்டிவைப்பு



**மட்டக்களப்பு விசேட நிருபர்**

இதயங்களை ஒன்றிணைக்கும் கிராமிய பாலங்கள் வேலைத்திட்டத்தின் கீழ் வாகரைப் பிரதேசத்தில் அடிப்படை வசதிகள் அற்ற அதி கஷ்டப் பிரதேசமான 6 ஆம் கட்டை கட்டுமுறிவுக்குளம் பாலத்தினை புனரமைப்பதற்கான அடிக்கல் நேற்று (14) நாட்டப்பட்டது.

பாலத்தை புனரமைப்பதற்காக பின்தங்கிய கிராமிய பிரதேச மனைசார் கால்நடை வளர்ப்பு மற்றும் சிறு பொருளாதார அபிவிருத்தி பயர்ச்செய்கை மேம்பாட்டு இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரனால் அடிக்கல் நாட்டப்பட்டது.

ருபா 26 மில்லியன் நிதி ஒதுக்கீட்டின் கீழ் பாலத்திற்கான அடிக்கல்லை நட்டு வைத்து இராஜாங்க அமைச்சர் அங்கு உரையாற்றும் போது, இப் பிரதேச மக்களின் தேவையறிந்து அவர்களின் அடிப்படைத் தேவைகளான போக்குவரத்து வசதியை ஏற்படுத்திக் கொடுப்பதனால் அவர்களின் பொருளாதார மேம்;பாடு உள்ளிட்ட தேவைகளை இலகுவாகச் செய்ய முடியும் எனத் தெரிவித்தார்.



உலகத் தாய்மொழி தினத்தை நினைவுகூரும் முகமாக " உதிரம் கொடுத்து உயிர் காப்போம்" எனும் தொனிப் பொருளில் நேற்று (14) சம்பூர் பிரதேச வைத்தியசாலையில் இரத்ததான நிகழ்வு இடம்பெற்ற போது. படம் ;தோப்பூர் குறூப் நிருபர்

# தம்பிலுவில் முனையூர் காளி அம்மன் ஆலய கும்பாபிஷேகம்



**திருக்கோவில் தினகரன் நிருபர்**

கிழக்கிலங்கை வரலாற்று சிறப்புமிக்க தம்பிலுவில் முனையூர் படபத்திரகாளி அம்மன் ஆலயத்தின் மகா கும்பாபிசேஷகம் எதிர்வரும் வியாழக்கிழமை (18) சுகாதார விதிமுறைகளுக்கு ஏற்ப வேதாகம கிரியைகள் மங்கள வாத்தியங்கள் முளங்க சுகாதார பாதுகாப்பு விதிமுறைகளைப் பின்பற்றி மகா கும்பாபிஷேக விழா இடம்பெறவுள்ளது.

ஆலயத்தில் இக் கும்பாபிசேக கிரியைகள் பிரதிஷ்டா பிரதமகுரு காளிபூஜா துரந்தரர் விஸ்வப் பிரம்மஸ்ரீ செ.சற்குணராஜா தலைமையிலான குருமார்கள் நேற்று ஞாயிற்றுக்கிழமை முதல் ஆலயத்தில் கும்பாபிஷேக ஆரம்ப கிரிமைகளை ஆரம்பித்துள்ளனர்.

மூலமூர்த்தி உற்பட அனைத்து பரிபாலன மூர்த்திகளுக்கு செவ்வாய் மற்றும் புதன் ஆகிய இரு தினங்கள் அடியார்கள் எண்ணெய்க்காப்பு சாத்தும் நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன. இதனைத் தொடர்ந்து வியாழக்கிமை (18) காலை 10.00 மணி தொடக்கம் 11.00 வரையான சுபவேளையில் மூலமூர்த்தியான படபத்திர காளியம்மாள் உட்பட அனைத்து பரிபாலன தெய்வங்களுக்குமான மகா கும்பாபிஷேகம் இடம்பெறவுள்ளது. ஆலய கும்பாபிஷேகத்தினைத் தொடர்ந்த வெள்ளிக்கிழமை (19) திகதி முதல் எதிர்வரும் வைகாசி மாதம் 05ம் திகதி வரையான 48 தினங்கள் மண்டலாபிஷேகக் கிரியைகள் மற்றும் பூஜை வழிபாடுகள் இடம்பெறவுள்ளன.

இக் கும்பாபிஷேக காலங்களில் ஆலயத்திற்கு வருகைதரும் பக்தர்கள் கொவிட் 19 சுகாதார விதிமுறைகளைப் பின்பற்றி வருமாறும் ஆலய நிருவாகத்தினர் வேண்டுகோள் விடுத்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# நாளை செயலமர்வு

**நற்பிட்டிமுனை தினகரன் நிருபர்**

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை ஏற்பாடு செய்துள்ள கல்விசார் உத்தியோகத்தர்களுக்கு சுகாதார மேம்பாடு தொடர்பான செயலமர்வு நாளை (16) ஆந் திகதி கல்முனை சுகாதார பணிமனை கேட்போர் கூடத்தில் பணிப்பாளர் டொக்டர் ஜீ .சுகுணன் தலைமையில் நடைபெறவுள்ளது. பாடசாலையில் கொரோனா ஏற்படுவதை தடுத்தல், சுகாதார நடைமுறைபேணல், டெங்கைத் தடுத்தல் கொரோனாவுக்கு பின்னரான கற்றல் கற்பித்தல் தொடர்பாக துறைசார் வளவாளர்களால் பயிற்சி வழங்கப் வழங்கப்படபட விருப்பதாக சுகாதார சேவைகள் பணிப்பாளர் மேலும் தெரிவித்தார். திணைக்களத் தலைவர்களுக்கு இது தொடர்பான கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

# மட்டு. விமான நிலையத்தை சர்வதேச விமான நிலையமாக மாற்ற வேண்டும்

## பாராளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன்

**பெரியபோரதீவு தினகரன் நிருபர்**



மட்டக்களப்பு விமான நிலையத்தை சர்வதேச விமான நிலையமாக மாற்ற இந்தியா அழுத்தம் கொடுக்க வேண்டும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் கோரிக்கை விடுத்துள்ளார்.

இந்திய உயர்ஸ்தானிகரையும் முக்கிய உறுப்பினர்களையும் சனிக்கிழமை (13) திருகோணமலையில் சந்தித்து பேசிய போதே அவர் இவ்வாறு கோரிக்கை விடுத்துள்ளார்.

தமிழ் மக்களின் காணி அபகரிப்பு, தொல்பொருள் மற்றும் மகாவலி திட்டம் சம்பந்தமான பிரச்சினைகள் குறித்தும் இந்திய தூதுவரின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டது.

மேலும், எமக்கான ஆரம்ப புள்ளியாக 13 ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக அமுல்படுத்தி அதன் மூலம் அதிகார பரவலாக்கலை அமுல்படுத்த வேண்டும். இதன் மூலம் இவ்வாறான காணிகள் சம்பந்தப்பட்ட பிரச்சினைகளுக்கு நாமே தீர்வை பெற முடியும் என்பது தொடர்பாகவும் இரா. சாணக்கியன் வலியுறுத்தியிருந்தார்.

எமது பொருளாதாரத்தை கட்டியெழுப்ப தகவல் தொழில்நுட்ப துறையை வடகிழக்கில் நிறுவுவதற்கான பரிந்துரையினையும் அவர் இச் சந்திப்பின் போது முன்வைத்திருந்தார்.

இதன் மூலம் பல இளைஞர்களுக்கான வேலைவாய்ப்பை வழங்க முடியும் என்பதனையும் சுட்டிக் காட்டியிருந்தார்.

அத்துடன் மட்டக்களப்பு, அம்பாறை, மன்னார் மற்றும் காங்கேசன்துறை போன்ற இடங்களில் துறைமுகங்களை உருவாக்குவதன் மூலம் இலங்கை இந்திய சுதந்திர வர்த்தக ஒப்பந்தத்தின் அடிப்படையில் இங்குள்ள உள்ளூர் உற்பத்தி பொருட்களின் ஏற்றுமதியினை அதிகரிக்க முடியும் எனவும் தெரிவித்திருந்தார்.

மட்டக்களப்பு விமான நிலையத்தை சர்வதேச விமான நிலையமாக மாற்றுவதற்கான நடவடிக்கை எடுக்க இந்தியா அழுத்தம் தெரிவிக்க வேண்டும் எனவும் உள்ளூர் பயண சேவைகளை இதன் மூலம் உருவாக்குவதோடு சென்னைக்கான பயண கட்டமைப்புக்களை இங்கிருந்து ஏற்படுத்துவதன் மூலம் உல்லாச பிரயாண துறையினை மேலும் அபிவிருத்தி செய்வதோடு இதன் மூலம் பல தொழில் வாய்ப்புக்களை உருவாக்கலாம் எனவும் அவர் தெரிவித்திருந்தார்.

# அம்பாறையில் யானைகளால் கிராமங்கள் ஆக்கிரமிப்பு



அம்பாறை மாவட்டம் சம்மாந்துறை ,நிந்தவூர், காரைதீவு , பகுதியை தினமும் யானை கூட்டம் ஒன்று ஆக்கிரமிப்பு செய்து வருகின்றது.

நேற்று (14) திடீரென அம்பாறை மாவட்டத்தின் சம்மாந்துறை பகுதியை ஊடறுத்து செல்லும் பிரதான வீதியின் ஊடாக நிந்தவூர் மற்றும் காரைதீவு பகுதியின் வீதியில் யானைகள் உலா வருகின்றன.

பெரிய யானைகள் மற்றும் குட்டிகள் என 17 க்கும் அதிகமான யானைகள் அப்பகுதியில் உள்ள அறுவடை செய்யப்பட்ட வயல் நிலங்களை நோக்கி வருகை தந்துள்ளன. தினமும் அப்பகுதிக்கு வரும் யானை கூட்டத்தை மக்கள் பார்வையிட்டு வருவதுடன், வயல்வெளிகளை நோக்கி வருகை தந்துள்ள யானைகள் ஊருக்குள் பிரவேசிக்க முடியாத வகையில் பார்வையாளர்களாக உள்ள மக்கள் சத்தங்களை எழுப்பிய வண்ணம் உள்ளனர்.

இதனால் போக்குவரத்து தடைப்பட்டுள்ளதுடன் பொதுமக்கள் அவ்விடத்தில் அதிகளவாக குவிந்துள்ளனர். மேலும் இப் பிரதேசத்தில் தினந்தோறும் வயல்வெளிகளில் உள்ள வைக்கோல்களுக்கு தீ வைப்பதனாலும் காட்டில் உள்ள யானைகள் வெளிவந்த நிலையில் அருகில் உள்ள பொதுமக்களின் உடமைகளுக்கும் சேதம் விளைவிக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

# கிழக்கின் குரல்



# யாழ்ப்பாண தலைவர்களின் கதைகளை கேட்டு ஏமாந்த காலம் மலையேறிவிட்டது

(வெல்லாவெளி தினகரன் நிருபர்)



நாங்கள் யாழ்ப்பாணத் தலைவர்களின் கதைகளை கேட்டு துப்பாக்கி ஏந்தி போராடினோம். எமது மாவட்டத்தின் இளைஞர்கள் பலர் மரணித்திருக்கின்றனர். அவர்களின் நோக்கம் கிழக்கிலே வாக்குகளை பெறுவதாகும் என பாராளுமன்ற உறுப்பினர் சிவநேசதுரை சந்திரகாந்தன் தெரிவித்தார்.

ஜனாதிபதியின் சுபீட்சத்தின் நோக்கு வேலைத்திட்டங்களில் கிராமிய பாலங்களை அமைக்கும் "இதயங்களை ஒன்றிணைக்கும் ஊரின் பாலம்" தேசிய வேலைத்திட்டம் மட்டக்களப்பில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

கிராமத்தில் வாழும் மக்கள் தமது உற்பத்திப்பொருட்களை இலகுவில் கொண்டுசென்று சந்தைப்படுத்தவும், மக்கள் எதிர்கொள்ளும் போக்குவரத்து பிரச்சினைகளை தீர்க்கும் வகையிலும் இந்த கிராமிய பாலங்கள் அமைக்கும் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இதன் கீழ் வவுணதீவு பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட வேடன்குளம் பாலத்தின் புனரமைப்பு பணிகள் சனிக்கிழமை (13) ஆரம்பித்து வைக்கப்பட்டது.

பாராளுமன்ற உறுப்பினர் சிவநேசதுரை சந்திரகாந்தன் தலைமையில் ஆரம்பிக்கப்பட்ட இந்த நிகழ்வில், வீதி அபிவிருத்தி அதிகார சபையின் கிழக்கு மாகாண பணிப்பாளர் திருமதி. கலைவாணி வன்னியசிங்கம், பாராளுமன்ற உறுப்பினரின் செயலாளர் திருமதி மங்களா சங்கர்,கட்சியின் செயலாளர் எஸ். ஜெயராஜ்,பொதுமக்கள் பலர் கலந்துகொண்டனர்.

இங்கு தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர்,

நாங்கள் விரைவாக எங்களுடைய பகுதிகளை கட்டியெழுப்பவேண்டிய பாரிய பொறுப்பில் இருக்கின்றோம். கொவிட்19 ஆனது உலகளாவிய ரீதியிலும் இலங்கையிலும் தாக்கம் செலுத்தியதன் காரணமாக பாரியளவான பொருளாதார இழப்புகள் ஏற்பட்டன. இதற்கிடையிலும் அரசாங்கம் தனது பணிகளை சிறப்பாக செய்து கொண்டிருக்கின்றது.

ஒரு இலட்சம் வீதிகள் திட்டத்திலே எங்களுக்கு 300 வீதிகள் வேலைத் திட்டத்தினை ஆரம்பிப்பதற்கான பணிப்புரை வந்தது. 50 வீதிகளுக்கான வேலைத்திட்டத்தினை தற்போது ஆரம்பித்திருக்கின்றோம். அதேபோல இராஜாங்க அமைச்சர் வியாழேந்திரனுக்கும் கிடைத்திருக்கின்றது.

இன்று சாணக்கியன் போன்ற தமிழ் அரசியல்வாதிகள் நடைமுறைக்கு சாத்தியமற்ற விடயங்களை பேசிவருகின்றனர்.எந்தவொரு வேலைத் திட்டத்தினையும் தமிழ் மக்களுக்கு செய்யாமல்,வீதிகளை அமைத்து குளங்களை அமைத்து நீர் வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதை விடுத்து, இவன் வருகின்றான், விகாரைகளை அமைக்கின்றான் என்று கூறினால் என்ன மாற்றத்தை நீங்கள் ஏற்படுத்தப் போகின்றீர்கள். நாங்கள் நடைமுறைக்கு சாத்தியமான விடயங்களையே சொல்கின்றோம்.

இன்று பல பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு மட்டக்களப்பில் மதுபானசாலைகள் இருக்கின்றன. அதனை நாங்கள் இங்கு சொல்ல விரும்பவில்லை. தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சி மக்கள் நலன் சார்ந்த மக்களை முன்னேற்றுகின்ற பலப்படுத்துகின்ற கட்சியாகும்.

புதிய அரசாங்கத்தின் கொள்கையினால் மட்டக்களப்பு மாவட்டம் நன்மையடைகின்றது. நாங்கள் இந்த அரசாங்கத்தின் கொள்கைகளை பயன்படுத்திக்கொள்ள வேண்டும். உற்பத்திக் கிராமங்கள் வரவிருக்கின்றன.

ஏப்ரல் 21 தாக்குதல் நடைபெற்றபோது அதனை யாரும் பெரிதாக விமர்சிக்கவில்லை, அதனை பூசி மெழுகியே எழுதினர்.நல்லிணக்கம் பேசுபவர்களும் ஸஹ்ரான் போன்றவர்கள் செய்த பஞ்சமா பாதக செயல் என சொல்லவில்லை. எந்த ஊடகவியலாளரும் அவருக்கு எதிராக எழுதவில்லை.இன்று அதனுடன் ஒப்பிட்டு சாணக்கியன் பெரிய தலைவராக வரப்பார்க்கின்றார் எனத் தெரிவித்தார்.

# மொழித்திறனை வளர்ப்பதன் மூலம் புரிந்துணர்வை ஏற்படுத்த முடியும்

ஒலுவில் விசேட நிருபர்

**தொழில் பயிற்சி அதிகார சபையின் பணிப்பாளர்**

இன்றைய காலகட்டத்தில் ஒவ்வொருவரும் மொழித்திறனை வளர்த்துக் கொள்வது கட்டாயமானதாகும். இதனூடாக ஒருவருக்கு ஒருவர் புரிந்துணர்வை ஏற்படுத்தி இன ஐக்கியத்துடன் வாழ முடியுமென, இலங்கை தொழில் பயிற்சி அதிகார சபையின் பணிப்பாளர் எம்.ஏ. நஜீட் அகமட் தெரிவித்தார்.

சிறந்த இலங்கையை உருவாக்குவதற்கான மக்கள் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் இளைஞர் வலுவூட்டல் செயற்திட்டத்தின் கீழ் 1000 தொழில் அற்ற இளைஞர்களுக்கான புலமைப்பரிசில் இலவச சான்றிதழ் கற்கை நெறிக்கான அங்குராப்பண நிகழ்வு சனிக்கிழமை (13) அட்டாளைச்சேனை பல நோக்கு கூட்டுறவுச் சங்கத்தில் நடைபெற்றது. இதில் அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தின் அம்பாறை மாவட்ட உதவிப் பணிப்பாளரும், சிறந்த இலங்கையை உருவாக்குவதற்கான மக்கள் ஒன்றியத்தின் தலைவருமான முஹமட் றியாஸ் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில், பணிப்பாளர் எம்.ஏ. நஜீட் அகமட் தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

மொழித் திறனை வளர்த்துக் கொள்வதால் மட்டுமே நாம் ஒற்றுமையாக வாழ முடியும். மொழித் திறமின்மை காரணமாக எம்மிடத்தில் இன முரண்பாடுகள் ஏற்படக் கூடிய வாய்ப்புகள் அதிகமாக உள்ளன.

அறிவு சார்ந்த விடயங்களை நாம் எல்லோரும் பெற்றிருத்தல் வேண்டும். அப்போதுதான் ஒரு முழு மனிதனாக வாழ முடியும். கல்வி என்பது மனதில் மாற்றங்களை கொண்டு வர வேண்டும். அப்போதுதான் அவை எமது வாழ்க்கைக்கு பிரயோசனமானதாக அமையும்.

இலங்கை தொழில் பயிற்சி அதிகார சபை இளைஞர் யுவதிகளின் நலன் கருதி நாடுபூராகவும் 100ற்கு மேற்பட்ட தொழில் பயிற்சி நிலையங்களை ஏற்படுத்தி அதனூடாக தொழில்பயிற்சிகளையும், வழிகாட்டல்களையும் வழங்கி வருகின்றது.

ஒருவர் கற்கை நெறியை தெரிவு செய்யும் போது வாழ்க்கைக்கு பிரயோசனமானதாக அமைவதோடு உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் தொழில்வாய்ப்பை பெற்றுக் கொள்ளக் கூடியதாக அமைதல் வேண்டும்.

இளைஞர்களின் எதிர்காலம் நாட்டின் அபிவிருத்தியை கருத்திக் கொண்டு ஆங்கிலம், முகாமைத்துவம், உளவியல், அனர்த்த முகாமைத்துவம், வியாபார நிருவாக முகாமைத்துவம் மற்றும் சமாதான கற்கை நெறிகள் முற்றிலும் இலவசமாக ஆரம்பித்து இருப்பதை பாராட்டுகின்றேன்.

இக் கற்கை நெறியை பயில்வதற்கு தெரிவு செய்யப்பட்டுள்ள நீங்கள் இதனை சிறந்த முறையில் கற்று நாட்டின் முன்னேற்றத்திற்கு ஒத்தழைப்பு வழங்க வேண்டுமென்றார்.

# திருக்கோவில் பிரதேச செயலக உத்தியோகத்தருக்கு பாராட்டு



காரைதீவு குறூப் நிருபர்

திருக்கோவில் பிரதேச செயலக நிருவாக உத்தியோகத்தர் திருமதி ஜெயசுந்தரி கணேசராஜா தனது 32 வருடகால அரச சேவையிலிருந்து ஓய்வுபெறுவதையிட்டு, சேவைநலன் பாராட்டுவிழா நடாத்தப்பட்டது.

திருக்கோவில் பிரதேச செயலாளர் தங்கையா கஜேந்திரன் தலைமையில் பிரதேச செயலகத்தில் நடைபெற்ற இவ்விழாவில், உதவி பிரதேச செயலாளர் கந்தவனம் சதிசேகரன் உள்ளிட்ட சகல உத்தியோகத்தர்களும் கலந்து வாழ்த்துக்களைத் தெரிவித்தனர். காரைதீவைச் சேர்ந்த இவரது சேவையைப் பாராட்டி பலரும் உரையாற்றினர். அவரது அர்ப்பணிப்பான கடமையை நினைவுகூர்ந்து பொன்னாடை போர்த்தி, வாழ்த்துமடல் வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

# திருக்கோவில் உமிரி இல்மனைற் விவகாரம்: மக்கள் எதிர்த்தும் அகழ்வை தொடர முயற்சி

காரைதீவு குறூப் நிருபர்

திருக்கோவில் பிரதேசத்திற்குட்பட்ட உமிரி கடலோரப் பிரதேசம் இல்மனைற் அகழ்வுக்கு உட்படுத்தப்படுமா என்ற சந்தேகம் நிலவுகிறது.

அங்கு கடந்தகாலங்களில் இதற்கெதிராக பல்வேறு எதிர்ப்பலைகள் இடம்பெற்றிருந்த போதிலும் இன்னும் அந்நடவடிக்கை கைவிடப்பட வில்லையென்று தெரிவிக்கப்படுகிறது.

திருக்கோவில் பிரதேசத்துக்குட்பட்ட பின்தங்கிய சங்குமண் கிராமம் உமிரி திருப்பதி ஆகிய குக்கிராமங்களில் சுமார் 150 குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றன. இதில் உமிரிக்கிராமம் கடலோரத்திலுள்ளது. ஆதலால் இல்மனைற் அகழ்வாளர்களின் பார்வை அக்கிராமத்திலுள்ளது.

அவுஸ்திரேலியா தம்சிலா என்ற வெளிநாட்டு கம்பனி கடந்த 2018ஆம் ஆண்டிலிருந்து உமிரியில் இல்மனைற் அகழ்வுக்கான பல முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. அதற்கென உள்ளூரிலும் முகவர்கள் செயற்பட்டு வருகின்றனர்.

அக் கம்பனி பல மட்டங்களிலும் பலமுயற்சிகளை எடுத்துவருகின்ற போதிலும் திருக்கோவில் பிரதேச சபைத் தவிசாளர் இ.வி.கமலராஜன் பிரதேச செயலாளர் த.கஜேந்திரன் ஆகியோரிடம் மக்கள் எதிர்ப்பு மகஜர்களை கையளித்து ஆர்ப்பாட்டங்களையும் பேரணிகளையும் நடாத்தியிருந்தனர்.

இது தொடர்பில் பிரதேச சபைத் தவிசாளர் இ.வி.கமலராஜனிடம் கேட்டபோது, இல்மனைற் விவகாரம் இன்னும் ஓய்ந்தபாடில்லை. மக்கள் எதிர்க்கிறார்கள். தம்பட்டை மக்கள் எதிர்ப்புத்தெரிவித்து என்னிடம் மகஜர் தந்துள்ளனர். இதேவேளை சுற்றுச்சூழல் அதிகாரசபையின் அறிக்கையும் வந்துள்ளது. எனினும் பொதுசன அபிப்பிராயம் பெறுவதற்கான 3 மாதகாலம் இன்றோடு நிறைவடைகிறது. மேலும் 3மாதகால அவகாசம் கேட்டு கம்பனிக்கு எழுதியுள்ளேன் என்றார்.

பிரதேச செயலாளர் த.கஜேந்திரனிடம் கேட்டபோது, மக்கள் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர். அத்துடன் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் இதுதொடர்பாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. எனவே இது தொடரவாய்ப்பில்லை என்றார். இந்நிலையில் கடந்தவாரம் திருக்கோவில் பிரதேச செயலகத்தில் நடைபெற்ற பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர் டபிள்யு.டி. வீரசிங்க எம்.பி. தலைமையில் முக்கியமான தீர்மானமொன்று நிறைவேற்றப்பட்டது.

அதாவது மக்கள் விரும்பாத எந்த திட்டமும் இப்பிரதேசத்தில் அமுல்படுத்தப்படமாட்டாது. குறிப்பாக இல்மனைற் அகழ்வு, ஆற்றுமணல் ஏற்றுதல் தடைசெய்யப்பட்டுள்ளதாக தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டிருந்தது.



கிண்ணியா உப்பாறு கிராம உத்தியோகத்தர் பிரிவில் மக்களிடையே இன நல்லுறவை பேணும் வகையில் " டெங்கு ஒழிப்பு சிரமதான பணி" நிகழ்வொன்று கிண்ணியா பிரதேச செயலாளர் எம்.எச்.எம். கனி தலைமையில் முன்னெடுக்கப்பட்ட போது.

படங்கள்: திருமலை மாவட்ட விசேட நிருபர்.

# வீதியை செப்பனிடுமாறு மக்கள் வேண்டுகோள்

(நாவிதன்வெளி தினகரன் நிருபர்)

சம்மாந்துறைக் கல்வி வலயத்திற்குட்பட்ட தாஹிறா வித்தியாலய வீதியை புனரமைப்புச் செய்து தருமாறு பொதுமக்கள் சம்மந்தப்பட்ட அதிகாரிகளிடம் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

கடந்த பல வருடங்களாக இவ்வீதியானது சேதமடைந்து பொது மக்கள் மற்றும் பாடசாலை மாணவர்கள் பயணிப்பதற்கு பொருத்தமற்றதாக காணப்படுகின்றது. மழைகாலங்களின் குன்றும் குழியுமாக காணப்படும் இவ்வீதியில் நீர் தேங்கி நிற்கின்றது. இப்பிரதேசத்தில் மணல் அகழ்வு நடைபெற்று இவ்வீதியால் கனரக வாகனங்களில் மணல் ஏற்றிச் செல்வதாலும் இவ்வீதி அதிகம் சேதமடைந்து காணப்படுகின்றது. அத்துடன் பாதையில் செல்லும் வாகனங்களால் சேதமடைந்த வீதியிலிருந்து புழுதியுடன்கூடிய மணல் துகள்கள் பாடசாலைக்குள் காற்றின் மூலம் உள்வருகின்றது என மாணவர்கள் தெரிவிக்கின்றனர்.

இவ்வீதியை திருத்துவதற்காக சம்மந்தப்பட்ட நிறுவனத்தினால் பலமுறை அளவீடு செய்யப்பட்டுள்ளபோதிலும் இதுவரை திருத்தம் செய்யப்பட்டவில்லை என பொது மக்கள் தெரிவிக்கின்றனர்.

# மட்டு. கல்முனை வீதியில் விபத்து; இருவர் படுகாயம்



மட்டக்களப்பு குறூப் நிருபர்

மட்டக்களப்பு கல்முனை பிரதான வீதியில் காத்தான் குடி நகரில் நேற்றுமுன்தினம் (13) இடம் பெற்ற விபத்துச் சம்பவத்தில் இருவர் படுகாயமடைந்துள்ளனர்.

மட்டக்களப்பிலிருந்து கல்முனை நோக்கி வந்த காரொன்று யூ வளைவில் திரும்பியபோது அதிக வேகமாக வந்த மோட்டார் சைக்கிளில் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது. இதனால் மோட்டார் சைக்கிளில் பயணித்த இருவர் படுகாயமடைந்துள்ளனர்.

கிரான்குளத்தை நோக்கிச் சென்ற மோட்டடர் சைக்கிளே காரில் மோதியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

காத்தான்குடி பொலிசார் சம்பவம் தொடர்பாக மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

# மட்டக்களப்பில் பாவனைக்கு உதவாத 600 கிலோ தேயிலை மீட்பு

மட்டக்களப்பு குறூப், புதிய காத்தான் குடி தினகரன் நிருபர்கள்

மனித பாவனைக்குதவாத 600 கிலோ கிராம் தேயிலையை மட்டக்களப்பு மாவட்ட குற்ற விசாரணைப் பிரிவு பொலிசார் கைப்பற்றியுள்ளதாக பிரிவின் பொறுப்பதிகாரி ஐ.பி. பி.எஸ்.டி.பண்டார தெரிவித்தார்.

மட்டக்களப்பு தலைமையக பொலிஸ் பிரிவிற்குட்பட்ட மாமாங்கம் பகுதியில் அனுமதிப் பத்திரமின்றி பழுதடைந்த 50 கிலோ அடங்கிய 12 மூடை தேயிலையை பதுக்கிவைத்திருந்த நிலையில் பொலிசார் கண்டு பிடித்துள்ளதுடன் குறித்த நபரும் கைது செய்யப்பட்டுள்ளார். பாவனைக்குதவாத நிலையில காணப்படும் தேயிலையின் மாதிரிகள் கொழும்புக்கு அனுப்பப்பட்டுள்ளதாக பொலிசார் தெரிவித்தனர். கைது செய்யப்பட்ட நபரை தேயிலையுடன் மட்டக்களப்பு நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தப்படவுள்ளதாக பொலிசார் மேலும் தெரிவித்தனர்.








# நூலக வசதியற்ற 20 பாடசாலைகளுக்கு 'பேருந்து நூலகங்கள்'

## பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் தலைமையில் வைபவம்





போக்குவரத்து பாவனையிலிருந்து நீக்கப்பட்ட இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான பஸ்களை நூலகங்களாக மீள புதுப்பிக்கப்பட்டு நூலகங்கள் அற்ற பாடசாலைகளுக்கு வழங்கும் 'பேருந்தில் எதிர்காலத்திற்கு' திட்டத்தின் இரண்டாம் கட்டம் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் தலைமையில் (12) பிற்பகல் அலரி மாளிகையில் இடம்பெற்றது.

அதற்கமைய 20 மாவட்டங்களில் நூலக வசதியற்ற 20 பாடசாலைகளுக்கு இவ்வாறு பேருந்து நூலகங்கள் வழங்கி வைக்கப்பட்டன.

'பேருந்தில் எதிர்காலத்திற்கு' திட்டத்தின் முதலாவது கட்டம் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையில் கடந்த ஒக்டோபர் மாதம் 01 திகதி சிறுவர் தினத்தன்று செயற்படுத்தப்பட்டது. அன்றைய தினம் 5 மாவட்டங்களில் தெரிவு செய்யப்பட்ட 5 பாடசாலைகளுக்கு பேருந்து நூலகங்கள் வழங்கப்பட்டன.



பிரதமரின் தலைமையில் 20 மாவட்டங்களில் தெரிவுசெய்யப்பட்ட 20 பாடசாலைகளுக்கு இவ்வாறு பேருந்து நூலகங்கள் வழங்கப்பட்டதுடன், 25 மாவட்டங்களுக்கு இந்த எண்ணக்கருவிற்கமைய பேருந்து நூலகங்கள் வழங்கி வைக்கப்பட்டுள்ளமை சிறப்பாகும்.

வாசிப்பு என்பது மிக முக்கியமானதொரு விடயமாகும். அதன் மூலம் பிள்ளைகளுக்கு சமூக, பொருளாதார, அரசியல் அறிவை பெற்றுக்கொள்ள முடியும். இது பிள்ளைகளை வாசிப்பிற்கு பழக்குவதற்கு உந்துதலாக அமையும். நாம் இன்றைய சூழலுக்கு பொருத்தமான புத்தகங்கள் மற்றும் இணைய வசதிகளை பெற்றுக்கொடுக்க நடவடிக்கை மேற்கொள்வோம் என போக்குவரத்து அமைச்சர் காமினி லொகுகே தெரிவித்தார்.

நாம் ஆட்சிக்கு வருவதற்கு முன்னர் பாவனைக்கு உட்படுத்த முடியாத பேருந்துகள் இரும்பிற்காக விற்பனை செய்த நிலையே காணப்பட்டது. கடந்த அரசாங்கத்தில் அவ்வாறான பேருந்துகள் கடலில் போடப்பட்டன. இ.போ.ச. ஊழியர்கள் அதற்கு விருப்பம் தெரிவிக்கவில்லை. இந்த திட்டத்தின் மூலம் போக்குவரத்து பாவனையில் இருந்து நீக்கப்படும் பேருந்துகள் முழுமையான நூலகங்களாக மாற்றப்படுகின்றன. நூலக வசதியற்ற பாடசாலைகளுக்கு நாம் இப்பேருந்துகளை பெற்றுக் கொடுக்கிறோம். அதில் இலவச இணைய வசதியும் உள்ளடங்குகிறது. மேலும் 34 பேருந்துகள் இதுவரை இதே போன்று புதுப்பிக்கப்பட்டு வருவதாக இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித்தார்.

போக்குவரத்து அமைச்சின் அனுசரணையில், இலங்கை போக்குவரத்து சபை, எஸ்.எல்.டி மொபிடெல் மற்றும் இலங்கை தேசிய நூலகம் மனுசத் தெரனவுடன் இணைந்து 'பேருந்தில் எதிர்காலத்திற்கு' திட்டம் செயற்படுத்தப்படுகின்றது.

இந் நிகழ்வில் அமைச்சர் பந்துல குணவர்தன, மாகாண ஆளுநர்களான டிகிரி கொப்பேகடுவ, அனுராதா யஹம்பத், ராஜா கொள்ளுரே, ரொஷான் குணதிலக, இலங்கை போக்குவரத்து சபையின் தலைவர் கிங்ஸ்லி ரணவக்க, தேசிய நூலக சபையின் தலைவர் சொனால குணவர்தன உள்ளிட்ட நூலக பேருந்து வழங்கப்பட்ட பாடசாலைகளின் அதிபர்கள், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

**'பேருந்தில் எதிர்காலத்திற்கு' திட்டத்தின் முதலாவது கட்டம் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையில் கடந்த ஒக்டோபர் மாதம் 01 சிறுவர் தினத்தன்று செயற்படுத்தப்பட்டது**

---

கொள்ளுப்பிட்டி பழைய சந்தையில்

# 39 மாடிகளைக் கொண்ட சந்தை, சொகுசு வீடமைப்பு

## 348 வாகனங்கள் நிறுத்தும் வசதி

கொள்ளுபிட்டிய சந்தை அமைந்துள்ள இடத்தில் 39 மாடியிலான புதிய சந்தையுடன் கூடிய குடியிருப்பு கட்டடத் தொகுதியை நிர்மாணிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

அதன் முதலாவது, இரண்டாவது மற்றும் மூன்றாவது மாடிகள் முழுமையாக சந்தை தொகுதிக்காக ஒதுக்கப்படும்.

எட்டாவது மாடியிலிருந்து மேல் நோக்கி இரண்டு கோபுரங்களில் கட்டப்படும் 30 மாடிகள் சொகுசு குடியிருப்பு கட்டடங்களை கொண்டதாக அமையும்.

கொள்ளுபிட்டி சந்தை வளாக அபிவிருத்தி தொடர்பான உத்தேச திட்டம் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் முன்னிலையில் (12) அலரி மாளிகையில் வெளியிடப்பட்டது.

புதிய அபிவிருத்தி திட்டத்தின் மூலம் மாம்பழங்கள், பழங்கள் அல்லது காய்கறிகளை விற்க விரும்பும் எவருக்கும் இடமுண்டா என்று பிரதமர் வினவினார்.

பழங்கள் மற்றும் காய்கறிகளின் விற்பனைக்கு இங்கு ஒரு சிறப்பு இடமொதுக்கப்பட்டுள்ளது என கொழும்பு மேயர் ரோசி சேனாநாயக்க நம்பிக்கை வெளியிட்டார்.

அதற்கமைய, சாதாரண வர்த்தகர்கள் தங்கள் விளைபொருட்களை விற்பனை செய்வதற்கு புதிய சந்தை வளாகத்தில் நிச்சயமாக இடம் ஒதுக்குமாறு பிரதமர் ஆலோசனை வழங்கினார்.

இப்புதிய சந்தை வளாகத்தை சுற்றுலா தளமாகவும், உள்ளூர் உணவு கலாசாரத்தை பிரதிபலிக்கும் வகையிலும் வடிவமைக்கப்பட்டுள்ளமை சிறப்பம்சமாகும்.

தற்போது 30,40 வாகனங்கள் மாத்திரமே இங்கு நிறுத்தக்கூடியதாக உள்ள போதிலும், இந்த உத்தேச திட்டத்தின் ஊடாக 348 வாகனங்களை நிறுத்தக்கூடிய வகையிலான வாகன நிறுத்தும் இடமொன்று நிர்மாணிக்கப்படும்.

கொள்ளுபிட்டிய சந்தை வளாக அபிவிருத்தி திட்டம் குறித்து டிசைன் ஒன் முகாமைத்துவ பணிப்பாளர் சிரேஷ்ட கட்டடக் கலைஞர் தனஞ்சன அமரசேகர விளக்கினார்.

கொழும்பு மாநகர சபையின் ஒப்புதலைத் தொடர்ந்து, உத்தேச திட்டம் ஒப்புதலுக்காக அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்பட உள்ளது.

மூன்று ஆண்டுகளில் நிறைவு செய்ய எதிர்பார்க்கப்படும் புதிய திட்டத்திற்கு எதிர்வரும் ஏப்ரல் மாதத்தில் அடிக்கல் நாட்டுவதற்கு எதிர்பார்க்கப்படுகிறது.

நகர அபிவிருத்தி அதிகாரசபை, கொழும்பு மாநகரசபை மற்றும் முதலீட்டு நிறுவனம் ஆகியன இணைந்ததாக இப்புதிய திட்டம் செயற்படுத்தப்படவுள்ளது.

---

# அபாயகர நிலையில் யாழ்.; மக்கள் சுகாதார வழிமுறைகளை பின்பற்றுவது அவசியம்

யாழ். மாவட்ட அரசாங்க அதிபர்

தற்போதைய அபாயகர நிலையில் பொதுமக்கள் தமது அன்றாட செயற்பாடுகளை சுகாதார வழிமுறைகளை பின்பற்றி செயற்படுத்துவது அவசியம் என யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் கணபதிப்பிள்ளை மகேசன் தெரிவித்துள்ளார்.

யாழ். மாவட்ட செயலகத்தில் இடம்பெற்ற தற்போதைய கொரோனா நிலைமைகள் தொடர்பில் ஆராயும் விசேட கூட்டத்தின் முடிவுகள் பற்றி கருத்து தெரிவிக்கும் போதே கணபதிப்பிள்ளை மகேசன் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்....

இந்த வருடத்தின் கடந்த மூன்று மாதங்களில் யாழ்ப்பாண மாவட்டத்தில் கொரோனா தொற்று உறுதியானவர்களின் எண்ணிக்கை சற்று அதிகரித்து செல்கின்றது. அந்த வகையில் தற்பொழுது 401 பேர் கடந்த ஆகஸ்ட் மாதத்திலிருந்து யாழ். மாவட்டத்தில் கொரோனா தொற்றுக்குள்ளாகியிருக்கிறார்கள்.

204 பேர் பூரண குணமடைந்து வீடு திரும்பி இருக்கின்றார்கள். கொரோனா தொற்றுக்குள்ளானவர்களுடன் தொடர்புடைய ஆயிரத்து 756 பேர் சுய தனிமைப்படுத்தப்பட்டுள்ளார்கள். அந்த வகையில் மிக அவதானமாக பொதுமக்கள் செயற்படவேண்டிய கால கட்டமாக இந்த காலப்பகுதி காணப்படுகின்றது சுகாதார நடைமுறைகளை பின்பற்றாதோருக்கு சட்ட நடவடிக்கை மேற்கொள்ளுமாறு பொலிசாருக்கும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

சுகாதார அமைச்சினால் வழங்கப்பட்டுள்ள சில அறிவுறுத்தலுக்கமைய யாழ்ப்பாண மாவட்டத்தில் வழிபாட்டுத் தலங்களில் 50 பேர் மட்டும் கலந்து கொள்ள முடியும். அதேபோல் மரண வீடுகளில் 25பேரும் சமூக கூடங்களில் 150 பேர் மாத்திரமே அனுமதிப்பது எனவும் திருமண நிகழ்வில் 150 பேராக மட்டுப் படுத்துவதாக தீர்மானிக்கப்பட்டுள்ளது.

---

# ஒரு இலட்சம் மெ. தொன் அரிசி இறக்குமதி

அமைச்சர் பந்துல குணவர்தன

**லோரன்ஸ் செல்வநாயகம்**

சந்தையில் அரிசியின் விலையை குறைப்பதற்கு வர்த்தகர்கள் நடவடிக்கை எடுக்காவிட்டால் அரசாங்கம் வெளிநாடுகளிலிருந்து அரிசியை இறக்குமதி செய்ய தயாராக உள்ளதாக வர்த்தக அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

தற்போதைய சூழ்நிலையில் நாட்டில் அரிசிக்குத் தட்டுப்பாடு மற்றும் அரிசியின் விலை அதிகரித்து வருகின்றமை தொடர்பில் கருத்து தெரிவிக்கையிலேயே அமைச்சர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். அதற்கிணங்க ஒரு இலட்சம் மெட்ரிக் தொன் அரிசியை இறக்குமதி செய்ய உத்தேசித்துள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

நாட்டில் அரிசி ஒரு கிலோவின் விலையை 100 ரூபாவுக்குக் குறைவாக தக்க வைத்துக்கொள்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார். (ஸ)

---

நாட்டின் அழிவுகள், இன,மத முறுகல்கள்;

# மதத் தலைவர்கள், அரசியல்வாதிகள் மட்டுமல்ல சில ஊடகங்களும் காரணம்

இம்தியாஸ் பாக்கீர் மாக்கார் எம்.பி



நாட்டில் ஏற்பட்டுள்ள அழிவுகளுக்கும் இனங்கள் மற்றும் மதங்களுக்கிடையிலான முறுகல்களுக்கு மதத் தலைவர்களும், அரசியல்வாதிகளும் ஒருசில ஊடகங்களுமே காரணமாகுமென ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் இம்தியாஸ் பாக்கீர் மாக்கார் தெரிவித்துள்ளார்.

தொலைக்காட்சி நிகழ்ச்சியொன்றுக்கு வழங்கிய நேர்காணலின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்தும் கருத்து தெரிவித்த போது,...

சமூகங்களுக்கிடையில் ஒற்றுமையை உருவாக்குவதில் ஊடங்களுக்கு பெரும் பங்குள்ளதுடன், பொறுப்பும் உள்ளது. சிங்களவர்களுக்கும் தமிழர்களுக்கும் ஏற்படும் பிரச்சினைகள், கத்தோலிக்கர்கள் அல்லது முஸ்லிம்களுக்கு பிரச்சினைகள் ஏற்படும் போது சில ஊடகங்கள் செயற்பட்டுள்ள விதம் மோசமானதாகும்.

நான் தினமும் தமிழ் பத்திரிகைகளை பார்ப்பேன். அவை வேறு ஒரு உலகத்தை உருவாக்குகின்றன. சிங்களப் பத்திரிகைகள் வேறு ஒரு பார்வையை உருவாக்குகின்றன. பத்திரிகைகளை விற்றுக்கொள்ளவா? வர்த்தக ரீதியான நன்மைகளை பெற்றுக்கொள்ளவா? அல்லது அரசியல் நிகழ்ச்சி நிரலின் கீழா? இவ்வாறு செயற்படுகின்றன எனத் தெரியவில்லை. எம் அனைவருக்கும் சமூக பொறுப்புள்ளது.

நாட்டில் ஏற்பட்டுள்ள அழிவுகளுக்கு அரசியல் தலைவர்களும், மதத் தலைவர்களும் ஊடகங்களும் பொறுப்புக்கூற வேண்டும். நாட்டை நாசமாக்கும் சிறிய தொகுதியினருக்கு இடமளித்து இரத்த ஆறுகளை ஓடவைக்க கூடாது. எந்த மதத்தை பின்பற்றினாலும் நாம் இலங்கையர் என்ற உணர்வை ஏற்படுத்த வேண்டும். அப்போது தான் ஏனைய விடயங்களை செய்ய முடியும் என்றார்.





பாணந்துறை ஸ்ரீ கந்தசுவாமி ஆலயத்தில் இடம்பெற்ற மஹா சிவராத்திரி விழா நிகழ்வின் போது ஆலய பிரதம குரு ஜெகதீஸ்வர குருக்கள் சிவபெருமானுக்கு பாலாபிஷேகம் செய்வதனையும் அங்கு இடம்பெற்றபூஜைகளையும் நிகழ்வில் கலந்து கொண்ட பக்தர்களின் ஒருபகுதியினரையும் படங்களில் காணலாம். (படங்கள்: நாவலப்பிட்டி சுழற்சிநிருபர் டி.வசந்தகுமார்)

# விநாயகரின் பார்வையால் விமோசனம் பெற்ற மகாவிஷ்ணு!!



ஒரு முறை சிவபெருமானும் உமா தேவியும் சொக்கட்டான் விளையாடிக் கொண்டிருந்த போது மகாவிஷ்ணு பொய்ச்சாட்சி சொல்லும்படி ஆகி விட்டது. அவ்விளையாட்டில் சிவ பெருமான் தோற்றுப் போகவே சிவபெருமான் சாட்சியாக நின்ற மகாவிஷ்ணுவை பார்த்து கண்ணால் ஜாடை காட்டி யார் வென்றது எனக் கேட்க விஷ்ணுவும் செய்வதறியாது தோற்றவராகிய சிவபெருமானே வென்றதாகவும், வென்ற உமாதேவி யார் தோற்று விட்டதாகவும் பொய்ச் சாட்சி கூறிவிட்டார்.

அதனால் கோபமுற்ற உமாதேவி மகாவிஷ்ணுவைக் குருட்டு மலைப் பாம்பாகப் போகுமாறு சபித் துவிட்டார். அவருக்கு ஆறுதல் கூறிய சிவபெருமான் கயமுகாசுரவதம் நடைபெறும் வரைகாத்திருக்குமாறு சென்னார்.

விநாயகர் கயமுகாசுரனுக்கு முத்தி கொடுத்த பின்னர் கணபதீச் சரத்தில் இருந்து மூஷிஹ வாகனத்தில் திரும்பும் வழியில் ஆலங் காட்டில் மலைப் பாம்பாக மாறி இருந்த மகாவிஷ் ணுவைக் கண்ணுற்றார். அவர் பார்வை பட்ட மாத்திரத்தில் மகாவிஷ்ணு தம் சுய உருவைப் பெற்றார். மகிழ்ச்சி அடைந்தார்.

விநாயகரே! எனக்குக் காட்சியளித்து நன்மை புரிந்த இந்த மார்கழித் திங்கள் சஷ்டி நாளில் உம்மை யார் வழிபட்டாலும் அவர்கள் சகல துய ரங்களில் இருந்தும் விடுபட்டுச் சகல விருப்பங் களையும் அடையும் படி அருள்புரியவேண்டும் என்று கோரினார். அதற்கு விநாயகரும் மகிழ்ச்சி யோடு இசைந்தார்.

இது விநாயக சஷ்டி என்றும், மார்கழி சஷ்டி, குமார சஷ்டி, பெருங்கதை விரதம் என்றும் அழைக்கப் பெறுகிறது.

சைவ மஞ்சரி

# சிவபெருமானுக்கு உகந்த நாகலிங்க பூவின் சிறப்புக்கள்



நாகாபரணம் சார்த்தப்பட்ட சிவலிங்கத்தைப்போன்றே அமைப்புள்ள ஓர் அழகிய மலர் தான் நாகலிங்கப்பூ ஆகும். நாக லிங்கப்பூவின் நடுவில் சிறிய தாக ஒரு சிவலிங்கம் இருக்கும். இதற்கு ஆத்மலிங்கம் என்று பெயர். நாகம் குடை பிடிக்க உள்ளே லிங்கம் இருக்கும் அதியற்புத வடிவில் நாக லிங்கப் புஷ்பம் பூக்கும்.

பூவுலகின் மகத்தாக நாம் வாழும் காலத்தி லேயே நாகலிங்க மரம் இன்றும் தென்படுவது, நாம் பெற்ற புண்ணியம் தான். தினசரி நாகலிங்க மர தரிசனமே நம் உள்ளுள் காலசக்தியையும், கால உணர்வையும் இயங்க வைப்பதாகும்.

நாகலிங்க புஷ்பத்தை ஆலயபூஜைக்கு அளித் தல் மிகப்பெரிய புண்ணிய காரியம் ஆகும். பல பிரதோஷ வழிபாட்டுப் பலன்களை ஒருங்கே தர வல்லதே இறைவனுக்கு நாகலிங்க பூவால் ஆற்றும் பூசனை. நாகலிங்கப் பூவை வைத்து பூஜிப்பதின் முழுபலன்க ளையும் அடைய, பூஜிக்கப்படும் ஒவ்வொரு பூவிற்கும் ஒருவருக் கேனும் அன்னதானம் அளிக்க வேண்டும்.

நாகலிங்க மரம் இயற்கையான யோக அக்னி யைப் பூண்டது, நாகலிங்கப் பூவை மரத்தில் இருந்து பறிக்கும்போது கைக்கு இதமான, உஷ்ண மாய் இருப்பதை உணர்ந்திடலாம் . ஒவ்வொரு நாக லிங்கப் பூவும் உள்சூட்டுடன் இருக்கும் இதுவே யோகபுஷ்ப தவச்சூடு ஆகும்.

இதன் ஸ்பரிசம் மனித மூளைக்கு மிகவும் நல்லது. ஒவ்வொரு நாகலிங்க பூவும் சூரிய, சந்திர கிரணங்களின் யோக சக்தியை கொண்டு மட்டுமே மலர்கின்றது.



கொழும்பு மாநகரில் மிக உயரமான விமான கோபுரத்தை கொண்டதா கநிர்மாணிக்கப்பட்டுவரும் கொழும்பு– 13 புதுச் செட்டித்தெரு ஸ்ரீ ஸ்ரீ இரா தாகிருஷ்ணர் ஆலயத்தின் அழகியதோற்றத்தைப் படத்தில் காணலாம்.

(படம்: வடகொழும்பு தினகரன் நிருபர்)

## ஹம்ஸ யோகம் - 11



மாயை என்பது அறியாமையே குறிக் கும், இது உயிராகிய ஜீவனை உலக இன் பங்களில் பந்தப்படுத்தி பற்றை ஏற்படுத்தி சுய நலகாரியங்களில் பிணைக்கிறது.

இந்த பந்தங்கள் அவனை தேவையற்ற செயல்களில் பாவகாரியங்களில் ஈடுப டுத்தி அவனுள் மறைந்திருக்கும் தெய்வீ கப்பண்புகள் வெளிப்படாமல் இருளில் மூழ்கடித்து அவனது ஆன்ம முன்னேற் றத்தைத் தடுத்து முடிவற்ற உலக பந்தத் தில் செலுத்திக்கொண்டிருக்கின்றன.

இந்த நிலை அறியாமை, வலிமை யின்மை, துன்பம், தேவையற்ற பேராசை இவற்றை ஏற்படுத்தி அவனை முன்னேற முடியாமல் பந்தப்படுத்தி விடுகிறது.

அனைத்து ஆன்ம சாதனைகளுமே உயிராகிய ஜீவனை இந்த அறியாமை என்ற மாயையின் பந்தத்திலிருந்து மீட்டு சரியான பாதையில் செலுத்தி தெய்வப் பண்புகளை அடைவிப்பதையே முயற் சிக்கின்றன.

ஸோஹம் சாதனையின் அறிவு ஆனது சத்ய ஞானம், தத்வ ஞானம், பிரம்ம ஞானம் என்ற மூன்று சொற்களால் குறிக் கப்படுகிறது.

எந்த சாதனை உண்மையை, தான் யார் என்ற தத்துவ அறிவை, பிரம்மத்தைப் பற்றிய அறிவைத் தருமோ அந்த அறிவை இந்த ஸோஹம் சாதனை தருகிறது என் பதால் இந்தப்பெயரால் அழைக்கப்படு கிறது.

ஸோஹம் சாதனையின் அனுபவத்தால் உயிர் தன்னுடைய உண்மையான தன்மை பிரம்மம் அல்லது சிவம் என்பதை அறிய ஆரம்பிக்கிறது.

ஸோஹம் சாதனை தரும் அனுபவ அறிவு அறியாமையை அழித்து, உலக இன்பங்களில் பற்றுக்கொள்ளாத தூய மனதைத் தரும். இது தத்துவமஸி சுத்தோஸி புத்தோஸி நிரஞ்னோசி என்ற நான்கு அனுபவங்களைத் தரும். இது அதி தூய்மை, எல்லையற்ற பேரறிவு, எல்லை யற்ற பேரானந்தம் ஆகியவற்றைத் தரும் சாதனை இதுவாகும்.

ஸோஹம் என்பது சொற்பொருள் நானே பிரம்மம் என்பதாகும். இதை ஒருவித ஆணவத்துடன் பொருள் கொள்ளவோ சொற்களாக வெளிப்படுத் தவோ கூடாது.

ஏனென்றால் இங்கு கூறப்படும் “ நான்” என்ற பதம் உடலையோ, மனதையோ, எமது சுய நல எண்ணத்தையோ, அறி யாமையையோ, ஒரு உடமையாக்க முனையும் எண்ணம் கொண்ட ஒருவன் பாவிக்கும் அர்த்தத்தில் கூறப்பட வில்லை.

இதை இப்படிப் புரிந்துகொண்ட வர்களுக்கான உதாரணங்கள்தான் ராவணன், ஹிரண்யன், சூரபத்மன் போன்றவர்கள். இவர்கள் அவர்களுடைய பித்துப்பிடித்த ஆணவத்தை, அகங்கா ரத்தை, கண்மூடித்தனமான உயர்வு மனப் பாங்கினை கடவுளுக்கு நிகராக தம்மை கற்பனை செய்துகொண்டதால் வரும் விளைவுகள் அவை. அவற்றை மற்றவர்கள் மீது நிலை நிறுத்தச் செய்த ஆணவமான செய்கைகள் அவை. ஆனால் வரலாறு எப் போதும்இப்படியானஆணவம்மிகுந்தஅரக் கர்கள் இறுதியாக அழிவை நோக்கியே சென்றார்கள் என்பதை உறுதிப்படுத்துகி றது. **(தொடரும்)**

மூலம்:
பண்டிட் ஸ்ரீ ராம் சர்மா ஆச்சார்யா
தமிழில்: ஸ்ரீ ஸக்திசுமனன்

# அறநெறி அறிவுநொடி



**கே. ஈஸ்வரலிங்கம்**
**தமிழர் நற்பணி மன்றத் தலைவர்**

***18263) சிவராத்திரி என்ற சொல்லுக்கு உரிய பொருள் என்ன?***

மோக்ஷம் தருவது என பொருள் பெறும்.

***18264) ஒவ்வொரு கடவுளுக்கும் ஒவ்வொரு திதி உண்டு. ஈஸ்வரனுக்குரிய திதி என்ன?***

இறுதி திதியான சதுர்த்தசி திதி ஆகும்.

***18265) இவருக்கு இந்த திதி வரக் காரணம் என்ன?***

சிவன் அழிக்கும் கடவுள். எல்லா உயிர்களும் தங்கள் வாழ்வின் இறுதியில் அவரையே அடைகின்றன என்ப தால் இந்த இறுதி திதியை அவருக்கு ஒதுக்கினார்கள்.

***18266) மகிமை மிக்க மகா சிவராத்திரி எப்போது வரும்?***

மாசி மாதம் தேய்பிறையில் வரும் சதுர்த்தசி இரவில்

***18267) சிவராத்திரியில் மூன்றாம் காலத்தை என்ன வென்று அழைப்பார்கள்?***

லிங்கோத்பவ காலம் என்பார்கள்.

***18268) இந்த சிறப்பு வாய்ந்த தருணம் பற்றி கூறுவதா னால்....?***

சிவபெருமான் சிவலிங்கத்தினின்று திருவுருவம் கொண்டு வெளிப்பட்டு, அருவுருவமாக நின்று அன்பர் களுக்கு அருள்பாலித்த நேரமாகும்.

***18269) நெருப்புச் சுடரின் மையத்தில் தோன்றியவர் யார்?*** சிவபெருமான்

***18270) சிவபெருமானை ஆயிரம் ஆயிரம் நாமங்க ளைச் சொல்லி அர்ச்சித்தவர்கள் யார்?***

பிரமனும் திருமாலும்

***18271) அதனை நினைவுகூரும் வகையில் என்ன செய்ய வேண்டும்?***

உருத்திரருக்கு எண்ணில்லாத வணக் கங்களைக் கூறும் ருத்திரத்தை ஓத வேண்டும்.

***18272) விரதத்தின் போதும், கிரி யைகள் செய்யும் போதும் தர்ப்பை அணிவது ஏன்?***

தர்ப்பைப் புல்லுக்கு மற்றைய புற் களைப் போலல்லாது விஷேச குணம் ஒன்றுள்ளது. அதாவது மின்சாரத்தை எல்லா உலோகங்களும் கடத்தக் கூடியவை. ஆனால் அவற்றுள் செப்புஉ லோகம் அதனை வெகு சுலபமாக கடத் தும் வல்லமை கொண்டுள்ளது. அதனால் தான் அதனை மின் பாவனையின் போது அதிகமாக பயன் படுத்துகின்றார்கள். அது போலவே தர்ப்பைப் புல்லுக்கும் கிரியை களின் போது சொல்லப் பெறும் மந்திரங்கள் கிரகிக்கும் தன்மையும், அதனை அணிந்திருப்பவருக்கு போசிக்கும் திறனும் கொண்டுள்ளது. அதனால் கிரியைகளின் போது சொல்லப் பெற்ற மந்திரங்களின் முழுச் சக்தியும் அதனை அணிந்திருப்பவருக்கு கிடைக்கின்றது.

***18273) அருகம்புல் மாலை ஏன்?***


அனலாசுரன் என்ற அசுரன் தேவர்களை மிகவும் துன் புறுத்தி வந்தான். தன்னை எதிர்ப்பவர்களை அனலாய் மாற்றித் தகித்து விடுவான். இவனை பிரம்மாவாலும்,தே வேந்திரனாலும் அடக்க முடியவில்லை. அவர்கள் சிவ, பார்வதியைச் சந்தித்து முறையிட்டனர். சிவனும் விநாயக ருக்கு அந்த அரக்கனை அழித்து வரும்படி கட்டளையிட் டார். விநாயகரும் பூத கணங்களுடன் போருக்குச் சென்றார். அங்கு சென்றதும் அனலாசுரன் பூதகணங் களை எரித்துச் சாம்பலாக்கினான். விநாயகர் அனலாசுர னுடன் மோதினார். ஆனால் அவனை வெற்றி கொள்ள முடியவில்லை. கோபத்தில் அவனை அப்படியே விழுங்கி விட்டார்.

வயிற்றுக்குள் சென்ற அனலாசுரன் அதை வெப்பமடை யச் செய்தான். விநாயகருக்கு அந்த வெப்பத்தைத் தாங்க முடியவில்லை. அவருக்கு குடம் குடமாகக் கங்கை நீர் அபி ஷேகம் செய்யப்பட்டது. அதனால் எந்த பயனும் ஏற்பட வில்லை. இந்நிலையில் ஒரு முனிவர் அருகம்புல்லைக் கொண்டு வந்து விநாயகரின் தலை மேல் வைத்தார். அவரது எரிச்சல் அடங்கியது. அனலாசுரனும் வயிற்றுக்குள் ஜீர ணமாகி விட்டான். அன்று முதல் தன்னை அருகம்புல் கொண்டு அர்ச்சிக்க வேண்டுமென விநாயகர் கட்ட ளையிட்டார்.




கொழும்பு – 13 விவேகானந்த சபையில் சிவராத்திரியை முன்னிட்டு அன்று(11) காலை விவேகானந்த சபை நிர்வாகத்தினரால் முன்னெடுக்கப்பட்ட தீட்சை வழங்கும் நிகழ்வுகள் சிவாகம தத்துவநிதி, சிவாகம சிரோமணி சிவஸ்ரீ பரம பாலசுப்ரமணி குருக்க ளால் நடாத்தப்படுவதைப் படங்களில் காணலாம். (படங்கள்: வடகொழும்பு தினகரன் நிருபர்)

தினகரன்
THINAKARAN
2021 மார்ச் 15திங்கட்கிழமை
89
1932 - 2021






# ஒன்பது தசாப்த காலத்தை நெருங்கும் சாதனை பயணம்




தனது ஒன்பதாவது தசாப்தத்தை எட்டிக் கொண்டிருக்கும் தேசியப் பத்திரிகையான தினகரன், தற்போது தனது 89ஆவது அகவையை விமரிசையாகப் பெருமையுடன் நிறைவு செய்யும் நன்னாளில் எனது உளமார்ந்த வாழ்த்தைத் தெரிவித்துக் கொள்கின்றேன். தினகரன் தொடர்ந்து தமிழ் பேசும் மக்களுக்கு ஆற்றுகின்ற பணியானது, புதிய நூற்றாண்டின் தேவைகளுக்கேற்ப மேலும் சிறப்புப் பெற வேண்டும் என்பதே எமது பிரார்த்தனை.

பத்திரிகைத் துறைப் பெரியார் டி.ஆர். விஜேவர்த்தன அவர்களின் சிந்தனையிலும் எண்ணக்கருவாக்கத்திலும் உருவானதே தினகரன் பத்திரிகை. நாட்டின் பன்மொழித் தன்மையையும் பன்மைக் கலாசார மாண்பையும் பிரதிபலித்து, அதற்கு வலுவூட்டும் வகையில் சகோதர மொழிப் பத்திரிகைகளோடு (ஆங்கிலம், சிங்களம்) தினகரனையும் தொடங்கி வைத்தார் அமரர் டி.ஆர். விஜேவர்த்தன.

அக்காலத்திலேயே அன்னார் சிறுபான்மையினரின் அறிவு, கலாசார, சமூக மேம்பாடு என்பவற்றைக் கருத்திற் கொண்டு இயங்கினார் என்பதற்கு அவருடைய சிந்தனையின் விளைவாக உருவாகிய தினகரனே ஒரு சான்று. தமிழ் பேசும் மக்களின் மொழி, கலாசாரத் தனித்துவத்துக்கு அவர் அந்நாளிலேயே வழங்கிய ஒரு அங்கீகாரமாகவும் இம்முயற்சியைக் கொள்ள முடியும்.

ஒரு நாளேடு, செய்திப் பத்திரிகை என்ற முறையில் மட்டும் தினகரனின் பங்களிப்புகளை மதிப்பிட்டு விட முடியாது. அதன் வரலாற்று ஏடுகள் சொல்லும் கதைகள் ஏராளம். பத்திரிகைகளின் இலக்கியப் பணி என ஆராய்ந்தால், தினகரனுக்கு அதில் தனித்துவமான ஒரு இடம் உண்டு. பேராதனைப் பல்கலைக்கழகத்தில் (அப்போது இலங்கைப் பல்கலைக்கழகம்) பயின்று அப்போது தமிழில் சிறப்புப் பட்டம் பெற்ற க. கைலாசபதி அவர்கள் தினகரனில் பிரதம ஆசிரியராகப் பணியாற்றிய காலம் தினகரனுக்கு மட்டுமன்றி, ஈழத்து இலக்கியத்துக்கும் ஒரு பொற்காலம் எனலாம். பின்னர் அவர் பல்கலைக்கழக விரிவுரையாளராகிப் பேராசிரியராகப் பதவி உயர்வு பெற்றார்.

நாளேடுகள் வெறுமனே உள்ளூர், பிராந்திய, அனைத்துலகச் செய்திகளை வாசகர்களுக்கு வழங்கும் இதழ்கள் என்றில்லாது, அவை கலை, இலக்கிய, கலாசார வளர்ச்சிக்கும் துணை புரியக் கூடியன என்னும் உண்மையைத் தினகரன் 1950 களில் உணர்த்தியது என்றால், அதற்குக் கைலாசபதி வழங்கிய தலைமைத்துவமே காரணமாயிற்று. இவ்வகையில் தினகரன் பல்வேறு வழிகளில் தனது தமிழ்ப் பணியை ஆற்ற அவர் காரணமாக இருந்தார்.

தினகரன் கவிதை, சிறுகதை, நாவல் எழுதியவர்களை ஊக்குவித்தது, இலக்கியப் படைப்புகளைத் திறனாய்வு செய்யும் மரபுக்கு உரிய இடம் வழங்கி ஊக்குவித்தது. இதனால் படைப்பாளிகள் தமக்குத் தேவையான பின்னூட்டல்களை வாசகர் உலகிடமிருந்து பெற்றுக் கொள்ள தினகரன் ஒரு களத்தை அமைத்தது. மேலும் தமிழ் இலக்கியத் துறை சார்ந்த மாணவர்களுக்கும் பல்வகைப்பட்ட செய்திகள் தினகரன் ஊடாக வழங்கப்பட்டமைக்கு அமரர் கைலாசபதி காரணமாக இருந்தார்.

அக்காலத்தில் இளம் எழுத்தாளர்களைத் தினகரன் இதழிலே எழுதுமாறு அவர் நேரடியாகக் கடிதங்கள் மூலமாகவும் தூண்டினார் என்ற செய்தியும் உண்டு. சிறுகதை மற்றும் கவிதைப் போட்டிகளை நடத்தி, இளையோரின் எழுத்தார்வத்தையும் அவர் தினகரனூடாக வளர்த்தார்.

பிரபல முற்போக்கு எழுத்தாளரான இளங்கீரனின் 'நீதியே நீ கேள்' என்ற தொடர்கதை தினகரனில் வெளிவந்த போது, அதன் முடிவில் கதாநாயகி பத்மினி உயிரிழக்கக் கூடிய நிலைமை ஏற்பட்டது. ஆனால் கைலாசபதிக்கு வந்த வாசகர்களின் பல தந்திச் செய்திகள் "அவள் சாகக் கூடாது" என தெரிவித்தது பற்றிப் பின்னர் கைலாசபதி எழுதியுள்ளார். இவ்வாறு ஒரு பரந்த ஆர்வமுள்ள வாசகர் உலகைத் தோற்றுவிக்கவும் கைலாசபதி காரணமாக இருந்தார். சமூகத்தில் இலக்கிய தாகத்துக்காகவோ அவர்களின் பொழுது போக்குக்காகவோ சிறுகதைகள், நாவல்கள், கவிதைகள், நாடகங்கள். திரைப்படங்கள் என்பன வெளிவரலாம். ஆனால் அவை அனைத்துமே சில மதிப்பீட்டு அளவுகோல்களுக்கு உட்பட்டு, திறனாய்வுக்கு உட்பட வேண்டும்.

அவை எந்தளவுக்கு சமூக யதார்த்தத்தைப் பிரதிபலிப்பன, சமூக மேம்பாட்டுக்கு அவை எவ்வாறு உதவுவன? இவை பற்றியெல்லாம் ஆராய்கின்ற திறனாய்வுக் கட்டுரைகள் பல தினகரனில் வெளியாக கைலாசபதி காரணமாக இருந்தார். இவ்வகையில் ஈழத்துத் தமிழ் உலகில் ஒரு இலக்கியத் தினாய்வுக் கலாசாரம் உருவாக தினகரன் வழியமைத்துக் கொடுத்தது.

இலக்கியப் படைப்பாளிகள் பலரும் திறனாய்வாளர்களாகவும் வளர்ச்சி பெற தினகரன் ஊக்கம் வழங்கியதற்கு அன்னார் காரணமாக அமைந்தார். பொதுவாசகர்கள் மத்தியில் இலக்கிய அறிவினையும் ஆர்வத்தையும் வளர்க்கும் வகையில் ஏராளமான கட்டுரைகள் தினகரனில் வெளியாகின. எமது மாணவப் பருவத்தில் (1950 களின் பிற்பகுதியில்) தினகரனில் வெளிவந்த மாணவர் பகுதியும், புதன் மலரும் எமக்கு அப்போது வாராந்த இலக்கிய விருந்தாக அமைந்தன.


2021 மார்ச் 13 சனிக்கிழமை
தினகரன்
THINAKARAN
REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
வரு. 89 இல. 62
March 13,Saturday, 2021
16பக்கங்கள்
30/-
இன்னும் 2 தினங்களில்...

ஜெனீவாவில் தீர்வு காண்பதற்காக படையினரை அரசு காட்டிக் கொடுக்காது
பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.பி திஸாநாயக்க

ஜெனீவா மாநாட்டு நேரத்தில்
பிம்ஸ்டெக் மாநாடு குறித்து போலி செய்திகள்
அமைச்சர் தினேஷ் விளக்கம்

இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் நேற்று யாழ்ப்பாணம் விஜயம்
நல்லூரில் வழிபாடு; நல்லை ஆதீனத்துடன் சந்திப்பு

சீனி வரி குறைப்பினால் அரசுக்கு நிதி இழப்பு என்பது பொய்யானது
அடிப்படையற்ற குற்றச்சாட்டு; நாட்டு மக்களுக்கே அதிக பயன்

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள்; மிகுதி அறிக்கை சட்ட மா அதிபரிடம்
22 அத்தியாயங்கள் நேற்று கையளிப்பு

ச.தொ.ச.வில் அத்தியாவசிய பொருட்களின் விலை குறைப்பு
நேற்று முதல் அமுலுக்கு வந்துள்ளது

நாட்டின் தேசியக் கொடியை அவமதிக்கும் வகையிலான பொருட்கள் விற்பனைக்கு
தூதரகங்கள் ஊடாக உதவி பெறப்பட்டு உரிய விசாரணை

இராகலை தோட்ட தொடர் குடியிருப்பில்
தீ விபத்து; 16 வீடுகள் முற்றாக தீக்கிரை
14 குடும்பங்களை சேர்ந்த 61 பேர் நிர்க்கதி

இரு தடுப்பூசிகளையும் பெற்று நாடு திரும்புவோருக்கு சலுகை
இராஜாங்க அமைச்சர் சுதர்ஷனியிடம் மனோ கோரிக்கை

சீனிக்கான வரி குறைப்பு மூலம் அரசுக்கு ரூ.15.9 பில்லியன் இழப்பு
ஹந்துன்னெத்தி அடிப்படை உரிமை மீறல் மனு

மியன்மார் அமைச்சருக்கான அழைப்பை மீளப் பெறுக
அவரது வரவு சர்ச்சையை ஏற்படுத்தும் அரசிடம் எதிர்க்கட்சித் தலைவர் கோரல்

யாழில். தாயால் சித்திரவதை செய்யப்பட்ட குழந்தை
தத்தெடுக்க நூற்றுக்கும் மேற்பட்டோர் விருப்பம்

ஈழத்துச் சிறுகதை வரலாற்றில், எழுத்தாளர் மத்தியில் தமிழ்நாட்டுச் செல்வாக்கு ஒன்று இருந்து வந்தது. அக்காலக் கதைகள் தமிழ்நாட்டுக் கதைகளின் 'பிரதிநிதியாகவே' இருந்தன. இலங்கைச் சூழலைப் பிரதிபலிக்கவில்லை. இலங்கையின் தேசிய சிந்தனை, தேசிய கலை இலக்கிய முயற்சிகள் என்பவற்றை அக்காலப் பத்திரிகைகள் வளர்க்க முற்படவில்லை.

ஈழத்துக் கதைகளில் யாழ்ப்பாணக் கரையோரங்களின் உப்பு வாசனையைக் காணவில்லை. மன்னாரின் மணல் வெளிகள் இடம்பெறவில்லை எனத் தெரிவித்த அமரர் அ.ந. கந்தசாமி, மற்றொரு கணிப்பையும் கூறினார்.

"நம்மவர்கள் தமிழகக் கதைகளை வாசித்து, அவற்றில் ஊறி, அதன் மூலம் தெரிந்து கொண்ட வாழ்க்கை மரபுகளைக் கிரகித்து 'போலி' என வர்ணிக்கத்தக்க கதைகளையே எழுதினர்.

ஆனால் இலங்கையில் மக்கள் வாழ்க்கையைப் பிரதிபலிக்கும் எழுத்துகள் தேவைப்பட்டன. ஈழத்துத் தமிழ் இலக்கியம் தமிழ் நாட்டு இலக்கிய மரபிலிருந்து விடுபட்டு ஒரு புதிய பாதையை உருவாக்க வேண்டும் என்ற எண்ணம் ஈழத்து இலக்கிய உலகில் உருவாக அக்காலத்தில் தினகரனும் தனது பங்களிப்பைச் செய்தது.

முற்போக்கு நோக்குடன் எழுச்சி பெற்ற புதிய எழுத்தாளர் அணியினர் இலக்கியத்தினூடாக சமூக மாற்றம், தேச முன்னேற்றம், தாழ்த்தப்பட்ட மக்களின் வாழ்க்கை மேம்பாடு என்ற உன்னத இலட்சியங்களைக் கொண்டு இலக்கியம் படைக்க வேண்டும் என்ற புதிய சிந்தனையின் பிதாமகனாக கைலாசபதி உருப்பெற்று, இச்சீரிய சிந்தனைகளின் அடிப்படையில் தினகரனை வழிநடத்தினார்.

இப்புதிய எழுத்தாளர் பரம்பரையினரின் படைப்புகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து தினகரனில் அவை வெளிவர உதவினார்.

இப்புதிய பரம்பரையினர்தான் அக்காலத்தில் தினகரனுக்கூடாக தமிழ் இலக்கியத்திற்குப் புதுவடிவம் கொடுத்து, முற்போக்கு இலக்கிய முன்னோடிகளாகத் திகழ்ந்தனர். இவர்களுடைய படைப்புகளுக்கு கைலாசபதி 'தேசிய இலக்கியம்' என்ற சித்தாந்தத்தை வழங்கி தினகரனுக்கூடாக அச்சித்தாந்தத்தை மக்கள்மயப்படுத்தினர்.

## ஈழத்து இலக்கியமும், திறனாய்வு கலாசாரமும் உருவாக வழியமைத்துக் கொடுத்த பத்திரிகை தினகரன்

'நமது நாடு, நமது மக்கள், நமது அரசியல், கலாசார மரபு என்பவற்றைப் பிரதிபலித்து அமையும் சிந்தனைகளும் உணர்வுகளும் இலக்கியங்களைத் தோற்றுவிக்க வேண்டும்' என்பதே அக்காலத்தில் தினகரனுக்கூடாக கைலாசபதி முன்வைத்த தேசிய இலக்கியவாதத்தின் அடிப்படையாகும். இன்றளவும் ஈழத்து தமிழ் இலக்கிய உலகில் செல்வாக்குச் செலுத்துகின்ற இச்சித்தாந்தத்துக்கு அக்காலத்தில் தினகரனே கால்கோள் இட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

கைலாசபதி காலத்தில்தான் மலையகப் படைப்பாளிகள் தினகரனில் உள்வாங்கப்பட்டனர் என்பது வரலாறு. என்.எஸ்.எம். ராமையாவின் நாடகம் ஒன்று லும்பினி மேடையில் அரங்கேறிய போது, அதனை இரசித்துவிட்டுத்தான் கைலாசபதி அவருடன் தொடர்பு கொண்டார். தினகரனுக்கு எழுதுமாறு ஊக்குவித்தார். அதன் பின்னர் ராமையாவின் 'ஒரு கூடைக் கொழுந்து', 'தீக்குளிப்பு' ஆகிய சிறுகதைகள் மலையக மண் வாசனையுடன் தினகரனில் வெளிவந்தன. பிற்காலத்தில் அவர் சாகித்திய மண்டல விருதைப் பெற்றார். ராமையாவுக்கு முதலில் தினகரனே இலக்கியக் களத்தை அமைத்துக் கொடுத்தது.

இன்று லண்டனில் வாழும் மு. நித்தியானந்தன் தினகரனில் உதவி ஆசிரியராக இருந்த போது, இக்கட்டுரை ஆசிரியரின் 'இலங்கை இந்தியர் வரலாற்று நூல்' தொடர்ச்சியாகத் தினகரனில் வெளிவந்தது.

மு. நித்தியானந்தன் பதுளையின் இலக்கிய வளர்ச்சி பற்றி எழுதிய 'துங்கிந்தைச் சாரலிலே' என்ற தொடர் பிரதம ஆசிரியர் சிவகுருநாதன் காலத்தில் வெளிவந்தது.

இன்று நாளேடு என்பது வெறும் தகவல் அல்லது செய்தி ஊடகமாக மட்டுமே கணிக்கப்படுவதில்லை.

தினகரன் வழங்கி வரும் பல்துறை சார்ந்த செய்திகளும் தகவல்களும் எமது நோக்கில் பரந்த அறிவுத் தொகுதியை உருவாக்குவதற்கு அடித்தளமாக விளங்கும் தரவுத் தொகுதிகள் எனலாம். தரவுகளும் தகவல்களும் பல செய்முறைகளுக்கு உள்ளாகி அறிவுத் தொகுதியாக பரிணமிக்கின்றன என்பதே இன்றைய அறிவு பற்றிய ஒரு வாய்பாடு. இதனை 'அறிவின் படிமுறை வரிசை' என்பர்.

இவ்வகையில் தினகரன் தனது பல்வகைப்பட்ட உள்ளூர் மற்றும் உலகளாவிய செய்திகளினூடாக வழங்கும் தகவல் களஞ்சியம் வெகுஜனங்களின் அறிவுத் தொகுதியின் மேம்பாட்டுக்கு ஒரு நிலைக்களமாக அமைகின்றது.

இத்தகைய ஒரு பொது அறிவு பரப்பின் தேவை இன்று கல்வி முறையிலும் நன்கு உணரப்பட்டுள்ளது.

க.பொ.த. உயர்தர மாணவர்களுக்கான இறுதிப் பரீட்சையில் சாதாரண பொது அறிவு ஒரு கட்டாய பாடமாகவும் ஆக்கப்பட்டுள்ளது.

ஆனால் இதுவெல்லாம் பாடத் திட்டத்தில் இல்லை. தினகரன் நாளேட்டைத் தொடர்ந்து முறையாகப் படிப்பவர்களுக்கு அது ஒரு கல்விக் கூடகமாக விளங்கி, இளைஞர்களைப் புதிய அறிவு மைய சமூகத்துக்கு இட்டுச் செல்ல உதவுகின்றது என்பது அதன் மற்றொரு முக்கிய பரிமாணம்.

மற்றொரு நோக்கில், கடந்த ஒன்பது தசாப்த காலத்தில் இடம்பெற்ற ஏராளமான சமூகக் கிளர்ச்சிகள், அரசியல் கிளர்ச்சிகள், நெருக்கடிகள், எதிர்ப்புகள் என்பவற்றின் மத்தியிலும் தினகரனும் அதன் சகோதரப் பத்திரிகைகளும் எதிர்நீச்சல் போட்டுத் தமது பத்திரிகைப் பணியை முறையாக, சரிவரச் செய்து வந்துள்ளன.

அண்மைக் காலங்களில் தகவல் தொழில்நுட்பத் துறையில் ஏற்பட்டு வரும் மாற்றங்களை உள்வாங்கி தினகரன் தன்னைப் புதிய அறிவு மைய நூற்றாண்டின் தேவைகளுக்கேற்பக் கட்டமைத்து வந்துள்ளதும் ஒரு பிரதான சாதனை.

அழுத்தங்கள். நிர்ப்பந்தங்கள் பல இருந்த போதிலும் தினகரனின் பக்கங்கள் தமது ஆற்றல்களுக்கு இணங்க முடிந்த அளவு தமது பத்திரிகை தர்மத்தைக் கைவிடாது செயற்பட்டு வந்துள்ளதையும் குறிப்பிட வேண்டும். ஒட்டுமொத்த நோக்கில் தினகரன் கடந்த கால தகவல்களையும் செய்திகளையும் சமூகத்தில் பகிர்ந்து கொள்ளும் பணியோடு, கலை இலக்கியப் பணியையும் ஒன்றிணைத்து, தமிழ் பேசும் மக்கள் சமூகத்துக்கு ஒரு நிறைவான பணியையே ஆற்றி வந்துள்ளது.



பேராசிரியர்
சோ.சந்திரசேகரன்...

# சிவகுருநாதனை தவிர்த்து விட்டு தினகரனின் வரலாற்றை எவரும் எழுதி விட முடியாது

**தினகரன் பத்திரிகையில் மிக நீண்ட காலம் பிரதம ஆசிரியராகப் பணியாற்றியவர் கலாசூரி ஆர்.சிவகுருநாதன். தினகரனை வெற்றிப் பாதையில் கொண்டு சென்றவர் அமரர் சிவகுருநாதன்.**

**இவ்வாறு புகழாரம் சூட்டினார் பேராசிரியர் எம். எஸ்.எம். அனஸ்.**

**தினகரன் பத்திரிகையின் 89 ஆவது ஆண்டு நிறைவு குறித்து அவர் தனது கடந்த கால அனுபவங்களை வெளியிட்டார்.**

**கேள்வி: தினகரன் 89 ஆவது ஆண்டு நிறைவைக் கொண்டாடும் இந்த சந்தர்ப்பத்தில் நீங்கள் என்ன கூற விரும்புகின்றீர்கள்?**

**பதில்:** உண்மையிலேயே இலங்கையில் உள்ள தேசிய பத்திரிகைகளில் தினகரன் முக்கியமான ஒரு தடத்தை பதித்த பத்திரிகையாகும். சிறுபான்மையின மக்கள் மத்தியிலும் தமிழ் பேசும் மக்கள் மத்தியிலும் தேவையை நிறைவு செய்கின்ற பத்திரிகை. 89 வது ஆண்டு நிறைவில் கால் பதித்த வரலாற்றைக் கொண்டாடும் இப்பத்திரிகை காலத்தோடு இரண்டறக் கலந்து இருக்கிறது. அது காலத்தின் கண்ணாடி என்று குறிப்பிட முடியும்.

**கேள்வி: அப்படியாயின் அப்பத்திரிகை உங்கள் கால கட்டத்தில் வாசகர் மத்தியில் எந்தளவு வரவேற்பைக் கொண்டிருக்கிறது என்று கூற முடியுமா?**

**பதில்:** எனக்கு ஒரு ஞாபகம் இருக்கிறது. அநேகமாக தமிழ் பேசும் மக்கள் மத்தியிலும் குறிப்பாக முஸ்லிம்களிடத்தில் 'வீட்டுக்கு வீடு வாசற்படி' என்பது போல ஒவ்வொரு வீட்டிலும் ஒரு தவிர்க்க முடியாதளவுக்கு அப்பத்திரிகை இருக்கும். உண்மையிலேயே எங்களது வீட்டிலும் அப்பத்திரிகை வாங்குவார்கள். குறிப்பாக முஸ்லிம்களுடைய வீடுகளில் பத்திரிகை வாங்கிப் படிக்கின்ற பெரியதொரு பழக்க வழக்கம் இருந்தது.



**கேள்வி: அக்காலகட்டத்தில் அப்பத்திரிகை எந்த வகையில் முக்கியத்துவம் பெற்று இருந்தது என்று கூற முடியுமா?**

**பதில்:** அக்காலத்தில் பத்திரிகையில் தாங்கி வந்த அம்சங்கள் யாவும் மக்களைக் கவிர்ந்திருக்கலாம். அல்லது மக்களுக்கான செய்தி தரக் கூடிய வேறு சாதனங்கள் இல்லாமல் இருந்திருக்கலாம். வானொலி சேவைகள் மிகக் குறைவு. அக்காலகட்டத்தில் பத்திரிகையை மக்கள் விரும்பி வாசித்திருப்பார்கள் எனக் கருதலாம். அது ஒரு அதியசமான விடயம். மக்களுக்குத் தேவையான செய்திகளோடு புதிய வெவ்வேறு தகவல்களோடு கதை, கவிதை, கட்டுரைகளோடு தினகரன் வெளிவந்தது. இது மக்களுக்கு நேரடியான அனுபவம்.

அதை வாங்கி வாசித்து விட்டு அதைக் கவனமாக சேர்த்து வைப்பார்கள். அதை வேண்டிய நேரத்தில் எடுத்து வாசிக்கின்ற தொரு கலாசாரம் இருந்தது. இப்போதும் அது இருக்கின்றது என்றுதான் தெரிகின்றது. ஆனால் இப்போது இருப்பதை விட அன்று மக்கள் மிகக் கவனமாக செய்தித் தாள்களைப் பார்த்தார்கள். தினகரன் உட்பட இன்னும் சில தமிழ்ப் பத்திரிகைகளும் அவ்வாறான முக்கியத்துவத்தைப் பெற்று இருந்தன.

**கேள்வி: தினகரன் பத்திரிகை வாசகர்களை வசீகரித்துக் கொண்டது எவ்வாறு என்று கூற முடியமா?**

**பதில்:** ஞாயிறு இதழ்களில் தினகரன் விசேடமாகவே இலக்கிய விடயங்களுடன் வெளிவரும். அதுவொரு பிரமாண்டமான விடயம். 1960 களில் நாங்கள் பத்திரிகையை தீவிரமாக வாசித்த காலப் பகுதியிலே இலக்கியத்திற்காக பத்திரிகை வாசிக்கும் நிலை இருந்தது. இதற்கு முக்கியமான இடத்தை தினகரன் ஞாயிறு வார மஞ்சரி வழங்கியிருந்தது. தமிழ் இலக்கியம் சார்ந்த கட்டுரைகளைத் தேடுகின்ற போது ஞாயிறு வாரமஞ்சரியில் வெளிவரும் கட்டுரைகள் அனைத்தும் எங்களுக்கு மிகவும் ஆர்வம் ஊட்டுவனவாக இருந்தன. அத்தோடு வெளிநாட்டு அரசியல் பற்றி அக்காலகட்டத்தில் தரமான கட்டுரைகள் எழுதி வந்தார்கள். சிலருடைய பெயர்கள் எனக்கு இன்னும் ஞாபகமாக இருக்கின்றன. அதுவும் ஒரு வித்தியாசமான அம்சமாகும். அவற்றை நாங்கள் தவறாமல் வாசிப்போம்.

முக்கியமான ஒரு இலக்கியக் கட்டுரையை எம். எம். எம். மஹ்ரூப் எழுதியிருந்தார். சிறுகதைத் துறையின் 'தோற்றமும் வீழ்ச்சியும்' என்ற தலைப்பில் அவர் எழுதிக் கொண்டிருந்தார். அது மிகவும் பரபரப்பாக பேசப்பட்டது. அது நாங்கள் க. பொ. த உயர்தரம் படிக்கின்ற காலத்தில் சில வாரங்கள் வெளிவந்தது. அதை நாங்கள் வாசித்தோம். அது மாத்திரமல்ல உயர் தர வகுப்பு மாணவர்களுக்கான தமிழ் இலக்கியம், வரலாறு, அரச அறிவியல் பாடங்களுக்கான கட்டுரைகளையும் தினகரன் தொடர்ச்சியாக தாங்கி வந்தது. இந்தப் பாட அம்சங்களோடு செய்திகளும் கலந்து இருப்பதனால் தினகரன் வாசிப்பத்தில் மக்கள் மிகுந்த ஆர்வத்துடன் இருந்தார்கள். இளைஞர்கள், மாணவர்கள். கல்வித் துறையோடு சம்பந்தப்பட்டவர்கள் தினகரனை விரும்பி வாங்குவதில் ஆர்வம் காட்டினார்கள். அதுவும் விசேடமாக உண்மையிலேயே முஸ்லிம்கள் நீண்ட காலமாக தினகரன் வாங்கும் வழக்கத்தைக் கொண்டிருக்கிறார்கள். அதற்கு காரணங்கள் பல உள்ளன. முஸ்லிம்களுக்கு விசேடமாக வெள்ளிக்கிழமை நாட்களில் பக்கம் ஒதுக்கப்பட்டு தொடர்ச்சியாக முஸ்லிம் மார்க்கம் சார்ந்த அம்சங்கள் வெளிவந்தன. இது இன்னும் வந்து கொண்டிருக்கிறது.

அப்பொழுது எழுத்தாளர்களான முற்போக்கு எழுத்தாளர் எச். எம். பி. முகைதீன், இந்தியாவைச் சேர்ந்த வாமி சம்சுதீன் போன்ற பெரிய எழுத்தாளர்கள் எழுதினார்கள். 70 களில் எச். எம். முகைதீன் அவர்கள் ஒரு பகுதியை தயாரித்து வந்தார். நான்கு அல்லது எட்டு பக்கங்களில் தனியாக ஒரு சிறிய இணைப்பு இதழாக வெளிவரும். அது இஸ்லாம் சார்ந்த இதழாகவும் வந்திருக்கிறது. அது சில காலத்திற்குப் பின்பு நின்று விட்டது. அதற்குப் பின்பு அவர் 'அபியுக்தன்' என்ற பெயரில் எழுதி வந்தார். இப்படி பல்வேறு அம்சங்களைக் குறிப்பிட முடியும்.

## 'பத்திரிகையை வளர்ச்சிப் பாதைக்கு கொண்டு சென்ற சிறந்த பத்திரிகையாளர் அவர்' - பேராசிரியர் அனஸ் புகழாரம்



**கேள்வி: உங்களுக்கும் தினகரனுக்கும் உள்ள தொடர்பு என்ன?**

**பதில்:** சிவகுருநாதன் பிரதம ஆசிரியராக இப்பத்திரிகையின் வளர்ச்சிக்கு நீண்ட காலமாக இருந்து பெரும் சேவையாற்றிய ஒருவர். இப்பத்திரிகையின் வளர்ச்சியில் பலர் பணி ஆற்றியுள்ளனர். எனினும் எங்களுக்கு தெரிந்த வரையில் சிவகுருநாதனை நாங்கள் மறக்க முடியாது. நான் அவரை ஏரிக்கரை அலுவலகத்தில் இரண்டு மூன்று தடவைகள் சந்தித்துள்ளேன். அது என்னுடைய எழுத்துக்கள் வரக் கூடிய ஆரம்ப காலகட்டம். தினகரனில் 'எமது நாடக மரபுகள்' என்ற தலைப்பில் ஒரு கட்டுரை எழுதியிருந்தேன்.

அதை சிவகுருநாதனுக்குத்தான் அனுப்பினேன். அவர் அதை பிரசுரம் செய்திருந்தார். நான் எதை எழுதினாலும் தினகரனில் பிரசுரம் செய்வார்கள். ஆனால் நான் அதற்கு அதிகம் எழுதவில்லையே தவிர அவர்கள் தாராளமாக பிரசுரித்தார்கள். அதாவது நான் தினகரனை சரியாகப் பயன்படுத்தவில்லை என்பதுதான் உண்மையாகும்.

தினகரன் என்னுடைய ஆக்கங்களை பிரசுரம் செய்ய எப்பொழுதும் தயாராக இருந்தது. சிவருநாதன் அவர்கள் சிறந்த பத்திரிகைக் கலையில் உயர்ந்த நிலையில் உள்ளவர். அதே நேரத்தில் அவரால் அந்தப் பத்திரிகைக்கு பெரிய புகழும் கிடைத்தது. அதிகளவு முஸ்லிம் எழுத்தாளர்கள் அதில் பங்கு கொள்வதற்கு, முஸ்லிம் செய்திகளுக்கு முக்கியத்துவம் வழங்கி செயற்பட்டார். ஆரம்ப காலத்தில் இருந்த தொடர்களை சிவகுருநாதன் தனது காலத்திலும் சிறப்பாக முன்னெடுத்தார். உண்மையிலே சிவகுருநாதன்தான் தொடங்கினார் என்று சொல்ல முடியாது. என்றாலும் முன்னைய காலத்தில் இருந்த அந்த தொடர்ச்சியை சிவகுருநாதன் தனது காலத்தில் அவர் மிகவும் தாராளமாகவும் சிறந்த பரோபகார உணர்விலும் முஸ்லிம் எழுத்தாளர்களை ஊக்குவிக்கின்ற முஸ்லிம் செய்திகளுக்கு முக்கியத்துவம் தந்தும் முன்னெடுத்தார். சிவகுருநாதனை ஒதுக்கி விட்டு தினகரன் வரலாற்றை எழுத முடியாது. அவர் முன்னேற்றகரமான செயற்பாடுகளை செய்தார் என்று சொல்ல முடியும். பல எழுத்தாளர்கள் தினகரன் வாரமஞ்சரி ஊடாக தங்களுடைய கதை, கவிதை கட்டுரைகளை எழுதி வந்தது எனக்கு ஞாபகம் இருக்கிறது.

**கேள்வி: தினகரன் பிரதம ஆசிரியராகவிருந்த பேராசிரியர் கைலாசபதியின் காலம் பற்றிக் கூற முடியுமா?**

**பதில்:** பிரதானமாக இலக்கியம் என்று வரும் போது போராசிரியர் கைலாசபதி இருந்த காலம் சிறப்பானது. சுபைர் இளங்கீரன் எழுதிய 'நீதியே நீ கேள்' தொடர் நாவல் வெளிவந்தது. அதற்காக நாங்கள் பத்திரியைத் தேடிப் போய் வாசித்தோம். அடுத்த முறை என்ன வரும் என்ற ஆவல் இருந்தது. அவ்வாறெல்லாம் இலக்கிய பணி புரிந்த தினகரன் 89 ஆவது பிறந்த தினம் கொண்டாடுவதையிட்டு வாழ்த்துகிறேன்.



நேர்காணல்: இக்பால் அலி

# பண்டிதமணி ஐயாவுக்கு பட்டம் வழங்கி கௌரவித்த தினகரன்



பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை ஐயாவுக்கு அக்காலத்தில் பட்டம் வழங்கி கௌரவித்த பத்திரிகை தினகரன் ஆகும். பண்டிதர் ஐயா தமிழ், இலக்கிய, சமய வகுப்புக்களில் எமது மனதில் பதிய வேண்டிய நல்ல கருத்துக்கள் பல அன்று கூறினார். இன்றைய மாணவர்கள், இளைஞர்கள் யார் இந்தப் பண்டிதமணி என்பதை அறிவதற்காக முதலில் சில விபரங்களைத் தருவது அவசியம்.

சி.க. பிறந்த கிராமம் மட்டுவில். தந்தை சின்னத்தம்பி, தாய் வள்ளியம்மை. 1899.06.12 இல் இவர் பிறந்தார். முதலில் இவருக்குச் சூட்டிய பெயர் சட்ட நாதர். 1902 இல் அன்புத் தாயார் மறைந்தார்.

சட்டநாதருக்குத் தந்தையும் தாயும் சின்னத்தம்பி அவர்களே. இவர் அவ்வூர் அமெரிக்கமிஷன் பாடசாலையில் கல்வி கற்றார். ஆங்கிலம் கற்பதைத் தந்தை விரும்பவில்லை. வீட்டிலே கல்வி நடைபெற்றது. நல்லாசிரியர்கள் வீட்டில் போய்க் கற்பித்தனர்.

1917 இல் வண்ணார்பண்ணை நாவலர் பாடசாலையில் (காவிய பாடசாலை) கல்வி கற்றார். மட்டக்களப்பு பெரியதம்பிப்பிள்ளை இவரது சக மாணவன். சுன்னாகம் குமார சுவாமிப் புலவர், ந. சுப்பையாபிள்ளை ஆகியோரிடம் கற்கும் வாய்ப்பு இவருக்குக் கிடைத்தது. மதுரைத் தமிழ்ச் சங்கம் நடத்திய பண்டிதர்பரீட்சையில் இவர் திறமைச் சித்தியுடன் பண்டிதரானார். பின்பு கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கல்லூரியில் இரண்டு வருடப் பயிற்சி முடித்துப் பயிற்றப்பட்ட தமிழாசிரியர் பதவி பெற்றார்.

1929 இல் திருநெல்வேலி சைவாசிரிய கலாசாலையில் இவருக்கு தமிழ்ப் பேராசிரியர் நியமனம் கிடைத்தது. அங்கே முப்பது ஆண்டுகள் பணி புரிந்து ஆயிரத்திற்கு மேற்பட்ட ஆசிரியர்கள் உருவாகுவதற்கு ஆசானாக இருந்தார். தமிழ், சமயம், இலக்கியம் கற்பிப்பதற்கு இவருக்கு இணையானவர் அன்று இல்லை.

இலக்கிய கலாநிதி பண்டிதர் ஐயா தமிழ் மண்ணின் தனிப்பெருஞ் சொத்து. யாழ்ப்பாணத் தமிழர்களுக்குப் பெருமை தேடித்தந்த பெருந்தகை. ஆசானாக இருந்து அறிவொளி காட்டியும் குருவாக நின்று ஞானஒளி ஏற்றியும் பணி பல செய்து பல்லோரின் உள்ளத்தில் இடம் பெற்றவர்.

பண்டிதர் சி.க. ஐயாவுக்கு 'பண்டிதமணி' என்ற பட்டத்தை வழங்கியது தினகரன் பத்திரிகை. அவரது பல நூறு கட்டுரைகளைப் பிரசுரித்த பெருமையும் தினகரன் பத்திரிகைக்கு உரியது. தபால் திணைக்களம் இவருக்கு முத்திரை வெளியிட்டுக் கௌரவித்தது. இலங்கை பல்கலைக்கழகம் இலக்கிய கலாநிதிப் பட்டம் வழங்கியது.

பரிசுத்தமான ஆண்டவனை வழிபடும் மனிதனது உள்ளத்தில் உருவம் இல்லாத ஆமை ஒன்று உண்டு. இது பொறாமை. அழுக்காறு, ஔவியம் எரிச்சல் எனப் பல பெயர்கள் உள்ளது. பிறர் சீருடன் வாழும் வாழ்க்கையைக் கண்டு மனம் பொறுக்காமல் புழுங்குவதே பொறாமையாகும். பிறரது சிறப்பைக் கண்டு மகிழ்ச்சியை வேண்டிய மனிதன் அதற்கு மாறாக மனம் கொதிக்கிறான். ஔவியம் பேசுதல் ஆக்கத்திற்கு அழிவு என்றார் ஔவையார்.



மனதில் இந்த அழுக்காறு ஓடுமானால் மனம் மாசுபடும். மனம் என்ற கண்ணாடி தூசு பட்டுவிடும். பெறுவதற்கரிய மானிடப் பிறவி எடுத்த பலனையும் பாழாக்கி விடும். புற்றுநோயிலும் பொறாமை பொல்லாதது என்பதை வலியுறுத்தியவர் பண்டிதமணி.

சினம் என்பது மனிதனது உள்ளத்திலிருந்து உதிக்கின்ற ஒரு உணர்வு என்று சொல்வர். வெகுளி, கோபம், ஆத்திரம், முனிவு இவை எல்லாம் ஒரு பொருட் சொற்கள். மனிதனது மிகச் சிறந்த பகைவன் சினம். எமது உள்ளத்தில் சிறிது நேரம் கூட இருக்க விடாமல் துரத்த வேண்டிய அசுரன் சினம். ஆகையினாலேதான் "உள்ளம் கவர்ந்தெழுந்து ஓங்கு சினம் காத்துக் கொள்ளும் குணமே குணமென்க" என்று கூறப் பட்டது.

நற்குணம், சற்குணம், சீலன் என்ற பெயரை மனிதன் பெறாமல் தடுக்கும் ஆற்றல் இந்த வெகுளிக்கு உண்டு. இதனைத் தணிக்கும்படி ஔவையார் 'ஆறுவது சினம்' என்ற அருமையான பொன்மொழி தந்தார். "சினம் என்னும் சேர்ந்தாரைச் சொல்லி இனமென்னும் ஏமாமாப் புணையைச் சுடும்" என்றார் வள்ளுவர்.

மக்கள் சினம் கொள்வதால் பெரிய துன்பங்களை அனுபவிக்கின்றார்கள் என்பதை நாம் காண்கின்றோம். குடும்பம் சீர்கெடுகிறது. கொலை சண்டை, அடி காயங்கள் எல்லாம் ஏற்படுவதை நாம் காண்கின்றோம். வழக்குகள், பொலிஸ், நிலையம், நீதிமன்றம், சிறைச்சாலை எல்லாம் பார்க்கின்றோம். எனவே சினம் காத்தல் அவசியம் என்பதை நாம் உணர வேண்டும்.

நான்காவதாக இன்னாச் சொல்லிடம் செல்வோம். இன்னாச்சொல் என்றால் தீயசொல், கடும் சொல், பிறர் மனதைப் புண்படுத்தும் சொல் எனப் பொருள் கூறுவர் பெரியோர். மனிதன் மனிதத் தன்மையுடன் வாழத்தடை செய்யும் குற்றங்களுள் இதுவும் ஒன்று. தீய சொல்லை விடத்தீ (நெருப்பு) மேலானது என்று வள்ளுவர் கூறியுள்ளார்.

தீயால் சுட்ட புண்புறத்தில் வடு காணப்பட்டாலும் உடம்பில் ஆறிவிடும். ஆனால் நாவினால் சுட்டவடு (குற்றம்) உள்ளத்தில் வடு ஏற்படுத்தும். இந்த வடு ஆறாது. ஆகையால் பிறர் மனம் நோகும் சொற்களை நாம் ஏன் கூறவேண்டும். நா காக்கா விட்டால் சொற் குற்றத்திற்குள் அகப்பட்டுக் கவலைப்படவே செய்யும்.

பணிவு, இன்சொல், இவை இரண்டும் பணச் செலவு இல்லாமல் மனிதன் அணியும் சிறந்த ஆபரணங்கள் என்று வள்ளுவர் பெருந்தகை கூறியுள்ளார்.

சினம் வரும் போதுதான் வன்சொல் வரும். முதலில் சினம் காத்தல் அவசியம். அன்பாகப் பேசி அன்பினால் ஆக்கம் வரும் என்று காண்போர் இன்சொல் பேசுவர். இன்னாச் சொற்களை நீக்க முயல்வது சிறந்த விரதமாகும். அழுக்காறு அவா, வெகுளி, இன்னாச் சொல் ஆகிய நான்கு குற்றங்களும் மனிதன் பிறக்கும் போது கூடப் பிறந்தனவா? அல்லது இடையில் வந்து மனிதனது உள்ளத்தில் புகுந்தனவா என்பதை அறிஞர்கள், விஞ்ஞானிகள் சிந்திக்க வேண்டும்.

"மனத்துக்கண்மாசிலனாதல் அனைத்தறன்" என்ற குறளைப் பண்டிதர் ஐயா அவர்கள் சமய வகுப்பில் பலமுறை கூறுவார். ஆசிரிய மாணவர்களின் உள்ளத்தில் இவை பதிய வேண்டும். பின்பு மாணவர்களின் உள்ளத்தில் இந்த நல்ல குறள்கள் பதிய வேண்டும். ஆசிரியர் இவற்றைப் பதிய வைப்பார்கள். நல்ல மனிதர்கள் உள்ள நாடாக நமது நாடு திகழ வேண்டும் என்ற எண்ணம் சி.க. ஐயா அவர்களிடம் இருந்தது.

மனிதர் மாசில்லா மணிகளாகப் பிரகாசிக்க, புனித உள்ளம் உள்ளவர்களாகத் திகழ வெள்ளை உள்ளம் படைத்தவர்களாக வாழ வழி என்ன என்பதைச் சிறிது சிந்திப்போம். பாரதியார் மனம் வெளுக்க வழியில்லையே என்று கவலைப்பட்டார். ஒழுக்கம் உயிரினும் ஓம்பப் படும். இந்த நிலையை மனிதன் அடைவதற்கு ஆகாத குணங்கள் எல்லாம் அடியோடு நீங்க வேண்டும்.

நீக்க வேண்டும். எல்லாம் வல்ல இறைவனின் அருள் வேண்டும். மூத்தோர் சொல் வார்த்தை கேட்க வேண்டும்.

மாதா, பிதா, குரு, தெய்வம் என்பதை மனதில் பதிக்க வேண்டும். ஔவையார் சொன்ன நீதி வாக்கியங்கள் மனதில் பதிய வேண்டும். மேன்மை கொள் சைவ நீதி நெறி நின்று வாழ வேண்டும். ஒவ்வொருவரும் தங்கள் மதங்கள் காட்டிய வழியைப் பின்பற்றி வாழ வேண்டும்.

இத்தனை சீரிய பண்புகளை கடைப்பிடித்து மாணாக்கர்களுக்கும் புகட்டிய பண்டிதர் ஐயாவுக்கு பட்டம் வழங்கி கௌரவித்தமை தினகரனின் மேலான பணி என்பதில் ஐயமில்லை.

**வே. தனபாலசிங்கம்**
(ஓய்வு பெற்ற அதிபர்)

# அமரர் டி.ஆர்.விஜேவர்த்தன இட்ட உறுதியான அடித்தளம்



தமிழ் பேசும் உலகில் தனக்கென ஒரு தனித்துவ இடத்தைப் பிடித்துக் கொண்ட 'தினகரன்' பத்திரிகை இன்று தனது 89 வது பிறந்த தினத்தில் கால் பதிக்கின்றது. தினகரன் பத்திரிகை சுமார் 09 தசாப்தங்கள் தொடராக வெற்றியுடன் வெளிவந்து கொண்டிருக்கின்றது.

சுமார் 25 வீதம் தமிழ் பேசும் மக்கள் வாழும் இந்நாட்டில் இப்பத்திரிகை தொடராக வெளிவருவது குறிப்பிடத்தக்க விடயமாகும். தமிழ்மொழித் தினசரிப் பத்திரிகையொன்று தொடராக சுமார் 09 தசாப்தங்கள் வெளிவருவதென்பது இலகுவான காரியமல்ல.

உலகில் முன்னணியில் திகழ்ந்த எத்தனையோ பத்திரிகைகள் இருந்த இடம் தெரியாமல் மறைந்து விட்டன. இவ்வாறான நிலைக்கு இலங்கையிலும் பல பத்திரிகைகள் உள்ளாகியுள்ளன. ஆனால் அவ்வாறான சவால்களுக்கு முன்பாக எதிர்நீச்சல் போட்டபடி தினகரன் வெளிவருவது மாபெரும் சாதனையாகும்.

இவ்வாறு தினகரன் சாதனைகள் படைத்து தொடராக பல தசாப்தங்கள் நீடித்து நிலைத்து நிற்க உறுதியான அடித்தளமிட்டவர் இந்நாட்டு அச்சு ஊடகத்துறையை ஒழுங்கமைத்த முன்னோடி அமரர் டி. ஆர். விஜேவர்தன ஆவார்.

1914 இல் 'தினமின' சிங்கள மொழிப் பத்திரிகையை வெளியிட ஆரம்பித்து அச்சு ஊடக வெளியீட்டுத்துறையில் பிரவேசித்த இவர், 1932.03.15 இல் இந்நாட்டின் தமிழ் பேசும் மக்களுக்காக தினகரன் தினசரி பத்திரிகையை ஆரம்பித்தார். இப்பத்திரிகையை அவர் வர்த்தக நோக்கில் ஆரம்பிக்கவில்லை. அவ்வாறான நோக்கில் பத்திரிகை செல்வதையும் அவர் விரும்பவில்லை. மாறாக அவர் இலட்சியத்துடனேயே இப்பத்திரிகையைத் தொடங்கினார்.

இப்பத்திரிகை ஆரம்பிக்கப்பட்ட காலப் பகுதியில் இலங்கை பிரித்தானிய ஏகாதிபத்தியத்திற்கு உட்பட்டிருந்தது. அக்காலப் பகுதியில் நாட்டின் சுதந்திரத்தின் நிமித்தம் ஜனநாயக ரீதியில் பல்வேறு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுக் கொண்டிருந்தன. அந்நடவடிக்கைகள் அன்றைய சிங்கள, ஆங்கில மொழிப் பத்திரிகைகளில் முக்கிய செய்திகளாகவும் தகவல்களாகவும் வெளியாகிக் கொண்டிருந்தன. அத்தோடு

அடித்தளமானது தினகரன். அதாவது நாட்டின் சகல பிரச்சினைகளையும் தேசியக் கண் கொண்டு நோக்கும் பாரம்பரியம் உருவானது. இப்பத்திரிகை தமிழ் பேசும் மக்களுக்காக வெளிவரும் பத்திரிகை என்பதை எந்த சந்தர்ப்பத்திலும் மறந்து செயற்பட்டதில்லை.

குறிப்பாக தேசிய ஐக்கியத்திற்கும் நாட்டின் அபிவிருத்திக்கும் பங்களிப்பதை பிரதான நோக்காகக் கொண்டிருந்த போதிலும் தமிழ்பேசும் மண்வாசனை இப்பத்திரிகையில் வெளிப்பட வேண்டும் என்பதில் டி.ஆர். விஜேவர்தன உறுதியாக இருந்தார்.

தேசிய ஒருமைப்பாடு பத்திரிகையின் அடிநாதமாக இருந்ததால், தேசிய ஐக்கியத்தையும் ஒற்றுமையையும் அதன் தேவையையும் முக்கியத்துவத்தையும் வெளிப்படுத்தும் கட்டுரைகள், கவிதைகள், சிறுகதைகள், கதைகள் தினகரனில் அதிகம் வெளியாகின. அந்த வகையில் 1948.02.04 இல் இன, மத பேதங்களுக்கு அப்பால் எல்லோரும் ஒரு தாய்வயிற்று பிள்ளைகள் போன்று ஒற்றுமையாக சுததந்திரத்தைப் பெற்றுக்கொள்ள இப்பத்திரிகை அளித்த பங்களிப்பும் சுட்டிக்காட்டத்தக்கதாகும். சுதந்திரத்தின் பின்னர் நாட்டுக்கு அறிமுகப்படுத்தப்பட்ட பிரஜா உரிமை சட்டம், இந்திய பாகிஸ்தானியர் சட்டம் போன்ற சில

இவர் இப்பத்திரிகையில் அதிக இடமளிக்கின்றார் என்ற குற்றச்சாட்டும் முன்வைக்கப்பட்டது. அதன் விளைவாக இவர் உள்நாட்டு எழுத்தாளர்களுக்கும் இடமளித்தார். ஏனெனில் பத்திரிகை தேசிய

தில்லைநாதன், ஆர். சிவகுருநாதன் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்களாவர். இவர்களில் பேராசிரியர் கைலாசபதி இப்பத்திரிகையின் ஆசிரியராக இரு வருடங்கள் கடமையாற்றினார். அக்காலப் பகுதியில் அவர் ஆற்றிய சேவைகள் இன்றும் நினைவுகூரப்படுவனவாக உள்ளன. அவை தினகரன் வரலாற்றில் ஒரு மைல்லாகவும் தினகரன் பயணத்தின் திருப்புமுனையாகவும் அமைந்திருந்தன.

இலங்கையில் நீண்ட காலமாக தனியான ஒரு இலக்கிய பண்போ, பாரம்பரியமோ இருக்கவில்லை. குறிப்பாக ஈழத்து பூதன்தேவனார் காலம் முதல் இலங்கை இலக்கியத்தில் தமிழ்நாட்டின் செல்வாக்கு அதிகமாகக் காணப்பட்டது. இவ்வாறான சூழலில்தான் க. கைலாசபதி தினகரன் ஊடாக தேசிய இலக்கிய கோட்பாட்டை முன்வைத்து மண்வாசனை மிக்க இலக்கியத்திற்கு வித்திட்டார். அத்தோடு உள்நாட்டு படைப்பாளர்களின் ஆக்கங்களுக்கு களம் அளித்த தினகரன் நாவல்,

கொள்ள முடிகின்றது. காய்தல் உவத்தலின்றி செய்திகளை வழங்கும் பத்திரிகையாக விளங்கும் தினகரன், அண்மைக் காலத்தில் தமிழ் பேசும் மக்களின் விவகாரங்கள் பல திருப்பங்களை அடைந்துள்ள போதிலும், அந்தந்த சந்தர்ப்பங்களில் எல்லாம் எந்தத் தரப்பினருக்கும் பிரசார ஊடகமாக அன்றி நிதானமாக செய்திகளை வழங்கும் ஒரு பத்திரிகையாக நடந்து கொள்ளும் பாரம்பரியத்துடன் செயற்பட்டு வருகின்றது.

டி.ஆர். விஜேவர்தன அன்று இட்ட உறுதியான அடித்தளம்தான் இப்பத்திரிகை எட்டு தசாப்தங்கள் கடந்தும் தொடராக வெளிவர முக்கிய பங்காற்றி இருக்கின்றது. அத்தோடு தினகரனுக்கு வாசகர்கள் அளித்து வரும் ஆதரவும் ஒத்துழைப்பும் பெரும் பலமாகவும் உள்ளது. இந்த இரண்டு விடயங்களும் தினகரனின் வளர்ச்சிக்கும் அதன் தொடரான வெளிவருகைக்கும் முக்கிய பங்காற்றிக் கொண்டிருக்கின்றன.

அதனால் தினகரனுக்கு வாசகர்கள் அளித்து வரும் ஆதரவும் ஒத்துழைப்பும் என்றும் மறக்கப்பட முடியாதவை. இவ்வாறான நிலையில் தமிழ் பேசும் நல்லுலகிற்கும் குறிப்பாக இலங்கைக்கும் நிறைய ஊடகவியலாளர்களையும் எழுத்தாளர்களையும் அளித்துள்ள தினசரியாக விளங்கும் இப்பத்திரிகை, இந்நாட்டின் புதிய தலைமுறையினருக்கு இடமளித்து நிறைய எழுத்தாளர்களை உருவாக்கியுள்ளது. இந்நாட்டு எழுத்தாளர்களில் தினகரனில் எழுதாதவர்கள் மிக அரிதானவர்களே. அந்தளவுக்கு எழுத்தாளர்களுக்கு களம் அமைத்துக் கொடுத்திருக்கும் பத்திரிகையே இது.

இவ்வாறு தமிழ் பேசும் மக்களின் அறிவியல் மேம்பாட்டுக்கு பாரிய பங்களிப்பை நல்கியுள்ள தினகரன், தமிழ் பேசும் நல்லுலகின் சமூக, கலாசார, கலை, இலக்கிய, அரசியல், பொருளாதாரம், அறிவியல் உள்ளிட்ட அனைத்து துறைகளது வளர்ச்சியிலும் அளப்பரிய செல்வாக்கை செலுத்தியுள்ளது.



- ஊடகத் துறையின் தாய்வீடு லேக்ஹவுஸில் இருந்து என்றும் மிடுக்குடன் வெளிவருகின்ற தினகரன்
- இலங்கை தமிழ் ஊடக வரலாற்றில் அழியாத் தடம் பதித்துள்ள பத்திரிகை




சுதந்திரத்தின் தேவை மற்றும் முக்கியத்துவம் தொடர்பில் மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் நடவடிக்கைகளும் இப்பத்திரிகைகள் ஊடாக முன்னெடுக்கப்பட்டுக் கொண்டிருந்தது. ஆனால் சுதந்திரத்திற்காக உள்நாட்டில் முன்னெடுக்கப்படும் நடவடிக்கைகள் குறித்த செய்திகள், தகவல்கள் இந்நாட்டு தமிழ் பேசும் மக்களுக்கு கொண்டு செல்லப்படாத நிலைமை காணப்பட்டதோடு, சுதந்திரத்தின் தேவை மற்றும் முக்கியத்துவம் குறித்து ஊடக ரீதியில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் நடவடிக்கைகளும் கூட முன்னெடுக்கப்படாத நிலைமை நிலவியது. அன்றைய சூழலில் வெளிவந்து கொண்டிருந்த தமிழ்மொழிப் பத்திரிகையும் இந்திய சுதந்திரப் போராட்டம் குறித்த தகவல்களையும் செய்திகளையுமே முக்கியத்துவம் அளித்து இந்நாட்டு தமிழ் பேசும் மக்களுக்கு வழங்கிக் கொண்டிருந்தது.

அதனால் இவ்வெற்றிடத்தை நிரப்பி, உள்நாட்டின் சுதந்திரத்திற்காக முன்னெடுக்கப்படும் நடவடிக்கைகள் குறித்த செய்தி, தகவல்களை தமிழ் பேசும் மக்களுக்கு கொண்டு செல்லுதல், அவர்கள் மத்தியில் சுதந்திரத்தின் தேவை மற்றும் முக்கியத்துவம் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துதல், தேசிய ஐக்கியத்தைக் கட்டியெழுப்புதல் ஆகிய உயர் நோக்கங்களோடு அமரர் டி.ஆர். விஜேவர்தன இப்பத்திரிகையை ஆரம்பித்தார். அதனால் தனித்துவத்துடன் தேசியத்துவம் மிளிரும் பத்திரிகையாகத் தினகரன் திகழ்வதற்கு அவர் வழிவகுத்தார்.

தேசிய ஒருமைப்பாடு இப்பத்திரிகையின் அடிநாதமாக விளங்கியது. இதன் ஊடாக இந்நாட்டில் புதிய இலக்கிய பாரம்பரியமொன்று உருவாக

சட்டங்களால் தினகரன் பல்வேறு சவால்களை சமாளிக்க வேண்டிய நிலைக்கு உள்ளானது. ஏனெனில் தினகரன் எல்லா விடயங்களையும் தேசிய கண்கொண்டு நோக்கியதன் விளைவாகவே இவ்வாறான சவால்களுக்கு முகம் கொடுக்கும் நிலைமை ஏற்பட்டது. இச்சட்டங்களால் இந்நாட்டின் தமிழ் பேசும் மக்கள் பாதிப்புகளுக்கும் தாக்கங்களுக்கும் உள்ளாகினர்.

இருந்தும் இச்சட்டங்களால் உருவான சூழ்நிலைகளை தினகரன், தமிழ் பேசும் மக்களிடமிருந்து தூரமாகிடாத வகையில் இராஜதந்திர முறையில் அணுகியமை விஷேடமானதாகும்.

1947 இல் நடைபெற்ற பொதுத்தேர்தலில் 07 பேர் இந்திய வம்சாளி மக்கள் பிரதிநிதிகளாகப் பாராளுமன்றத்திற்கு தெரிவாகினர். அதனால் இந்திய வம்சாளி மக்கள் ஐக்கிய தேசியக் கட்சிக்கு வாக்களிக்கவில்லை எனக் குறிப்பிட்டு அதற்கு வஞ்சம் தீர்ப்பதற்காகவே இந்த பிரஜா உரிமை சட்டம் கொண்டு வரப்பட்டு அம்மக்கள் நாடற்ற பிரஜைகளாக்கப்பட்டனர். இச்சட்டத்திற்கு அகில இலங்கை தமிழ் காங்கிரஸும் ஆதரவு நல்கியது. அதன் விளைவாக சமஷ்டி கட்சி உருவானது.

அதனால் அகில இலங்கை தமிழ் காங்கிரஸுக்கும் அதன் தலைவர் ஜி.ஜி பொன்னம்பலத்துக்கும் தமிழ்ப் பத்திரிகை பிரசாரம் தேவைப்பட்டது. அதன் விளைவாக பொன்னம்பலம், நாதன் என்பவரை லேக் ஹவுஸ் நிறுவனத்திற்கு கொண்டு வந்தார். அவரை ஆசிரியராகக் கொண்டு 'தினகரன் வாரமஞ்சரி' ஆரம்பிக்கப்பட்டது. நாதன் தினகரனின் வளர்ச்சிக்கும் உள்நாட்டு இலக்கிய பாரம்பரியத்துக்கும் பெரிதும் உதவினார்.

ஆனாலும் பண்டிதமணி கணபதிப்பிள்ளை, சோ. இளமுருகனார், சோமசுந்தரப் புலவர், எப். எக்ஸ். சி. நடராஜா போன்ற ஒரு சிலருக்குத்தான்

தன்மையுடன் மிளிர வேண்டும் என டி.ஆர். விஜேவர்தன அவருக்கு ஆலோசனை வழங்கி இருந்தார்.

இதேவேளை பிரதமர் எஸ்.டப்ளியூ.ஆர்.டி. பண்டாரநாயக்க அறிமுகப்படுத்திய சிங்களம் மட்டும் சட்டம் அறிமுகப்படுத்தப்பட்டதோடு குடிவரவு குடியகல்வு சட்டம், அந்நிய செலாவணி சட்டம் என்பன கடுமையாக அமுல்படுத்தப்பட்டன. தேசிய மயமாக்கலும் தீவிரமாக முன்னெடுக்கப்பட்டது. இவற்றின் விளைவாக இந்நாட்டில் பல துறைகளிலும் பணியாற்றி வந்த இந்தியர்கள் தாயகம் திரும்பினர். அவர்களில் தினகரனில் பணியாற்றியவர்களும் அடங்குவர்.

இதன் காரணத்தினால் முற்றிலும் உள்நாட்டவர்களை கடமைக்கு அமர்த்த வேண்டிய நிலைமை தினகரனுக்கு ஏற்பட்டது. இந்நிலையில் இலங்கை பல்கலைக்கழக பட்டதாரிகள் தினகரனுக்கு சேர்த்துக் கொள்ளப்பட்டனர். அவர்களில் மாவிட்டபுரம் த. சண்முகசுந்தரம், க.கைலாசபதி, சி.

மொழிபெயர்ப்பு கட்டுரைகள் என பல புதிய தளங்களுக்கு களப் பரப்பையும் விரிவுபடுத்தி வெளிவர ஆரம்பித்தது.

இவை தினகரன் மேலும் மக்கள்மயப்பட வழிவகுத்தது. அவருக்கு பின்வந்த ஆசிரியர்களும் தினகரனின் வளர்ச்சியிலும் ஊடக, கலை, இலக்கிய மேம்பாட்டிலும் அதிக அக்கறை செலுத்தினர். 1973 ஜுன் 22 ஆம் திகதியின் பின்னர் தினகரன் உள்ளிட்ட லேக்ஹவுஸ் நிறுவன வெளியீடுகள் அரச கட்டுப்பாட்டில் மாறின. என்றாலும் டி.ஆர். விஜேவர்தன இட்ட தேசியத்துவ அடித்தளத்திலேயே ஆரம்பம் முதல் பயணித்துக் கொண்டிருக்கும் தினகரன் காலத்திற்குக் காலம் வாசகர்களின் எதிர்பார்ப்புக்கு ஏற்ப பல்வேறு புதிய அம்சங்களையும் தாங்கிய வண்ணம் வெளிவந்து கொண்டிருக்கின்றது.

இவ்வாறு தேசியத் தன்மையுடன் வெளிவந்து கொண்டிருப்பதால் சிங்கள மக்கள் வாழும் பிரதேசங்களில் கூட தினகரன் பத்திரிகையைப் பெற்றுக்

அத்தோடு இப்பத்திரிகையில் வெளியான கட்டுரைகள் ஜனாதிபதி, பிரதமர் விருதுகள் உள்ளிட்ட பல தேசிய விருதுகளையும் பெற்று தனித்துவம் மிக்க தேசிய பத்திரிகையாக தினகரன் திகழுகின்றது.

இந்நாட்டு வரலாற்றில் அழியாத் தடம் பதித்துள்ள பத்திரிகையாகவும் திகழுகின்றது தினகரன் என்றால் அது மிகையாகாது.



மர்லின் மரிக்கார்...

# இலங்கை எழுத்தாளர்களை இலக்கிய உலகுக்கு அறிமுகம் செய்தவர் கைலாசபதி

ஏரிக்கரை பத்திரிகை (Lake House) என வர்ணிக்கப்படும் தினகரன் 1932 ஆம் ஆண்டு முதல் நாளிதழாக வெளியாகியது. 23.05.1948 ஆம் திகதியன்று தனது முதலாவது தினகரன் வாரமஞ்சரியை தமிழ் வாசகர்களுக்கு அறிமுகப்படுத்தியது.



ஆங்கில, சிங்கள ஏடுகளையும் சஞ்சிகைகளையும் வெளியிட்டு வரும் ஏரிக்கரையிலிருந்து இயங்கும் Lake House என்ற பெரிய நிறுவனத்தின் ஒரே ஒரு தமிழ்த் தினசரியாக தினகரன் விளங்கியது.

இப்பத்திரிகை வெளிவரத் தொடங்கிய காலகட்டத்தில் மற்றும் ஒரு இந்திய ஊடகம் என்ற மாயைதான் இலங்கை வாசகர்களிடம் உருவாகியிருந்தது. தினகரனை இலங்கையின் தமிழ்த் தேசியப் பத்திரிகையாக்கிய பெருமை பேராசிரியர் க. கைலாசப

தியையே சாரும். இவருக்கு முன்னர் நாதன் தினகரன் ஆசிரியராகப் பணியாற்றினார்.

பல்கலைக்கழகத்திலிருந்து தமிழ்ச் சிறப்பு பட்டதாரியாக அவர் முதல் வகுப்பில் சித்தியெய்திய பின்னர், அன்று உயர்வாக மதிக்கப்பட்ட அரச நிர்வாகப் பதவியொன்றைத் தேடியிருக்கவோ அல்லது உயர் கல்வி ஆராய்ச்சித்துறையில் இந்நாட்டிலோ வெளிநாடு சென்றோ ஆரம்பத்திலேயே உயரத்துக்கு வந்திருக்க கூடும். ஆனால், கைலாஸ் அவ்வாறு செய்யாது பத்திரிகையுள் புகுந்தார். அதனை வருவாய்க்கு வழியாக அன்றி, அந்த வாய்ப்புகளை தமிழுலகுக்கு உகந்தவாறு பயன்படுத்துவதில் கைலாஸ் குறியாயிருந்தமை தெளிவாகும்.

கைலாஸ் பத்திரிகைத்துறையுள் புகுந்த காலம் மேலைத்தேய நாகரிகமும் ஆங்கில மொழியும் தம் ஆதிக்கத்தை இழக்கத் தொடங்கிய காலம். பொருளாதார அரசியல் துறைகளில் மட்டுமின்றிப் பண்பாட்டுத் துறையிலும் அந்நிய ஆதிக்கம் தளரத் தொடங்கிய காலம்.

தினகரனில் அவ்வேளையில் கதைகள் படைத்தவர்கள் சென்னை மவுண்ட் ரோட்டையும் மெரீனா பீச்சையும் பகைப்புலமாகக் கொண்டு எழுதினார்கள். இதனால் அன்றைய ஈழத்து தமிழ்த் தேசிய படைப்பிலக்கியம் தேக்கம் கண்டது. அதனை உடைத்தெறிந்தவர்தான் கைலாசபதி.

இவர் ஈழத்து எழுத்தாளர்களுக்கு தினகரனில் களம் தந்து ஊக்கமளித்தார். பத்திரிகையின் செல்நெறியை வகுத்தார். பாரதி தொடர்பாக ஏராளமான ஆய்வுகள் மேற்கொண்டவர். இருமகாகவிகள், பாரதி இயல் ஆய்வுகள் முதலான இவரது நூல்கள் குறிப்பிடத்தக்கவை. கைலாசபதிக்குப் பின்னர்,

## தினகரன் எழுச்சியில் பேராசிரியரின் வகிபாகம்

தினகரன் ஆசிரியராக பொறுப்பேற்ற இ. சிவகுருநாதன், யாழ்.பல்கலைக்கழகத்தில் முதுகலைமாணிப் பட்டம் பெறுவதற்காக சமர்ப்பித்த ஆய்வில், "தேசிய இலக்கியம் உருப்பெற்று வளர்ச்சிகாண கைலாசபதி களம் அமைத்துக் கொடுத்தார்" என்று குறிப்பிட்டிருப்பதை பேராசிரியர் தில்லைநாதன் ஊடாக நாம் அறிகின்றோம்.

கைலாசபதி, தான் மாத்திரம் வளராமல், தன்னைச் சூழ இருந்தவர்களையும் வளர்த்தெடுத்தார். அவர்கள் பத்திரிகையாளர்களாயினும் படைப்பாளிகளாயினும் கலைஞர்கள், ஓவியர்கள், கார்ட்டூனிஸ்ட்டுகளாயினும் சிற்றிதழ்காரர்களாயினும் அவர்கள் அனைவரும் தத்தமது துறைகளில் ஆரோக்கியமாக வளர்வதற்கு உற்ற துணையாக விளங்கியவர்.

கைலாசபதியும் பாரதியைப் போன்றே தமக்கு நெருக்கமான இலக்கிய நண்பர்களிடம் கருத்துப் பரிமாறி பணிகளையும் ஒப்படைப்பார்.

யார் யார் தினகரனில் என்ன என்ன எழுத வேண்டும், எத்தனை நாளில் அவற்றை ஆசிரிய பீடத்தில் கொடுக்க வேண்டும் என்று அந்த மின்னஞ்சல் யுகமில்லாத காலத்திலேயே பத்திரிகை ஆசிரியர் பாரதியைப் போன்றே இயங்கியவர் அவர். கைலாசபதிக்குப் பின்னர், தினகரன் ஆசிரியப் பொறுப்பை ஏற்ற இ.சிவகுருநாதன் இங்கு நீண்ட காலம் பணியாற்றிய மூத்த பத்திரிகையாளராவார்.

இலங்கை உழைக்கும் பத்திரிகையாளர் சங்கத்தின் தலைவராக 1981 இல் தெரிவான சிவகுருநாதன், அதன் பின்னர் 1983_ 84 காலப் பகுதியிலும் அந்தப் பதவியை வகித்தவர்.

தினகரன் வாரமஞ்சரியும் காலத்துக்குக் காலம் பாரதி ஆய்வுகளை வெளியிட்டும் மறுபிரசுரம் செய்தும் வந்திருக்கின்றன. ரஷ்ய எழுத்தாளர் ஏ. ஷெலிஷேவ், கைலாசபதி, செ. கணேசலிங்கன், இளங்கீரன், சி.மௌனகுரு, சொக்கன், க. நவசோதி, மு.கனகராசன், மு. சடாட்சரன், வேல் அமுதன், அராலி வெ.சு. நடராசா, அன்புமணி, க.கந்தசாமி, அந்தனிஜீவா, பொன்னி ஆனந்தன், சகுந்தலா நல்லையா, ஏ. இக்பால், தமிழக எழுத்தாளர் ராஜம் கிருஷ்ணன் ஆகியோரின் பாரதி பற்றிய ஆக்கங்களும் ஸ்ரீதேவகாந்தன், ஷெய்கு இஸ்ஸதீன், மு. துரைசாமி, பாண்டியூரான், வளவை வளவன், சி. ஆறுமுகம் முதலான பலரின் கவிதைகளும் பாரதி நூற்றாண்டு காலத்தில் தினகரன் வாரமஞ்சரியை அலங்கரித்திருக்கின்றன.

பாரதி நூற்றாண்டு காலத்தில்தான் பேராசிரியர் கைலாசபதி கொழும்பு அரசினர் மருத்துவமனையில் 1982 டிசம்பர் மாதம் 6 ஆம் திகதி காலமானார்.

அவர் அதற்கு சில தினங்களுக்கு முன்னர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்தார்.

அவர் மறைவதற்கு முதல்நாள் டிசம்பர் 5 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை தினகரன் வாரமஞ்சரியில் கைலாசபதி எழுதியிருந்த 'பாரதியின் புரட்சி' என்ற கட்டுரையை சிவகுருநாதன் வெளிவரச் செய்திருந்தார்.

கைலாசபதி மருத்துவமனைக் கட்டிலிலிருந்து அதனையும் பார்த்துவிட்டுத்தான் நிரந்தரமாக கண்களை மூடிக் கொண்டார் என்பது துயரமான தகவல்.



லெ.முருகபூபதி...

(எழுத்தாளர், மூத்த பத்திரிகையாளர்)

# மேடுகள், பள்ளங்கள் நிறைந்த பாதையில் துவண்டு விடாமல் தினகரனின் வீறுநடை



பல்வேறு சவால்களையும், மேடுபள்ளங்களையும் கடந்து, தனது சாதனைப் பயணத்தில் 89 ஆண்டுகளைக் பூர்த்தி செய்துள்ள தினகரன் பத்திரிகைக்கு நிகராக மற்றொரு பத்திரிகையை குறிப்பிட முடியவில்லை. கடந்த 89 வருடங்களாக துவண்டு விடாமல் வெற்றியுடன் வீறுநடை போடுகின்ற தினகரனுக்கு நிகர் தினகரனே.

பத்திரிகைகள் பொதுவாக வர்த்தக நோக்கில் ஆரம்பிக்கப்பட்ட போதும், தினகரன் பத்திரிகை அவ்வாறு ஆரம்பிக்கப்பட்டதல்ல. 1932ஆம் ஆண்டு காலப் பகுதியில் இலங்கையர்களின் உரிமைகளையும், உணர்வுகளையும் தமிழ் பேசும் மக்களின் காலடிக்குக் கொண்டு செல்வதற்கான ஊடகத் தேவையொன்று ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் உணரப்பட்டது. அதனைப் பூர்த்தி செய்து கொள்ளும் பொருட்டு, அன்றைய ஊடக இடைவெளியை நிரப்புவதற்கான பிரதான பத்திரிகையாக தினகரனின் வருகை அமைந்ததாக இலங்கையின் மூத்த எழுத்தாளர்கள் மற்றும் வாசகர்கள் கூறியுள்ளனர்.

இலங்கையில் பத்திரிகைத் துறையின் உதயத்துக்கு வித்திட்டவரும், லேக்ஹவுஸ் நிறுவனத்தின் ஸ்தாபகரும், இலங்கையின் சுதந்திரப் போராட்ட வீரருமான அமரர் டி.ஆர். விஜேவர்த்தன அவர்கள், ஊடகத்துறையின் முக்கியத்துவத்தை உணர்ந்ததன் விளைவாகவும், சுதந்திரத்தின் தேவையையும் அதன் முக்கியத்துவத்தையும் மக்களுக்கு கொண்டு செல்லும் பொருட்டும் பத்திரிகை ஒன்றை நடத்த உறுதி பூண்டார்.

இதற்காகவே அவர் இங்கிலாந்தில் படிக்கும் காலத்தில் பல்வேறு பத்திரிகை நிறுவனங்களுக்கும் சென்று ஊடகத்துறை சம்பந்தப்பட்ட பல்வேறு விடயங்களை அறிந்து கொண்டார். டி.ஆர். விஜேவர்தன இலங்கை வந்ததும் நலிவுற்ற நிலையில் காணப்பட்ட, எச்.எஸ்.பெரேரா அவர்களால் 1909 முதல் நடத்தப்பட்டு வந்த சிங்களப் பத்திரிகையை 1914ம் ஆண்டு தனதாக்கிக் கொண்டார்.

லண்டனில் வெளியான 'டெய்லி நியுஸ்' பத்திரிகைக்கு ஒத்தமைந்ததான 'டெய்லி நியூஸ்' எனும் பத்திரிகையை இலங்கையில் 1918.01.03 ஆம் திகதி முதல் வெளியிட்டார். அதன் பின்னர், கிராமப்புற மக்களுக்கு சிங்கள மொழியில் ஒரு பத்திரிகை தேவை என்ற தாகத்தை உணர்ந்த அவர் 1923 இல் 'தினமின' எனும் சிங்களப் பத்திரிகையை ஆரம்பித்தார்.

இந்த நேரத்தில் நாட்டின் ஒருமைப்பாடு, சுதந்திர போராட்டம் போன்றவற்றில் தமிழ் பேசும் மக்களையும் இணைக்கும் எண்ணமும் அவரிடம் காணப்பட்டன. ஒன்றுபட்ட நாடக எம்நாடு திகழ வேண்டும் என்ற நோக்கம் காரணமாக தமிழ்மொழி பத்திரிகையின் தேவையை அவர் உணர்ந்தார். இதுவே 1932.03.15 இல் வெளியான 'தினகரன்' பத்திரிகையின் வரவுக்குக் காரணமாகும். இன்றளவிலும் பிரமிக்கத்தக்க பத்திரிகையின் வரவுக்கு காரணமாக இருந்தது அவரது சிந்தனைகளே.

## ஊடக தர்மம் பேணியவாறு, நவீனங்களையும் தன்னகத்தே உள்வாங்கிக் கொண்ட பத்திரிகை

அன்றிலிருந்து தினகரன் வெளிவரத் தொடங்கியது. அது இப்போது, முழுமையடைந்த நிலையில் மார்பினை நிமிர்த்தி 89வது வருடங்களைக் கடந்து வீறுநடை போடுகின்றது.

தினகரன் ஆரம்பித்த காலத்தில் மயில்வாகனம் இராமநாதன் அவர்களின் தலைமையில் முன்னேற்றப் பாதையில் பல்வேறுபட்ட பெரும் கலைஞர்களை தன்னகத்தே வைத்திருந்தமை இதன் சிறப்பம்சமாகும். அந்த வரிசையில் மயில்வாகனம் இராமநாதன் அவர்களைத் தொடர்ந்து ஈஸ்வர ஐயர், கிருஷ்ண ஐயர், ரி.எஸ்.தங்கையா மற்றும் ஏ.மு.பி. நாதன் ஆகியோரும் இப்பத்திரிகையை தலைமை தாங்கி நடத்தி வந்தனர்.



ஒரு தாயிடம் இருந்து ஒரு பிள்ளை தனக்குத் தேவையான சகல விடயங்களையும் கற்றுக் கொள்வது போல தினகரனிடமிருந்து வாசகர்கள் தங்களுக்குத் தேவையான அனைத்தையும் பெற்றுக் கொள்ளும் அளவுக்கு சகல விடயங்களையும் உள்ளடகியதாக அமைந்துள்ளது தினகரன்.

அக்காலத்தில் இலங்கையில் வெளியிடப்பட்ட தமிழ்ப் பத்திரிகையாக தினகரன் இருந்த போதிலும், வாசகர்களுக்கும் அதனோடு தொடர்புடைய ஊடகத்துறையை சாந்தோருக்கும் இப்பத்திரிகையில் தென்னிந்திய இலக்கியமும் அதன் கலை கலாசாரத்தையும் நுகர்ந்த உணர்வுகள் இருந்ததாக பல்வேறு ஊடகத்துறை ஆய்வாளர்கள் கருத்து தெரிவித்துள்ளனர்.

1959ம் ஆண்டின் பின்னர்தான் இப்பத்திரிகையின் மூலம் ஈழத்து வாசம் உணர்த்தப்பட்டதாகவும், ஈழத்து கலைஞர்களின் பங்கேற்பு பெறப்பட்டதாகவும் கருத்துகள் வெளிவந்தன.

மலேசியாவின் கோலாலம்பூரில் பிறந்து ஈழத்தில் கல்வி கற்று, தனது படிப்பை முடித்தவுடன் பத்திரிகைத் துறைக்கு தன்னை அர்ப்பணித்த பேராசிரியர் க.கைலாசபதி அவர்களின் வருகையின் பின்னர்தான் தினகரன் ஒரு புதுப் பொலிவு பெற்றது மாத்திரமன்றி, 1959இன் பின்னர் தமிழ் பத்திரிகைத் துறையின் பொற்காலம் எனவும் வர்ணிக்கப்பட்டது.

தென்னிந்திய கலை, கலாசாரங்களுக்கு பதிலாக ஈழத்து இலக்கியத்திற்கு தனித்துவமான பாதையமைத்து ஈழத்து கலை, கலாசாரங்களுக்கு முக்கியத்துவமளித்ததோடு, ஈழத்து கலைஞர்களை ஊக்குவித்து அவர்களை வளர்த்து விட்ட பெருமை தினகரனை அலங்கரித்த பேராசிரியர் க.கைலாசபதி அவர்களையே சாரும்.

இதன் பின்னர் 1956இருந்து தினகரனின் துணை ஆசிரியராக கடமையாற்றிய இ.சிவகுருநாதன் அவர்கள் தலைமையாசிரியராக பெறுப்பேற்று மேலும் இப்பத்திரிகை வளர்ச்சிக்கு மிகவும் பங்களிப்பு செய்தார். இதனைப் போலவே கே.சிவப்பிரகாசம், து.சிவப்பிரகாசம், எஸ்.பாலச்சந்தர் ஆகியோரும் இப்பத்திரிகை வளர்ச்சியடைய பெரிதும் ஒத்துழைப்பு வழங்கினர். சுதந்திர உணர்வுகளையும் தாகத்தையும் சுமந்து செல்ல உருவாக்கப்பட்ட தினகரன் தனது பயணத்தில் சோதனைகளையும் வேதனைகளையும் சந்தித்து வந்திருந்தாலும் தனது தனித்துவத்தை ஒருபோதும் விட்டுக் கொடுத்து விடாது, பத்திரிகைத் துறையின் விழுமியங்களுக்கும் செல்நெறிகளுக்கும் கட்டுப்பட்டதாக பத்திரிகை தர்மத்தை இன்று வரை பேணிப் பாதுகாத்து வருகின்றது.

இலங்கையில் இடம்பெற்ற 30 வருட கால யுத்தம், பல்வேறு வகையான அனர்த்தங்கள், இனநெருக்கடிகள் போன்ற இக்கட்டான காலகட்டத்திலும் தனது பாதையில் சிறிதும் தடம் புரளாது உண்மையை உரைத்து வந்த ஒரேயொரு பத்திரிகை தினகரன் என நாம் பெருமிதம் கொள்ளலாம்.

இணையம் இல்லாத அன்றைய காலத்தில் தனது பயணத்தை திறம்பட மேற்கொண்ட இப்பத்திரிகை, இன்று உலகத்தில் நிகழ்ந்து கொண்டிருக்கின்ற, தொழில்நுட்ப மாற்றங்களுடன் தன்னையும் இணைத்துக் கொண்டுள்ளது.

நவீனத்துக்கு தன்னை தயார்படுத்தி, சற்றேனும் குறைவில்லாது, உலகளாவிய ரீதியில் தன்னை நிலைப்படுத்தி, இன்னும் அதே கம்பீரத்துடன் எம்மத்தியில் வலம்வரும் தினகரனுக்கு நிகர் எதுவும் இல்லை.

உண்மை, நேர்மையான பயணம், இனங்களுக்கிடையிலான சகோதரத்துவத்தையும் சமத்துவத்தையும் பேணக் கூடிய நிலை, பக்கச்சார்பின்றிய நகர்வு, பாராபட்சமற்ற போக்கு ஆகியனவையே ஏரிக்கரைப் பத்திரிகை என வர்ணிக்கப்படும் தினகரனின் அசுர சாதனைக்கு வழிகோலியுள்ளது எனலாம். இவ்வாறே தனது பணியில் வெற்றி கண்டு, தொடந்தும் பயணித்து, நூற்றாண்டையும் தாண்டி வீறுநடை போடுமென்பதில் ஐயமில்லை.'வாழ்க தினகரன்! வளர்க அதன் பணி!!'.



ஏ. எஸ். எம். பாயிஸ்...
திட்டமிடல் பணிப்பாளர்,
சுகாதார அமைச்சு, கி.மா

# ஈழத்து இலக்கிய தலைமுறையை தோற்றுவித்த முன்னணி தினசரி



இலங்கையின் நீண்ட காலப் பெருமை வாய்ந்த தமிழ் தேசியப் பத்திரிகையான தினகரன் இன்று தனது 89 வது வருட பிறந்த தினத்தைக் கொண்டாடுகின்றது.

ஆங்கிலேயர் ஆட்சியின் போது சுதந்திரப் போராட்டத்தில் ஊடகங்களைப் பயன்படுத்தும் முறைமை அறிமுகமானது. ஊடகங்கள் ஊடாக மக்கள் மத்தியில் சுதந்திர வேட்கையை விதைக்கவும், அதன் அவசியத்தை ஆக்கிரமிப்பாளர்களுக்குக் கொண்டு செல்லவும் முடியும் என்ற நம்பிக்கை தோன்றியது. இதற்கு அமரர் டி.ஆர். விஜேவர்தன முன்னோடியாக அமைந்தார்.

1914 இல் 'தினமின' பத்திரிகையை அவர் வெளியிடத் தொடங்கினார். சிங்கள மொழியிலான இப்பத்திரிகைக்கு கிடைக்கப் பெற்ற ஆதரவும் வரவேற்பும் சொற்ப காலத்தில் ஆங்கில மொழிப் பத்திரிகையை ஆரம்பிக்க அவரை இட்டுச் சென்றது.

இவ்வாறான நிலையில், இந்நாட்டின் சுதந்திரத்தின் தேவையையும், அதற்காக முன்னெடுக்கப்படுகின்ற நடவடிக்கைகளையும் இந்நாட்டில் வாழும் தமிழ் பேசும் மக்கள் மத்தியிலும் கொண்டு செல்லவும், அதனூடாக சுதந்திரத்தின் முக்கியத்துவத்தை முழுநாட்டிலும் ஏற்படுத்துவதையும் ஒரே நோக்காகக் கொண்டு 1932.03.15 அன்று தினகரன் தினசரியை அமரர் டி.ஆர். விஜேவர்தன ஆரம்பித்தார்.

இலங்கையின் முதலாவது தமிழ் தினசரியாக 1930 முதல் வீரகேசரி வெளியான போதிலும், அன்று அப்பத்திரிகை முற்றிலும் இந்திய சுதந்திரப் போராட்டம் தொடர்பான செய்திகளையும், கட்டுரைகளையும் வெளியிடும் ஒன்றாகவே காணப்பட்டது. அதனால் இலங்கையின் விடுதலைக்காக முன்னெடுக்கப்படும் சுதந்திரப் போராட்டத்தை இந்நாட்டு தமிழ் பேசும் மக்களுக்குக் கொண்டு செல்வதற்கான ஊடகத்தின் தேவையும் வெற்றிடமும் நிலவியது.

இந்த தேவையை நிறைவு செய்யும் வகையில்தான் டி.ஆர். விஜேவர்தன தினகரன் தினசரியை ஆரம்பித்தார். உள்நாட்டில் வாழும் தமிழ் பேசும் மக்களின் சமய, கலாசார மொழிப் பாரம்பரியங்களின் ஊடாக இந்நாட்டின் சுதந்திரப் போராட்ட நடவடிக்கைகளைத் தமிழ் பேசும் மக்களுக்கு கொண்டு செல்வதே இப்பத்திரிகையின் பிரதான நோக்கமாக இருந்தது. அந்நோக்கத்தை ஆரம்பத்திலேயே நிறைவு செய்ய முடியவில்லை. ஏனெனில் பத்திரிகைத் துறையில் பரிச்சயம் மிக்கவர்களை உள்நாட்டில் பெற்றுக் கொள்வதில் ஏற்பட்ட சிரமம் காரணமாக தினகரனில் கடமையாற்றவென பத்திரிகை ஆசிரியர் உட்பட உதவியாசிரியர்களையும், ஊழியர்களையும் தமிழகத்தில் இருந்து தருவிக்க வேண்டிய நிலைமை அமரர் டி.ஆர். விஜேவர்தனவுக்கும் ஏற்பட்டது.

தினகரனும் ஆரம்ப காலப் பகுதியில் தென்னிந்தியப் பத்திரிகைகளின் சாயலிலேயே வெளிவந்தது. பத்திரிகையின் மொழிநடை, மொழிப் பிரயோகம் என்பவற்றில் தமிழகத்தின் தாக்கம் அதிகமாகக் காணப்பட்டது. ஆனாலும் உள்நாட்டு எழுத்தாளர்களின் ஆக்கங்களுக்கும் தினகரன் களம் வழங்கத் தவறவில்லை.

1932. 03. 15 அன்று வெளியான தினகரனின் முதலாவது இதழில் பத்திரிகையின் நோக்கத்தை டி.ஆர். விஜேவர்தன மிகத் தெளிவாகக் குறிப்பிட ஏற்பாடு செய்தார். 'நமது நோக்கம்' என்ற தலைப்பில் வெளியான அத்தலைப்பில், 'இப்பத்திரிகை யாருக்காக பிரசுரம் செய்யப்படுகின்றதோ அவர்கள் மீது வைக்கும் நம்பிக்கைப் பொறுப்புக்கு நாம் பாத்திரங்களாகவிருப்பதற்கு மனப்பூர்வமாக முயல்வோம்.

இலங்கையிலேனும், வேறெந்த நாட்டிலேனும் உள்ள கட்சிக்காரர்களில் எவராவது ஒரு கட்சியினரின் முகமனைப் பெறுவது எமது நோக்கமல்ல. எமது பத்திரிகை கட்சி பேதங்களுக்கு அப்பாற்பட்டதாகும். எவராவது ஒருவருக்கு மாத்திரம் பணியாற்றுவதற்கன்றி ஏதாவது விஷேட உரிமைகளைப் பாதுகாப்பதற்கு இது தோன்றியதன்று. தமிழ்ப் பாஷையைப் பேசும் மக்கள் எவரெவரோ அவரவர்களின் நலவுரிமைகளைப் பாதுகாப்பதே இப்பத்திரிகையின் பெரும் பணியாகும். ஆகவே எல்லோருக்கும் பொதுவாக நன்மை பயக்கத்தக்க நீதியான வழியிலேயே நடப்பது எமது நோக்கமாகும்' என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த நோக்கத்தின் அடிப்படையில்தான் தினகரன் தினப் பத்திரிகை ஆரம்பம் முதல் பணி புரிந்து வருகின்றது. ஆரம்ப காலப் பகுதியில் செய்திகளுக்கு மேலதிகமாக கட்டுரை இலக்கியத்திற்கு தினகரன் அதிக முக்கியத்துவம் அளித்தது. ஏனெனில் இந்திய சுதந்திரப் போராட்டம், டொனமூர் ஆணைக்குழுவின் யோசனைகளுக்கு இலங்கையர் காட்டிய எதிர்ப்பு, சர்வதேச அரசியல் நிலைமை என்பவற்றைத் தெளிவாக வெளிப்படுத்துவதற்கு கட்டுரை வடிவம் ஏற்றதாக இருந்ததே இதற்கான காரணமாகும். அதேநேரம் சுதந்திரப் போராட்டச் செய்திகள், கட்டுரைகள் உட்பட இலக்கிய படைப்புக்களையும் தினகரனில் வெளியிட டி.ஆர். விஜேவர்தன அடிக்கடி ஊக்கமளித்து வந்தார்.

> இன, மத பேதங்களுக்கு அப்பால் ' நாம் இலங்கையர்' என்பதே தினகரனின் தாரக மந்திரம்

கவிதை இலக்கியத்திற்கும் தினகரன் ஆரம்பம் முதலே இடமளிக்கத் தவறவில்லை. அதாவது 1932 இல் மகாத்மா காந்தி உண்ணாவிரதம் இருந்தார். அது இந்தியாவில் மாத்திரமல்லாமல் இலங்கையிலும் தாக்கத்தை ஏற்படுத்தியது. அதன் தாக்கத்தினால் மு. நல்லதம்பி புலவர் பத்துப் பாடல்களை எழுதினார். அப்பாடல்களை வெளியிட்டு தினகரன் அமோக வரவேற்பைப் பெற்றது.அத்தோடு தொடர்கதை, சிறுகதை, உரைநடை இலக்கியங்களுக்கும் தினகரன் இடமளித்தது. நாடகத்துறை வளர்ச்சிக்கும், சமய இலக்கிய மேம்பாட்டுக்கும் கூட தினகரன் ஆரம்ப காலம் முதல் பங்களிப்பு நல்கி வந்துள்ளது. அதன் பயனாக 1940 ஆகும் போது தமிழ்ப் பத்திரிகைத் துறையில் முன்னேற்றக் கொள்கையையும், தேசியத் தன்மையையும் முன்னெடுத்துச் செல்வதில் தினகரனால் பிரதான பாத்திரம் வகிக்க முடிந்தது.

1949 ஆகும் போது இலங்கைத் தமிழ் மொழி நடைக்கு பக்கத்திற்கு பக்கம் மாற்றம் பெற்றது தினகரன். இக்காலப் பகுதியில் இந்நாட்டு தமிழ் மொழி அறிஞர்களாக விளங்கிய பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை, பேராசிரியர் வி. செல்வநாயகம், இளமுருகனார், புலவர் மணி பெரியதம்பிப்பிள்ளை, நவாலியூர் சோமசுந்தரப் புலவர் உள்ளிட்ட பலரின் படைப்புகளுக்கும் தினகரன் இடம்கொடுத்தது.

மேலும் சு. வித்தியானந்தன் லண்டன் சென்று கலாநிதி பட்டம் பெற்றார். அவர் தம் லண்டன் பயணம் தொடர்பாக எழுதிய பயணக் கட்டுரையைத் தினகரன் வெளியிட்டது. அதுவே பயணக் கட்டுரை இலக்கியத்திற்கு முன்னோடியாக விளங்கியது. அத்தோடு உரைநடை இலக்கியத்தில் பெரும் மாற்றத்தை ஏற்படுத்தவென 1950 களில் தினகரன் முக்கிய பங்களிப்பை நல்கியது.

இந்நாட்டில் வாழும் தமிழ்பேசும் மக்களின் மனஉணர்வுகள், வாழ்வு முறை, பாரம்பரியம், அடிப்படை இயல்புகள், அவர்களது பேச்சு மொழி வழக்கு, பிரதேச உணர்வுகளின் ஊடாக வெளியிடப்பட வேண்டும் என்ற கருத்துருவம் ஒரு செழுமையான வடிவம் பெறத் தினகரனே முன்னோடியாக அமைந்தது.

இக்காலப் பகுதியில் தினகரனில் வெளியான கட்டுரைகள் அறிவுச் செறிவு மிக்கவையாக இருந்ததால் தினகரன் முன்னெடுத்து வந்த தேசியத்தன்மை, தேசிய இலக்கியப்பற்று, விடயச் செறிவு என்பனவும், புதிய அரசியல் போக்கும் புதிய கண்ணோட்டமும் புதிய இலக்கியப் பார்வையை 1956 இல் தமிழ்ப் படைப்பாளர்கள் மத்தியில் தோற்றுவித்தது.

இக்காலகட்டத்தில் பேராசிரியர் கைலாசபதி, இளங்கீரன் சுபைர், கே. டானியல், என். கணேசலிங்கன், புலவர்மணி ஆ.மு. ஷெரிப்தீன், எஸ். பொன்னுத்துரை, சொக்கன், டொமினிக் ஜீவா, என்.கே. ரகுநாதன், தாழையடி சபாரெத்தினம், நீர்வை பொன்னையன், வரதர், சிற்பி, சொக்கன், அ.ந. கந்தசாமி, சில்லையூர் செல்வராசன், அம்பி, பேராசிரியர் ம.மு. உவைஸ், இ. முருகையன், பேராசிரியர் கா. சிவத்தம்பி, கனக செந்திநாதன், அருள் செல்வம் போன்ற படைப்பாளர்கள் தேசிய இலக்கியம் என்ற கோட்பாட்டைத் தழுவி அடிக்கடி எழுதி வந்தனர். இவர்களது எழுத்தில் ஏற்பட்ட கவர்ச்சி, தினகரன் அளித்த ஊக்கம் என்பன காரணமாக புதிய தலைமுறை எழுத்தாளர்கள் உருவாக வழிவகுத்தது.

தேசிய இலக்கியமாக உருவெடுத்த ஈழத்து இலக்கியம், உலக இலக்கியங்களோடு தன்னைப் பரிச்சயம் செய்து கொள்ள வேண்டும்' என்ற சிந்தனை தோற்றம் பெற வழிவகுத்தது. அந்த வகையில் உலகின் சிறந்த நாவலாசிரியர்களின் படைப்பிலக்கியங்கள் குறித்து இலங்கை எழுத்தாளர்கள் தினகரனில் ஆய்வுகளை எழுதினர்.

எத்தனையோ தடைகளையெல்லாம் தாண்டி தினகரன் இந்நாட்டின் கலை இலக்கிய வளர்ச்சிக்கு தொடர்ந்தும் தனது பங்களிப்பை நல்கி வருகின்றது. இதன் பாசறையில் ஆரம்பம் முதல் இற்றைவரை நூற்றுக்கணக்கான கலை, இலக்கிய படைப்பாளர்களும் ஊடகவியலாளர்களும் உருவாகியுள்ளனர். அவர்கள் தொடர்ந்தும் உருவாக்கப்பட்டு வருகின்றனர்.



பாரதிதாசன்...

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிட்டட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2021 மார்ச் மாதம் 15ம் திகதி திங்கட்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.

# கேள்வி அறிவித்தல்

## கண்டி மாநகர சபை

கண்டி மாநகர சபையின் Firewall இல் License மற்றும் உத்தரவாத காலம் காலாவதியான காரணமாக மீண்டும் அந்த License மற்றும் அதனோடு சம்பந்தப்பட்ட சேவை ஒப்பந்தம் கொள்வனவு செய்வதற்காக கீழ்க்காணுமாறு தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள ஒப்பந்தக்காரர்களிடமிருந்து 2021.04.01ம் திகதி மு.ப. 09.30 வரை பொறியிடப்பட்ட கேள்விப் பத்திரங்கள் ஏற்கப்படும்.

2021.04.01 மு.ப. 10.00 இற்கு கண்டி மாநகர சபையில் கேள்விப் பத்திரங்கள் திறக்கப்படும்.

கேள்விகள் 02 பிரதிகளுடன் வேறுவேறு உறைகளில் இட்டு கேள்விகளை மூலப் பிரதி மற்றும் நகல் பிரதியென குறித்த கேள்வியின் பெயரைக் குறிப்பிட்டு சமர்ப்பிக்க வேண்டியதுடன், பதிவுத் தபாலில் அல்லது கையோடு கொண்டுவந்து அல்லது கண்டி மாநகர சபையின் நிதித் திணைக்களத்தின் பிரதான மாநகர கணக்காளரின் பொறுப்பில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும்.

| தொடர் இல | கேள்வி | தகைமைகள் | கேள்விப் பத்திர கட்டணம் ரூ. (வெட் உடன்) | கேள்விப் பிணை ரூ. | கேள்விப் பிணை |
|---|---|---|---|---|---|
| 01 | கண்டி மாநகர சபைக்காக Firewall இல் License மற்றும் உத்தரவாக் காலம் காலாவதியான காரணமாக மீண்டும் License மற்றும் அதனோடு சம்பந்தப்பட்ட சேவை ஒப்பந்தத்தை கொள்வனவு செய்தல். | Firewall பற்றிய 05 வருட அனுபவம் | 1080.00 | 50,000.00 | நீங்கள் சமர்ப்பிக்கும் கேள்வித் தொகையில் 10% செயற்பாட்டுப் பிணை |

கண்டி மாநகர சபையின் கணக்காளர் (வழங்கல்கள்) பிரிவில், 2021.03.15 முதல் 2021.03.31 மு.ப. 9.00 முதல் பி.ப. 2.45 வரை மட்டும் மேலதிக விபரங்களை அலுவலக நேரங்களில் கணக்காளர் வழங்கல்கள் (தொ.பே. இல. 081-2232071/ 0712994850) அல்லது துஷானி டி சில்வா (தொ.பே. இல. 081-2922222) இடம் பெற்றுக்கொள்ளலாம். கேள்வி மாதிரிகளைப் பெற்றுக்கொண்டு கேள்வி விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரிகளின் மற்றும் கேள்வி வழங்கப்பட்ட பின்பு ஒப்பந்தமொன்றிற்கு வருவதற்கு தவறும் கேள்விதாரர்களின் வைப்புத் தொகை சபைக்குரியதாக்கப்படும். எந்தக் கேள்விப் பத்திரத்தையும் ஏற்றுக்கொள்ளும் அல்லது நிராகரிக்கும் உரிமை சபைக்கு உரியது.

**அமில நவரத்ன**
**மாநகர ஆணையாளர்**
**கண்டி மாநகர சபை**
**2021.03.12**

# பெறுகை அறிவித்தல்

## ஊவா மாகாண கல்வித் திணைக்களம்

### குணவியல்புடனான கல்வி அபிவிருத்திக்காக உபகரணங்களைக் கொள்வனவு செய்தல் மற்றும் பாடசாலை உபகரணங்களுக்கு திருத்தவேலைகளைச் செய்தல்

ஊவா மாகாண கல்வித் திணைக்களத்தின் பெறுகைக் குழுத் தலைவராகிய என்னால் பாடசாலை கணனி இயந்திரங்கள் மற்றும் துணைப்பாகங்களைக் கொள்வனவு செய்வதற்காக முழுமையான திறனுடைய மற்றும் தகுதி வாய்ந்த கேள்விதாரர்களிடமிருந்து முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட கேள்விகள் இத்தால் கோரப்படுகின்றன.

| லொட் இல. | விபரம் | மதிப்பிடப்பட்ட தொகை ரூபா மில்லியன் | மீளளிக்கப் படாத கேள்விப் படிவக் கட்டணம் | கேள்விப் பிணை முறி (ரொக்கப் பணமாக செலுத்துவதானால் ரூபா | கேள்விப் பிணை முறி வங்கிப் பிணை முறியாக சமர்ப்பிப் பதானால் ரூபா |
|---|---|---|---|---|---|
| 01 | பாடசாலை சிறுவர் மேசைகள் / கதிரைகள் மற்றும் ஆய்வுகூட ஸ்டூல்களைக் கொள்வனவு செய்தல் | 9.0 மி.ரூ. | ரூ. 2000.00 | ரூ. 45000.00 | ரூ. 90000.00 |
| 02 | பாடசாலை மரத் தளபாடங்களில் திருத்தவேலைகள் | 9.0 மி.ரூ. | ரூ. 2000.00 | ரூ. 45000.00 | ரூ. 90000.00 |
| 03 | பாடசாலை மற்றும் வலயக் கல்வி அலுவலகங்களுக்கு கணனிகளைக் கொள்வனவு செய்தல் | 9.0 மி.ரூ. | ரூ. 2000.00 | ரூ. 45000.00 | ரூ. 90000.00 |
| 04 | அதிபர் கதிரைகள் / மேசைகளைக் கொள்வனவு செய்தல் | 2.0 மி.ரூ. | ரூ. 1000.00 | ரூ. 10000.00 | ரூ. 20000.00 |
| 05 | சித்திர உபகரணங்களைக் கொள்வனவு செய்தல் | 0.625 மி.ரூ. | ரூ. 500.00 | ரூ. 5000.00 | ரூ. 10000.00 |
| 06 | சங்கீத உபகரணங்களைக் கொள்வனவு செய்தல் | 0.625 மி.ரூ. | ரூ. 500.00 | ரூ. 5000.00 | ரூ. 10000.00 |
| 07 | விளையாட்டு உபகரணங்களைக் கொள்வனவு செய்தல் | 1.25 ரூ.மி. | ரூ. 1000.00 | ரூ. 7500.00 | ரூ. 15000.00 |
| 08 | விவசாய உபகரணங்களைக் கொள்வனவு செய்தல் | 1.0 மி.ரூ. | ரூ. 1000.00 | ரூ. 5000.00 | ரூ. 10000.00 |
| 09 | ஆய்வுகூட உபகரணங்களைக் கொள்வனவு செய்தல் | 1.0 மி.ரூ. | ரூ. 1000.00 | ரூ. 5000.00 | ரூ. 10000.00 |

- தருவித்தற் கட்டளையை ஒப்படைக்க வேண்டிய இடம் :- பண்டாரவளை கினிகம கல்வி பிரதான களஞ்சியம் (லொட் இல. 02 தவிர)
- தருவித்தற் கட்டளையை முழுமைப்படுத்த வேண்டிய திகதி :- தருவித்தற் கட்டளை வழங்கப்பட்ட திகதியிலிருந்து 60 நாட்களுக்குள்

**லொட் இல. 2**
பாடசாலை மேசைகள் மற்றும் கதிரைகளுக்கு திருத்தவேலைகளைச் செய்வதற்கு பின்வரும் களஞ்சியப்படுத்தப்பட்டுள்ள இடங்களில் திருத்தவேலைகளை மேற்கொள்ளல் வேண்டும். (கேள்விகளைச் சமர்ப்பிப்பதற்கு முன் இடத்தைப் பரீட்சித்துப் பார்த்தல் வேண்டும்)

- ஆங்கில பயிற்சி நிலையம் - பிபிலை
- ப/பண்டாரவரளை மகா வித்தியாலயம் - மாபாகட வெவ, மகியங்கனை
- மொ/வெஹெரயாய மகா வித்தியாலயம் - எத்திலிவெவ
- பண்டாரவளை, கினிகம கல்வி பிரதான களஞ்சியசாலை

  கட்டளை கையளிக்கப்படும் திகதி முதல் 60 நாட்களுக்குள் பாடசாலை மேசை கதிரைகளுக்கு திருத்தவேலைகளைச் செய்து பூர்த்தி செய்யப்படல் வேண்டும்.

02. கேள்விகள், தேசிய போட்டி கேள்வி கோரல் (NCB) முறைமைக்கமைய இடம்பெறும்.
03. கேள்விகளைச் சமர்ப்பிக்க ஆர்வம் கொள்ளும் கேள்விதாரர்கள் பதுளை, வெலகொர வீதி, கல்வித் திணைக்களம், பிரதான கணக்காளரிடமிருந்து (தொ.பே. இல. 055-2223184, தொலைநகல்: 055-2222713) மேலதிகத் தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம் எனபதுடன், மேற்குறிப்பிடப்பட்ட முகவரியிலேயே 2021 மார்ச் மாதம் 15ஆம் திகதி முதல் ஏப்ரல் மாதம் 05ஆம் திகதி வரையான கடமை நேரங்களில் (மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரை) கேள்வி ஆவணங்களைப் பரீட்சித்துப் பார்க்கலாம்.
04. தகைமைத் தேவைப்பாடுகள் பின்வரும் வகையில் இருக்க வேண்டும் என்பதுடன் மேலதிக விபரங்கள் கேள்வி ஆவணங்களில் தரப்பட்டுள்ளன.

**01, 03 லொட் இலக்கங்களுக்கு (வெவ்வேறான வகையில்)**

I. கடந்த மூன்று வருட காலத்தினுள் கேள்விதாரர் 6 மில்லியன் ரூபாவுக்கான புரள்வைக் கொண்டிருத்தல் வேண்டும்.
II. கடந்த மூன்று வருடங்களின் கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக் கூற்று
III. அலுவலக உபகரணங்கள் மற்றும் பாடசாலை உபகரணங்கள் வழங்கியமை தொடர்பான விபரங்கள்

**02 லொட் இலக்கத்திற்கு**

I. கடந்த மூன்று வருட காலத்தினுள் கேள்விதாரர் 6 மில்லியன் ரூபாவுக்கான புரள்வைக் கொண்டிருத்தல் வேண்டும்.
II. கடந்த மூன்று வருடங்களின் கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக் கூற்று
III. பாடசாலை உபகரணங்கள் வழங்குதல் மற்றும் திருத்தவேலைகள் செய்தமை தொடர்பான விபரங்கள்

**04, 05, 06, 07, 08 மற்றும் 09 லொட் இலக்கங்களுக்கு (வெவ்வேறான வகையில்)**

I. கடந்த மூன்று வருட காலத்தினுள் கேள்விதாரர் 3 மில்லியன் ரூபாவுக்கான புரள்வைக் கொண்டிருத்தல் வேண்டும்.
II. கடந்த மூன்று வருடங்களின் கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக் கூற்று
III. அலுவலக உபகரணங்கள் வழங்கியமை தொடர்பான விபரங்கள்

05. 2021 மார்ச் மாதம் 15ஆம் திகதி முதல் ஏப்ரல் மாதம் 05ஆம் திகதி வரையான கடமை நாட்களில் மேற்படி (03ஆம் பந்தியில்) முகவரிக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் செய்வதன் பேரிலும் மற்றும் கல்வித் திணைக்களத்தின் பிரதான கணக்காளருக்கு மேற்படி அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள கணனி இயந்திரங்கள் மற்றும் துணைப்பாகங்கள் கொள்வனவுக்கு மீளளிக்கப்படாத படிவக் கட்டணத்தைச் செலுத்துவதன் பேரிலும் கேள்வி ஆவணத் தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம். கொடுப்பனவுகளை ரொக்கப் பணமாகச் செலுத்துதல் வேண்டும்.
   - 2021 ஏப்ரல் 29ஆம் திகதி மு.ப. 9.00 மணிக்கு மேற்படி முகவரியில் (03ஆம் பந்தி) ஊவா மாகாண கல்விப் பணிப்பாளர் அலுவலகத்தில் கேள்வி முன்னோடிக் கூட்டம் இடம்பெறும்.
06. இரு நகல்களிலான கேள்விகளை 2021 ஏப்ரல் 07ஆம் திகதி பி.ப. 2.00 மணி அல்லது அதற்கு முன் பதிவுத் தபாலில் மேற்படி (03ஆம் பந்தி) முகவரிக்கு அனுப்புதல் வேண்டும் அல்லது அம்முகவரியில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கப்பெறும் கேள்விகள் நிராகரிக்கப்படும். 2021 ஏப்ரல் 07ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும் காலம் நிறைவுற்ற உடனடுத்து வெலகெதர வீதி, கல்வித் திணைக்களத்தில் கேள்விகள் திறக்கப்படும் என்பதுடன் சுய விருப்பத்தில் சமுகம் தருவதற்கு விருப்பமுள்ள கேள்விதாரர்கள் அல்லது பிரதிநிதிகளானால், இந்நிகழ்வை கண்காணிக்கும் மட்டத்தில் கலந்து கொள்ளலாம்.
07. 2021 ஜுலை 07ஆம் திகதி வரையில் கேள்விகள் செல்லுபடியாதல் வேண்டும் என்பதுடன் சகல கேள்விகளும் இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக வங்கியொன்றில் பெறப்பட்ட கேள்விப் பிணை முறி அல்லது பண வைப்பை (இலங்கையில் செல்லுபடியாகும் பண அலகில்) மேற்குறிப்பிடப்பட்ட வகையில் பெற்றுக்கொள்ளப்பட்ட கேள்வி ஆவணங்களுடன் சமர்ப்பித்தல் வேண்டும். கேள்விப் பிணையை பணமாகச் செலுத்துவதானால் 2021 மார்ச் 15ஆம் திகதி முதல் 2021 ஏப்ரல் 07ஆம் திகதி வரையில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையான கடமை நாட்களில் மேற்படி (03ஆம் பந்தி) முகவரியிலுள்ள சிறாப்பருக்குச் செலுத்தியப் பற்றுச்சீட்டைப் பெற்றுக்கொள்ளலாம். (கவனிக்கவும்: 2021 ஏப்ரல் 07ஆம் திகதி மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரை மட்டுமே பிணை முறிக்கான தொகையை வைப்புச் செய்யலாம்.) கேள்விப் பிணை முறியானால் அது 2021 ஜுலை 07ஆம் திகதி வரையில் செல்லுபடியாதல் வேண்டும்.
08. கிடைக்கப் பெற்றுள்ள தகுதி வாய்ந்த கேள்விப் படிவங்களை ஏற்றுக்கொள்ளும் அல்லது முழுமையற்றதாக சமர்ப்பிக்கப்பட்டுள்ள கேள்விப் படிவங்களை நிராகரிக்கும் முழுமையான உரிமையை பெறுகைக் குழு தன்னகத்தே கொண்டுள்ளது என்பதுடன் பெறுகைக் குழுவின் தீர்மானமே இறுதித் தீர்மானமாகும்.

**தலைவர்,**
**பெறுகைக் குழு,**
**ஊவா மாகாண கல்வித் திணைக்களம்,**
**வெலகெதர வீதி, பதுளை.**
**2021-03-15**

S◯ SRI LANKA

## இலங்கை சம்மேளன பணியகம்
## சுற்றுலாத்துறை அமைச்சு

### விலைமனுக்கோரல்

| | |
|---|---|
| திகதி : | **08.03.2021** |
| விபரம் : | **SLTPB/GCC/2021/001** இலங்கை சுற்றுலா துறையின் 2021-2025 ற்கான உலகளாவிய தொடர்பாடல் பிரசாரங்களுக்கு பிரச்சார மேம்பாடு மற்றும் முகாமைத்துவப் பிரிவொன்றை தெரிவு செய்தல் |
| மனு இல : | **SLTPB/GCC/2021/001** |

**2021.02.16** ஆம் திகதி "தினமின" "டெய்லி மிரர்" மற்றும் தினகரன் ஆகிய பத்திரிகைகளில் மற்றும் **2021.02.17** ஆம் திகதி "டெய்லி நியூஸ்" பத்திரிகை விளம்பரத்தில் மேற்குறிப்பிடப்பட்டுள்ள செயற்திட்டத்திற்கான மனுக்கோரலுக்கான கால எல்லை **2021.03.31 ஆம் திகதி மு.ப.10.00** மணி வரை நீடிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

**தலைவர்**
**அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட கொள்முதல் குழு**
**இலங்கை சம்மேளன பணியகம்**
**இல.80, காலி வீதி, கொழும்பு 03**
**இலங்கை**

### அறிவித்தல்

2007 ஆண்டின் 7ஆம் இலக்க கம்பனிகள் சட்டம் 9ஆம் பிரிவின் கீழ் பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப் பட்டுள்ளதென அறிவிக்கப்படுகின்றது.
கம்பனியின் பெயர்:
**வென்ட்டா டீஸ் (பிவீடி) எல்டிட**
பதிவிலக்கம் : PV 205638
கூட்டிணைக்கப்பட்ட திகதி: **23.10.2018**
பதிவு முகவரி :
**இல. 161, பழைய அம்பத்தலே வீதி, முன்ளேரியாவ வடக்கு அங்கொட**
**கம்பனி செயலாளர்**

**Repeat Your ad For Better Offers**

# விலைமனுக்களுக்கான அழைப்பு

## நீர்ப்பாசன அமைச்சு
## நீர்ப்பாசனத் திணைக்களம்
## தேசிய போட்டி ரீதியிலான விலைகோரல்

1. பின்வரும் 01ஆம் இலக்க அட்டவணையில் தரப்பட்டுள்ள வேலை விபரங்களின் பிரகாரம் தகுதி மற்றும் தகைமையுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை நீர்ப்பாசன பணிப்பாளர் நாயகம் அழைக்கின்றார்.

**அட்டவணை இல. 01**

| விலைக் கோரல் இல. | வழங்கல் விபரங்கள் | எண்ணிக்கை | மீளளிக்கப் படாத வைப்பு (ரூபா) | விலைக் கோரல் செல்லுபடி யாக வேண்டிய காலம் | விலைக் கோரல் பிணை முறித் தொகை (ரூபா) | பிணை முறி செல்லு படியாக வேண்டிய காலம் |
|---|---|---|---|---|---|---|
| IFB/ID/GOSL/ NCB/2021/004 | **Procurement of Goods & Equipment for Engineering Materials Division** | | | | | |
| | Lot 01 - Procurement of Fully Automated Compression Testing Machine | 01 | 5,000.00 | 2021 ஜுலை 07ஆம் திகதி | 50,000.00 | 2021 ஆகஸ்ட் 04ஆம் திகதி |
| | Lot 02 - Procurement of Concrete Cover Meter | 01 | | | 35,000.00 | |
| | Lot 03 - Procurement of Specimen Cutting Machine | 01 | | | 20,000.00 | |
| | Lot 04 - Procurement of 30-35 Kg Electronic Balances | 02 | | | 15,000.00 | |
| | Lot 05 - Procurement of Fully Automated Tri Axial Testing Machine | 01 | | | 150,000.00 | |
| IFB/ID/GOSL/ NCB/2021/008 | **Procurement of Goods & Equipment for Hydrology Division** | | | | | |
| | Lot 01 - Procurement of Universal Current Meter C31 | 01 | 2,500.00 | 2021 ஜுலை 07ஆம் திகதி | 50,000.00 | 2021 ஆகஸ்ட் 04ஆம் திகதி |
| | Lot 02 - Procurement of GPS Receivers | 02 | | | 3,000.00 | |
| | Lot 03 - Procurement of Battery for Ecolog Data Loggers | 02 | | | 1,000.00 | |
| | Lot 04 - Procurement of Inflatable Boat with Outboard Motor Engine | 01 | | | 20,000.00 | |
| | Lot 05 - Procurement of OTT HDR M3 Satellite Data Transmitters | 02 | | | 2,000.00 | |
| | Lot 06 - Procurement of Hemisphere S320 GPS Batteries | 12 | | | 10,000.00 | |
| | Lot 07 - Procurement of Valve Regulated Lead Acid (VRLA) Batteries | 03 | | | 1,500.00 | |
| | Lot 08 - Procurement of Smart Mobile Phones | 45 | | | 20,000.00 | |
| IFB/ID/GOSL/ NCB/2021/009 | Procurement of Drilling Equipment | Lots | 2,500.00 | 2021 ஜுலை 07ஆம் திகதி | 100,000.00 | 2021 ஆகஸ்ட் 04ஆம் திகதி |

2. மேற்படி அட்டவணையில் காட்டப்பட்டுள்ள மீளளிக்கப்படாத கட்டணத்தை வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரை செலுத்துவதன் பேரில் 2021 மார்ச் 16ஆம் திகதி முதல் 2021 ஏப்ரல் 06ஆம் திகதி வரை கொழும்பு 07, பௌத்தாலோக்க மாவத்தை, 230ஆம் இலக்கத்திலுள்ள நீர்ப்பாசனத் திணைக்களம், 2ஆம் தளம், அறை இல. 214, நீர்ப்பாசன பணிப்பாளர் நாயகம் (ஒப்பந்தங்கள் மற்றும் பெறுகைகள்) அலுவலகத்திற்கு நிறுவனக் கடிதத் தலைப்பில் (மூலப் பிரதி) எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் பேரில் விலைமனுக்கோரல் ஆவணங்களை கொள்வனவு செய்யலாம்.
3. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் விலைமனுக்கோரல் ஆவணங்களை பெற்றுக்கொள்வதற்கு முன்னராக, அவைகளை இலவசமாக பரீட்சித்துப் பார்க்கலாம் என்பதுடன் மேலதிக தகவலை நீர்ப்பாசன பணிப்பாளர் (ஒப்பந்தம் மற்றும் பெறுகை) தொலைபேசி 011-2582897/011-2582677 அவர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.
4. பின்வரும் 02ஆம் அட்டவணையில் குறிப்பிட்டவாறு விலைமனுக்கோரல் முன்னோடிக் கூட்டம் இடம்பெறும்.

**அட்டவணை இல. 02**

| விலைமனு இலக்கம் | வழங்கல் விபரங்கள் | இடம் | திகதி | நேரம் |
|---|---|---|---|---|
| IFB/ID/GOSL/ NCB/2021/004 | Procurement of Goods & Equipment for Engineering Materials Division | பணிப்பாளரின் அறை (பொறியியல் பொருட்கள்) 1ஆம் தளம், பொறியியல் பொருட்கள் கட்டிடம், நீர்ப்பாசனத் திணைக்களம், பௌத்தாலோக்க மாவத்தை, கொழும்பு-07 | 2021 மார்ச் 23ஆம் திகதி | மு.ப. 11.00 மணி |
| IFB/ID/GOSL/ NCB/2021/008 | Procurement of Goods & Equipment for Hydrology Division | குழு அறை, 4ஆம் தளம், பொறியியல் பொருட்கள் கட்டிடம், நீர்ப்பாசனத் திணைக்களம், பௌத்தாலோக்க மாவத்தை, கொழும்பு-07 | 2021 மார்ச் 23ஆம் திகதி | மு.ப. 09.30 மணி |
| IFB/ID/GOSL/ NCB/2021/009 | Procurement of Drilling Equipment | பணிப்பாளரின் அறை (புவியியல் பொறியியல்) 3ஆம் தளம், நீர்ப்பாசனத் திணைக்களம், பௌத்தாலோக்க மாவத்தை, கொழும்பு-07 | 2021 மார்ச் 23ஆம் திகதி | மு.ப. 10.00 மணி |

5. விலைமனு ஆவணத்தில் தரப்பட்டுள்ள வடிவத்திலேயே விலைமனுப் பிணை முறிகள் இருத்தல் வேண்டும். ஏதாவது விலைமனு செல்லுபடியாகும் விலைமனுப் பிணை முறி இல்லாமல் இருந்தால் எவ்வித முன்னறிவித்தலுமின்றி பதிலளிக்காதவை எனக் கருதப்பட்டு நிராகரிக்கப்படும்.
6. நிர்ணயிக்கப்பட்ட வடிவமைப்பில் உற்பத்தியாளர்களின் அங்கீகரிக்கப்பட்ட கடிதத்துடன் விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். அவ்வாறல்லாத விலைமனுக்கள் பதிலளிக்காதவை எனக் கருதப்படும்.
7. விலைமனு ஆவணத்தின் சகல பக்கங்களிலும் விலைமனுதாரர் சிற்றொப்பமிட்டு அவரது முத்திரை பொறிக்கப்பட்டிருத்தல் வேண்டும்.
8. பூரணப்படுத்தப்பட்ட விலைமனுக்களை 2021 ஏப்ரல் 07ஆம் திகதி பி.ப. 2.30 மணிக்கு முன்னராகக் கிடைக்கும் வகையில், கொழும்பு-07, பௌத்தாலோக்க மாவத்தை 230 ஆம் இலக்க நீர்ப்பாசனத் திணைக்களம், 3ஆம் மாடியிலுள்ள பிரதான நிதியிடல் அலுவலரின் 311ஆம் இலக்க அறையில் இந்நோக்கத்திற்காக வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும் அல்லது பதிவுத் தபாலில், தலைவர், திணைக்கள பெறுகைக்குழு என முகவரியிட்டு மேற்படி முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும். விலைமனுக்கள் 2021 ஏப்ரல் 07ஆம் திகதி பி.ப. 2.30 மணிக்கு மூடப்பட்டு அதன் பின்னர் உடனடியாகவே திறக்கப்படும். பிந்திக் கிடைக்கும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். கடிதஉறையின் இடது பக்க மேல் மூலையில் பெறுகையின் பெயர் மற்றும் ஒப்பந்த இலக்கம் (IFB No.) ஆகியவற்றை தயவு செய்து எழுதவும்.
9. சுயவிருப்பத்தின் பேரில் சமுகமளிக்கும் விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் விலைமனுக்கள் திறக்கப்படும். விலைமனுக்களின் பெறுகைக்காக திட்டவட்டமாக குறித்துரைக்கப்பட்ட திகதியில் அலுவலகம் மூடப்பட்டிருப்பின், அடுத்துவரும் வேலை நாளில் விலைமனுக்கள் பெற்றுக்கொள்ளப்பட்டு அதே நேரம் மற்றும் இடத்தில் திறக்கப்படும்.
10. திணைக்கள பெறுகைக் குழுவின் முடிவே இறுதி முடிவாகும். ஒரு விலைமனுவை அல்லது எல்லா விலைமனுக்களையும் தமது சொந்த விருப்பப்படி ஏற்றுக்கொள்ளும் அல்லது நிராகரிக்கும் அதிகாரத்தை திணைக்களப் பெறுகைக்குழு தன்னகத்தே கொண்டுள்ளது.

**பொறியியலாளர் கே.டி.என். சிறிவர்தன,**
**நீர்ப்பாசன பணிப்பாளர் நாயகம்,**
**நீர்ப்பாசனத் திணைக்களம்,**
**இல. 230, பௌத்தாலோக்க மாவத்தை,**
**கொழும்பு-07.**
**2021-03-15ஆம் திகதி.**

# அறிவித்தல்

## மேசன் பாஸ்மார், மின்னியலாளர்கள் மற்றும் நீர்க்குழாய் வேலையாட்களைப் பதிவு செய்தல்

பொது நம்பிக்கையாளர் திணைக்களத்திற்குரித்தான கொழும்பு, களுத்துறை, திஸ்ஸமஹாராம, குருநாகல், எல்பிட்டிய, பத்தேகம, காலி மற்றும் மாத்தறை பிரதேசத்தில் அமைந்துள்ள

விடுதிகளை திருத்தவேலை செய்வதற்காக பின்வரும் துறைகளில் வேலையாட்கள் தேவையாகவுள்ளது.
(எமது நிறுவனத்தினால் தேவையான பொருட்கள் வழங்கப்பட்டு நிறைவேற்றப்படும் வேலைகளின் அளவுகளின் பிரகாரம் கொடுப்பனவு அடிப்படையில்)

- மேசன் பாஸ்மார்கள்
- மின்னியலாளர்கள்
- நீர்க் குழாய் வேலையாட்கள்
- தச்சு வேலையாட்கள்

பதிவு செய்து கொள்வதற்கு பின்வரும் தகவல்களை உள்ளடக்கிய விண்ணப்பப் படிவங்களை விளம்பரம் பிரசுரமாகி 02 நாட்களுக்குள் அனுப்புதல் வேண்டும்.

1. முழுப் பெயர்:
2. நிரந்தர முகவரி:
3. தேசிய அடையாள அட்டை இலக்கம்:
4. தொலைபேசி இலக்கம்:
5. விண்ணப்பிக்கும் துறை மற்றும் பிரதேசம்:
6. அனுபவம்:
7. விசேடமான திறமை / தேர்ச்சியைக் கொண்டிருந்தால் அது தொடர்பான தகவல்கள்:
8. அறவீடுகளை மேற்கொள்ளும் விதம்:

விண்ணப்பப் படிவத்தை அனுப்ப வேண்டிய முகவரி:

**பொது நம்பிக்கையாளர் திணைக்களம்,
இல. 2, புல்லர்ஸ் ஒழுங்கை,
கொழும்பு 7.**

**விசாரணைகள்: 011 2581690**

## மத்திய சுற்றாடல் அதிகாரபை

**தேசிய சுற்றாடல் சட்டத்தின் பிரிவு 23வ உபபிரிவு (2) இன் கீழான அறிவித்தல்**

**மட்டக்களப்பு மாவட்டத்தின் ஏறாவூர் பிரதேசத்திலுள்ள புன்னைக்குடா பகுதியில் முன்மொழியப்பட்ட ஆடைக்கைத்தொழில் சார்ந்த வலயத்திற்கான சுற்றாடல் தாக்க மதிப்பீட்டு (சு. தா. ம) அறிக்கை**

மத்திய சுற்றாடல் அதிகாரபையினது 1988ம் ஆண்டின் 56ம் இலக்க மற்றும் 2000ஆம் ஆண்டின் 53ம் இலக்க சட்டங்களால் திருத்தி அமைக்கப்பட்டவாறு 1980ம் ஆண்டின் 47ம் இலக்க தேசிய சுற்றாடல் சட்டத்தின் பிரிவு 23 வ(1) இலங்கை முதலீட்டுச் சபையினால் சமர்ப்பிக்கப்பட்ட மட்டக்களப்பு மாவட்டத்தின் ஏறாவூர் பிரதேசத்திலுள்ள புன்னைக்குடா பகுதியில் முன்மொழியப்பட்ட ஆடைக் கைத்தொழில் சார்ந்த வலயத்திற்கான சுற்றாடல் தாக்க மதிப்பீட்டு (சு.தா.ம) அறிக்கையானது பின்வரும் இடங்களில் காலை 8.30 மணி தொடக்கம் மாலை 4.15 மணிவரை 30 நாட்களுக்கு பொதுமக்களின் பாரவைக்காக (ஞாயிற்றுக்கிழமை மற்றும் பொதுவிடுமுறை நாட்கள் தவிர) பிரசுரிக்கப்படும் தினத்திலிருந்து வைக்கப்பட்டுள்ளது.

1. பிரதேசசெயலகம்/செங்கலடி
2. பிரதேசசபை/ஏறாவூர்பற்று
3. மட்டக்களப்பு மாவட்ட அலுவலகம்/மத்திய சுற்றாடல் அதிகாரபை, 344/5, சந்திரா வீதி, திருகோணமலை வீதி, மட்டக்களப்பு
4. நூலகம் மத்திய சுற்றாடல் அதிகாரசபை, "பரிசரபியச" 104 டென்சில் கொப்பேகடுவ மாவத்தை, பத்தரமுல்ல
5. இணையம்: www.cea.lk

பொதுமக்கள் எவரேனும் இவ்விளம்பர திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் தமது கருத்துக்களை பணிப்பாளர் நாயகம், மத்திய சுற்றாடல் அதிகாரபைக்கு எழுத்து மூலம் சமர்ப்பிக்க முடியும்.

**பணிப்பாளர் நாயகம்,
மத்திய சுற்றாடல் அதிகாரசபை,
"பரிசரபியச",
இல. 104,
டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்ல.**

## இலங்கை முதலீட்டுச் சபை

## பெறுகை அறிவித்தல்

கீழ்க்காணும் பெறுகைக்காக கேள்வி கோரல் அறிவித்தல் 2021 மார்ச் 13 மற்றும் 15ம் திகதி டெயிலிநியூஸ் (Daily News) பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

- Construction of Barbed wire fence along some critical zonal boundary at Seethawaka Export Processing Zone

  **Contract No : BOI/SEPZ/ES/2021/23.09.048**
- Construction of wash room adjoining to panel room of MRC at Seethawaka Export Processing Zone

  **Contract No : BOI/SEPZ/ES/2021/23.09.044**
- Expansion of Driver's room at Seethawaka Export Processing Zone

  **Contract No. :BOI/SEPZ/ES/2021/23.05.029**
- Construction of Vehicle shed at Administrative Building Premises at Seethawaka Export Processing Zone

  **Contract No: BOI/SEPZ/ES/2021/23.05.026**
- Supply & Installation 07 Nos. of Brand new split type Air Condition Units at Seethawaka Export Processing Zone

  **Contract No: BOI/SEPZ/ES/2021/23.05.027**

மேற்படி பெறுகைக்கான குறித்த கேள்விப் பத்திரங்கள் ஆங்கில மொழியில் தயாரிக்கப்பட்டுள்ளதுடன் கேள்விகள் சமர்ப்பிப்பதற்கு ஆர்வம் காட்டுகின்ற ஒப்பந்தக்காரர்களுக்கு 2021 மார்ச் 13 மற்றும் 15ம் இரு தினங்களிலும் டெயிலி நியூஸ் பத்திரிகையில் குறித்த அறிவித்தலின் பிரகாரம் செயற்படுமாறு இத்தால் அறிவிக்கிறோம்.

**தலைவர்,
இலங்கை முதலீட்டுச் சபை.**

## தேசிய போக்குவரத்து ஆணைக்குழு

### பொதுமக்களுக்கான அறிவித்தல்

4. எந்தவொரு தரப்பினர் மேற்படி இரண்டு காணிகளுக்காகவும் விலைக்கோரல்களைச் சமர்ப்பிக்க உத்தேசித்தால் இரண்டு அபிவிருத்தி பிரேரணை கோரல் ஆவணங்கள் மூலம் சமர்ப்பித்தல் வேண்டும்.

5. விலைக்கோரல் முன்னோடிக் கூட்டம் 2021 மார்ச் 31ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு பத்தரமுல்ல, செத்சிறிபாய, கட்டம் 1, 9ஆம் மாடியில் அமைந்துள்ள நகர அபிவிருத்தி அதிகார சபையின் கேட்போர் கூடத்தில் இடம்பெறும்.

6. இதில் ஆர்வம் காட்டும் தரப்பினர் (அபிவிருத்தியாளர் / முதலீட்டாளர்) இயைபுடைய அபிவிருத்தி பிரேரணை கோரல் ஆவணங்களை விண்ணப்பதாரர்கள் மேலதிக விபரங்களை உள்ளடக்கிய விண்ணப்பப் படிவங்களை 2021-03-17ஆம் திகதி முதல் 2021-04-07ஆம் திகதி வரையான வாரத்தின் வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 2.30 மணி வரையில் மீளளிக்கப்படும் 25,000.00 + அரச வரிகளைச் செலுத்தியதன் பின் பத்தரமுல்ல, ''செத்சிறிபாய'', கட்டம் 1, 8ஆம் மாடியில் அமைந்துள்ள நகர அபிவிருத்தி அதிகார சபையின் ஆதன அபிவிருத்தி மற்றும் முகாமைத்துவ பிரிவிலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

7. விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளல் 2021-04-09ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு நிறைவுற்றதன் பின் பத்தரமுல்ல ''சுஹுருபாய'', 18ஆம் மாடியில் அமைந்துள்ள நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சில் விலைமனுக்கள் திறக்கப்படும். விண்ணப்பதாரர் அல்லது அவர்களின் அதிகாரம் வாய்ந்த பிரதிநிதிகள் இந்நிகழ்வில் கலந்துகொள்ளலாம்.

8. இது தொடர்பிலான மேலதிகத் தகவல்களை பத்தரமுல்ல, ''செத்சிறிபாய'' கட்டம் 1, 8ஆம் மாடி, பணிப்பாளர் (ஆதன அபிவிருத்தி) அவர்களிடம் தொ.பே. 011-2875916-20 நீடிப்பு 2960-2967 பெற்றுக்கொள்ளலாம். தொலைநகல்: 0112875900 மின்னஞ்சல்: realestatedivisionuda@gmail.com

**தலைவர்,**
**அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட பேச்சுவார்த்தைக் குழு,**
**நகர அபிவிருத்தி, கரையோரம் பேணல், கழிவுப்பொருள் அகற்றுகை மற்றும்**
**சமுதாய தூய்மைப்படுத்தல் இராஜாங்க அமைச்சு,**
**17 மற்றும் 18ஆம் மாடிகள், 'சுஹுருபாய', பத்தரமுல்ல.**

# தமிழர் தேசம் இழந்த ஜனநாயகத்தை பெறுவதற்கு முயற்சிப்போம்

**சுரேன் ராகவன்**

**ஓமந்தை விஷேட நிருபர்**



தமிழ்த்தேசம் இழந்து போன ஜனநாயகத்தையும், இறந்துபோன சம உரிமைகளையும் பெறுவதற்கான முயற்சிகளை நாம் எடுக்க வேண்டும் என்று பாராளுமன்ற உறுப்பினரும், சுதந்திர கட்சியின் வன்னி மாவட்ட தலைவருமான சுரேன் ராகவன் தெரிவித்தார்.

வவுனியா கந்தசுவாமி கோவிலுக்கு நேற்று முன்தினம் (13) விஜயம் மேற்கொண்ட அவர் விசேட பூஜை நிகழ்வுகளில் கலந்து கொண்டு ஊடகங்களிற்கு கருத்து தெரிவித்த போதே இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர்,

நான் வடமாகாண ஆளுநராக பதவிவகித்த 10 மாதங்களில் பத்தாயிரம் குடும்பங்களிற்கு அரச காணிகளை வழங்கியிருந்தேன். இராணுவத்திடம் இருந்த ஆயிரம் ஏக்கர் காணிகள் பொதுமக்களிடம் கையளித்திருந்தேன்.

இதேவேளை கொழும்பில் இருக்கும் காணி ஆணையாளரிடமிருந்து கிடைக்கவேண்டிய ஒழுங்கான ஒத்துழைப்புக்கள் வலுவாக கிடைக்கவேண்டும் என்பதற்காகவே வடமாகாண காணி ஆவணங்கள் அனுராதபுரத்திற்கு கொண்டுசெல்லப்பட்டுள்ளதே தவிர வடமாகாணத்தை சேர்ந்த எந்த அதிகாரங்களும் பறிக்கப்படவில்லை பறிக்கப்படக்கூடாது, பறிக்கப்பட முடியாது.

தற்போது வன்னிக்கு நியமிக்கப்பட்டதன் மூலம் தமிழ் தேசத்திற்காக நான் செய்ய வேண்டிய பணியை திரும்பவும் என்னிடம் இறைவன் வழங்கியதாகவே நினைக்கிறேன். வடமாகாணத்திலேயே குறிப்பாக விழுத்தப்பட்ட சமூகங்கள் வாழ்கின்ற வன்னியை முழுமையாக மாற்றியமைக்க என்னுடைய முயற்சிகளை எடுக்க வேண்டியுள்ளது. குறிப்பாக மன்னார் மாவட்டம் காலம் காலமாக பின்தங்கிய பகுதியாக இருக்கிறது. அந்த நிலை மாற வேண்டும்.

நாட்டின் ஆளமான ஒரு ஜனநாயகத்தை உருவாக்குவதற்கான அடித்தளத்தை உருவாக்க வேண்டும். எமது மக்களை ஜனநாயகத்தின் பாதையிலே நடாத்திச் செல்வதற்கான வழிமுறைகளை கூட்டுமுயற்சியாக செய்யவேண்டும் என்பதே என்னுடைய பிரார்த்தனை. என்றார்.

# வேகக்கட்டுப்பாட்டை இழந்த மோட்டார் சைக்கிள் பனை மரத்தில் மோதி இருவர் பலி





**மன்னார் குறூப் நிருபர்**

மன்னார்-மதவாச்சி பிரதான வீதி, சிறுநாவற்குளம் பகுதியில் நேற்று மதியம் இடம்பெற்ற விபத்தில் இரு இளம் குடும்பஸ்தர்கள் பாலியாகியுள்ளனர்.

இவ் வீதியூடாக மோட்டார் சைக்கிளில் மன்னார் நோக்கி பயணித்துக் கொண்டிருந்த போது வேகக் கட்டுப்பாட்டை இழந்த மோட்டார் சைக்கிள் வீதியோரத்தில் நின்ற பனை மரத்துடன் மோதி விபத்திற்குள்ளாகியுள்ளது.

இதன் போது சம்பவ இடத்திலேயே ஒருவர் உயிரிழந்துள்ளதோடு, மற்றயவர் படுகாயமடைந்த நிலையில் மன்னார் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டார்.

எனினும் குறித்த நபரும் உயிரிழந்துள்ளதாக தெரிய வருகின்றது. செட்டிகுளத்திற்கு மரண சடங்கிற்கு சென்று விட்டு மீண்டும் மன்னார் நோக்கி வீடு திரும்பிய போதே இவ் விபத்து இடம்பெற்றுள்ளதாக தெரிய வருகின்றது.

இருவரும் மன்னாரில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த சகோதரிகளை திருமணம் செய்த 36 மற்றும் 38 வயது இளைஞர்களே விபத்தில் பலியாகியுள்ளனர். விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை மன்னார் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# ஒன்றுகூடல், புதிய நிர்வாக தெரிவில் பல முறைகேடுகள்

முல்லைத்தீவு மாவட்ட அபிவிருத்தி ஒன்றித்தினுடைய ஒன்றுகூடல், புதிய நிர்வாகத் தெரிவில் பல முறைகேடுகள் நடைபெற்றுள்ளதாக கூறப்படுகிறது.

முல்லைத்தீவு மாவட்ட அபிவிருத்தி ஒன்றித்தினுடைய ஒன்றுகூடலும் புதிய நிர்வாகத் தெரிவும் முல்லைத்தீவு செல்வபுரம் முன்பள்ளியில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இக் கூட்டத்திற்கு வருகை தராதவர்கள் பெயர்கள் தெரிவு செய்யப்பட்டன. அதுமட்டுமல்லாது ஏற்பாட்டாளர்கள் ஏலவே பெயர்ப் பட்டியலினை தயாரித்து தம் வசம் வைத்துக் கொண்டு தாமே அப் பதவிகளுக்கு பெயர்களினை பரிந்துரைத்துத்தனர்.

இதனை ஒரு சிலர் சுட்டிக் காட்டிய போது அவர்களிற்கு ஏற்பாட்டாளர்கள் குழப்ப வேண்டாம் எனக் கூறிவிட்டு தமது நிகழ்ச்சி நிரலினை நிறைவேற்றி உள்ளனர்.

ஒட்டுசுட்டான், துணுக்காய், வெலிஓயா போன்ற பிரதேச செயலகங்களிலிருந்து மக்கள் கலந்து கொள்ளாதபோதும் ஏனைய பிரதேசங்களில் தெரிவுகளினை ஏற்பாட்டாளர்களே தமக்குரியவர்களினை தெரிவு செய்ததன் மூலம் இவ் ஒன்றியத்தினை தமது சுய இலாபத்திற்கு பயன்படுத்த முனைகின்றார்கள் என நிகழ்வில் கலந்து கொண்டவர்களினால் கருத்துகள் தெரிவிக்கப்பட்டன. கூட்ட விதிமுறைகளிற்கு முரணாக தெரிவு செய்யப்பட்ட இவ் ஒன்றியத்தின் மீது முல்லைத்தீவு மாவட்ட செயலாளர் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் பொது மக்களினால் தெரிவிக்கப்படுகின்றது.

# திருடப்பட்ட 21 துவிச்சக்கர வண்டியுடன் இளைஞன் கைது



**யாழ்.விசேட நிருபர்**

பருத்தித்துறை பகுதிகளில் துவிச்சக்கர வண்டி திருட்டில் ஈடுபட்டு வந்த இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். பருத்தித்துறை சிவன் கோவிலுக்கு அண்மையில் நேற்றுமுன்தினம் சந்தேகத்திற்கு இடமான முறையில் நடமாடிய இளைஞனை கைது செய்து விசாரணைக்குட்படுத்திய போதே துவிச்சக்கர வண்டிகளைத் திருடியமை தெரியவந்தது என்று பொலிஸார் கூறினர்.

பருத்தித்துறையைச் சேர்ந்த 23 வயதுடைய சந்தேக நபரால் திருடப்பட்ட 21 துவிச்சக்கர வண்டிகள் மீட்கப்பட்டுள்ளன. மேலும் சில துவிச்சக்கர வண்டிகள் மீட்கப்படவுள்ளன. திருடப்பட்ட துவிச்சக்கர வண்டிகளை சந்தேக நபர் விற்பனை செய்து பணத்தை எடுத்துள்ளார். மீட்கப்பட்ட துவிச்சக்கர வண்டிகள் பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தில் வைக்கப்பட்டுள்ளன.

துவிச்சக்கர வண்டி திருடப்பட்டிருந்தால் உரியவர்கள் அதனை அடையாளம் காட்ட முடியும் என்று பருத்தித்துறை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# மாந்தை கிழக்கில் குத்துபாலம் புனரமைப்பு

**புதுக்குடியிருப்பு விசேட நிருபர்**

அரசாங்கத்தின் கிராமிய வீதிகள் புனரமைப்பு திட்டத்தின் கீழ் முல்லைத்தீவு மாந்தை கிழக்கில் சிவபுரம் செல்வபுரம் வீதியில் உள்ள குத்துபாலம் 47 மில்லியன் ரூபா செலவில் புனரமைப்பதற்கான அங்குரார்ப்பண நிகழ்வு நேற்று முன்தினம் நடைபெற்றது.

அரசினால் முன்னெடுக்கப்படுகின்ற சுபீட்சத்தின் நோக்கு கொள்கைப் பிரகடனத்துக்கு அமைய நாடு தழுவிய ரீதியிலே மேற்கொள்ளப்படுகின்ற இருபதாயிரம் கிராமிய பாலங்களை புனரமைக்கும் வேலைத்திட்டத்தின் பிரகாரம் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் அபிவிருத்தி குழுத் தலைவருமான காதர் மஸ்தானின் வேண்டுகோளின் பேரில் நடைபெறவுள்ளது. மழைகாலங்களில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடுவதால் மாந்தை கிழக்கிற்கான போக்குவரத்து அனைத்து பகுதிகளாலும் தடைப்படும் நிலையில் இந்த பாலத்தின் ஊடான போக்குவரத்தும் முற்றாக தடைப்பட்டு காணப்படும். கடந்த காலங்களில் பாலத்தை புனரமைக்க பல தடவைகள் கிராம மக்கள், பிரதேச சபையினர் கோரிக்கை விடுத்து வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

தேசிய இலக்கிய விழா 2020;

# எழுத்தாளர் சுன்னாகம் சபா புஷ்பநாதனுக்கு முதலிடம்



கலாசார அலுவல்கள் திணைக்களம் மற்றும் யாழ்ப்பாணம் மாவட்ட செயலகம் இணைந்து நடத்திய 'தேசிய இலக்கிய விழா 2020' இற்கான பிரதேச இலக்கியத் தொடர்பில் திறந்த பிரிவிற்கான சிறுகதைப் போட்டியில் சுன்னாகத்தைச் சேர்ந்த பிரபல எழுத்தாளர் சபா புஷ்பநாதன் முதலாம் இடத்தினை பெற்றுக்கொண்டார்.

வறுமை + நேர்மை = உயர்வு என்ற அவரது சிறுகதை முதல் பரிசுக்காக தெரிவு செய்யப்பட்டது. சுன்னாகம் ஸ்கந்தவரோதயா கல்லூரியின் பழைய மாணவரான சபா. புஷ்பநாதன் சத்தியப்பிரமணை மொழி பெயர்ப்பாளராகவும் புகழ் பெற்ற சமூக சேவையாளராகவும் சிறந்த ஊடகவியலாளராகவும் பணி செய்து வருகிறார். சுன்னாகம், உடுவில் வலி தெற்கு பிரதேச செயலாளர் க. முகுந்தன் தலைமையில் நடைபெற்ற பிரதேச இலக்கிய விழாவில் கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் தரண அனோஜா வழங்கிய சான்றிதழுடன் பல நூல்களுடன் வலி தெற்கு பிரதேச செயலாளரினால் வழங்கி சபா புஷ்பநாதன கௌரவிக்கப்பட்டார்.

சுன்னாகம் பிரதேசத்தில் லேக் ஹவுஸ் பத்திரிகையின் தமிழ், ஆங்கில, சிங்கள மொழி பத்திரிகையின் விற்பனை முகவராக சபா புஷ்பநாதன் செயற்படுகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.





வவுனியாவில் செவிப்புலனிழந்தோர் மகளிர் நிறுவனத்தின் மகளிர் தின நிகழ்வுகள் நிறுவனத்தின் தலைவர் திருமதி வ.கோமவாசினி தலைமையில் வவுனியா நகரசபை மண்டபத்தில் நேற்று நடைபெற்ற போது.
படம் வவுனியா விசேட நிருபர்

இராகலையில் தீ விபத்து;

# பாதிக்கப்பட்டவர்களுக்கு வவுனியாவில் நிவாரணப்பணி

**ஓமந்தை விஷேட நிருபர்**

இராகலையில் தீ விபத்தில் சிக்கிய மக்களுக்கு உதவ முன்வாருங்கள் என அவர்களுக்காக நிவாரணப்பணியில் ஈடுபடும் அன்பாலயா குழுவினர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இன்று வவுனியாவில் நிவாரணங்களை சேகரிக்கும் இக்குழு இவ் விடயம் தொடர்பில் மேலும் தெரிவித்துள்ளதாவது,

இராகலை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட இராகலை தோட்டம் 2 ஆம் பிரிவில் 16 வீடுகளை கொண்ட நெடுங்குடியிருப்பில் 12.03.2021 அதிகாலை 3.45 மணியளவில் ஏற்பட்ட தீ விபத்தில் உடமைகள் அனைத்தும் முற்றாக எரிந்து தீக்கிரையாகின.

போராட்டத்தையே தினமும் வாழ்க்கையாக கொண்ட இராகலை மலையக உறவுகள் 61 பேர் இன்று நிர்க்கதி ஆன நிலையில் பரிதவித்து கொண்டிருக்கின்றனர். இதில் ஆண்கள் 26 பேரும், பெண்கள் 32 பேரும் ஐந்து வயதிற்குட்பட்ட சிறுவர்கள் 03 பேரும் அடங்குகின்றனர்.

நம் உறவுகளுக்கு கரம் நீட்ட அன்பாலயா அமைப்பினர் தங்களின் மேலான உதவிகளை நாடி நிற்கின்றனர்.

உதவ முடிந்தவர்கள் தங்களால் முடிந்த உதவிகளை எவ்விதத்திலேனும் வழங்க முடியும். இல்லாததன் ஏக்கங்களையும் இழந்தவைகளின் வலிகளையும் மனதோடு சுமக்கும் நாம் மனிதம் இறக்காத மனங்களில் இருந்து உதவிகளை கேட்கிறோம்.

அத்தியாவசிய பொருட்கள், உலர் உணவு பொருட்கள், பாவனை நிலையில் உள்ள ஆடைகள், பெண்களுக்கான சுகாதார அணை ஆடை (SANITARY PADS), பாடசாலை உபகரணங்கள், சீருடை துணிகள் போன்ற பொருட்களை வழங்கி எங்கள் முயற்சிக்கும் அவர்களது வாழ்வாதார மேம்பாட்டுக்கும் உதவுமாறு சமூக நலன் விரும்பிகள் மற்றும் அனைத்து அமைப்புகளையும் வேண்டி நிற்கின்றோம். முடிந்தவர்கள் கீழ்வரும் தொலைபேசி இலக்கங்களுக்கு தொடர்பு கொண்டு உங்கள் உதவிகளை வழங்குங்கள்.

எஸ்.எம்.சுரேஸ் +94 77 93 44 750

இரா.தனுசன் +94 77 02 05 241

ர.லனோஜ் +94 77 27 54 401

# வவுனியா ஆடைத் தொழிற்சாலையில் கொரோனா தொற்றாளர்கள் 23 ஆக அதிகரிப்பு

**வவுனியா விசேட நிருபர்**

வவுனியா ஆடைத் தொழிற்சாலையில் பணியாற்றுவர்களில் கொரோனா தொற்றாளர்களின் எண்ணிக்கை 23 ஆக உயர்வடைந்துள்ளதாக பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்கள பணிப்பாளர் எம்.மகேந்திரன் தெரிவித்துள்ளார்.

வவுனியா கண்டி வீதியில் அமைந்துள்ள பிரபல ஆடைத்தொழிற்சாலையில் பணியாற்றுபவர்கள் இரண்டு பேருக்கு நேற்று கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

குறித்த ஆடைத்தொழிற்சாலையில் பணியாற்றும் 21 பேர் கடந்த சில நாட்களாக கொரோனா தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டதையடுத்து, அவர்களுடன் தொடர்புடையவர்களிடம் மேற்கொள்ளப்பட்ட பி.சீ.ஆர் பரிசோதனையின் முடிவுகள் சில நேற்று வெளியாகிய நிலையில் 2 பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. இதன்மூலம் இந்த ஆடைத் தொழிற்சாலையில் பணியாற்றும் 23 பேர் தற்போது கொரோனா தொற்றாளர்களாக அடையாளங் காணப்பட்டுள்ளனர்.

1800 பேர் பணியாற்றும் நிலையில் அவர்களுள் 800 பேருக்கு பி.சீ.ஆர் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும், பிராந்திய சுகாதார திணைக்கள பணிப்பாளர் மேலும் தெரிவித்துள்ளார்.

# முல்லைத்தீவு உடையார்கட்டு சந்திப் பகுதியில் மலசலகூடம் அமைக்க வேண்டுகோள்

**முல்லைத்தீவு குறூப் நிருபர்**

முல்லைத்தீவு உடையார்கட்டுச் சந்தியில் பொது மலசலகூடம் அமைக்கப்பட வேண்டும் என புதுக்குடியிருப்பு பிரதேச சபை உறுப்பினர் ஆறுமுகம் ஜோன்சன் சபை அமர்வில் பிரேரணை முன்வைத்துள்ளார். பெருமளவு மக்கள் ஒன்று கூடுகின்ற உடையார் கட்டுச் சந்திப் பகுதியில் மலசலகூட வசதிகள் இல்லாத நிலைமை காணப்படுகின்றது. இச்சந்தியில் மலசல கூடங்கள் அமைக்கப்பட வேண்டும். அத்துடன் மூங்கிலாறு கிராமத்தில் உள்ள பிரதேச சபையின் வீதிகளுக்கு புதிய பெயர்களை அறிமுகம் செய்தல் ஆகிய பிரேரணைகள் நிறைவேற்றப்பட வேண்டும் என வேண்டுகோள் விடுத்தார். இரு பிரேரணைகளும் சபையினால் நிறைவேற்றப்பட்டுள்ளது. புதுக்குடியிருப்பு பிரதேச சபைக்கு உட்பட்ட மாங்குளம் நகரம் உட்பட பல இடங்களில் பொது மலசலகூடம் அமைக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கைகள் தொடர்ச்சியாக முன்வைக்கப்படுகின்றன.




# நுவரெலியாவில் மலையகத்துக்கான பல்கலைக்கழகம்

## இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமான்

**ஹற்றன் விசேட நிருபர்**



நுவரெலியா மாவட்டத்தில் மலையகத்துக்கான பல்கலைக்கழகம் அமையவுள்ளது. மலையகத்தை மாற்ற முடியும் என்ற நம்பிக்கை எனக்குள்ளது. எமது இளைஞர்களும் நம்புகின்றனர்.நான் அரசியல் செய்யவில்லை. நிர்வாகத்தையே முன்னெடுக்கின்றேன். எனவே, மலையகத்தில் நிச்சயம் மாற்றத்தை ஏற்படுத்துவேன் என்று இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் பொதுச் செயலாளரும், இராஜாங்க அமைச்சருமான ஜீவன் தொண்டமான் தெரிவித்தார்.

தோட்ட வீடமைப்பு மற்றும் சமுதாய உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமான் தலைமையில் சௌமியமூர்த்தி தொண்டமான் ஞாபகார்த்த மன்றத்தின் கீழ் இயங்கும் தொண்டமான் தொழில் பயிற்சி நிலையத்தினுடைய எதிர்கால செயற்பாடுகள் தொடர்பான சந்திப்பொன்று ஹற்றன் தொண்டமான் தொழில் பயிற்சி நிலையத்தில் நேற்று நடைபெற்றது. இதன் போது திறன்கள் அபிவிருத்தி, தொழில் கல்வி ஆராய்ச்சி மற்றும் புத்தாக்க இராஜாங்க அமைச்சர் சீதா அரம்பேபொலவும் வருகை தந்திருந்தார்.

இதன் போது தொண்டமான் தொழில் பயிற்சி நிலையத்தின் தற்போதைய மற்றும் கடந்த காலங்களில் இடம்பெற்ற செயற்பாடுகள் பற்றியும் மற்றும் மாணவர்களின் கற்கை நெறிகள் தொடர்பாகவும் விரிவாக கலந்துரையாடப்பட்டது.

அத்தோடு, சௌமியமூர்த்தி தொண்டமான் ஞாபகார்த்த மன்றத்தின் கீழ் இயங்கும் நோர்வூட் தொண்டமான் விளையாட்டரங்கு, ரம்போடை தொண்டமான் கலாசார நிலையம் அதே போல் பிரஜாசக்தி நிலையங்களுடைய செயற்பாடுகள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது. இதேவேளை தொண்டமான் தொழில் பயிற்சி நிலையத்தில் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட கற்கை நெறிகளை அமைச்சர்கள் உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைத்ததோடு அங்கு இடம்பெறும் மாணவர்கள் பயிற்சிகளில் ஈடுப்படுவதையும் பார்வையிட்டனர். இந் நிகழ்வில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.





இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு,

தேர்தல் விஞ்ஞாபனம் ஊடாக எமது மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை நாம் நிறைவேற்றி வருகின்றோம். அடிப்படை நாட் சம்பளமாக ஆயிரம் ரூபா பெற்றுக் கொடுக்கப்படும் என உறுதியளித்தோம். அந்த உறுதிமொழி இன்று நிறைவேற்றப்பட்டுள்ளது. ஆனால் அதிலும் சிலர் குறை காண்கின்றனர். தொழிலாளர்களுக்கான நலன்கள் இல்லாதுபோய்விடும் எனவும் விமர்சிக்கின்றனர். நாம் தொழிலாளர்களை பாதுகாப்போம். எனினும், சந்தா வாங்கும் சிலர் தொழிலாளர்கள் நலன் பற்றி சிந்திப்பதில்லை.

வீண் விமர்சனங்களை முன்வைப்பர்களுக்கு பதிலளிக்க வேண்டிய தேவை இல்லை.

கொரோனா தடுப்பூசி உட்பட பல திட்டங்கள் இந்த அரசாங்கம் வெற்றிகரமாக முன்னெடுத்தாலும் ஆயிரத்து எட்டு குறைகளை கூறுபவர்கள் இருக்கவே செய்கின்றனர். எது எப்படி இருந்தாலும் எமது சேவைகள் தொடரும் என்றார்.

# கல்வி துறை மேம்படாவிட்டால் சமூகம் மேம்படாது

## இராஜாங்க அமைச்சர் சீதா அரம்பேபொல

**ஹற்றன் சுழற்சி நிருபர்**



கல்வி துறை மேம்படாவிட்டால் சமூகம் மேம்படாது. இளம் அமைச்சர் ஜீவன் தொண்டமானும் தற்போது சரியான வழியை தெரிவு செய்துள்ளார். எனவே, கல்வியை ஒதுக்கிவிட்டு அபிவிருத்திகள் செய்தால் அவை பயன்தராது. அந்தவகையில் கல்வி மேம்பாட்டுக்காக ஜீவன் செயற்படுவது சிறப்பு என்று இராஜாங்க அமைச்சர் சீதா அரம்பேபொல தெரிவித்துள்ளார்.

தொண்டமான் தொழில் பயிற்சி நிலையத்தினுடைய எதிர்கால செயற்பாடுகள் தொடர்பான சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்தும் பேசிய அவர்,....

தாம் பிரதிநிதித்துவப்படுத்தும் மக்களின் பிள்ளைகளின் வாழ்வு மேம்பட வேண்டும் என்ற நோக்கில் சிரேஷ்ட தலைவர் சௌமியமூர்த்தி தொண்டமான் முதல் தொண்டமான் குடும்பத்தை சேர்ந்த அரசியல் பிரமுகர்கள் தூர நோக்கு சிந்தனை அடிப்படையில் செயற்பட்டனர். இதற்காகவே தொழிற்பயிற்சி நிலையங்கள் உள்ளிட்டவற்றை உருவாக்கினர். இதற்காக அவர்களுக்கு நன்றி தெரிவிக்க வேண்டும்.

கல்வி கற்றால் அதன் மூலம் கிடைக்கும் அறிவை எவராலும் களவாட முடியாது. கல்வியால் சாதிக்க முடியும். எனவே, கல்வி திட்டங்கள் தொடர்பில் ஜீவன் தொண்டமான் முன்வைக்கும் யோசனைகளை நாம் மதிக்கின்றோம். அவற்றை நிறைவேற்றுவதற்கு ஒத்துழைப்பு வழங்கப்படும்.

அதேவேளை, தோட்டப்பகுதிகளில் உள்ள சுகாதார வதிகள் தொடர்பிலும் ஜீவன் தொண்டமான் கவனம் செலுத்துவார் என நம்புகின்றோம். கல்வி, சுகாதாரம் உள்ளிட்ட வசதிகள் மேம்பட்டு விட்டால் எவருக்கும் அடிபணியவேண்டிய நிலை ஏற்படாது. மாணவர்களும் கல்வியை இடைநடுவில் கைவிடாது, பயிற்சி நிறைவு பெறும்வரை கற்குமாறு கேட்டுக் கொள்கின்றோம். தொழில் வாய்ப்புகள் கிடைத்தால் இப்பகுதி பிள்ளைகளுக்கும் வாய்ப்பு வழங்கப்படும் என்றார்.

# மலையகத்தில் இளவயதில் முறையற்ற கர்ப்பம், குடும்ப வன்முறை, பெண் தற்கொலை அதிகரிப்பு

## சிரேஷ்ட பேராசிரியர் சோபனா ராஜேந்திரன்

**நுவரெலியா தினகரன் நிருபர்**



இன்று மலையகத்தில் இளவயதில் முறையற்ற கர்ப்பம் தரித்தல் குடும்பவன்முறை, பெண் தற்கொலை என்பன குறிப்பிடக்கூடிய அளவில் அதிகரித்திருப்பதை புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன.

இதற்கான காரணங்களை ஆராய வேண்டிய ஒரு நிலையிலும் அதற்கான தீர்வை பெற்றுக் கொடுக்க வேண்டிய நிலையிலும் இன்று மலையக பெண்கள் இருக்கின்றார்கள்.இதற்கான தீர்வை ஏனையவர்களிடம் இருந்து எதிர்பார்ப்பதைவிட எங்கள் மூலமாக இதனை செய்வதற்கு மலையக பெண்கள் தயாராக வேண்டும். என சிரேஷ்ட விரிவுரையாளரும் மனித உரிமை மற்றும் பால்நிலை செயற்பாட்டாளருமான திருமதி சோபனா ராஜேந்திரன் தெரிவித்துள்ளார்.

மலையக மக்கள் முன்னணியின் ஹற்றனில் நடைபெற்ற சர்வதேச மகளிர் தின நிகழ்வில் பிரதம பேச்சாளராக கலந்து கொண்டு பேசும் பொழுதே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

தொடர்ந்தும் கருத்து தெரிவித்த அவர்,...

மலையக பெண்களை பொறுத்த அளவில் ஏனைய சமூகங்களை போல கல்வி, சுகாதாரம், பொருளாதார வசதிகள் குறைந்தவர்களாகவே இருக்கின்றோம்.

இதுவும் இன்று மலையக பெண்களுக்கு உள்ள ஒரு பாரிய சவாலாக அமைந்துள்ளது.

இன்று பல குடும்பங்களில் பெண் பிள்ளைகளை கண்டிப்பாக வளர்க்க வேண்டும் என்ற ஒரு நிலையில் பெற்றோர்கள் இருக்கின்றார்கள். இதனை நான் ஒரு பெண் செயற்பாட்டாளராக இருந்து கொண்டு பார்க்கின்ற பொழுது முழுமையாக எதிர்க்கின்றேன்.

ஏனென்றால் பிள்ளைகள் என்பவர்கள் அது ஆணாக இருந்தாலும் பெண்ணாக இருந்தாலும் சமனாக பார்க்க வேண்டும் என்பதே என்னுடைய கருத்தாகும். குடும்ப நிலையில் இருந்தே ஆண் பெண் சமத்துவத்தை உருவாக்க வேண்டும்.

அப்படி உருவாக்குகின்ற பொழுதுதான் அவர்கள் பெரியவர்களாக வளர்ந்து வருகின்ற பொழுது அந்த சமத்துவத்துடன் வாழ வேண்டும் என்ற எண்ணம் அவர்களுக்கு ஏற்படும் என்றார்.





மலையக மக்கள் முன்னணியின் மகளிர் தின விழா நேற்று ஹற்றன் மலையக மக்கள் முன்னணியின் தலைமைக் காரியாலய மண்டபத்தில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் மலையக மக்கள் முன்னணியின் தலைவரும் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான வேலுசாமி இராதாகிருஸ்ணன், செயலாளர் நாயகமும் பேராசிரியருமான சங்கரன் விஜயசந்திரன், மகளிர் முன்னணியின் உப தலைவி திருமதி சுவர்ணலதா இளங்கோவன், மகளிர் முன்னணியின் பிரதி செயலாளர் கிருஸ்ணவேனி விஜயகுமார் ஆகியோர் கலந்து கொண்டனர்.

படங்கள் நுவரெலியா தினகரன் நிருபர்

# சுற்றுச்சூழல் சட்டத்தில் திருத்தம்

## சுற்றாடல் அமைச்சர் மஹிந்த அமரவீர

**எம்.ஏ.அமீனுல்லா**



இவ்வாண்டு இறுதிக்குள் சுற்றுச்சூழல் சட்டம் திருத்திமைக்கப்படவிருப்பதாக சுற்றாடல் அமைச்சர் மஹிந்த அமரவீர கண்டியில் வைத்து தெரிவித்தார்.

கல்,மணல் மற்றும் கற்பாறைகள் போன்றவற்றை சட்டவிரோதமான முறையில் அகற்றப்படுகின்ற சம்பவங்களைத் தடுக்க புவியியல் ஆய்வு மற்றும் சுரங்க பணியக சட்டத்திலும் திருத்தம் செய்ய தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

கண்டியிலுள்ள மத்திய மாகாண சுற்றுச்சூழல் அதிகாரசபையின் அலுவலகத்தில் நேற்று முன்தினம் (13) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அமைச்சர் மேலும் உரையாற்றுகையில்:

சுற்றுச்சூழலுக்கு தீங்கு விளைவிப்பவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுப்பதற்கான விதிகளை கடுமையாக்கவும் மேலும் விதிக்கப்படும் அபராதத் தொகையை அதிகரிக்கவுமே இந்த மாற்றத்தின் நோக்கமாகும்.

மேலும் நாட்டில் நில உரிமைக்குரிய சுமார் 10 நிறுவனங்கள் உள்ளன, இதில் மகாவலி, வனவிலங்கு மற்றும் வன பாதுகாப்பு, எல்.ஆர்.சி, ஜனவசம, ரயில்வே துறை ஆகியவை இதற்கு சில உதாரணமாக கூறலாம். இவ்வாறான நிலையில் இந்த நிலங்களில் ஏதேனும் சுற்றுச்சூழல் பாதிப்பு ஏற்பட்டால், நில உரிமைகளுக்கு உரிமை இல்லாத சுற்றுச்சூழல் அமைச்சின் மீது குற்றம் சாட்டப்பட்டு விமர்சிக்கப்படுகிறது. ஆகவே இந்த நிலங்கள் அனைத்தும் ஒரே அமைச்சின் கீழ் இருந்தால், பிரச்சினைகள் குறைக்கப்படும், எனவும் அமைச்சர் வலியுறுத்தியனார்.

# ஐ.தே.க உறுப்பினர்கள் ஐக்கிய மக்கள் சக்தியில்




**நுவரெலியா தினகரன் நிருபர்**

நுவரெலியா மாநகர சபையின் ஐக்கிய தேசிய கட்சியின் உறுப்பினர்களான ஆறுமுகம் விஜயகுமார், மஹிந்த சில்வா மற்றும் நுவரெலியா பிரதேச சபையின் ஐக்கிய தேசிய கட்சி உறுப்பினர்களான சரத் குமார, எம். இந்திரபால, டி. டப்ளியூ. ஜயந்த தேனுர மற்றும் திருமதி சாந்தனி ஹெட்டியாராச்சி ஆகியோர் ஐக்கிய மக்கள் சக்தி கட்சியில் நேற்று (14) ஞாயிற்றுக்கிழமை இணைந்துக் கொண்டனர். இவ் வைபவம் நுவரெலியா கட்சி காரியாலயத்தில் கட்சியின் நுவரெலியா மாவட்ட அமைப்பாளர் திணேஸ் கிருசாந்த முன்னிலையில் நடைபெற்றது.

# ஒரு நாடு ஒரு சட்டம்; 'விருப்பமில்லாதவர்கள் விரும்பிய நாட்டில் வாழலாம்'

**எம்.ஏ.அமீனுல்லா**

ஒரு நாடு ஒரு சட்டம் என்ற கோட்பாட்டை மதித்து அதற்கேற்ப அசாத் சாலிக்கு இங்கு வாழ முடியாவிட்டால், அவர் விரும்பியபடி சட்டம் அமுல்படுத்தப்பட்ட ஒரு நாட்டில் சென்று வாழலாம் என சுற்றாடல் துறை அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார்.

நேற்று முன்தினம் (13) கண்டியில் நடைபெற்ற ஒரு நிகழ்வில் கலந்து கொண்ட அமைச்சர் அதன்பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அமைச்சர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில்:

ஒரே நாட்டில் ஒரே சட்டத்தின் கீழ் பணியாற்ற முடியாதவர்களை தனி சட்ட அமைப்பில் வாழ அனுமதிக்க முடியாது என்றும், யாராவது அப்படி வாழ விரும்பினால், இந்த நாட்டில் வாழ அவருக்கு இடம் இருக்காது என்றும் அவர் கூறினார்.

சிலர் அடுத்த தேர்தலைக் குறிவைத்து இனவெறி கருத்துக்களை வெளிப்படுத்த முயற்சிக்கையில், மற்றவர்கள் ஆதாரமற்ற அறிக்கைகளை வெளியிட்டு மக்களை தவறாக வழிநடத்த முயற்சிக்கின்றனர். நாட்டின் சட்டத்தை மதிக்காத அசாத் சாலி போன்றவர்கள் அளித்த அறிக்கைகள் நாடுகளிடையே பிளவுகளை உருவாக்கி வருவதாகவும், நாட்டில் எந்த மதத்தையும் பின்பற்றும் சுதந்திரம் அதிகப்படுத்தப் பட்டுள்ளது என்றும், இனவெறி கருத்துக்களை ஊக்குவிக்கும் அரசியல் ஒருபோதும் நீடிக்காது என்றும் அமைச்சர் கூறினார்.

# சர்வதேச செய்திகள்

## மியன்மார் ஆர்ப்பாட்டங்களில் மேலும் 11 பேர் சுட்டுக்கொலை



மியன்மாரில் இராணுவத்துக்கு எதிரான போராட்டத்தில் மேலும் 11 பேர் கொல்லப்பட்டனர்.

ஜனநாயக ஆதரவாளர்களை ஒடுக்கி வரும் இராணுவத்தினர் மீது கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று ஐக்கிய நாடுகள் சபைக்கான மியன்மார் தூதர் வலியுறுத்தியுள்ளார்.

மக்கள் மேலும் மேலும் துன்பத்துக்கு ஆளாவதைத் தடுக்கும் நோக்கில் அந்த நடவடிக்கை அமைய வேண்டும் என்று ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய பேட்டியில் அவர் கேட்டுக் கொண்டார்.

மியன்மாரில் இராணுவத்துக்கு எதிராக ஒரு மாதத்திற்கு மேல் போராட்டங்கள் நடந்து வருகின்றன. அதில் சுமார் 70 பேர் கொல்லப்பட்டதாக நம்பப்படுகிறது.

இந்நிலையில் யங்கூனில் உள்ள பொலிஸ் நிலையத்திற்கு வெளியே ஆர்ப்பாட்டக்காரர்கள் கூடியதை அடுத்து, இருவர் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

ஏற்கனவே கைது செய்யப்பட்டோரை விடுதலை செய்யும்படி ஆர்ப்பாட்டக்காரர்கள் கோரிக்கை விடுத்ததாக உள்ளூர் ஊடகங்கள் தெரிவித்தன.

ஊரடங்கை மீறி வெளியே வந்த ஆர்ப்பாட்டக்காரர்களைப் பாதுகாப்பு அதிகாரிகள் அடித்ததாகவும் குறிப்பிடப்பட்டது. சிலர் வீடுகளிலிருந்து வெளியே கொண்டுவரப்பட்டு, கம்புகளால் அடிக்கப்பட்டதாகச் சம்பவத்தைப் பார்த்தவர்கள் கூறினர்.

வீடுகளுக்கு உள்ளேயும் சத்தம் கேட்டதாக அவர்கள் கூறினர். வெளியே கொண்டு வரப்படும் முன் வீட்டிற்குள்ளும் அவர்கள் அடிவாங்கியிருக்கக் கூடுமென நம்பப்படுகிறது.

## இத்தாலியில் மீண்டும் பொது முடக்கநிலை

ஈஸ்டர் பண்டிகையின்போது கொரோனா தொற்று பரவலை தடுக்கும் விதமாக நாடு தழுவிய பொதுமுடக்கம் பின்பற்றப்படும் என இத்தாலி பிரதமர் அறிவித்துள்ளார்.

உலகின் பல நாடுகளில் மீண்டும் கொரோனா தொற்று பரவல் அதிகரிக்க ஆரம்பித்துள்ளது. இத்தாலியில் நாளுக்கு நாள் கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்படுபவர்களின் எண்ணிக்கை அதிகரித்த வண்ணம் உள்ளது.

நாட்டின் லோம்பார்டி, லோசியோ உள்ளிட்ட 7 நகரங்களில் கொரோனா தொற்று பரவல் அதிக பாதிப்புகளை பதிவு செய்துள்ளன.

இந்நிலையில் இத்தாலியில் ஈஸ்டர் பண்டிகை கொண்டாடப்பட உள்ள நிலையில் கொரோனா தொற்று பரவலைக் கட்டுப்படுத்த நாடு தழுவிய பொதுமுடக்கம் அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த அறிவிப்பு இன்று திங்கட்கிழமை



முதல் அமலுக்கு வரும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

தவிர ஏப்ரல் 3ஆம் திகதி முதல் 5ஆம் திகதிவரை, அத்தியாவசியமில்லாத கடைகள் நாடு முழுவதும் மூடப்பட்டிருக்கும். வேலை, சுகாதாரம் அல்லது அவசரக் காரணங்களுக்கு மட்டும் மக்கள் அந்த நாட்களில் வெளியே செல்லமுடியும்.

தொற்றுநோயால் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ள இத்தாலி, கடந்த வாரத்துடன் ஒப்பிடும்போது இந்த வாரம் கொரோனா பரவல் 10 வீதம் அதிகரித்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

எளிதில் பரவக்கூடிய புதிய வகை வைரஸ் தொற்று மாதிரிகள் பரவிவருவதாக அதிகாரிகள் எச்சரிக்கின்றனர்.



## சைக்கிளில் உலகை சுற்றியவர் வீட்டுக்கு அருகில் பஸ் மோதி பலி

உலகையே சைக்கிளில் வலம் வந்த இஸ்ரேலைச் சேர்ந்த ரோய் சதான் தமது வீட்டுக்கு அருகே சைக்கிளில் சென்றுகொண்டிருந்தபோது பஸ் மோதி உயிரிழந்துள்ளார்.

ஜிஞ்சீ என்று அழைக்கப்படும் அவருக்கு வயது 39. 2007ஆம் ஆண்டு முதல் 2011ஆம் ஆண்டு வரை, சதான் 6 கண்டங்களில் உள்ள 42 நாடுகளுக்கு மிதிவண்டியிலேயே பயணம் செய்தார்.

கடந்த புதன்கிழமை விபத்து நேர்ந்ததாக பி.பி.சி செய்தி நிறுவனம் தெரிவித்தது. மருத்துவமனைக்குக் கொண்டுசெல்லப்பட்ட அவர், கவலைக்கிடமான நிலையில் கடந்த சனிக்கிழமை உயிரிழந்தார்.

2015ஆம் ஆண்டில், வட இந்தியாவின் ஸ்டோக் காங்ரி மலையில் ஏறிக்கொண்டிருந்தபோது, சதான் வழுக்கிக் கீழே விழுந்தார்.

சுமார் 2 மாதங்களுக்கு நினைவிழந்த நிலையில் இருந்த அவர், குணமடைந்து, மீண்டும் மிதிவண்டி ஓட்ட ஆரம்பித்ததாக பி.பி.சி கூறியது.

## நைஜீரியாவில் மேலும் 30 மாணவர்கள் கடத்தல்

நைஜீரியாவில் மேலும் ஒரு பாடசாலையில் 30 மாணவர்களை சமூக விரோதக் கும்பல் கடத்திச் சென்றுள்ளது.

காடுனா மாகாணம், அபாகா நகரிலுள்ள பாடசாலைக்கு கடந்த வெள்ளிக்கிழமை வந்த ஆயுதக் கும்பல், அங்கிருந்த 30 மாணவர்களைக் கடத்திச் சென்றது. கடத்தப்பட்ட மாணவர்களில் ஆண்கள், பெண்கள் என இரு பாலரும் அடங்குவர்.

மிக அதிக எண்ணிக்கையில் வந்து இந்தத் தாக்குதலில் ஈடுபட்ட ஆயுதக் கும்பலுடன் போராடி, 180 மாணவர்கள் மற்றும் பாடசாலை பணியாளா்களை இராணுவம் மீட்டது.

இந்தச் சண்டையின்போது அதிகமான மாணவர்கள் காயமடைந்தனர். அவர்களுக்கு இராணுவ மருத்துவமனைகளில் சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.



கடந்த மாதம் 279 மாணவிகளைக் கடத்திச் சென்ற அதே ஆயுதக் கும்பல்தான் தற்போது இந்தப் பாடசாலையில் இருந்து 30 மாணவர்களைக் கடத்தியுள்ளது என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

முன்னதாக, ஜம்பாரா மாகாண அரச பாடசாலையில் இருந்து கடந்த மாதம் 279 மாணவிகள் கடத்திச் செல்லப்பட்டனர். பின்னர் அரசுடன் மேற்கொள்ளப்பட்ட பேச்சுவார்த்தைக்குப் பின் மாணவிகள் அனைவரும் விடுவிக்கப்பட்டனர்.

அவர்களை விடுவிப்பதற்காக ஆயுதக் கும்பலுக்கு பிணைத் தொகை வழங்கப்பட்டதா என்ற விபரம் வெளியிடப்படவில்லை.

இந்தச் சூழலில், மீண்டும் அதே கும்பல் 30 மாணவர்களைக் கடத்திச் சென்றுள்ளது பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

ஹொங்கொங் சட்டமன்றம்:

## நேரடி உறுப்பினர்களை குறைக்க சீனா திட்டம்

ஹொங்கொங் சட்டமன்றத்துக்கு நேரடியாகத் தெரிவு செய்யப்படும் உறுப்பினர்களுக்கான இடங்களை சீனா, 35 இலிருந்து 20 ஆகக் குறைக்கக்கூடும்.

எதிர்த்தரப்பினர் மூன்றில் ஒரு பங்கு பெரும்பான்மையோடு வீட்டோ எனும் இரத்து அதிகாரம் பெறும் சாத்தியம் அதன் மூலம் தவிர்க்கப்படும் என்று 'சௌத் சைனா மொர்னிங் போஸ்ட்' பத்திரிகை தெரிவித்துள்ளது.

90 உறுப்பினர்களைக் கொண்டதாக சட்ட மன்றத்தை விரிவுபடுத்துவதில் இடங்களுக்கான விகிதம் குறித்து, அடுத்த மூன்று நாட்களுக்கு சீன உயர் அதிகாரிகள் ஆலோசனை நடத்தவுள்ளனர்.

ஹொங்கொங் தேர்தல் சீர்திருத்த நடைமுறைக்குச் சீன பாராளுமன்ற உறுப்பினர்கள் கடந்த வியாழக்கிழமை ஒப்புதல் அளித்தனர். அதைத் தொடர்ந்து சீர்திருத்தம் மேற்கொள்வதற்கான முயற்சி தீவிரமடைந்துள்ளது.



ஹொங்கொங் சட்டமன்றத்தில் தற்போதுள்ள இடங்கள் 70. அவற்றில் பாதி இடங்கள் ஐந்து வட்டாரங்களைச் சேர்ந்த தொகுதிகள் மூலம் நிரப்பப்படும்.

ஹொங்கொங் தேர்தல் நடைமுறையில் உள்ள சிறப்புக் குழுக்கள் அல்லது நிபுணர்கள் மூலம் 29 இடங்கள் நிரப்பப்படும். அவை 20 ஆகக் குறைக்கப்பட்டால், 22 வீத இடங்கள் தொகுதிகள் மூலம் நிரப்பப்படும்.

அவ்வாறு நேர்ந்தால், 1991 ஆம் ஆண்டு ஹொங்கொங் முதன்முறை தேர்தல் நடத்தத் ஆரம்பித்ததிலிருந்து அதுவே மிகக் குறைவான விகிதம் ஆகும்.

## வைரஸ் உருமாற்றங்கள் குறித்து உலக சுகாதார அமைப்பு ஆய்வு



உலகம் முழுவதும் கொவிட்–19 வைரஸ், புதிய புதிய வகையில் தொடர்ந்து உருமாறிக்கொண்டே இருக்கும் என்று எதிர்பார்ப்பதாக உலக சுகாதார அமைப்பு தெரிவித்துள்ளது.


வைரஸின் புதிய உருமாற்றத்தைக் கண்காணிக்கும் நடைமுறையைப் பின்பற்றி வருவதாக அந்த அமைப்பு கூறியது. தொற்று நோய் இயல் கண்காணிப்பு, பரிசோதனை முறை உள்ளிட்ட பல்வேறு அம்சங்கள் அதில் உள்ளன.

உலக அளவில் வைரஸின் உருமாற்றத்தைத் தெரிந்து கொள்ள பிராந்திய அளவிலான அலுவலகங்களுடன் பணியாற்றி வருவதாகவும் உலக சுகாதார அமைப்பு தெரிவித்துள்ளது.

பிரிட்டன், பிரேசில் உள்ளிட்ட சில நாடுகளில் புதிய வகை வைரஸ் அடையாளம் காணப்பட்டுள்ளன. அவற்றால் பாதிக்கப்படுவோர் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது.

தற்போதுள்ள தடுப்பூசிகள் புதிய வகை வைரஸை முறியடிக்கும் ஆற்றல் கொண்டவையா என்பதை விஞ்ஞானிகள் மும்முரமாய் ஆராய்ந்து வருகின்றனர்.

## ஜோர்தானில் ஒட்சிசன் செயலிழப்பு ஏழு கொரோனா நோயாளர்கள் உயிரிழப்பு



ஜோர்தான் மருத்துவமனையில் ஜோர்தான் ஒட்சிசன் செயலிழப்புக் காரணமாக கொரோனா வைரசால் பாதிக்கப்பட்ட 7 பேர் உயிரிழந்தனர்.

இதுதொடர்பாக பேசிய அந்நாட்டின் பிரதமர் பிசர் அல் கசாவ்னே இந்த சம்பவம் மிகப்பெரிய தவறு என்றும் வெட்கக்கேடானது என்றும் குறிப்பிட்டார். இதுதொடர்பாக தாம் மக்களிடம் பகிரங்க மன்னிப்பு கேட்பதாகவும், இதனை ஒரு போதும் ஏற்றுக் கொள்ள முடியாது என்றும் தெரிவித்தார். மேலும் இந்த விவகாரம் தொடர்பாக சுகாதாரத் துறை அமைச்சரை பணி நீக்கம் செய்ததாக தெரிவித்த பிரதமர், இந்த சம்பவத்திற்கு அரசு முழுப் பொறுப்பையும் ஏற்கிறது என்றார்.

தலைநகர் அம்மானின் மேற்காக 23 கிலோமீற்றர் தொலைவில் இருக்கும் சோல்ட் என்ற சிறு நகரில் அரசின் புதிய மருத்துவ நிலையம் ஒன்றில் கடந்த சனிக்கிழமை இந்த உயிரிழப்பு சம்பவங்கள் பதிவாகியுள்ளன. பாதிக்கப்பட்ட குடும்பத்தினர் மருத்துவமனையை சூழ்ந்த நிலையில் அங்கு பொலிஸார் அனுப்பப்பட்டனர்.

ஒரு மணி நேரம் வரை நீடித்த இந்த ஒட்சிசன் தட்டுப்பாட்டால் அவசர சிகிச்சைப் பிரிவு மற்றும் மகப்பேற்று பிரிவுகள் பாதிக்கப்பட்டுள்ளன. எனினும் அந்த வாடுகளில் உயிரிழப்பு சம்பவங்கள் எதுவும் பதிவாகவில்லை. எனினும் இந்த ஒட்சிசன் தட்டுப்பாடு ஏற்படுவதற்கான காரணம் பற்றி உறுதி செய்யப்படவில்லை.

## மின்னிலக்க ஓவியப்படைப்பு 70 மில்லியன் டொலருக்கு ஏலம்



அமெரிக்காவில் மின்னிலக்க ஓவியம் ஒன்று 70 மில்லியன் டொலருக்கு விலைபோயுள்ளது.

கிறிஸ்டிஸ் ஏல நிறுவனத்தால் அது ஏலம் விடப்பட்டது. பீப்பல் என்று அழைக்கப்படும் அமெரிக்க ஓவியர் மைக் விங்கெல்மனால் வரையப்பட்ட அந்த ஓவியத்தின் அச்சிடப்பட்ட வடிவம் இல்லை. அது 5,000 தனிப்பட்ட படங்களின் சேர்க்கையாக உள்ளது.

ஒவ்வொரு படமும் ஒவ்வொரு நாளில் செய்யப்பட்டவை. படைப்பைச் செய்து முடிக்க 13 ஆண்டுகளாகின.

அதன் விற்பனை மூலம், பீப்பல் மிக அதிக மதிப்புள்ள வாழும் ஓவியர்களில் ஒருவராகியுள்ளார். புதிய மின்னிலக்கச் சொத்து வடிவில் அந்த ஓவியம் உள்ளது.

ஓவியத்தின் உரிமையாளர் யார், அது உண்மையானதா ஆகியவற்றுக்கான சான்றிதழ் வழங்கப்படும்.

அண்மைய மாதங்களில், மின்னிலக்க சொத்துகள் தொடர்பிலான மதிப்பு அதிகரித்துள்ளது.

இதற்கு முன், மின்னிலக்க ஓவியங்களை வாங்குவதற்கான தளம் எதுவும் இல்லை. தற்போது, பல்வேறு மின்னிலக்கப் பொருட்களை வாங்க மின்னிலக்க சொத்துகள் தொடர்பான நடைமுறை வழிவகுத்துள்ளது.

## பெண் கொலை: பொலிஸாருக்கு எதிராக லண்டனில் ஆர்ப்பாட்டம்

லண்டனில் சாரா எவரார்ட் என்னும் பெண் கொலை செய்யப்பட்டதைக் கண்டித்து நூற்றுக்கணக்கானோர் ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

அப்போது, பொலிஸாருக்கும் ஆர்ப்பாட்டக்காரர்களுக்கும் இடையே மோதல் ஏற்பட்டது.

சாராவைக் கொலை செய்ததாக பொலிஸ் அதிகாரி மீது கடந்த சனிக்கிழமை நீதிமன்றத்தில் குற்றஞ்சாட்டப்பட்டது. அதற்குச் சில மணி நேரத்துக்குப் பின்னர் ஆர்ப்பாட்டம் ஆரம்பமானது.

திரண்டிருந்தவர்களில் பெரும்பாலோர் பெண்களாவர். நகரில் இரவு நேரங்களில் எப்படிப் பாதுகாப்பாகச் செல்வது என்று அவர்கள் கேள்வி எழுப்பினர்.

33 வயது சாரா இம்மாதம் 3 ஆம் திகதி காணாமல் போனார். பொலிஸ் அதிகாரி வேய்ன் காவ்ஸேன்ஸ் வீட்டுக்கு அருகே அந்தப் பெண்ணின் சடலம் கண்டுபிடிக்கப்பட்டது.

பொலிஸ் அதிகாரி, சாராவை கடத்திக் கொலை செய்ததாகச் சந்தேகிக்கப்படுகிறது.

வைரஸ் தொற்றுக் கட்டுப்பாடுகள் காரணமாக இங்கிலாந்தில் மக்கள் ஒன்றுகூட அனுமதியில்லை. அதைப் பொருட்படுத்தாமல் சாராவின் கொலையைக் கண்டித்து மக்கள் திரண்டனர்.

போராட்டத்தில் பங்கேற்ற எத்தனை பேர் கைது செய்யப்பட்டனர் என்பது பற்றிக் பொலிஸார் தகவல் வெளியிடவில்லை.



### கிண்ணியா அக்செரியன் சுப்பர் லீக்

# உதைபந்தாட்ட சுற்றுத் தொடரின் இறுதிப் போட்டி சுப்பர் கிங், ரேஸின் ஸ்டார் அணிகள் பலப்பரீட்சை

**கிண்ணியா மத்திய நிருபர்**

கிண்ணியா அக்செரியன் சுப்பர் லீக் உதைபந்தாட்ட சுற்றுத் தொடரின் இறுதிப் போட்டியில் மோதுவதற்கு சுப்பர் கிங் மற்றும் ரேஸின் ஸ்டார் ஆகிய இரு அணிகளும் தகுதி பெற்றுக் கொண்டன.

எட்டு அணிகள் பங்கு கொண்ட இந்த தொடர் கடந்த நான்கு தினங்களாக கிண்ணியா எழிலரங்கு மைதானத்தில் நடைபெற்றது.

UNV நிறுவனத்தின் பிரதான அனுசரணையோடு நடைபெற்ற இந்த தொடரின் அரையிறுதி ஆட்டங்கள் (14) பார்வையாளர்களின் இரசிகர்களின் பலத்த எதிர்பார்ப்புக்கு மத்தியில் நடைபெற்றது.இந்த சுற்றுத் தொடருக்கு இணை அனுசரணையினை மைலோ நிறுவனம் வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

முதல் அரையிறுதி ஆட்டத்தில் சுப்பர் கிங் மற்றும் ஜுபிடர் ஆகிய அணிகள் ஆடு களத்தில் குதித்தன.

இதில் ஆட்டம் ஆரம்பித்து 20 நிடத்தில் சுப்பர் கிங் அணி கோல் ஒன்றைப் போட்டி தனது நிலையை ஸ்தீரப்படுத்திக் கொண்டது. இதனைத் தொடர்ந்து அடுத்து இரண்டு நிமிடத்தில் மற்றுமொரு கோலைப் போட்டு, இறுதிப் போட்டியில் நுழைவதற்கான தகுதியை மேலும் உறுதிப்படுத்திக் கொண்டது.

தொடர்ந்து உற்சாகத்தோடு விளையாடிய சுப்பர் கிங் அணி இரண்டாவது கோலைப் போட்டு அடுத்து ஐந்து நிமிட இடைவெளியில் 3வது கோலைப் போட்டு எதிரணியின் இறுதிப் போட்டிக்கான கனவை முறியடித்தது.





ஆட்டத்தின் இறுதிக்கட்டத்தில் பலத்த போராட்டத்துக்கு மத்தியில் ஒரு கோலைப் போட்டு ஆறுதல் அடைந்தது ஜுபிடர் அணி.

இதன் மூலம் ஆட்டத்தின் இடைவேளைக்கு முன்னரே, 3 கோல்களைப் போட்டு, 3:1 என்ற கோல் அடிப்படையில் ஜுபிடர் அணியை வெற்றி பெற்று, தனது இறுதிப் போட்டிக்கானகனவைநனவாக்கியது சுப்பர் கிங் அணி.

இந்த தொடரில் சுப்பர் கிங் அணி மூன்று போட்டிகளைச் சந்தித்து மொத்தமாக 4 கோல்களைப் போட்டு 9 புள்ளிகளைப் பெற்று 2வது இடத்துக்கு வந்தது.




ஆனால் ஜுபிடர் அணி 3 போட்டிகளைச் சந்தித்து மொத்தமாக 5 கோல்களை போட்டு 12 புள்ளிகளைப் பெற்று 1வது இடத்துக்கு வந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதில் சிறந்த நாயகனாக சுப்பர் கிங் அணியைச் சேர்ந்த முகம்மது ரொஹான் தெரிவு செய்யப்பட்டார்.

பலத்த எதிர்பார்ப்புக்கு மத்தியில் நடைபெற்ற இரண்டாவது அரையிறுதி ஆட்டத்தில் சுப்பர் பைட்டர் மற்றும் ரேஸின் ஸ்டார் ஆகிய இரு அணிகளும் மோதின.

இறுதி வரை மிகவும் விறுவிறுப்பாக பலத்த போட்டியாகவும் சென்ற இந்த ஆட்டம் ஆரம்பித்து 35 ஆவது நிமிடத்தில் ஒரு கோலைப் போட்டு தனது நிலையை ஸ்தீரப்படுத்திக் கொண்டது சுப்பர் பைட்டர் அணி.

இதனை எதிர்த்தாடிய ரேஸின் ஸ்டார் அணி இறுதிவரை போராடிய கடைசி நேரத்தில் கோல் ஒன்றைப் போட்டு, ஆட்டத்தை சமப்படுத்திக் கொண்டது.

இந்த நிலையில், ஆட்டம் 1:1 என்ற கோல் கணக்கில் சமநிலையில் முடிந்தது. இதனல் வெற்றி தோல்வி பெனால்டி உதை மூலம் நிர்ணயிக்கப்பட்டது.

இதனடிப்படையில் ரேஸின் ஸ்டார் அணி 6 : 5 என்ற கோல் அடிப்படையில் பெனால்டி உதை மூலம் போட்டியை வென்று இறுதியாட்டத்துக்கான தகுதியை தனதாக்கிக் கொண்டது.

இந்த ஆட்டத்தின் நாயகனாக ரேஸின் ஸ்டார் அணியைச் சேர்ந்த கோல் காப்பாளர் முகம்மது முப்லி தெரிவு செய்யப்பட்டார்.

ரேஸின் ஸ்டார் (Racing Stars) அணி இந்த தொடரில் 3 போட்டிகளில் விளையாடி மொத்தம் 3 கோல்களைப் பெற்று, 7 புள்ளிகளுடன் முதல் பிரிவில் 2 ஆம் இடத்தைப் பெற்றிருந்தது.

சுப்பர் பைடர் (Super Fighter) அணி இந்த தொடரில் 3 போட்டிகளில் விளையாடி, 5 கோல்களைப் பெற்று, 9 புள்ளிகளுடன் முதல் பிரிவில் 1 ஆம் இடத்தைப் பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்த சுற்றுத்தொடரின் இறுதிப் போட்டி நேற்று மாலை இடம்பெற்றமை விசேட அம்சமாகும்.

## மகாதேவன் சதாசிவத்தின் 85 வருட சாதனை சமப்படுத்தினார் வெஸ்லி வீரர் சஹில்



சிலோன் என இலங்கை அழைக்கப்பட்ட காலத்தில் துடுப்பாட்டத்தில் அபார ஆற்றல்களை வெளிப்படுத்திய முன்னாள இலங்கை வீரர் மகாதேவன் சதாசிவம் 85 வருடங்களுக்கு முன்னர் வெஸ்லி கல்லூரி சார்பாக நிலைநாட்டிய சாதனையை வெஸ்லி கல்லூரி வீரர் சஹில் டயஸ் இவ் வருடம் சமப்படுத்தினார்.

கல்கிஸ்ஸை சென். தோமஸ் கல்லூரிக்கு எதிராக கல்கிஸ்ஸையில் கடந்த வார இறுதியில் நடைபெற்ற 19 வயதுக்குட்பட்ட பாடசாலை கிரிக்கெட் போட்டியில் வெஸ்லி வீரர் சஹில் டயஸ் 142 ஓட்டங்ளைப் பெற்று சதாசிவத்தின் சாதனையை சமப்படுத்தினார்.

சென். தோமஸ் கல்லூரிக்கு எதிரான பாடசாலை கிரிக்கெட் போட்டியில் 142 ஓட்டங்களே வெஸ்லி வீரர் ஒருவரால் பெறப்பட்ட அதிகூடிய ஓட்டங்கள் என வெஸ்லி கல்லூரியின் விளையாட்டுத்துறை நிருவாகி கிளிபர்ட் ரொட்றிகோ தெரிவித்தார்.

85 வருடங்களுக்கு முன்னர் சென். தோமஸ் அணிக்கு எதிரான பாடசாலை கிரிக்கெட் போட்டியில் மகாதேவன் சதாசிவம் பெற்ற 145 ஓட்டங்களே வெஸ்லி சார்பாக இருந்துவந்த அதிகூடிய தனிநபர் எண்ணிக்கையாகும்.

தற்போது வெஸ்லி கல்லூரிக்கும் கல்கிஸ்ஸை கல்லூரிக்கும் இடையிலான கிரிக்கெட் போட்டி மகாதேவன் சதாசிவம் கிண்ணத்துக்காக விளையாடப்பட்டு வருகின்றமை விசேட அம்சமாகும்.

இவ் வருடப் போட்டியில் சஹில் டயஸ் 15 பவுண்ட்டரிகள் அடங்கலாக 142 ஓட்டங்களைப் பெற்றார். இதன் மூலம் வெஸ்லி கல்லூரி முதலாவது இன்னிங்ஸில் 317 ஓட்டங்களைக் குவித்தது.

டயஸைவிட செமில லியனகே 77 ஓட்டங்களையும் தேனுக்க பெரேரா 31 ஓட்டங்களையும் பெற்றனர்.

சென். தோமஸ் பந்துவீச்சில் அனுக் பலிஹாவதன 32 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்களைக் கைப்பற்றினார்.பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய சென். தோமஸ் முதலாவது இன்னிங்ஸில் சகல விக்கெட்களையும் இழந்து 129 ஓட்டங்களை மாத்திரமே பெற்றது.

ரெயான் பெர்னாண்டோ 31 ஓட்டங்களையும் ஜீ. கெனிஸ்டன் 29 ஓட்டங்ளையும் அதிகப்பட்சமாகப் பெற்றனர்.

வெஸ்லி பந்துவீச்சில் தேனுக்க பெரேரா 44 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்களைக் கைப்பற்றினார்.

இரண்டாவது இன்னிங்ஸில் நிதானத்துடன் விளையாடிய சென். தோமஸ் ஆட்டநேர முடிவில் 3 விக்கெட்களை இழந்து 130 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. அனுக் பலிஹாவதன 54 ஓட்டங்களுடனும் தேனுக்க லியனகே 30 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காதிருந்தனர்.

## மூதூர் உதைபந்தாட்ட லீக்கின் வருடாந்த பொதுக்கூட்டம்




**திருகோணமலை குறூப் நிருபர்**

மூதூர் உதைபந்தாட்ட லீக்கின் வருடாந்த பொதுக்கூட்டம் வெள்ளிக்கிழமை (பெப்ரவரி 26) கிண்ணியா பிரதேசச் செயலக கேட்போர் கூடத்தில் இலங்கை உதைபந்தாட்டச் சம்மேளன நிதிக் குழுவின் தலைவரும், பிராந்திய உதைபந்தாட்ட பிரதித் தலைவரும் சிட்டி உதைபந்தாட்டக் கழகத்தின் தலைவருமான புவனேந்திரன் ஆகியோரின் பிரசன்னத்துடன் நடைபெற்றது.

இப்பொதுக் கூட்டத்தில் லீக்கில் அங்கம் வகிக்கும் இருபத்தொரு கழகங்களையும் பிரதிநிதித்துவப் படுத்தி 62 உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

இவ்வருடாந்த பொதுக்கூட்டத்தில் 2021/2022 வருடத்துக்கான பின்வரும் புதிய நிர்வாகிகள் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர் ஆர்.எம்.றிசான், உபலைவர்கள் எம்.எம். சுதாத், ஆர்.எம். றவ்பான், என்.பீ.நாஜின், செயலாளர் –எச்.எம்.அசாம், உதவிச் செயலாளர் – எச்.எம்.எம். பைசாத், நிருவாகக் குழு உறுப்பினர்கள் எம்.எஸ்.எம். இர்பான்,ஜே. சுசேன், ஜே.எம. சப்ராஸ், என்.எம். நிஹால் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

செயலாளராக தெரிவு செய்யப்பட்டுள்ள எச்.எம்.அசாம் ஓர் உடற்கல்வி பாட ஆசிரியரும் உதைபந்தாட்ட மத்தியஸ்தரும் ஆவார்.

## நுவரெலியா பிரிமியர் லீக் கிரிக்கெட் போட்டி கொத்மலை கிங்ஸ் அணி சம்பியன்

**அக்குறணை குறூப் நிருபர்**




நுவரெலியா பிரிமியர் லீக் கிரிக்கெட் போட்டியில் கொத்மலை கிங்ஸ் அணி சம்பியனானது. நுவரெலியா மாவட்ட கிரிக்கெட் சங்கம் ரதெல்ல மைதானத்தில் இப் போட்டியை ஒழுங்கு செய்திருந்தது. அதற்கான அனுசரணையை எஸ் .திருச்செல்வம் தலைமையிலான ரெஹா ஸ்டீல் நிறுவனம் வழங்கியது. பிரதம அதிதியாக நுவரெலியா மாவட்ட கிரிக்கெட் சங்கத் தலைவரும் வனவிலங்கு பாதுகாப்பு அமைச்சருமான சீ.பீ.இரத்நாயக்க கலந்து கொண்டார்.

இப்போட்டியில் நுவரெலியா மாவட்டத்தைச் சேர்ந்த 5 அணிகள் பங்கு கொண்டன.

இறுதிப் போட்டியில் கொத்மலை கிங்ஸ் அணியும், மஸ்கெலியா சன்ரைஸ் அணியும் மோதின. முதலில் துடுப்பெடுத்தாடிய மஸ்கெலியா சன்ரைஸ் அணி 18.2 ஓவர்களில் சகல விக்கட்டுக்களையும் இழந்து 106 ஓட்டங்களைப் பெற்றது. இதில் சிவஞானசுந்தரம் ஜனார்த்தன் 29 ஓட்டங்களையும் குமாரசுவாமி தயாலன் 14 ஓட்டங்களையும், ராஜேந்திரன் கிருசாந்தன் 11 ஓட்டங்களையும் சாந்த நவரட்ன 1 1 ஓட்டங்களையும் பெற்றனர். எ ஸ். அருள் பிரசாத் 30 ஓட்டங்களைக் கொடுத்து 3 விக்கட்டுக்களையும் நுவன் வசந்த பண்டா 19 ஓட்டங்களைக் கொடுத்து 2 விக்கட்டுக்களையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு ஆடிய கொத்மலை கிங்ஸ் அணி 19 ஓவர்கள் முடிவில் 5 விக்கட்டுக்களை இழந்து 108 ஓட்டங்களைப் பெற்று வெற்றி பெற்றது. இதில் செல்வராசா நவீதன் ஆட்டமிழக்காது 39 ஓட்டங்களைப் பெற்றார். சந்தன வசந்த 22 ஓட்டங்களையும், சத்துர கயான் 14 ஓட்டங்களையும் ஜெகநாதன் ஸ்ரீதரன் 11 ஓட்டங்களையும் பெற்றனர். சாந்த நவரட்ன 27 ஓட்டங்களைக் கொடுத்து 4 விக்கட்டுக்களை வீழ்த்தினார்.எனவே இப்போட்டித் தொடரில் கொத்மலை கிங்ஸ் அணி சம்பியனானது. இறுதிப் போடியின் ஆட்ட நாயகனாக கொத்தமலை கிங்ஸ் அணியின் சந்தன வசந்த பண்டாவும், ஆட்டத் தொடரின் நாயகனாக கொத்மலை கிங்ஸ் அணியின் ஜெகநாதன் ஸ்ரீதரனும், சிறந்த பந்துவீச்சாளராக நுவரெலியா கலேடியன்ஸ் அணியைச் சேர்ந்த கயான் போப்பிட்டியவும், சிறந்த துடுப்பாட்ட வீரராக மஸ்கெலிய சன்ரைஸ் வீரர் மயுர விஜேசிங்கவும், வளர்ந்து வரும் வீரராக நுவரெலியா கலேடியன்ஸ் அணியைச் சேர்ந்த தினுக சந்தருவனும் தெரிவாகினர்.

## ஜப்னா கரப்பந்தாட்ட லீக் ஏலத்தில் அதிக விலைக்கு வாங்கப்பட்ட வீரர்கள்



**யாழ்.விளையாட்டு நிருபர்**

யாழ் மாவட்டத்தில் கரப்பந்தாட்டத்தை முன்னேற்றத்துக்கு அழைத்துச்செல்லும் வகையில், முதன்முறையாக ஆரம்பிக்கப்படவுள்ள ஜப்னா கரப்பந்தாட்ட லீக் தொடரின் வீரர்கள் ஏலத்தில், ஆவரங்கால் இந்து இளைஞர் கழகத்தின் சச்சிதாநந்தம் கபிலக்ஷின் அதிகூடிய தொகைக்கு, ஆவரங்கால் கிங்ஸ் அணிக்காக வாங்கப்பட்டுள்ளார்.

முதன்முறையாக ஏலத்தின் அடிப்படையில் வீரர்களை தெரிவுசெய்து, லீக் தொடரொன்றை நடத்துவதற்கு யாழ் மாவட்ட கரப்பந்தாட்ட சங்கம் ஏற்பாடு செய்திருந்தது. புதிதாக கையாளப்பட்ட ஏலத்தின் அடிப்படையில், ஒவ்வொரு அணி உரிமையாளர்களுக்கும் 5000 புள்ளி வழங்கப்பட்டது.

இந்த 5000 புள்ளிகளிலிருந்து அணிகள் வீரர்களை தெரிவுசெய்ய முடியும். இதில், தாங்கள் ஏலத்துக்கு முன்னதாக தக்கவைத்த வீரருக்கு, 1000 புள்ளிகள் குறைக்கப்படும். மீதமுள்ள 4000 புள்ளிகளில் ஏனைய வீரர்களை அணிகள் வாங்கமுடியும்.

ஆரம்பிக்கப்பட்ட இந்த ஏலத்தில் ஆவரங்கால் இந்து இளைஞர் கழகத்தின் சச்சிதாநந்தம் கபிலக்ஷன், 1760 புள்ளிகளுக்கு, ஆவரங்கால் கிங்ஸ் அணிக்காக வாங்கப்பட்டுள்ளார். இதற்கு அடுத்தப்படியாக தொண்டமனாறு கலையரசி கழகத்தின் கிருஷ்ணகுமார் கீர்த்தனன் 1700 புள்ளிகளுக்கு சங்கானை செலஞ்சர்ஸ் அணிக்காகவும், புத்தூர் கலைமதி கழக வீரர் மகேந்திரம் வாகீசன், சங்கானை செலஞ்சர்ஸ் அணிக்காக 1500 புள்ளிகளுக்கு வாங்கப்பட்டுள்ளனர்.

ஏலத்தில் அதிக விலைக்கு வாங்கப்பட்ட வீரர்கள்

| வீரர்கள் | அணிகள் | புள்ளிகள் |
|---|---|---|
| சச்சிதாநந்தம் கபிலக்ஷன் | ஆவரங்கால் கிங்ஸ் | 1760 |
| கிருஷ்ணகுமார் கீர்த்தனன் | சங்கானை செலஞ்சர்ஸ் | 1700 |
| மகேந்திரம் வாகீசன் | வல்லையூர் வொலி வொரியர் | 1500 |
| கந்தசாமி வசீகரன் | மட்டுவில் ஸ்பைக்கர்ஸ் | 1220 |
| ஜெயராசா திலக்ஷன் | ஸ்புட்னிக் நோர்த் போல்ஸ் | 1120 |
| சுதாகரன் சுதர்ஸன் | நீர்வை பசங்க | 1060 |
| ஸ்ரீபரன் செந்தாலன் | ரைசிங் ஜலண்ட்ஸ் | 1000 |
| புஷ்பராஷா சுஜீ வன் | சென்றல் ஸ்பைக்கர்ஸ் | 1000 |

(அணிகளுக்கு கொடுக்கப்பட்ட 5000 புள்ளிகள், 50,000 ரூபா பெறுமதியாகும்)

அணிகள் ஏலத்துக்கு முன்னர் தக்கவைத்த வீரர்கள்

| வீரர்கள் | அணிகள் |
|---|---|
| பத்மதாஸ் நிதர்சன் | அரியாலை கில்லாடிகள் 100 |
| சிவநேசன் புவிந்தன் | ரைசிங் ஜலண்ட்ஸ் |
| பத்மசிவன் மலரவன் | மட்டுவில் ஸ்பைக்கர்ஸ் |
| மாணிக்கன் மதுசன் | நீர்வை பசங்க |
| ஸ்ரீபரன் அசோகன் | ஆவரங்கால் கிங்ஸ் |
| சிவகுமார் சிந்துஜன் | சென்ட்ரல் ஸ்பைக்கர்ஸ் அச்சுவேலி |
| ஜெயரூபன் ஹரிதாஸ் | ஸ்புட்னிக் நோர்த் போல்ஸ் |
| செல்வராசா செல்வதரன் | வல்லையூர் வொலி வொரியர்ஸ் |
| கந்தசாமி கவிசனன் | சங்கானை மக்களொன்றிய செலஞ்சர்ஸ் |

ஜப்னா வொலிபோல் லீக் எதிர்வரும் 20ஆம் திகதி ஆரம்பிக்கவுள்ளதுடன், தொடரில் 9 அணிகள் விளையாடவுள்ளன. அணிக்கு 12 வீரர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர் என்பதுடன், ஏலத்துக்கு முன்னர் ஒரு வீரரை அணிகள் தக்கவைத்துக்கொண்டன. குழாத்தில் 21 வயதுக்குட்பட்ட வீரர்கள் இருவர் இருக்க வேண்டும் என்பதுடன், அதில் ஒருவர் போட்டியின் முழுநேரமும் விளையாட வேண்டும். அணியில் கட்டாயமாக லிபரோ ஒருவர் இருக்க வேண்டும். அத்துடன், ஒரு கழகத்திலிருந்து அதிகபட்சமாக மூன்று வீரர்கள் மாத்திரமே, ஒரு அணிக் குழாத்தில் இடம்பெற முடியும்.

போட்டி வடிவத்தை பொருத்தவரை ஒவ்வொரு அணியும், எதிரணிகளுடன் தலா ஒவ்வொருமுறை மோதவுள்ளதுடன், முதல் நான்கு இடங்களை பிடிக்கும் அணிகள் ப்ளேஓஃப் சுற்றுக்கு (ஐ.பி.எல் வடிவம்) தகுதிபெற்று, இறுதிப்போட்டியை அடையமுடியும். தொடரில் மொத்தமாக 40 போட்டிகள் நடைபெறவுள்ளன.

முதன்முறையாக ஆரம்பமாகும் ஜப்னா வொலிபோல் லீக் தொடருக்கு ஜேர்மனியில் உள்ள அட்சயா இண்டர்நெசனல், யாழ்ப்பாணத்தில் உள்ள ஸ்டார் பூட் ஸ்டோர்ஸ் மற்றும் சந்தோஷ் ஜுவலெரி போன்றவை அனுசரனை வழங்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

| அணிகள் | உரிமையாளர்கள் |
|---|---|
| அரியாலை கில்லாடிகள் 100 | தவநாதன் ஹரிசாந்த், நித்தியானந்தன், கவிந்–தன், கேதிஸ்வரன், நிஷாந்தன் |
| ரைசிங் ஜலண்ட்ஸ் | கே. சங்கரலிங்கம் |
| மட்டுவில் ஸ்பைக்கர்ஸ் | செல்லையா பாலேந்திரம் |
| நீர்வை பசங்க | துறைராஜா பிரதீபன் |
| ஆவரங்கால் கிங்ஸ் பைட்டர் | தம்பிராசா வினோஜன் |
| சென்ட்ரல் ஸ்பைகர்ஸ் அச்சுவேலி | கமலநாதன் மகிந்தரன் |
| வல்வையூர் வொலி வொரியர்ஸ் | ஜெகபிரதான் |
| ஸ்புட்னிக் நோர்த் போல்ஸ் | செல்வராஜா ரமணன் |
| சங். மக்களொன்றிய சேலஞ்சர்ஸ் | பி. விஜயகுமார் |

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2021 மார்ச் மாதம் 15ம் திகதி திங்கட்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.